என்றும் உங்களுடன் புத்தகம்-1

மங்கையர் மலர்

ANGAYAR MALAR | ஆகஸ்ட் 2008 | 258 பக்கங்கள் ரூ.20/-

3
தகங்கள்



பண்டிகை
ஸ்பெஷல்-1





இணைப்பு
கிருஷ்ணா
64!

விதவிதமாய்
அம்மன்
ஜடைகள்!

வினை
தீர்க்கும்
விநாயகன்!

இறையருள்


ஸ்ரீ குமரன் ஸ்டோர்ஸ்
திருமண நல்வாழ்த்துக்கள்
5 Maadi
Kumaran


PLATINUM
உங்கள் இதயத்தை வருடும்
இனிய தருணங்களைக் கொண்டாட
அதிஉன்னத சின்னங்கள்.
உங்கள் வாழ்வில் புதிய மைல்கற்களாய் சில
இனிய தருணங்கள். அந்த மகத்தான
தருணங்கள், பிளாட்டினத்தால் மட்டுமே
கொண்டாடப்பட வேண்டியவை.
கொண்டாடுங்கள், உங்கள் வெற்றியின்
சின்னமான VBJ பிளாட்டினம் -
வைர நகைகளுடன்.
VBJ
SINCE 1900



நாஞ்சில் 77 நாட்டுச் சமையல்!

ரூ.5,000 பரிசு

145 அறிவுப் போட்டி





28 பெப்பர் பாப்கார்ன்!

பண்டிகை ஸ்பெஷல் பக்கங்கள்!



முக்கிய அறிவிப்புகள்

4, 14, 76, 85, 120, 155







குட்டி புக்கின் 64 பக்கங்களிலும் நாகை முகுந்தனின் கோகுலக் கண்ணனைத் தரிசிக்கலாமே!


கிருஷ்ணா 64!

அட்டையில் : அபிராமி
வண்ணப்படம் : சங்கர் சத்யமூர்த்தி



மகளிர் மாத இதழ்!
என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
மலர் : 28 இதழ் : 7 ஆகஸ்ட் 2008


என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
&
GAURI THE CONTINENCE CENTER
Guna Associates in Urogynecology & Research for Incontinence
இணைந்து வழங்கும்
பெண்களால்...
பெண்களுக்காக... பெண்களே...
வழங்கும்
கோலாகல மகளிர் திருவிழா!
தேதி : 01.08.08 நாள் : வெள்ளிக் கிழமை
இடம் : இந்தியன் ஸோஷியல் க்ளப் ஆடிட்டோரியம். இந்தியன் ஸ்கூல். மஸ்கட்.
மருத்துவ கருத்தரங்கம் :
தலைமை : டாக்டர்.கார்த்திக் குணசேகரன்
கல்வியரங்கம் : தலைமை : முனைவர் கே.மீனா
ஜாலி போட்டிகள்!
ஏராள பரிசுகள்!
மேலும் விவரங்களுக்கு:
www.mangayarmalaronline.com/ullasaoonjal
மஸ்கட்டில் மங்கையர் மலர்
உல்லாச ஊஞ்சல்
முன்னிலை : மஸ்கட் தமிழ்ச் சங்கம்



ஒரு வார்த்தை!

டியர் அனுஷா,

இந்த விலைவாசி ஏற்றத்தைத் தாக்குப் பிடிக்க, ரொம்ப கஷ்டமா இருக்கே! நாம தடுக்குல நுழைஞ்சா, அது கோலத்துல நுழையுதே... இதுக்கு என்னதாம்மா தீர்வு?

- டி. வசந்தா, திண்டுக்கல்.

இது திண்டுக்கல் வாசகியின் கேள்வி மட்டுமல்ல; லட்சக்கணக்கான இந்திய இல்லத்தரசிகளின் ஏகோபித்த புலம்பல்!

இதற்கு, சிதம்பரமாகவும், மனமோகனமாகவும் விளக்கம் அளிக்க, நான் ஒன்றும் பொருளாதார புலி கிடையாது. இருந்தாலும் விலைவாசி உயர்வு என் ன என்னால் ஓரளவு புரிந்து கொள்ள முடிகிறது.



★ 'ஆன் லைன் டிரேடிங்' - இதுதான் முதல் காரணம் என பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்கள். பெரும் பணம் படைத்தவர்கள், மும்பையில் இருக்கும் 'கம்மாடிடி எக்ஸ்சேஞ்சில்', கோடிக்கணக்கில் முதலீடு செய்து, அரிசி, கோதுமை, பருப்பு போன்றவற்றைப் பத்திரங்களாக வாங்கிக் குவிக்கிறார்கள். இதிலேயே 'ஃப்யூச்சர் ட்ரேடிங்', 'ஃப்யூச்சர் பர்சேஸ்' போன்றவையும் உண்டாம்!

★ உலக அளவில் ஏற்றப்பட்ட பெட்ரோல் விலை! எரிபொருளின் விலை 5% ஏறினாலும், உடனே உணவு, மின்சாரம், போக்குவரத்து மூன்றும் பாதிக்கப்பட்டு, உடனே தாறுமாறான சங்கிலி விளைவுகள் உண்டாகி, எட்டணா குச்சி ஐஸ் கூட இரு மடங்கு விலை ஏறிவிடுகிறது.

★ மூன்றாவது காரணம்... மிக முக்கியமானது! விவசாயம் அருகி விட்டது. விளைநிலங்கள் எல்லாம் 60 x 40 வீட்டு மனைகளாகி விட்டன. மிச்சமிருக்கும் ஒருசில விவசாயிகளும் சுரண்டப்பட்டுக் கிடக்க, இடைத்தரகர்கள் கொழுத்து

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32.

பொறுப்பாசிரியர் :
அனுராதா சேகர்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்,
எம். மோகன், ச. கார்த்திகேயன்

தொலைபேசி : 4343 8888
சந்தா பிரிவு : 4343 8833
தொலைநகல் : 044 - 4343 8899

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
mangayarmalar@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
இன்டர்நெட் முகவரி :
www.mangayarmalaronline.com
சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.250/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ. 1,700/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

விட்ட நிலைமை...

இதற்கு என்னதான் தீர்வு?

★ விவசாயம் ஊக்குவிக்கப்பட வேண்டும். குறிப்பாக, விவசாயியும் - நுகர்வோரும் நேரடியாகப் பயன்பெறும் 'உழவர் சந்தை' மீண்டும் புழக்கத்தில் வரவேண்டும்.

★ இந்திய அரசாங்கம், பெட்ரோல் மற்றும் கச்சா எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளிலிருந்து, நேரடியாக எண்ணெயை வாங்கும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

★ கம்மாடிடி எக்ஸ்சேஞ்சில் வர்த்தகம் செய்ய அனுமதிக்கக் கூடாது.

★ அத்தியாவசிய உணவுப் பொருள்களை, சுங்கவரி இல்லாமல், அதிக அளவில் இறக்குமதி செய்தால், விலைவாசி தானாகவே குறையும்.

★ நிலைமை சீராகும் வரை, ரேஷன் கடைகளில் தரமான அரிசி, கோதுமை, பருப்பு, எண்ணெய் போன்றவை நியாய நிலையில் கிடைக்கச் செய்ய வேண்டும்.

★ அரசியல்வாதிகள் வெறும் அறிக்கை மட்டுமே விட்டுக் கொண்டிராமல், சில வரிகளைக் குறைத்து, மக்களுக்குச் சுமையைக் குறைக்க வேண்டும். காப்பிப் பொடிக்கு வரி, பாலுக்கு வரி, சர்க்கரை வரி, தம்ளர் வரி, ஹோட்டலின் சேவை வரி, என ஒவ்வொன்றுக்கும் வரி கட்டி, நமது மேஜைக்கு காப்பி வரும் போது பதினொரு ரூபாய் ஆகிவிடுகிறதே!

இந்தத் தலையங்கத்தை நான் எழுதும் போது, நாட்டின் பணவீக்கம் 11.9% என்று டி.வி.யில் ஃப்ளாஷ் செய்தி மின்னுகிறது. இந்த வரியை நீங்கள் படிக்கும் போது அது 13.5% ஆக உயர்ந்தாலும் ஆச்சரியமில்லை!

அரசாங்கம் அதைச் செய்ய வேண்டும், இதைச் செய்ய வேண்டும் என்று காத்திராமல், பெண்களாகிய நாம் விலைவாசியைத் தாக்குப்பிடிக்க என்ன செய்யலாம்? பூ விலையோ, பவுன் விலையோ நேரடியாகப் பாதிப்பது வீட்டின் நிதியமைச்சர்களான நம்மைத்தானே! என்ன செய்தால், வீட்டுச் செலவைச் சமாளிக்கலாம்? 'யோசி... விலைவாசி!' என்று தலைப்பிட்டு, சிக்கன ஆலோசனைகளை 20.8.08க்குள் அஞ்சலட்டையில் மட்டுமே எழுதி அனுப்புங்க. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலோசனைகள் அக்டோபர் 2008 தீபாவளிச் சிறப்பிதழில் ஆஹா 50! டிப்ஸாக இடம்பெறும்.

அனுஷா நடராஜன்

புட்டபர்த்தி பஸ் நிலையத்தில் முட்டி மோதி என் கணவர் டிக்கெட் வாங்கியதும், நான் அவற்றை பத்திரமாக என் கைப் பையில் வைத்துக் கொண்டேன். அதெப்படி டிக்கெட்ஸ் காணாமல் போகும்? பதைத்துப் போய் தேடினேன்!



பகவான்

அனுராதா சேகர்

2



பாபா

இறைவனுடன் இனிய அனுபவங்கள்!

"**டி**க்கெட் வாங்கினீங்களா?''

சந்தேகப் பார்வைகள்... விமர்சனங்கள்...

என் கணவர் வழக்கம் போல, 'கூல்!'

எனக்குக் கவலை பிடித்துக் கொண்டது. நடுகாட்டில், கும்மிருட்டில் நம்மை இறக்கி விட்டால், என்ன செய்வது? வாகனம் ஏதும் கிடைக்காவிட்டால், பத்து கிலோ மீட்டர் நடந்து, மறுபடி புட்டபர்த்திக்குப் போக முடியுமா? ஹோட்டல் அறையையும் காலி செய்து விட்டோமே!

வேற வழி? ''சாமி பாபா! உன் சித்து வேலை எல்லாம் தாங்குற அளவுக்கு பெரிய ஆளுங்க இல்லைப்பா! ஸாரி பாபா... உன்னை 'டவுட்' பண்ணிட்டேன்!'' என்று மனசார வேண்டிக் கொண்ட மறு விநாடி,

''தொரக்கிந்தி... இதுவா பாருங்க...''

என்று கடைசி சீட்டிலிருந்து யாரோ எடுத்துக் கொடுத்தார்.

முன்பக்க இருக்கையில் இருக்கும் எங்களுடைய பயணச் சீட்டுகள், பஸ்ஸின் கடைசி சீட்டுக்குப் போனது எப்படி? கை தவற விட்டாலும், 'தொப்' என்று கீழே விழுமே தவிர, உருண்டு போகவோ, பறந்து போகவோ முடியுமா? அதற்கப்புறம் அவர் god-ஆ fraud-ஆ என்ற சிந்தனைக்கெல்லாம் நான் ஏன் போகிறேன்?

மறுபடி ஸ்ரீ பாபாவைத் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

அந்த வருடம் கன்னட, தெலுங்கு புத்தாண்டு தினமான 'யுகாதி'க்கு பாபா வொயிட் ஃபீல்டில் இருந்தார். சென்னையிலிருந்து சில பத்திரிகையாளர்களை வைட் ஃபீல்ட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். பொம்மைத் துப்பாக்கி வைத்திருந்ததாக இளைஞன் ஒருவனை, வொயிட் ஃபீல்டில் கைது செய்த பரபரப்பு நிகழ்ந்திருந்த சமயம் அது. அதனால் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

நாங்கள் சென்ற வண்டி, ஊர் எல்லையிலேயே நிறுத்தப்பட்டது. கையில் எதையும் எடுத்துச் செல்ல அனுமதிக்கவில்லை. நான் பெண்கள் பக்கமாக இருந்த வி.ஐ.பி. வாசல் வழியாக, அழைத்துச் செல்லப்பட்டேன். எனக்கு உள்ளே நுழையும்போது, திடீரென்று ஜலதோஷம் பிடித்துக் கொண்டு விட்டது. எனக்கு சளி பிடித்தால், மூக்கில் 'நமநம'க்கும்! அடுத்து அடுக்குத் தும்மல் கிளம்பும்! மூக்கிலிருந்து ஐந்தருவி கொட்டும்!

எனக்கு டென்ஷன் ஆகி விட்டது.

கையில் கர்ச்சீப் கூட இல்லை. அது ஹேன்ட்பேக்கில் இருந்தது. திரும்ப வெளியே போகவும் முடியவில்லை. கதவைப் பூட்டி விட்டார்கள். என்னை அன்பாக அழைத்துப் போய், பிரதான ஹாலில் உட்கார வைத்தார்கள்.

'அய்யோ... சளி பிடித்து விட்டதே! போச்சுடா! நமக்கும் வேதனை! மற்றவர்களுக்கும் நியூசென்ஸ்! எப்படியும் பஜனை, பாபா பேச்சு என மூன்று மணி நேரமாவது ஆகும். அதுவரை எப்படித்



தாக்குப்பிடிப்பது? நான் இருப்பு கொள்ளா மல் தவித்துக் கொண்டிருந்தேன். கர்ச்சீப்... உடனடி தேவை கர்ச்சீப்!'

அப்போது, அழகான இளம் வாலன்டி யர் பெண்ணொருத்தி, என்னிடம் வேக மாக வந்து, எனக்கு முன்னால், என் புடைவையைத் தொடும்வண்ணம், ஒரு புத்தம் புதிய மடிப்புக் கலையாத, தூய வெள்ளை நிற கர்ச்சீப்பை குவியலாகப் போட்டு விட்டுச் சென்றார். அப்போது கூட நான், ''யாரோ வி.ஐ.பி. வர்றாங்க போலிருக்கு! இடம்பிடிச்சு வைக் கிறாங்க!'' என்றுதான் நினைத்தேன்.

நேரம் கடந்தது. அந்த இடத்துக்கு யாரும் வரவில்லை. கர்ச்சீப் போட்ட பெண், குறுக்கும் நெடுக்குமாக இருபது தடவையாவது அலைந்திருப்பாள். அந்த கர்ச்சீப்பை கடைசி வரை யாரும் எடுத்துக் கொள்ளவேயில்லை!

சின்ன காகிதம், பூ, காய்ந்த சருகு என என்ன கீழே கிடந்தாலும் ஓடோடி வந்து அப்புறப்படுத்திக் கொண்டிருந்த பற்பல வாலண்டியர்கள் கண்களில், அந்த கர்ச்சீப் படாமலா இருந்திருக்கும்?

பஜனை முடிந்து, பாபா வந்தார். அப்போதும் அந்த கர்ச்சீப் என் முன்னா லேயே இருந்தது.

''அடி பொண்ணே! உனக்கு என்ன வேணும்? கர்ச்சீப்தானே அதுக்குத்தானே தவிச்சே... எடுத்துக்கோ!'' என்று சொல்வது போல பட்டது.

நானாகவே, அந்த கர்ச்சீப்பை எடுத்து என் மடியில் வைத்துக்கொண்டு, ''தாங்க்ஸ் பாபா!'' சொல்லி விட்டேன். சொல்ல மறந்து விட்டேனே! அந்த கர்ச்சீப்பைப் பயன்படுத்தத் தேவையேயில்லாத வண்ணம், என் அடுக்குத் தும்மலும் நின்று போயிருந்தது.

"நீ எங்கு சென்றாலும் உன் கடமையைச் செய். உன்னுள் இருந்து நான் வழிகாட்டிக் கொண்டிருக்கிறேன் என்பதை உணர்ந்துகொள். ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்போதும் நான் உன்னுடன் இருக்கிறேன். வர இருக்கும் வருடங்களில் என்னைப் பல வடிவங்களில் உன்னால் உணர முடியும். நீ என்னுடையவன். எனக்கு மிக நெருக்கமானவன். கண் இமைகள் விழியைக் காப்பதுபோல் நான் உன்னைக் காப்பாற்றுவேன். நான் உன்னை என்றும் விட்டு விலக மாட்டேன். நீயும் என்னை விட்டு விலக முடியாது. இந்த நிமிடத்தில் இருந்து எதையும் எதிர்பார்த்து செயல்படாதே. மாறாத அன்புடன் உன் கடமையைச் செய். எல்லாவற்றிலும் இறைவனைக் காணக்கற்றுக் கொள்.

ஒருமுறை, 'கல்கி' பத்திரிகை வேலை முடிய, இரவு எட்டுமணியாகி விட்டது. ஆட்டோ பிடித்து வீட்டுக்குப் போனால், நடுவழியில் கத்திப்பாரா ரவுண்டானாவில் போக்குவரத்து நெரிசல். மின்சாரத் தடை வேறு.

பசி, தலைவலி, உடல் சோர்வுடன் வீட்டுக்குப் போய்ச் சமைக்க வேண்டும், இரவு கண் விழித்து ஃபார்ம் படிக்க வேண் டும், மறுநாள் சமையலுக்குக் காய்கறி நறுக்க வேண்டும்... போன்றவையும் சேர்ந்து கொள்ள, எனக்கு மனஉளைச்சல் ஏற்பட்டு விட்டது.

பொதுவாகவே, நான் உற்சாகமானவள்.

எதற்கும் அசராதவள். எனக்குச சோகமாக இருக்கக்கூடத் தெரியாது. 'ஸ்டார்ட்!' என்றதும் கண்களில் நீரைத் தேக்கும் பெண்களைப் பார்த்து நான் அதிசயப்படுவேன். அப்படிப்பட்ட எனக்கே அன்று சுயபச்சாதாபத்தில் அழுகை அழுகையாக வந்தது.

அப்போது திடீரென்று ஒரு எண்ணம்.

''பாபா... ஐயாம் ஸோ டிப்ரெஸ்ட்! ப்ளீஸ்... கன்ஸோல் மீ! உன்னை நான் எங்கேயாவது பார்க்கணும். அதுவும் பத்து எண்ணுவதற்குள்ளே!''

கத்திப்பாரா சந்திப்பில், கரண்ட் போன இருட்டு வேளையில், ஏகப்பட்ட ஹாரன் சத்தங்களுக்கு இடையில்... பாபாவைப் பார்க்கணும். அதுவும் 1... 10க்குள்! சுவாமிக்கு செமத்தியான டெஸ்ட்! மனசுக்குள் வேகமாக எண்ண ஆரம்பித்தேன். ஒண்ணு... இரண்டு... ஏழு... ஒன்பது... சரியாக ஒன்பது முடிக்கவும், என் அருகே நின்றிருந்த கார் ஒன்று, ரிவர்ஸில் எடுக்க... அதிலிருந்து வந்த ட்யூன் என்ன தெரியுமா?

''ஓம் ஜெய் ஜகதீஷ ஹரே...'' பாபாவின் ஆரத்தியின் போது பாடப்படும் பாடலின் ட்யூன்!

நூற்றுக்கணக்கான வாகனங்கள் குறுக்கும் நெடுக்குமாக நின்று கொண்டிருந்த அந்த இரவு நேரத்தில், அந்த ஒரு கார் மட்டும் பின்புறமாக நகர்ந்து, முழுப் பாடலும் என் காதில் துல்லியமாக விழுந்தது.


''தாங்க்ஸ் பாபா...!''

என் மனம் அடைந்த ஆனந்தத்துக்கு அளவேயில்லை!

''காணாமல் போன டிக்கெட்ஸ் கிடைச்சதாம். கர்ச்சீப் கொடுத்தாராம். ஏதோ பாட்டு கேட்டுச்சாம். சும்மா... எல்லாம் குருவி உட்கார பனம்பழம் விழுந்த கதைதான்!'' என்று நீங்கள் நினைக்கலாம். சரி, எல்லாமே தற்செயலாகவே இருக்கட்டும். இனி அடுத்த இதழிலிருந்து சாயி பக்தர்களாக விளங்கும் பெரும்புள்ளிகளும், அவரை கடவுளாகவே வணங்கும் நமது மங்கையர் மலர் வாசகர்களும் பகிர்ந்து கொள்ளும் தெய்விக அனுபவங்கள் இடம்பெறுகின்றன. அதற்குப் பிறகு ஸ்ரீ பகவான் யார் என்பது ஓரளவுக்குத் தெளிவாகிவிடும்!

(அடுத்த இதழில் நடிகை அஞ்சலி தேவியின் அனுபவங்கள்)

(அருள் பெருகும்)



பொறுமையுடன் இரு. சரியான நேரத்தில் உனக்கு எல்லாம் அளிக்கப்படும். மகிழ்ச்சியாய் இரு. எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம். எது நடந்தாலும், எதை அனுபவித்தாலும் என் சங்கற்பத்தினாலேயே நடைபெறுகிறது என்பதைப் புரிந்து கொள். நான் இவ்வுலகத்திற்கு வந்துள்ள அவதார நோக்கத்தை தடுத்து நிறுத்தவோ, தாமதப்படுத்தவோ எந்த சக்தியாலும் முடியாது. கண் முன்னே விரிய இருக்கும் பொற்காலத்தில் புனித ஆத்மாவாகிய நீ ஆற்றவேண்டிய பணிகள் இருக்கின்றன. அதைப் புரிந்துகொள்.''

- பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா



சமையலறையில் ஃப்ரிட்ஜா?

சமையலறையில் ஃப்ரிஜ் வைக்கக் கூடாது. சில சமயம் கம்ப்ரஸரிலிருந்து ஸ்பார்க் வரும். அதனால் தீ விபத்து நேர வாய்ப்புண்டு.

- ஆர். பார்வதி, அம்பத்தூர்.

ஊருக்குச் செல்லும்போது எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்களை நினைத்தவுடனே எடுத்து வைக்க வேண்டும். பிறகு எடுப்போம் என்றிருந்தால் பெரும்பாலும் மறந்து விடுவோம். கையோடு ஒரு லிஸ்ட் போட்டுக் கொண்டாலும் சுலபமாக இருக்கும்.

- அ. ஆனந்தி, தேனி மாவட்டம்.

ஏ.டி.எம். வசதி உள்ள எல்லா வங்கிகளும் வாடிக்கையாளர்கள் பணம் எடுக்கும் போது ரூபாய் 500, 100 மட்டும் இன்றி 50, 20, 10 என எல்லாப் பிரிவுகளிலும் பணம் கிடைக்கும்படி, அதுவும் புதுநோட்டுகளாக கிடைக்கும்படி செய்தால் மிகவும் சௌகர்யமாக இருக்கும். ஆவனச் செய்வார்களா?

- கிரிஜா நரசிம்மன், சென்னை - 102.

சிறு குழந்தைகள் எழுதப் பழக்கும் முன்னர் களிமண் [அ] கோதுமை மாவைப் பிசைந்து கொடுத்து பொம்மைகள் செய்ய வைப்பதன் மூலம் பிஞ்சுக் கைகளை வலுவூட்டலாம்.

- எஸ். மீனா, ஸ்ரீரங்கம்.

இவை எல்லாமே ஆஹா 50! தான்!

படிப்பு, வேலை சம்பந்தமாக விண்ணப்ப மனுக்களைப் பூர்த்தி செய்து, கடைசி நாள் வரை காத்திருக்காமல், முன்கூட்டியே அனுப்பிவிட வேண்டும். அஞ்சல் துறை, ரயில்வே போன்றவை திடீர் ஸ்டிரைக் அறிவித்தால் நமது அப்ளிகேஷன் குறித்த காலத்தில் போய்ச் சேராமல் இருக்கக் கூடும்.


- வெ. சியாமளா ரமணி, செகந்திராபாத் - 9.

குழந்தைகளின் ரிப்பன்களை வாங்கியவுடன் ஓரங்களை ஒரே சீராகக் கத்திரித்து, ஓரங்களை எரியும் ஊதுபத்தி முனையால் இலேசாகத் தடவவும். அழகாக இருப்பதோடு, நூல் பிரியாமல் பாதுகாக்கலாம். வளைவு வளைவாக டிசைன் கூடச் செய்யலாம்.

- அனிதா சாம்ராஜ், மும்பை.

ஆப்பிள், மாம்பழம், வெள்ளரிக்காய் போன்றவற்றை, தோலுடன் பெரிய துண்டுகளாக்கி குழந்தைகளிடம் கொடுத்து அப்படியே சாப்பிடப் பழக்குங்க. இதனால் அதிக அளவு வைட்டமின் சத்துக்கள் கிடைக்கும். பற்களும் உறுதி பெறும்.

- உமா மகேஸ்வரி, ஓசூர்.



VALET CAR PARKING
LGH 182
52 Grams
Opening Shortly
T.NAGAR LKS™
GOLDHOUSE PVT. LTD.
Usman Road, T.Nagar, Chennai - 17
Ph: (2434) 1111 / 2222 / 4444 / 5555
T.NAGAR LKS™
GOLD HAVEN
2nd Avenue, Anna Nagar, Chennai - 40
Ph: (2620) 4444 / 5555 (2626) 0000 / 1111
2621 8888 / 2628 4444

குக்கரி க்வீன்!

மிக்ஸ் அண்ட் மேட்ச் சமையல் போட்டி



குக்கரி தர்பாரில் கலந்துக் கொள்ள சமையல் ராணிகளை அழைக்கிறோம். ஒரிஜினல் சமையல் குறிப்புகளைத் தெளிவாக எழுதி, கீழே உள்ள கூப்பனையும் நிரப்பி அனுப்புங்க. தேர்ந்தெடுக்கப்படும் ஐந்து ரெசிபிகளுக்கு தலா ரூ.250/- பரிசு!

குக்கரி க்வீன் சமையல் போட்டி (ஆகஸ்ட்)

கண்டிப்பாகப் பயன்படுத்த வேண்டிய பொருட்கள் :
நெய் + சர்க்கரை

பெயர் : ....

முகவரி : ....


....

....

கடைசித் தேதி : 25.8.2008

அடிச்சாங்க பரிசு!

ஆஹா ஜூலை (2008) போட்டியில், "இப்பொழுது 2 ரூபாய் 1 ரூபாயும், 5 ரூபாய், 50 பைசாவும் ஒரே மாதிரி உள்ளன. இதனால் நிறையக் குழப்பங்கள் ஏற்படுகின்றன. வித்தியாசம் தெரியும்படி எடையிலோ, வடிவத்திலோ மாற்றி அமைத்தால் நல்லது" என்ற குறிப்பை எழுதி ரூ. 150/- பரிசு பெறுகிறார் கீதா வெங்கடேஸ்வரன், சிட்லபாக்கம். அதே டிப்ஸை சிறந்ததாகத் தேர்வு செய்த பல வாசகியரில் குலுக்கல் முறையில் ரூ. 150/- பரிசு பெறுகிறார். ஜே. ஹேமலதா, சென்னை - 91.



ஆஹா பரிசு!

இந்த இதழில் 'ஆஹா 50!' என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள டிப்ஸ்களைப் படியுங்கள். மிகச் சிறந்த ஒரே ஒரு குறிப்பைத் தேர்ந்தெடுத்து, எழுதி அனுப்புங்கள். உங்கள் தேர்வும், ஆசிரியர் குழுவின் தேர்வும் பொருந்தினால் குலுக்கல் முறையில் ரூ. 150/- பரிசு! தேர்ந்தெடுப்பவருக்கு மட்டுமல்ல, அந்தக் குறிப்பை எழுதியவருக்கும் ரூ. 150/- பரிசு! 'ஆகஸ்ட் -ஆஹா பரிசு!' என்று மறக்காமல் குறிப்பிட்டு, பக்க எண், வாசகி பெயருடன் அஞ்சல் அட்டையில் மட்டுமே எழுதி அனுப்புங்கள்.

கடைசித் தேதி: 15.8.2008



கலக்கல் விற்பனையில்...
கல்கி
வண்ணத்துப்பூச்சியும் சின்ன தேவதையும்!
கவர் ஸ்டோரி
ரியல் ஸ்டோரி
நகைச்சுவை நாயகன்
மிஸ்டர் பீன்
கலர்ஃபுல் ஸ்டோரி: அகர வரிசைக் கதைகள்
கோகுலம்
ஆகஸ்ட் 2008 விலை ரூ.8/-
குழந்தைகளின் குதூகலம்!

திருநெல்வேலி **ஷிபா குரூப்ஸ்**

பெருமையுடன் வழங்கும்...

கங்கைகொண்டான் ஐடி பார்க் அருகில்

ஸ்டார் சிட்டி


பணத்தை முதலீடு செய்ய அரிய வாய்ப்பு

ஸ்டார் சிட்டி கங்கைகொண்டானில் உதயமாகியுள்ளது.

எல்காட் (ஐடி பார்க்) சிப்காட் கம்பெனிகளுக்கு மிக அருகில்.

திருநெல்வேலி ஜங்ஷனிலிருந்து 15 கி.மீ. தொலைவில்.

840 க்கும் அதிகமான வீட்டுமனைகள், தெளிவான பத்திர பதிவுகளுடன்.



சிறப்பு அம்சங்கள்

- தங்க நாற்கர சாலை அருகில்
- இயற்கை எழில் கொண்ட மலைகள், மரங்கள், மின்சாரம், போக்குவரத்து வசதியுடன்.
- நேர்த்தியான தார் ரோடு வசதி.
- குறைந்த மனைகளே உள்ளன.
- சுவையான நிலத்தடி நீர்.
- நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கும் லேண்ட் வால்யு.

உங்கள் எதிர்கால ஐடி கனவுகள் நிஜமாகிட...



ஷிபா S

ப்ராபர்ட்டி டெவலப்பர்ஸ்

ஷிபா மருத்துவமனை குரூப்ஸ், திருநெல்வேலி

Off : 0462- 2333015

Cell: 94431 25525, 94425 25525, 94435 55595, 94420 61780

82, கைலாசபுரம் நடுத்தெரு, திருநெல்வேலி ஜங்ஷன் -627001

Website: www.shifahousing.com, E.Mail: info@shifahousing.com



காது கொடு கணவனே!



பார்த்துப் பார்த்து நான் செய்த சமையலை
பரபரப்பாய் அள்ளிப் போட்டுக் கொள்வாய்
புதுப்புடைவையும் புதுத்தொங்கலுமாய்
'சூப்பராய் இருக்கு' என்று நீ
சொல்லப்போகும் வார்த்தைக்காகச்
சுற்றிச் சுற்றி வரும் என்னை
நிமிர்ந்து கூடப் பார்க்காமல் நிச்சலனமாய் அமர்ந்திருப்பாய்!
''உடல்நலமில்லை'' என்று சொன்னால்
''டாக்டரிடம் போவதுதானே?'' என்று
ஒற்றை வரியில் உடனடி பதில் தருவாய்!
கணவன் ஆனதும்
காதும் செவிடாகி விடுமா?
காதுகொடு, என் கணவனே!
வேண்டியதொன்றும் பிரமாதமில்லை
அன்பாய் நாலு வார்த்தை; ஆறுதலாய் ஒரு சிரிப்பு;
நட்பாய் ஒரு தொடுதல்; நாள் கிழமையில் சிறு பரிசு;
ஆதரவாய் தலை வருடல்; அடிக்கடி நலம் பாராட்டல்;
புடைவையும் நகையும் மட்டுமல்ல
புகழ்ச்சியாய் சில வார்த்தைகளும் வேண்டும்!
காதுகொடு, என் கணவனே!

- (முத்து. சாந்தி), விழுப்புரம்



ஒரு கருவின் கதை



Dr.தேவசேனா

"ஆபிஸிலே பார்ச்சர் பண்றாங்க ஜோதி. 'ஏதாவது நியூஸ் உண்டா? எப்படா ட்ரீட் தரப்போறேன்னு பிச்ச எடுக்கறாங்க இனிமேலும் தள்ளிப்போட முடியாதுன்னு தோணுது" என்றான் கார்த்தி.

"உங்க அம்மாவும் என்னை மறைமுகமா கேட்டுக் கிட்டே இருக்காங்க நேத்தக்கி டாக்டர்கிட்டே வேணா ரெண்டு பேரும் செக்கப் பண்ணிட்டு வாங்களேன்னு சொல்றாங்க" என்று பரிதாபமாகச் சொன்னாள் ஜோதி.

"நாம திட்டமிட்டபடி ஒண்ணரை வருஷம் நாளை யோடு முடியுது" என்று கண் சிமிட்டினான் கார்த்தி.

"அப்படின்னா ஓகேவா?" என்று கேட்டபோது ஜோதியின் முகத்தில் சந்தோஷம் வெட்கம் இரண்டும் போட்டியிட்டன.

ஆக குழந்தை பெறுவதை இனியும் தள்ளிப்போட வேண்டாம் என்ற முடிவுக்கு இருவரும் வந்துவிட்டனர்.

அடுத்த நாள் அலுவலகம் விட்டுத் திரும்புகையில் அக்காவின் வீட்டுக்குச் சென்றான் கார்த்தி. கார்த்தியும், ரம்யாவும் சின்ன வயதிலிருந்தே ரொம்பப் பாசமான வர்கள். தயக்கமில்லாமல் அவர்களால் எதையும் பேசவோ விவாதிக்கவோ முடிந்திருக்கிறது.

"முதல்லே இந்த ஸ்வீட்டை எடுத்துக்கோ. என்றபடி இனிப்புப் பெட்டியை நீட்டினாள் ரம்யா.

"எதுக்கு இப்ப திடீர் ஸ்வீட்?" என்று கேட்ட கார்த்திக்கு அடுத்த நொடியே விவரம் விளங்கிவிட்டது. "எம்.ஏ. பாஸ் செய்திட்டியா" என்று பேட்டபடி கைகுலுக்கினான்.

ரம்யா மிகவும் புத்திசாலி. பக்கத்தில் உள்ள பள்ளியில் ஆசிரியையாக வேலை பார்க்கிறாள். அவள் கணவர் சுய தொழில் செய்பவர் வருமானத்துக்குக் குறையில்லை. ஐந்து வருடங்களுக்கு முன் அவர்களுக் குப் பிறந்த விக்கி என்கிற விக்ரம் இப்போது தன் பக்கத்து வீட்டுத் தோழர்களோடு விளையாடச் சென்றிருந்தான்.

"கார்த்தி நீயா சொல்லுவேன்னு பார்த்தேன். நீ எப்போதாண்டா நல்ல சேதியை சொல்லப்போறே? என் ஆலோசனை தேவைப்படுதோ?" என்று கேட்டாள் ரம்யா. கார்த்தி புரிந்துகொண்டான். "கவலையே படாதக்கா. சீக்கிரமே நல்ல சேதியை சொல்வேன்" என்று அவன் கூற, "ஜோதி முழுகாம இருக் காளா? எத்தனை மாசம்?" என்று அவசரமாக கேட்டாள்.

"ஐயோ அக்கா, ப்ளான் பண்ணி இதுவரை தள்ளிப்போட்டோம். இனி மேல் தள்ளிப்போட வேணாம்னு தீர் மானிச்சிருக்கோம். அதைத்தான் சொன்னேன்" என்றான்.

"அப்படியோ நல்லது. நாளைக்கே ஜோதியை ஒரு நல்ல கைனகாலஜிஸ்ட்டிடம் அழைச்சிக்கிட்டு போ" என்றாள்.

கார்த்திக்கு ரம்யாவை நினைத்து கோபப்படுவதா அல்லது பரிதாபப்படுவதா என்று தெரியவில்லை. சொன்னதை சரியாகப் புரிந்துகொள்ளாமல் எதையோ பேசுகிறாளே!

"அக்கா, சரியா புரிஞ்சுக்கோ. ஜோதி இன்னும் கன்சீவ் ஆகலே"

"தெரியுதுடா, தெரிஞ்சுதான் சொல்றேன். சொல்றதைக் கேளு டாக்டர் உனக்கு எல்லாவற்றையும் சரியாக விளக்குவார்" என்றாள்.

அடுத்த நாள் மனைவியுடன் மகளிர் மருத்துவரான டாக்டர் தேவசேனாவை அணுகினான் கார்த்தி. "எதுக்காக அவசரப்பட்டு இப்பவே வந்தீங்க" என்று டாக்டர் கேட்டுவிட்டால் அவமானமாக இருக்குமே என்று தோன்றியது ஜோதிக்கும் இந்த விசிட் தேவைதானா என்ற கேள்வி தோன்றிக் கொண்டே இருந்தது.

ஆனால் இருவரையுமே ஆச்சர்யப்படுத்தும்படி இருந்தன டாக்டரின் வார்த்தைகள். "ரொம்ப புத்தி சாலித்தனமா செயல்பட்டிருக்கீங்க, குழந்தை வேணும்னு முடிவெடுத்தால் கருத்தரிப்பதற்கு சில மாதங்களுக்கு முன்பாகவே டாக்டரை அணுகி ஆலோசனை பெறுவது ரொம்ப முக்கியம். பெரி கன்ஸப்ஷன் கேர் (Sickle Cell Anaemia) என்று சொல்லப்படும் இந்த கட்டத்திலே பல முக்கியமான விஷயங்களை தெரிஞ்சுக்கணும்" என்ற தொடக்கத் தோடு டாக்டர் தொடர்ந்து கேட்ட கேள்விகளும் அளித்த விவரங்களும் கார்த்திக்கு மட்டுமல்ல. ஜோதிக்கும் மிகவும் வியப்பை அளித்தது.

திருமணமான ஒவ்வொரு தம்பதியும் தெரிந்து கொள்ளவேண்டிய அறிவியல் விவரங்கள் அவை

- தொடரும்



தொடர் கதை

பூ பூக்கும்

மருத்துவமனை வாசலில் நின்ற ஆட்டோவிலிருந்து இறங்கிய அர்ச்சனா, வரவேற்புப் பகுதியில் அறை எண் 117க்கு எப்படிப் போக வேண்டுமென்று விசாரித்தாள்.

''முதல் மாடி. ஆனா இப்பப் போக முடியாதும்மா. இது விசிட்டர்ஸ் டைம் இல்லை. காலைல பத்து டு பதினொண்ணு, மாலைல நாலு டு ஆறுல வாங்க.''


''மேடம், நான் அவர் பொண்ணு. பத்து நிமிஷம் பார்த்துட்டுப் போயிடறேன்.''

''ஸாரிங்க. ஏற்கெனவே ரெண்டு அட்டெண்டர் பாஸ் குடுத்துட்டோம். ரெண்டு பேரும் இப்ப ரூம்ல இருக்காங்க. வேணும்னா ஒருத்தரை வரச் சொல்லிட்டு அந்த பாஸ்ல நீங்க போய்ப் பார்த்துட்டு வாங்க.''

அங்கிருந்த காக போட்டு பேசும் போனில் ஆர்த்தியை அழைத்து விவரம் சொல்ல, சில நிமிடங்களில் ஆர்த்தி வந்து அர்ச்சனாவின் கைபிடித்துக் கண்கலங்கினாள்.

''அக்கா, ஏன் நம்ம குடும்பத்துல இவ்வளவு பிரச்னை வருது?''

''எல்லாம் என்னாலதான் ஆர்த்தி. என் காதல் கல்யாணத்தாலதான் அப்பாவுக்கு நெஞ்சு வலி வந்திடுச்சி. அந்த நேரத்துல எப்படியும் ஒண்ணு சேர்ந்துடணும்னு மட்டும்தான் மனசுல வெறி இருந்துச்சி. பின்னாடி என்ன ஆகும்னு எதுவும் புத்தில பதியல ஆர்த்தி. நினைச்சி நினைச்சி இப்ப அழுதுட்



பண்டிகை ஸ்பெஷல் 1

ஓசை!

டிருக்கேன் தெரியுமா?''

''விடுக்கா. நீ என்ன பண்ணுவே, பாவம்! அவருக்கு வரணும்னு இருக்கு, வந்துடுச்சி. இது இல்லைன்னா வேற பிரச்சினையால வந்திருக்கும்.''

''டாக்டர் என்ன சொல்றாரு ஆர்த்தி? பயப்படறதுக்கு ஒண்ணுமில்லையே?''

''பயமாதான் இருக்கு. காலையில தான் என்னை தனியாக் கூப்புட்டு எடுத்த டெஸ்ட் ரிப்போர்ட்டெல்



3 பட்டுக்கோட்டை பிரபாகர்

லாம் வெச்சி விவரமா சொன்னாருக்கா. அப்பாவுக்கு ஓபன் ஹார்ட் சர்ஜரி செஞ்சாகணுமாம். மருந்து, மாத்திரையில சரி பண்ற ஸ்டேஜ் தாண்டியாச்சாம். ரெண்டு இடத்துல பிளாக் இருக்காம். ஆபரேஷன் வேணாம்னு முடிவு செஞ்சா ரிஸ்க்காம்.''

நெஞ்சைப் பிடித்துக் கொண்டாள் அர்ச்சனா.

''கடவுளே! இந்த ஆபரேஷனை தாங்கற மாதிரி அவர் உடம்பு இருக்கா?''

''அது ஒண்ணும் பிரச்னை இல்லைன்னு சொல்றார். இப்பல்லாம் பொறந்த குழந்தைக்குக் கூட ஹார்ட் ஆபரேஷன் செய்யறாங்களாம். நிதானமா அம்மாகிட்ட சொல்லி முடிவெடுங்கன்னு டாக்டர் சொல்றார்.''

''அம்மா என்ன சொல்றாங்க?''

''நான் இன்னும் அம்மாகிட்ட சொல்லலை. பயமா இருக்குக்கா. இப்ப நீ வந்தது எனக்கு எவ்வளவு தெம்பா இருக்கு தெரியுமா? மாமாவை அப்பா மட்டும் ஏத்துக்கிட்டிருந்தாருன்னா இந்த நேரத்துல அவரு நமக்கு எவ்வளவு துணையா இருப்பாரு? என்ன செய்யலாம்னு யோசனை கேக்கக் கூட உரிமை இல்லாம போயிடுச்சி பாரு!''

''யாரு, உன் மாமாதானே? நல்லா துணையா நிப்பாரு. அப்பாவுக்கு முடியலை, பார்த்துட்டு வரட்டுமான்னு போன் பண்ணிக் கேக்கறேன், வெட்டிடுவேன்னு பாய்றார். கத்தறார்.''

''அவரு கோணத்துல பாருக்கா. என்னதான் கோபம்னாலும், நம்ம பொண்ணு கழுத்துல தாலி கட்டின மாப்பிள்ளையாச்சேன்னு பாக்காம வாய்க்கு வந்தபடி அப்பா பேசினாரே, எனக்கே மறக்கலை, அவருக்கு மறந்துடுமா?''

''சரி, எவ்வளவு செலவாகுமாம்?''

''தெரியலை. ஹார்ட் ஆபரேஷன் பண்ணி டிஸ்சார்ஜ் ஆன வேற ஒரு பேஷண்ட்டைக் கேட்டேன். அவருக்கு மொத்தம் மூணு லட்சத்துக்கு மேல பில் வந்திருக்கு. அதெல்லாம் அப்புறம்க்கா. இப்ப நீ அப்பாவைப் பாக்கணுமா? கோபம் மாறாம அப்படியே இருக்காரேக்கா.''

''நான் வந்து பாக்கறேன்னு சொன்னதை அவர்கிட்ட சொன்னியா?''

''அப்படிச் சொல்லலை. அக்காவையும், பாப்பாவையும் பார்க்கணும் மாதிரி இருக்காப்பா, நான் வேணும்னா வரச் சொல்லட்டுமான்னு கேட்டேன்.''

''என்ன சொன்னாரு?''

பதில் சொல்லத் தயங்கிய ஆர்த்தியைப் பார்த்து, ''பரவால்லை, சொல்லு'' என்றார் அர்ச்சனா.

''கொஞ்சநஞ்சம் என் உடம்புல ஒட்டிக்கிட்டிருக்கற உசுரையும் எடுத்துடலாம்னு முடிவு பண்ணிட்டியான்னு கத்தினாரு. உன்னையும், மாமாவையும் உச்சக் குரல்ல திட்ட ஆரம்பிச்சிட்டாரு. சரிப்பா, விடுங்க. அவ பேச்சையே எடுக்கலைன்னு சொன்னப்புறம்தான் சமாதானம் ஆனாரு.''

''என் நிலைமை யாருக்கும் வரக்



ஆஹா 50!

கால்களில் வெடிப்பு, பித்தம் சம்பந்தமாக வரலாம். அதிக வெப்பத்தால் வரலாம். மாசிக்காய், கடுக்காய் பொடி பண்ணி விளக்கெண்ணெயில் சரிசமமாகக் கலந்து தடவினால் குணமாகும்.

- பி. நாகலெட்சுமி, சென்னை - 40.

கூடாது. அப்படி என்ன தப்பு பண்ணிட்டேன்? மன்னிக்கவே முடியாத தப்பா? எனக்குத்தான் வேற யாரு இருக்காங்க? அப்படி எல்லாரையும் எதிர்த்துக்கிட்டு வீம்பாப் போனேனே... அங்க மட்டும் என்ன சந்தோஷமாவா வாழ்ந்துட்டு இருக்கேன்?'' என்று அழுகையினூடே சொன்னவள் உடனே சுதாரித்து, ''உங்களை எல்லாம் பிரிஞ்ச சோகம் சதா சர்வ நேரமும் மனசுல சவுக்கால அடிச்சிக்கிட்டுத்தான் இருக்கு தெரியுமா?'' என்றாள்.

அவள் அருகில் அமர்ந்த ஆர்த்தி, ''எதையாவது மறைக்கிறியா நீ? மாமா உன்னை சந்தோஷமாதானே வெச்சிருக்காரு? அங்க உனக்கு ஒண்ணும் பிரச்னையில்லையே? சொல்லுக்கா'' என்றாள்.

''சேச்சே. அங்க என்ன பிரச்னை? என்ன, நம்ம வீட்டுப் பேச்செடுத்தா மட்டும் அவருக்கு பொல்லாத கோபம் வந்துடும். அந்தப் பக்கம் அவரோட அம்மா, அப்பாவையும்தானே பகைச்சிக்கிட்டு கல்யாணம் பண்ணிக்கிட்டோம். ஒரு கோபம், வெறுப்புன்னா அவர்தான் வேற யார்கிட்ட காட்டுவாரு? ப்ரீதியைக் கொஞ்சறப்ப எல்லா சோகமும் பஞ்சாப் பறந்துடும். சரி ஆர்த்தி, அம்மாவை மட்டுமாவது பார்த்துட்டுப் போகட்டுமா? என்னை ரூமுக்கு விடமாட்டேங்கறாங்க. நீ போயிட்டு அம்மாவை இங்க வரச் சொல்றியா? என்னைக்காச்சும் அப்பா கொஞ்சம் சாந்தமா, நல்ல மனநிலையில இருக்கறப்ப, அவரைப் பார்க்கறதுக்காக நான் வந்துட்டுப் போனேன்னு சொல்லு. சொல்லியா?''

தொண்டை அடைக்க, ''சொல்றேன்க்கா. இரு. நான் போயி அம்மாவை வரச் சொல்றேன். அம்மாகிட்ட ஆபரேஷன் மேட்டர் நீ எதுவும் சொல்லாதே. நானே நிதானமா சொல்லிக்கறேன். என்ன?'' என்று எழுந்து மருத்துவமனை உள்ளே நடந்தாள் ஆர்த்தி.

மனோகர் கால்கள் இலேசாகப் பின்ன அந்த பாரிலிருந்து வெளியில் வந்து, நீளமான வரிசையில் தன் பைக்கை அடையாளம் கண்டுபிடிப்பதற்கு சிரமப்பட்டான்.

ஒருவழியாக கண்டுபிடித்தபோது, தன் வண்டி மேல் இரண்டு பேர் சாய்ந்து நின்றுகொண்டு சிகரெட் பிடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, போதையில் கோபம் தலைக்கேற, கெட்ட வார்த்தையைச் சொல்லி, ''நகருங்கடா!'' என்றான்.

அவர்களில் ஒருவன் உடனே மனோகரின் சட்டையைப் பிடித்து, ''யாரைப் பார்த்துச் சொன்னே? மூஞ்சைப் பேத்துடுவேன்'' என்று கையை ஓங்கினான்.

''ஏய், அடிச்சிடுவியா நீ? தீர்த்துருவேன் மவனே!''

ஓங்கிய முஷ்டியை மனோகாரின் முகத்தில் இறக்கினான் அவன். எகிறிச் சென்று விழுந்தவன் மேல் பாய்ந்து காலால் உதைக்க.. திருப்பி அடிக்க ஆத்திரம் இருந்



வயது வந்த பெண்களுக்கு மாதவிடாய் வந்த (ஆரம்ப) காலத்திலிருந்தே அரைத்து வைத்த ரோஜா இதழ் 1 டீஸ்பூனும், 1 டீஸ்பூன் தேனையும் கலந்து காலையில் வெறும் வயிற்றில் தினமும் சாப்பிட்டு வந்தால் வயிற்றுவலி, இடுப்பு வலி இல்லாமல் சில மாதங்களில் முகத்தில் நல்ல பொலிவு ஏற்படும்.

- வி. விமலா, நங்கநல்லூர்.

தாலும், போதை மனோகரை நிலை குலைய வைக்க... தடுக்க முடியாமல் அடிகளை வாங்கினான்.

அதற்குள் அடித்தவன் கையைப் பிடித்துத் தடுத்த அடுத்தவன், ''ஏய், அவன் மப்புல இருக்கான். படாத எடத்துல பட்டு செத்துட்டான்னா பேஜாராய்டும், வந்துடு'' என்றதும் இருவரும் மனோகர் மேல் துப்பிவிட்டுப் போனார்கள்.

ஆங்காங்கே ரத்தம் எட்டிப்பார்க்க, சட்டை சில இடங்களில் கிழிந்திருக்க, பாதையோர பழக்காரன் மனோகரை கைத்தாங்கலாக எழுப்பி ஒரு டீக்கடை பெஞ்சில் உட்கார வைத்து, தண்ணீர் வாங்கிப் புகட்டியதும், கொஞ்சம் போதை தெளிந்து, நிலைமை புரிந்தது. அவமானம் தாங்காமல் தலைகவிழ்ந்தான் மனோகர். வேகமாக எழுந்து வண்டியைக் கிளப்பிக் கொண்டு சாலையில் விரைந்தான்.

அம்பத்தூர் வந்து ஒரு சந்துக்குள் நுழைந்து தன் வீட்டின் வாசலில் வண்டியை கோணலாக நிறுத்திவிட்டு அவசரமாக வந்தவனை கதவில் பூட்டு வரவேற்றது. தன்னிடம் இருந்த சாவியைப் போட்டுத் திறந்து உள்ளே வந்து குளியலறைக்குச் சென்று தன் காயங்களைக் கழுவி ரத்தக் கறை படிந்த உடைகளைக் கழற்றிவிட்டு குளித்தான்.

தலை சீவிய போது, பக்கத்து வீட்டுக்கார தங்கம்மா ப்ரீதியுடன் வந்து, ''தம்பி, அர்ச்சனா குழந்தையைக் குடுத்துட்டுப் போச்சு. எனக்கு கடை வரைக்கும் போகணும். தொட்டில்ல போட்றட்டுமா?'' என்றவள் இவன் தலையசைத்ததும், ஓரமாகத் தொங்கிய தூளியில் குழந்தையைப் போட்டாள்.

''அர்ச்சனா எங்க போயிருக்கா? சொன்னாளா?''

''அவங்கப்பாவுக்கு முடியலன்னு ஆஸ்பத்திரில சேர்த்திருக்காங்களாமே, உங்களுக்குத் தெரியாதா?'' என்று அவள் நடக்க...

''தெரியும்'' என்றவன் உள்ளுக்குள் பற்களைக் கடித்தான். நாற்காலியில் அமர்ந்து ஒரு சிகரெட் பற்றவைத்தான்.

கொஞ்ச நேரத்தில் உள்ளே வந்த அர்ச்சனா, ''என்ன சீக்கிரமே வந்துட்டீங்க? மளிகைக் கடையில என்ன கூட்டம்? நின்னு வாங்க முடியாது போலிருக்கு. பட்டியலைக் குடுத்து போட்டு வைங்க. அப்புறம் வந்து வாங்கிக்கறேன்னு வந்துட்டேன்'' என்றவள் அவனைச் சரியாகக் கவனித்து, ''ஆமாம், என்ன வாசனை இது? பகல்லயே ஆரம்பிச்சிட்டீங்களா? என்னங்க காயம்? விழுந்துட்டீங்களா?'' என்றாள்.

எதற்கும் பதில் சொல்லாமல் அவள் அருகில் வந்து லுங்கியை மடக்கிக் கட்டிய மனோகர், ''இப்ப நீ மளிகைக் கடைக்குத்தான் போய்ட்டு வந்தேன்னு நான் நம்பணும். இல்ல? ஏண்டி, போன்ல நான் அவ்வளவு தூரம் சொல்லியும் நீ உங்கப்பனைப் போய்ப் பார்த்துட்டு வர்றேன்னா உனக்கெவ்வளவு நெஞ்சழுத்தம்?'' என்றவன் பொளேரென்று அவளை அறைந்தான்.

(தொடரும்)



ஆஹா 50!

முளைக்கீரையை பின்புறமாகத் திருப்பிப் பார்த்தால் ரோஸ் நிறமாக இருக்க வேண்டும். இப்போதும் சில தாய்மார்கள் முளைக்கீரையை திருப்பிப் பார்த்து ரோஸ் கலர் இருந்தால் நல்ல கீரை என்று வாங்கி விடுறார்கள். உண்மையில் அந்த ரோஸ் கலர் என்பது தங்கச் சத்தாம்.

– வந்தை ஜி.கே. நிதி,
வந்தவாசி.

Gurunathar Charanam

PRASHANTI

House of Silk Cottons



Prashanti's Aadi Offer!!!

Until 31.08.2008

Timing: 10 am to 8 pm

PRASHANTI
16, 6th Cross St, C.I.T. Colony, (Behind Chettiar Hall)
Mylapore, Chennai - 4. Ph: 24991850 / 24997636

PRASHANTI'S PARIPURNA
52, 4th Main, 17th Cross, Malleswaram Bangalore - 55.
Ph: 23341632 / 98861 85951



7% for Silk Cotton & 5% others

ONAM Sale at Ernakulam - 21.08.08 to 24.08.08
At: Dhakshina Bharat Hindi Prachar Sabha, South end
Chittor Rd, Ernakulam, Cochin. Ph: 0484-2375115 / 7766

For more details Visit www.bharatmatrimony.com / Wedding Directory / Apparels

BHARATH COLLEGE OF SCIENCE AND MANAGEMENT

(Affiliated to Bharathidasan University)

Near New Bus Stand, Trichy Road, THANJAVUR - 5 Ph: 04362 - 654481,654482,227937, 228081,

ADMISSION NOTICE - 2008 - 2009

POST GRADUATE PROGRAMMES

1. M.Sc Hotel Management & Catering Science
2. M.Sc Fashion Tech. & Costume Design
3. M.Sc Visual Communication
4. M.Sc Bio Technology
5. M.Sc Food Service Mgt. & Dietetics
6. M.Sc Information Technology
7. M.Sc Computer Science
8. M.Sc Bio Informatics
9. M.Sc Electronic Media
10. M.Sc Mathematics
11. M.Com. Commerce
12. M.A Tamil

For Prospectus and application Forms :

	IN PERSON	BY POST
PG	100	125
MBA	250	300

SPOT ADMISSION GOVT. SCHOLARSHIP

P.G. DIPLOMA PROGRAMME

1. P.G.D.A.F.T-
2. P.G.D.B.I
3. P.G.D.C.H.M
4. P.G.D.B.A

Research Programmes

1. M.Phil., - Hotel Management and Tourism
2. M.Phil., - Fashion Technology
3. M.Phil., - Food Service Management and Dietetics
4. M.Phil., - Bio-Technology

BHARATH INSTITUTE OF MANAGEMENT

M.B.A (AICTE APPROVED)

BHARATH INSTITUTE OF TEACHER TRAINING

D.T.Ed., (2 years)

APPROVED BY NCTE NO:FSRO/NCTE/D.T.Ed/2007-2008/18036 Dt.19.02.08
APPROVED BY TAMIL NADU GOVT:RC NO:6804-4/C3/2008(1)Dt.20.06.08

Prof.N.GANESAN, M.Com., M.Phil., (Ph.D.,)
FOUNDER

Mrs.PUNITHA GANESAN, B.Sc., M.A
Secretary

தெரிஞ்சா தெரியுமே!



அன்றாடம் சமையலில் உபயோகிக்கும் முக்கியப் பொருட்களான உப்பு, சர்க்கரை, காப்பிப் பொடி, துவரம் பருப்பு, மிளகாய் போன்றவை, காலை சமையலின்போது தீர்ந்து விட்டால் டென்ஷனாகி விடும். இதைத் தவிர்க்க டிரான்ஸ்பரண்ட் பாட்டில்களில் பொருட்களைப் போட்டு வைத்தால் அவ்வப்போது அவற்றின் இருப்பு தெரிந்து வாங்குவதற்கு வசதியாக இருக்கும்.

- ஆர். வேதவல்லி ரமேஷ்,
சென்னை - 18.

இவை எல்லாமே ஆஹா 50! தான்!

குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே பாடங்களுடன் தேசிய கீதம், தமிழ்த் தாய் வாழ்த்து போன்றவற்றை கற்றுத் தர வேண்டும். நிறைய படித்தவர்களே இவற்றைப் பாடும் போது உச்சரிப்பில் தவறு செய்கின்றனர்.

- கு. லதா, கும்பகோணம்.

நிலம், வீடு, அடுக்குமாடி போன்றவற்றின் விலை எல்லாம் நடுத்தர மக்களால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அளவுக்கு உயர்ந்து விட்டது. இதை அரசாங்கம் கவனித்து, கண்டித்து ஒரு வரைமுறையை உண்டுபண்ணி இந்த இடத்திற்கு, வீட்டிற்கு, அடுக்கு மாடிக்கு என நியாயமான விலையை நிர்ணயம் செய்யலாமே! இடைத்தரகர்கள் நுழைந்து கொள்ளையடிப்பதைத் தவிர்க்கலாமே!

- கே. வி. மைத்ரேயி,
விருகம்பாக்கம்.

பச்சையாகச் சாப்பிடும் காய்கறிகளில், பழங்களில் ருசிக்காக சர்க்கரை, உப்பு, மிளகுத் தூள் சேர்த்துச் சாப்பிடாமலிருப்பது நல்லது.

- க. கண்ணகி, மிட்டூர்.

குழந்தைகள் விளையாடும்போது அடிபட்டு பல் விழுந்து விட்டால் உடனே அதைக் காய்ச்சாத பாலில் போட்டு பல் டாக்டரிடம் எடுத்துச் சென்றால், பல்லின் உயிர் சாகாது. மீண்டும் பொருத்த முடியும். இது பெரியவர்களுக்கும் பொருந்தும்.

- ஜி. சங்கீதா, செகந்திராபாத்.

கிருஷ்ண ஜெயந்திக்கு என்னதான் பட்சணங்கள் செய்திருந்தாலும், நைவேத்தியத்திற்கு அவல் + வெல்லம் வைக்க வேண்டும். எதுவுமே செய்ய இயலாதவர்கள் கூட இத் தினத்தில் அவலையும், வெல்லத்தையும் கலந்து நைவேத்தியம் செய்தால் பரந்தாமனின் மனம் குளிர்வது உறுதி.

- எல்.எஸ். சித்ரா கணேசன்,
கோவை.

வாழைப் பூவை, பொடிப் பொடியாக நறுக்கி அத்துடன் முருங்கைக் கீரையும் சேர்த்து வதக்கி அடிக்கடி சாப்பிட்டு வந்தால் குடற்புண் குணமாகி விடும்.

- ம. அக்ஷயா, அரூர்.

பெப்பர் பாப்கார்ன்

எம். ஹரி, துரைப்பாக்கம்.

உங்களுக்குப் பிடித்த இசைக் கருவி எது?

பிடித்த இசைக்கருவி பியானோ! கறுப்பு, வெள்ளைக் கட்டைகளில் கிளர்ந் தெழும் தேவலோக இசை என்னை மிகவும் மயக்கும்.

எஸ். வெங்கட்ராமன், வேலூர்.

ரீமிக்ஸ் பாடல்கள் எரிச்சலைத் தருகின்றனவே?

யார் எப்படி ரீமிக்ஸ் செய்கிறார்கள் என்பதைப் பொருத்துதான் பாடலின் வெற்றி. சில தாளம் போட வைக்கின்றன. சில எரிச்சல் தருகின்றன.

கிரிஜா, மாங்காடு.

'அழகிய அசுரா', 'ஏய் கைய வச்சுக் கிட்டு' ஆகிய பாடல்களின் புதுமையான இசை பற்றி...?

'அழகிய அசுரா' பாடலைப் பொறுத்தவரை அந்த பேஸ் வாய்ஸ்தான் அதன் வெற்றிக்குக் காரணம். 'ஏய் கைய வச்சுகிட்டு' பாடலில் சாதாரணமாக வீட்டில் குழந்தைகளை அதட்டுவது போன்ற பேச்சு வழக்கில் அந்தப் பாடல் வரிகள் அமைந்ததைச் சொல்லலாம்.

வாசகியரின் 'பனீர்' கேள்விகளுக்கு டி.இமான் தந்த 'பனிச்' பதில்கள்!

'கொழு கொழு

டி. இலகா ஹரிராம், மும்பை.

அடிக்கடி 'ஹம்' செய்யும் பாட்டு எது?

'சில்லுனு ஒரு காதல்' படத்தில் ஏ.ஆர். ரஹ்மான் இசையில் 'முன்பே வா.. அன்பே வா...' பாடல்.

ஆர். விவேக், தஞ்சாவூர்.

முறைப்படி இசைக் கற்றிருக்கிறீர்களா?

நாலரை வயதிலிருந்தே முறைப்படி பியானோவில் வெஸ்டர்ன் கிளாசிக் (மேற்கத்திய இசை) கற்றிருக்கிறேன். அதில் 8 கிரேடுகள் உள்ளன. அத்தனையும் முடித்துள்ளேன். அதுவும் 9-ஆம் வகுப்புக்குள்ளேயே... இந்திய கிளாஸிக் இசையை மகாலக்ஷ்மி என்பவரிடமும் ஹிந்துஸ்தானி இசையை சேகர் என்பவரிடமும் கற்றுள்ளேன். இன்னும் கற்றுக் கொண்டேயிருக்கிறேன்!

பி. அசோக்குமார், திண்டிவனம்.

சினிமா என்றாலே சென்டிமென்ட் நிறைந்ததுதானே? நீங்கள் எப்படி?

எனக்கு நோ சென்டி மென்ட்ஸ், ஆனால் கம்போஸிங்குக்கு எங்காவது வெளியூர்ப் போகலாமா என்று கேட்டால் என் இடத்தில் என் ஸ்டுடியோவிலேயே கம்போஸிங் செய்வதுதான் எனக்கு வசதி என்று சொல்லிவிடுவேன்.

சுபா முராரி, சேலம்.

கர்நாடக இசைக்குத் திரைப்படத்தில் வரவேற்பு எப்படி?

'சங்கமம், சங்கராபரணம் போல இயல்பாகக் கதையை ஒட்டி, கர்நாடக இசை அமைந் தால் பெரும் வரவேற்பு இருக்கும். மற்றபடி இயக்குநர்களின் விருப்பத்திற்



கேற்ப இசையமைக்க லாம்!

சுந்தரி சரவணன், மைலாப்பூர் - 2.

பிடித்த பாடகர்...?

குறிப்பா சொல்லணும்னா... எஸ்.பி. பாலசுப்ரமணியம், ஹரிஹரன், சித்ரா, சாதனா சர்கம் இவர்களுடைய பாடல்கள் எல்லாம் பிடிக்கும்.

பத்மா மோகன், ஈரோடு.

அன்றைய திரை இசைக்கும், இன்றைய திரை இசைக்கும் உள்ள வேறுபாடு என்ன?

வேறுபாடு என்றால்... சப்தத்தில் இருக்கு எனலாம். ஜீவன் உள்ள பாடல்கள் அன்றும் உண்டு... இன்றும் உண்டு... இன்றைய இசையில் சத்தம் கொஞ்சம் தூக்கல்.

எஸ். விஜயாராமன், ஹைதராபாத் - 2.

எம்.ஜி. பரத், திண்டுக்கல்.

மற்ற இசையமைப்பாளர்கள் அமைத்த பாடல்களில் உங்களுக்குப் பிடித்தது?

எத்தனையோ பாடல்கள், ஏ.ஆர். ரஹ்மானின் இசையில் 'ரோஜா' படப் பாடல்கள், சிவாஜி படத்தில் 'சஹானா சாரல் தூவுதோ...' வித்யா சாகரின் இசையில் 'பிரிவோம் சந்திப் போம்' படத்தில் வரும் 'கண்டேன்.. கண் டேன்...' யுவன் சங்கர்ராஜாவின் இசையில் 'நினைத்து நினைத்துப் பார்த்தேன்'. பாடல், பரத்வாஜ் இசையில் 'ஒவ்வொரு பூக்களுமே' பாடல் எம்.எஸ். விஸ்வநாதன் இசையில் பல பாடல்கள்.

எம்.ஜி. பரத், திண்டுக்கல்.

சிறு வயதில் உங்களைக் கொஞ்சி மகிழ்ந்தவர்கள்... உங்கள் மனதில் பதிந்தவர்?



அம்மா... அம்மா... அம்மாதான்... நான் ஒரே மகன்.

எஸ். சிந்துஜா, வாழப்பாடி.
'மொபைலா... மொபைலா..' பாடலின் வெற்றிக்குக் காரணம் யார்?

(சிரிக்கிறார்...) அதனை இளமைச் சொட்டச் சொட்ட பாடியவர்... அதாவது அடியேன்தான்!

சாத்தூர் எம். செல்லையா.
கண்ணதாசன் எழுதிய எம்.எஸ். விஸ்வநாதன் இசையில் டி.எம். சௌந்தர்ராஜன் குரலில் சிவாஜி நடிப்பில் உங்களுக்குப் பிடித்த பாடல் எது?

கணக்கேயில்லை! நினைவுக்கு உடனே வருவன 'புதிய பறவை'யில் 'ஆஹா மெல்ல நட...' 'எங்கே நிம்மதி' போன்றவை.



வைதேகி ராமன், கோவை - 3.
பாடலுக்கு வெற்றி தருபவர் இவர்களில் யார்? எழுதியவர்? இசை அமைத்தவர்? பாடியவர்? நடித்தவர்?

இறைவனும், ரசிகர்களும்தான் பாடலின் வெற்றிக்குக் காரணம்.

ராஜேஸ்வரி வெங்கட், சென்னை.
உங்கள் குழந்தைத்தனமான முகம் கொழு கொழு கன்னம் ரகசியம்?

(சிரிப்பு) வெளிப்படையான பேச்சு.. மனசில் கள்ளத்தனம் இன்றித் தெளிவாக இருப்பது...?

என். சீதாலக்ஷ்மி, சென்னை - 40.
மெலடி, காதல், குத்துப்பாட்டு, சோகம் இவற்றில் எதற்கு இசை அமைப்பது கடினம்?

ஒரு நல்ல இசையமைப்பாளருக்கு எதுவும் கஷ்டமல்ல. அவர் ஒரு கடல் மாதிரி! கேட்பவரின் ரசனைக்கும் தேவைக்கும் ஏற்ப முத்து, பவளம், சங்கு என அள்ளிக் கொடுக்கலாம்!

ஜானகி சுப்ரமணியன், திருப்பூர்.
இசை அமைக்கும் நேரத்தில் மனதில் ஏற்படும் கோபம், வருத்தம், சஞ்சலம், இவற்றை எப்படிச் சமாளிப்பீர்கள்?

இவையெல்லாம் இசையில் எதிரொலிக்க வாய்ப்பு உண்டு. உணர்ச்சிவசப்படுபவர்கள் தானே கலைஞர்கள்? ஆனாலும் முழுமையாக வேலையில் ஈடுபட்டு உணர்ச்சிகளை அடக்கத்தான் வேண்டும்.

சுஜாதா மோகனராஜன், காமநாயக்கன் பாளையம்.
உங்கள் இசையமைப்பில் மெய் சிலிர்க்க வைத்த பாடல்... படம்?

'ஏ,பி,சி,டி' படத்தில் 'மஞ்சள் முகமே' என்ற கிளாஸிக் இசையில் அமைந்த பாடல்.

ஆர்.எஸ். லக்ஷ்மி, மதுரை.
உங்கள் ரோல் மாடல் யார்?

என் ரோல் மாடல் ஏ.ஆர். ரஹ்மான். 'ரோஜா' படப்பாடல்கள் என்னை வசீகரித்து, இந்தத் துறைக்குள் வரவழைத்து விட்டன.

ஸ்ரீ அமரஜோதி, பூனாம்பாளையம்.
நீங்கள் ஹீரோ, ஆவது எப்போது?

இருக்கிற இசைத் துறையிலேயே சாதிக்க வேண்டியது நிறைய இருக்கிறதே...

ரூ. 5,000 பரிசு அறிவுப் போட்டி - 5 முடிவு பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்!

குலுக்கல் முறையில் ரூ 250/- பரிசு பெறும் இருபது அதிர்ஷ்டசாலிகளின் பட்டியல் இதோ!

1. எம். அனிஸாபேகம், கரட்டிபாளையம், 2. ச.இல. சுந்தரி, அவிநாசி, 3. என்.எஃப். ஜீனத், காயல்பட்டினம், 4. ஆர். அஜிதா, கம்பம். 5. ஆண்டாள் வேணு கோபால், திருச்சி - 20, 6. உமாதேவி பலராமன், திருவண்ணாமலை, 7. லெட்சுமி முத்தழகன், செம்பூர், 8.கே. புஷ்பா, சேலம், 9. கி. கவிதா, ஆற்காடு, 10. சி. கஸ்தூரி ரத்தினம், திருவள்ளூர் மாவட்டம், 11. எஸ். தனலட்சுமி, பெங்களூர், 12. ஆர். கமலா,





ஜூலை 2008ல் வெளியான அறிவுப் போட்டி –5 விடைகள்

பெங்களூர், 13. எஸ். கௌரிலக்ஷ்மி, திருச்சி, 14. ஆர்.எஸ். கீதா, சேலம், 15. ஜி. நிர்மலா, கிருஷ்ணகிரி, 16. கா. தஸ்லிமா, கம்பம், 17. உமாசத்தியம், ஆற்காடு, 18. ஜோஸ்பின் லாசர், கூனூர், 19. சுகந்தா ஸ்ரீனிவாசன், சென்னை - 01, 20. லதா ராமன், சென்னை - 88.

விடைகள் :

1. ஷேன்வார்ன் 2. நேபாளம் 3. சேகர், 4. அதைவிட அதிக உயரத்தில் தனது சிலை வடிவமைக்கப்பட வேண்டுமென்பதற்காக, 5. பாரதிராஜா 6. 1 கேஸ் சிலிண்டர், 7. ஐஸ் பாறை, 8. அஸாம் 9. இடதுசாரி கம்யூனிஸ்டுகள் 10. ரௌலிங்

அயல் நாட்டில்

பண்டிகை ஸ்பெஷல்



வர்ஜீனியாவில் விநாயக சதுர்த்தி!

என் மகன், தன் மனைவி, இரு குழந்தைகளுடன் அமெரிக்க வர்ஜீனியா பகுதியில் வசித்து வருகிறான்.

சென்ற வருடம் நானும் என் கணவரும் அங்கு சென்றிருந்த போது, வினாயக சதுர்த்தி வந்தது. எங்கள் குடும்பத்தில் நாங்களே களிமண்ணால் வினாயகர் விக்ரகம் தயாரித்து பூஜிப்பது வழக்கம். அமெரிக்காவிலும் செய்யும் ஆசை வந்தது. களிமண்ணுக்கு எங்கே போவது? 'ஹோம் டிப்போ, நர்ஸரிகள் என பல இடங்களில் தேடினோம். கிடைக்கவில்லை.

என் கணவர் ஜெம்ஷெட்பூரில் 'டெல்கோ'வில் வேலை செய்தவர். தொழிற்சாலை உபயோகத்திற்காக, அமெரிக்காவின், 'wyoming' பகுதியிலிருந்து, 'Pentonite' என்ற களிமண் பொடியை இறக்குமதி செய்தது ஞாபகம் வந்தது.

என் மகன் இன்டர்நெட் மூலம் தேடி விசாரித்தான். பத்து டாலரில் நான்கு பவுண்ட் களிமண் பொடி வீடு தேடி வந்தது.


வினாயகர் பிம்பம் உருவாகத் துவங்கியது. செப்டெம்பர் 15, 2007 அன்று விமரிசையாக வினாயக சதுர்த்தியைக் கொண்டாடினோம்.

அடுத்த நாள், ஒரு பெரிய வாளி நீரில் வினாயகரை, 'விஸர்ஜன்' செய்தபொழுது, என் பேத்திகள் கண்களிலும் நீர் ததும்பியது.

- ரமா வெங்கடராமணன், பெங்களூரு.




சுவைக்க... ருசிக்க... மணக்க...
சக்தி
தாய் பாசம் போல் தூய்மையானது
சுத்தமான பசு நெய்
எங்களது தரமான தயாரிப்புகள் :
பால் : செலக்ட், சூப்பர், ஸ்பெஷல்
நறுமணப் பால் : பிஸ்தா, ஸ்ட்ராபெர்ரி, ஏலக்காய், பாதாம்
வெண்ணெய், நெய், பன்னீர், தயிர்
A Quality product from :
ஏபிடி ஃபுட்ஸ்
A division of ஏபிடி இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
கோயமுத்தூர் - 641 018.



ஆரத்தி எடுக்கறீங்களா?

பண்டிகையின் போது சுவாமிக்கு ஆரத்தி எடுக்கும் போது மஞ்சள் குங்குமம் போட்டுக் கரைத்து தட்டில் இரண்டு சின்ன நெய் ஜோதி ஏற்றி வைத்து ஆரத்தி நீரை துளசிச் செடியில் ஊற்ற வேண்டும். மனிதர்களுக்கு எடுக்கும் ஆரத்தியில்தான் சுண்ணாம்பு மஞ்சள் போட்டு வாசல் கோலத்தின் மீது கொட்ட வேண்டும்.

- எஸ். நிரஞ்சனி, போரூர்.

ஆஹா 50!

இனி எல்லாமே ஆஹா 50! தான்!

மாம்பழச் சாறு சாப்பிடும்போது அத்துடன் சிறிது பால் சேர்த்துக் கொண்டால் புதிய சுவை தெரியும். மாம்பழத்தினால் ஏற்படும் சூடும் தணிக்கப்படும்.

- காசிதாசன், திருவண்ணாமலை.

ஏதாவது பொருள் நம் வீட்டில் ஒன்றுக்கு இரண்டாக இருந்து உபயோகம் இல்லாமல் இருந்தால் அதை வேறு யாருக்காவது கொடுக்கலாம் என உங்கள் மனது நினைத்தால் அதை உடனடியாகச் செயல்படுத்துங்கள். மனம் என்பது ஒரு குரங்கு போன்றது. ஒரு நிமிடத்தில் மாறிவிடும்.

- ஆர். பாரதிமகேஷ், குரோம்பேட்டை.

எலுமிச்சம் பழ சாதம் கலக்கும் போது ஒரு ஸ்பூன் வதக்கிய வெங்காயத் துருவலையும் சேர்த்தால் வாசனையாகவும் சுவையாகவும் இருக்கும்.

- எஸ். விஜயா சீனிவாசன், திருச்சி - 13.

உங்கள் குழந்தைகள் திரைப்படங்களைப் பார்க்கும் போது அது கற்பனைக் கதை என்ற எண்ணத்தோடு பார்க்கும்படிச் சொல்ல வேண்டும். இதனால் நிஜவாழ்க்கை வேறு, திரைப்படம் என்பது வேறு என்ற பக்குவம் ஏற்படும். இதனால் தேவையற்ற விளைவுகளைத் தடுக்கலாம்.


- கு. லதா, கும்பகோணம்.

பெண்கள் மேக்-அப்புக்காக அதிக செலவு செய்வதை விட்டு, வீட்டிற்குத் தேவையான பொருளை வாங்கினால் விலைவாசி ஏற்றத்தை ஓரளவு சமாளிக்கலாமே...

- வே. சித்ரா, கும்மிடிப்பூண்டி.

கோயில்களில் தீபாராதனை காட்டும் போது கண்ணார கடவுளைத் தரிசிக்க வேண்டும். கண்களை மூடக் கூடாது.

- கவிதா கணேஷ், பெங்களூரு.



வரம்மா,

எங்கள் வீட்டு வரலக்ஷ்மி அம்மன் முகத்துக்கு 78 ஆண்டு களாகிறது. எனக்குக் கல்யாணமானதும் என் தாயார் நோன்புச் சீராக இந்த முகத்தைக் கொடுத்தார். நான் பூஜை செய்ய ஆரம்பித்த நாளிலிருந்து என்னைத் தனியாக பூஜை செய்யவிட்டதில்லை. கூடவே மூன்று பேரோ ஐந்து பேரோ சேர்ந்துதான் பூஜை செய்வோம்.

வரலக்ஷ்மி பூஜை வரும் நாளுக்கு 15 நாள் முன்பே எனக்குள் ஒரு குதூகலம் தோன்றும்.

எந்த மாதிரி அலங்காரம் செய்யலாம்? புடவை கட்டலாமா பாவாடை கட்டலாமா என்று யோசித்து முடிவு செய்வேன். நோன்பிற்கு முதல் நாளே அம்மனை நன்கு அலங்காரம் செய்து, வாழை மரம் கட்டி, மண்டபம் தோரணம்

கயிலையில் பரமசிவன் பார்வதியுடன் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்த சமயம், பார்வதி, சிவனிடம் "உங்களை ஜெயித்து விட்டேன்" எனக் கூறுகிறாள். சிவனும் பார்வதியிடம், "நான் உன்னை ஜெயித்து விட்டேன்" என்கிறார். இப்படி இருவருக்கும் வாக்கு வாதம் நடக்கவே, 'சித்ரநேமி' என்கிற கணதேவதையை இருவரும் மத்யஸ்தம் கேட்க அவன் ஒரு பக்கமாகச் சாய்ந்து பரமசிவன்தான் வெற்றி கொண்டார் எனக் கூறியதால் கோபமுறுகிறார்

வரலக்ஷ்மி விரதம்



அமைத்து, கலர் சீரியல் பல்புகளைப் போட்டு பூ அலங்காரம் செய்து தயார் பண்ணிவிடுவோம்.

முதல் நாளே நைவேத்யங்களுக்காக (வாயனங்களுக்காக) எள், உளுத்தம் பூர்ணம், தேங்காய்ப் பூர்ணம், பச்சரிசி இட்லிக்காக அரைத்து ரெடி செய்து விடுவோம். முதல் நாளே மாலையில் குளித்து அம்மனை மண்டபத்தில் வைத்து தீபம் ஏற்றி, வாசலில் கோலமிட்டு, வெண் பொங்கல் செய்து நைவேத்யம் செய்வோம்.

மறுநாள் காலையில் எண்ணெய் ஸ்நானம் செய்து நைவேத்யங்களை ரெடி செய்து கொண்டு பூஜைக்குத் தயாராவோம்.

ஒரு மணைப் பலகையில் கோலமிட்டு அதில் அம்மனை வைத்து வாசலில் கொண்டு வைத்து சிறிது பூ போட்டு கற்பூரம் நைவேத்தியம் காட்டி, அம்மனை 'லக்ஷ்மி ராவெம்மா இன்ட்டிக்கி' என்று பாடி அழைத்து வந்து மண்டபத்தில் வைப்போம். பின் சங்கல்பம், பிள்ளையார் பூஜை செய்து, அம்மனை ஆவாஹனம் செய்வித்து பூஜை ஆரம்பிப்போம்.

பூஜை முடிந்ததும் புஷ்ப, குங்கும அர்ச்சனை செய்து பாட்டுக்கள் பாடி ஆரத்தி எடுப்போம். மாலையில் எங்கள் 'ஸ்வரராக சுதா' குழுவில் உள்ளவர்களும் அக்கம் பக்கத்திலுள்ளவர்களும் வந்து லலிதா சஹஸ்ரநாமம் சொல்லி பாட்டுக்களும் பாடி மகிழ்வார்கள். அவர்களுக்கு வெற்றிலை பாக்கு, மஞ்சள், தேங்காய், புஷ்பம் தட்சணை, சுண்டல் வைத்து ரவிக்கைத் துணி அல்லது ஏதாவது சிறு பரிசு வைத்து மஞ்சள் சரடையும் வைத்துத் தாம்பூலம் கொடுத்தனுப்புவோம்.

மறுநாள் புனர் பூஜை செய்து ஆரத்தி எடுத்து மறுநாளும் சுமங்கலிப் பெண்

வரலக்ஷ்மி! கொண்டாடுவது ஏன்?

பார்வதி.

''நீ பொய் சொன்னதால் குஷ்டரோகியாகி ஒளியிழந்து தவிப்பாய் என சாபம் கொடுக்கிறாள். அதற்கு சிவன் வருந்தி பார்வதியிடம், ''அருள்கூர்ந்து அவன் சாபத்தை அகற்றுவாயாக'' என வேண்டுகிறார். அதற்கு மனமிரங்கிய தேவி எப்பொழுது அழகிய தடாகத்தில் தேவக் கன்னிகைகள் புண்ணியமான ஒரு விரதத்தை அனுஷ்டிப்பார்களோ அப்பொழுது உன் சாபம் தீரும் என்று கூறுகிறாள்.

ஒருநாள் அங்கே வந்த சித்ரநேமி, தேவிப் பூஜையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தேவக் கன்னிகளைக் கண்டான். அந்த பதிவிரதைப் பெண்கள் தேவியை வணங்கி வழிபடுவதைக் கண்டு அவர்களிடம்,

✱ லதா, படம் : பத்மாமணி



களுக்குத் தாம்பூலம் கொடுத்து ஆரத்தி எடுத்து இரவு ஒரு அரிசி வைக்கும் பாத்திரத்தில் (அரிசி டிரம்) அம்மனை வைத்து, மறுநாள் அம்மனின் அலங்காரத்தைக் கலைப்போம்.



கணவன் வீட்டில் பாரம்பர்யமாக இந்தப் பூஜை செய்தால்தான், இந்த நோன்பை எடுத்துக் கொள்வார்கள். தற்சமயம், தாயார் வீட்டிலும் பாரம்பர்யமாக இந்த நோன்பு இருந்தால் மகளும் நோன்பை எடுக்கலாம் என்று சொல்கிறார்கள்.

வீட்டில் அமங்கலம் நடந்திருந்தால் வருடம் முழுவதும் எந்தப் பண்டிகையும் கொண்டாட மாட்டார்கள். அப்படி இருந்தாலும் இந்த நோன்பை விடக்கூடாது என்று பிறர் வீட்டுக்குச் சென்று பூஜை செய்வதும் உண்டு.



* தேஜோவதி

மாதத் தீட்டு ஏற்பட்டு, செய்ய முடியாது போனால் மறு வெள்ளிக்கிழமை கலசம் வைத்துப் பூஜை செய்யலாம் என்று ஒரு நியதி உண்டு.

இந்தப் பூஜை செய்த பின்பு மனதில் ஓர் ஆனந்தமும் தெம்பும் நிம்மதியும் தோன்றுமே அது அனுபவிப்பவர்களுக்குத்தான் புரியும்.

- தேஜோவதி கணேசன்,
சென்னை - 13.

''நீங்கள் செய்யும் பூஜை என்ன? அதை நான் செய்யலாமா?'' என்று கேட்டதோடு, தன் சாபம் நீங்க வழியைக் கூறவேண்டும் என்றும் வேண்டினான். அதற்கு அந்த அப்ஸரஸ் பெண்கள் ''நாங்கள் இன்று 'வரலக்ஷ்மி விரதம்' என்னும் விரதத்தை அனுஷ்டிக்கிறோம். இது மிகவும் திவ்யமானது, கோரும் வரங்களை அளிக்கக்கூடியது. சூரியன் கடகத்தில் இருக்கும்போது அதாவது கங்கையும் யமுனையும் சேரும் காலத்தில், துங்கபத்ரா நதிக்கரையில் சிரவண மாதத்தில் சுக்ல பக்ஷத்தில் வெள்ளிக்கிழமையன்று முறைப்படி இந்த மகாலக்ஷ்மி விரதத்தைத் தொடங்கி பூஜை செய்ய வேண்டுமென கூறினார்கள். இவ்வாறு தேவ கன்னிகைகள் செய்த இந்தப் பூஜையை சித்ரநேமி இமை கொட்டாமல் பார்த்து வந்தான். ஹோமப் புகையை நுகர்ந்ததாலும் நெய் தீபத்தைக் கண்டதாலும் அவனுடைய குஷ்ட நோய் நீங்கி தங்க நிறம் பெற்றான்.

சித்ரநேமி, தானும் இந்த விரதத்தைச் செய்து தேவர்கள் அனைவரையும் அனுஷ்டிக்கச் செய்தான். இதன்பின் கைலாசம் சென்று பார்வதி பரமேசுவரரை வணங்கி, 'தேவி, வரலக்ஷ்மியின் அருளால் தங்கள் திருவடியை காணும் பாக்யம் கிடைத்தது' என்று கூறி நமஸ்காரம் செய்தான். அதன்பின் சிவனும் திருவடியைக் காணும் பாக்யம் கிடைத்தது என்று கூறி நமஸ்காரம் செய்தான். அதன்பின் சிவனும் அவனுக்கு கைலாசத்தில் சகலபோகங்களையும் அனுபவித்து வைகுண்டம் செல்வாய்'' ஆசிகள் கூறினார். எனவே லக்ஷ்மியை மகிழ்விக்கும் சிரவண [ஆடி அல்லது ஆவணி] மாதம் பௌர்ணமிக்கு முன் வரக்கூடிய வெள்ளிக்கிழமையன்று இவ்விரதத்தை அனுஷ்டிக்கும் பெண்மணி, இவ்வுலகில் சகலபோகங்களையும் அனுபவித்தபின் வைகுந்தம் சேருவாள் என்பது நம்பிக்கை!



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை. பழைய பெருங்களத்தூர்.
(வழி) தாம்பரம். சென்னை - 63. போன் : 22760612, 22762299
City Office No.7, முதல் மாடி. வேலு தெரு. மேற்கு மாம்பலம்.
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை - 600 033. போன் : 23714942

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 19 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய் தந்தையற்ற திக்கற்ற, மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன் நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் /வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ சாரதா சக்தி பீடம் என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மேலும் எங்களிடமிருந்து ரசீதைப் பெற்றுக் கொள்வது அவசியம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்.

சிரிச்சுக்கிட்டே போகுதம்மா...

'ஆடிப்பெருக்கு' என்றாலே எல்லோருக்கும் காவிரி நதி ஞாபகம்தான் வரும். கொத்தமங்கலம் சுப்பு இயற்றிய, சிந்து பைரவி ராகப் பாடல் பெரும் பிரசித்தம்.

இடி இடிக்க மழை பொழிய
இரு கரையும் புரண்டு வர
துடித்துடிச்சு ஓடுதம்மா - காவேரி
துரைசிங்கம் பட்டாளம் போல்

காதோலை கருகமணி கட்டி சூடம்
வாழைப்பழம்
ஏதேதோ எடுத்துக்கிட்டு - காவேரி
இரைச்சலிட்டுப் போகுதம்மா!

வண்டல் அள்ளி, மஞ்சள் பூசிக்
கொண்டு துரை பூச்சொருகி
மிண்டு பேசிச் சிரிச்சிக்கிட்டு - காவேரி
மிடுக்காகப் போகுதம்மா!

அகிலுக்கட்டை, சந்தனமும்
ஆனைக்கொம்பு தேனடையும்
அள்ளிக்கிட்டுப் போகுதம்மா - காவேரி
அலைவாய் புருஷனிடம்!

- ஆர். ராஜலக்ஷ்மி, சென்னை - 20.



மனம் விரும்பும் மாற்றத்துடன் மகிழ்ச்சியான வாழ்க்கைச் சூழல்



RVS Shruti

ஓர் புதிய வடிவத்தை உருவாக்குவதை கொள்கையாகக் கொண்டு எங்களால் பூர்த்தி செய்யப்பட்ட பணிகள் மூலம், கோவை நகருக்கு ஏராளமான புதிய அடையாளங்களை உருவாக்கியிருக்கிறோம்.

சுற்றுப்புறச்சூழல், அதனைச் சார்ந்த அத்துணைப் பணிகளிலும் எங்களுக்கு உண்டான பொறுப்புணர்வை, எங்களால் உருவாக்கப்பட்டு அதில் வசித்து வருபவர்களும், பிரிட்டிஷ் அறிஞர்களின் கூட்டமைப்புக் குழு மற்றும் ராக் அமைப்பினரும் அங்கீகரித்துள்ளனர்.

ஷ்ருதி எனும் பாரம்பரியம் மிக்க வாழ்க்கை முறையினை அடிப்படையாகக் கொண்டு பல நூற்றாண்டுகளாகக் கட்டப்பட்டு வரும் இல்லங்களைப் போன்றே ஆர்.வி.எஸ். ஷ்ருதியும் நிலைத்து நிற்கும் மனச்சாந்தியையும், வசதியாக வாழும் சூழலும் இணைந்த தனி வீடுகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளை உங்களுக்கு வழங்குவதில் முன்னணியில் உள்ளது.

ஆர்.வி.எஸ். ஷ்ருதி பாதுகாப்பான சமூக மாற்றம் நன்கு விளங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது சூலூர் அருகாமையில் அமையவுள்ளது. திருச்சி ரோட்டில் அமையவுள்ள 4 வழிப்பாதை வழியாக விமான நிலையத்திலிருந்து வெகு சுலபமாக 15 நிமிடங்களிலும், இரயில் நிலையத்திலிருந்து 20 நிமிடங்களிலும் சென்றடையும் தூரத்தில் இது அமையவுள்ளது. மேட்டுப்பாளையம், திருப்பூர், பாலக்காடு போன்ற நகரங்களையும், அவிநாசி சாலையையும் நேரடியாக இணைக்கும் மிக முக்கியமான மற்றும் பெரிய சுழல் நகரமாக சூலூர் அமையவுள்ளது.

சிறுகதை

சுவரோரம் நெளிநெளியாக மாக்கோலம் வெள்ளை வெளேர் என்று ஓடியது. நடுக் கூடத்தில் பெரிதாக விரிந்திருந்த படிக் கோலம் நன்கு காய்ந்து விட்டிருந்தது. அதன் மீது பெரிய குத்து விளக்கைக் கொண்டு வைத்தாள் சாரு.

மதிய உணவு உண்ட மயக்கம் தீர ஆனந்தமாகத் தூங்கி எழுந்து வந்த மாமியார் மரகதம், கூடத்தின் கோல அழகில் மயங்கித்தான் போனாள். கண்களைத் திருப்பியபொழுது ஒரு பகுதியில் ரங்கோலி வண்ணத்தில் குழலூதும் கண்ணன் புன்னகை பூத்தான். இதற்குள் சாரு, கண்ணனின் குஞ்சு பாத தடத்தைப் பதித்துக் கொண்டே வந்தாள்.





ஒன்று போல எப்படித்தான் இந்தப் பெண்ணால் இப்படிப் போட முடிகிறது? இருந்தாலும் தன் வியப்பை முகத்தில் காட்டாமல் இறுக்கமாக சோபாவில் உட்கார்ந்து கொண்டாள். பூஜை அறை வரை கண்ணனின் பாதம் ஓடியது.

சமையலறையில் எண்ணெய் மணமும் ஏலக்காய்ப் பாகு காயும் மணமும் ஒன்றாகக் கமழ்ந்தது.

என்ன பூஜை செய்து என்ன? வருடம் பத்தாகியும் சாருவிற்கு ஏனோ இன்னும் வயிறு திறக்கவே இல்லை. இதனால் தங்கள் குழந்தைகளை அண்ணன் வீட்டில் பழகவிட்டு நிறைய சலுகைகளை அனுபவித்தவர்கள் மரகத்தின் பெண்கள். அவர்களை உத்தேசித்துத்தான் இப்படிப் பலகாரங்களைப் பண்ணி வைப்பாள் மரகதம்.

அச்சமயங்களில் வார்த்தைகள் நெருப்பில் இடப்பட்ட இரும்புத் துண்டாக சாரு மீது வந்து விழும்.

''மாலு, இன்னும் கொஞ்சம் திரட்டுப்பாலும் வெல்லச் சீடையையும் எடுத்து வச்சுக்க. வாசலிலே இருந்து கொல்லை வரைக்கும் கோலம் போட்டு

மாக்கோலம்!



என்ன புண்ணியம்? அழகு பார்க்கலாம். அழிக்க ஒரு பிள்ளை இல்லையே? நைவேத்யம் பண்றதுக்கு முன்னாடி எடுத்துத் திங்கவும் வயிறு திறக்கலே'' என்று மகளிடம் புலம்புவாள் மரகதம்.

''ஏம்மா, டாக்டர்கிட்ட காண்பிச்சியா சாருவை?'' என்று பெண்கள் இருவரும் கேட்பார்கள்.

''போகாத டாக்டர் இல்லே. முழுகாத தீர்த்தம் இல்லை. செய்யாத விரதம் இல்லை. எனக்கு வாய்ச்ச மருமக மலடு. எனக்கு பிள்ளை வயிற்றுப் பேரனைத் தூக்கும் பாக்யம் இல்லை'' என்று மரதகம் குமுற, சாருவிற்கு மாமியாரின் பேச்சு உச்சந்தலையில் ஆழ்ந்த ஆணியாக இறங்கும். சொல்லால் சிலுவையில் அறையும் ஆணியை இறக்க மாமியார்கள் எங்கேதான் கற்றார்களோ!

சாருவை நாராயணன் மணந்ததே மாமியார் மரகதத்திற்குக் துளியும் விருப்பமில்லை. சொந்தத்தில்

லட்சுமி ராஜரத்னம்

நாராயணனுக்குப் பெண் தர பெரிய க்யூவே இருந்தது. யாரை மருமகளாகத் தேர்ந்தெடுப்பது என்று புரியாமல் சிந்தித்துக் கொண்டிருந்தாள். நண்பனின் கல்யாணத்திற்குப் போயிருந்தான் நாராயணன். முதல் நாள் நிச்சயதார்த்தம். மாலை நேர டிபன் சாப்பிட்டபின் கல்யாண மண்டபத்தைச் சுற்றி வந்தபொழுதுதான் ஒரு ஹாலில் அப்படி ஒரு கூட்டம் இருப்பதைக் கண்டு நாராயணன் அங்கே போனான்.

அம்மாடி! கல்யாணச் சம்பிரதாயங்களைச் சித்திரிக்கும் ரங்கோலிக் கோலங்கள். மணமகன் - மணமகளை அப்படியே தத்ரூபமாக வரைந்திருக்க... மயங்கிப் போய் நின்றான் நாராயணன்.

''நாராயணா, திகைச்சுப் போய் நின்னுட்டே?''

''ஃபென்டாஸ்டிக் முரளி. தத்ரூபமா வரைஞ்சிருக்காங்க.''

''அந்தப் பெண்ணை அறிமுகப் படுத்தட்டுமா?''

முரளி சாருவை அழைத்து வந்த பொழுது, அவள் அழகு நாராயணனை அசத்திற்று. அறிமுகம் சுவையாய் முடிந்தது. அவள் விடைபெற்று போன பின்பும் நாராயணனின் கண்கள் அவளையே தேடியது என்னவோ உண்மை.

பெண் பார்க்க மரகதம்மா மகனை அழைத்தபொழுது அவன் சாருவைப் பற்றிக் கூறினான். மகன் பிடிவாதமாக இருக்கவே, மரகதம்மா இறங்கி வர வேண்டியதாயிற்று. அவ்வளவாக வசதி இல்லாத பெண் என்றதும் மரகதம்மா முகம் சுளித்தாள். கடைசியில் சாருவைக் கல்யாணம் பண்ணி வைத்தாள்.

சாரு, நல்ல மருமகளாக நடந்து கொண்டாள். சாருவின் ஆடல், பாடல், கைவேலையின் அழகு, மரியாதை எல்லாமே மரகதத்தைக் கவர்ந்தது. ஆனால் குழந்தை பிறக்கவில்லை என்றதும் தேனாகப் பேசும் நா, தேளாகக் கொட்டத் தொடங்கியது. இன்றும் அந்த முகம் குரோதம் பொங்க ஏதாவது பேசத் துடித்தது.



''சாரு, வெல்லச் சீடைக்கு பதம் பார்க்க வரியா?'' என்று பலகாரம் செய்யும் அம்மாள் அழைக்க - மரகதம் பாய்ந்து விட்டாள்.

''ஆமாமாம். இங்கே பாய்ந்து பாய்ந்து திங்க குழந்தைகள் இருக்கு. பதம் பார்த்து பார்த்துச் செய்து டப்பா டப்பாவா அடுக்க. இந்தக் கோலமும், கொண்டாட்டமும் எதுக்கு? வெல்லச் சீடையாம்... பதமாம்.. பாகாம்.. கிடந்து அலையறா'' என்று சாடினாள்.

சாருவால் தலையை நிமிர்த்தவே முடியவில்லை. பூஜையின் பொழுது கண்ணீர் மல்கினாள்.

இரவின் தனிமையில் நாராயணனிடம் அழுதே விட்டாள்.

''அத்தையின் பேச்சு எனக்குத் தாங்கல்லே. குழந்தை இல்லேனு என்னைக் குத்திக் காட்டறாங்க. சரி மாலு, ஹரிணி பிள்ளைகளை தத்து எடுத்துக்கலாம்னா தத்தம் பிள்ளையைத்தான் எடுத்துக்கணும்னு சண்டை போட்டுக்கறாங்க. வெளியில தத்தெடுக்க அத்தை ஒத்துக்கல்ல.''

''என்னதான் செய்ய முடியும்?''

''அத்தை வேற ஒரு வழியைத் தேர்ந்தெடுத்திருக்காங்க.''

''என்ன வழி?''

''உங்களுக்கு வேற ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணத் தீர்மானம் பண்ணி

நாற்பது வருடங்களுக்கு முன் பள்ளியில் படித்தபோது, முக்கியமான கிரேக்க தத்துவ ஞானிகளின் மூவரில் [சாக்ரட்டீஸ், அரிஸ்டாட்டில், ப்ளேட்டோ] யாருக்கு யார் மாணவன் என்பதை எளிதில் புரிந்து கொள்ள ஆசிரியை சொல்லிக் கொடுத்த ஒரு சொல் 'சாப்பிட்டாச்சா?' சா -சாக்ரட்டீஸ், அவரது மாணவன் பி - பிளேட்டோ, இவரது மாணவன் ஆ - அரிஸ்டாட்டில். எனக்கு இன்னும் அது மறக்கவில்லை!

- கே. லக்ஷ்மி, அசோக் நகர்.

இருக்காங்க அத்தை.''

''அப்படி நடக்காது'' என்று நாராயணன் தன் காதல் மனைவியின் கரத்தைப் பற்றிக்கொண்டு சொன்னாலும் நடக்காமலா இருந்தது?

அன்றைக்கு கிருஷ்ணஜயந்தி. கோவிலுக்குள் நுழைந்தாள் மரகதம். அங்கே... ஸ்ரீ கிருஷ்ணர் சந்நிதியில் குனிந்து, அழகாய் கோலம் போட்டுக் கொண்டிருந்த சாருவைப் பார்த்து அதிர்ந்து போனாள். சாருவுக்கு பக்கத்தில் ஒரு பெண் குழந்தை! ஒரு ஆண் குழந்தை.

''அம்மா... அம்மா!'' என்று சாருவையே சுத்தி சுத்தி வந்தன. 'பளிச்' என்று விரிந்திருந்த இழைக்கோலம், மரகதத்துக்கு பழைய நினைவுகளுக்குள் இட்டுச் சென்றது.

மகனுக்கு இரண்டாம் திருமணம் செய்ய பிடிவாதமாகத் தீர்மானம் செய்தபொழுது சாரு, எத்தனை ஆர்ப்பாட்டம் செய்தாள். நாராயணன் முதலில் மறுத்து பின்னால் ஒப்புக் கொண்டான்.

''டீ சாரு, உன் மேல எங்களுக்குக் கோபம் இல்லேடி. வம்சவிருத்திக்காக இந்த ரெண்டாம் கல்யாணம் பண்றோம். நீ இங்கேயே இருடி'' என்று மரகதம்மா எத்தனை கெஞ்சினாள்?

துளியும் லட்சியம் செய்யாமல் கிளம்பினாளே... வெளியில் போய் கல்யாணம் செய்து கொள்ளத்தானா? இரண்டாம் கல்யாணம் செய்து வைத்தும் மகனுக்குக் குழந்தை பிறக்காதது வேதனையைத் தந்து கொண்டிருந்தது. பழைய மருமகள் கையில் இரண்டு குழந்தைகளுடன் வந்து நிற்பதைக் கண்டு இன்னும் எரிச்சல் மூண்டது.

''நில்லுடி''

ஸ்வாமி சன்னதிக்கு வந்த சாரு நின்றாள். குழந்தை சிணுங்கியது. ''அடடா, பால் குடிக்கலாம்டா. அழாதே'' என்று சமாதானப்படுத்திக் கொண்டே திரும்பினாள்.

மரகதம் எதிரில் நின்றாள்.

''உன் குழந்தைகளா?''

சாரு புன்னகை பூத்தாள். ''இவங்க மாதிரி உங்களுக்கும் ரெண்டு பேரன் பேத்தி இருக்கணுமே?''

''உனக்கு வெளியே போய் ரெண்டு பிறந்துட்டதினாலே என் மகனுக்கு ரெண்டாவது கல்யாணம் கட்டியும் பிறக்கல்லேன்னு கிண்டல் பண்றியா?'' சீறினாள் மரகதம்மா.

புன்னகை பூத்தாள் சாரு. ''எனக்குக் குழந்தை பிறக்காததனாலே நான்தான் காரணம்னு ரெண்டாம் கல்யாணம் கட்டி வச்சீங்க. இந்தக் குழந்தைகள் எனக்குப் பிறந்ததுன்னு நினைச்சுக் கோபப்படறீங்க. அத்தை, எனக்குக் குழந்தை பிறக்கும்னு நிரூபிக்க நான் ரெண்டாம் கல்யாணம் கட்ட அவசியம் இல்லே. உங்க மகனுக்குக் குழந்தை இன்னும் பிறக்காததிலிருந்தே யார்கிட்டே கோளாறுன்னு நிரூபணம் ஆயாச்சு. இனி மூணாம் தாரம் கட்ட பெண் பாருங்க..''

''கொழுப்பு கொழுப்பு''

''அத்தை, நடனம், பாட்டு, கோல அலங்காரம்னு வகுப்பு எடுத்து சம்பாதிக்கிறேன். மிச்ச நேரத்துல அனாதை விடுதிக்குப் போய்ச் சேவை செய்யறேன். இது ரெண்டும் அனாதைக் குழந்தைகள்; ஒரு பெண் எங்கேயும், எப்போதும் தாயாக இருக்கலாம்'' என்றபடியே எழுந்து நின்றாள் சாரு.

மாக்கோலம் அழகாய்ச் சிரித்தது. ●



பண்டிகை ஸ்பெஷல் 1

புக் பேங்க்

படிக்க... பயன்பெற...

திருத்தலப் பயணம் - ராய. சொ. வானதி பதிப்பகம், சென்னை - 17. விலை ரூ. 200.00

தமிழ்க் கடவுள் ராய. சொ. அவர்கள் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் பல சைவ வைணவத் தலங்களைச் சென்று தரிசித்தார். மீண்டும் ஒருமுறை, ஏறக்குறைய அனைத்து சிவ, வைணவத் திருக்கோயில்களுக்கும், க.வெ.சித.வெ. வேங்கடாசலம் செட்டியார் உதவி, துணையோடு பயணம் மேற்கொண்டு தொகுத்த இந்த அருமையான கருவூலத்தை அவருடைய அறுபதாம் ஆண்டு நிறைவின் போது 1966ஆம் ஆண்டில் வெளியிட்டார். கண்களில் ஒற்றிக் கொள்கிற மாதிரி இந்த மறு பதிப்பு இப்போது வெளிவந்துள்ளது. ஆலய விவரம், வழிபட்ட பெருமக்கள் விவரம், பாசுரங்கள் என்று அருமையான கருவூலம் இது.

மனசுக்குள் வெளிச்சம் - தென்கச்சி கோ. சுவாமிநாதன். வானதி பதிப்பகம், சென்னை - 17. விலை ரூ. 60.00

'வாழ்க்கை என்பது அனுபவிக்கப்பட வேண்டிய ஓர் ஆனந்தம்' என்கிற தென்கச்சியாரின் சிந்தனைக்கு விருந்தான குட்டிக் கதைகளின் தொகுப்பு. அருமையான படங்களுடன்.

பித்ரு பூஜனம் (ஆங்கில நூல்) வி. ராஜகோபால கனபாடிகள் - வைதிகஸ்ரீ, 488, டிடிகே சாலை, சென்னை - 18. விலை ரூ. 90.00

இறந்தவரின் மிச்சங்களை (அஸ்தி) கடலில் கரைப்பது கூடத் தவறானதாம். இப்படி சம்ஸ்காரங்களைப் பற்றிய அருமையான விளக்கங்கள். சம்ஸ்கிருத மந்திரங்களோடு ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள நல்ல நூல்.



ஒவ்வொரு நாளும் சவால்தான் - வே. சந்திரசேகர், கண்ணதாசன் பதிப்பகம், சென்னை - 17. ரூ. 70.00

புகழ்பெற்ற டேபிள் டென்னிஸ் வீரர், அர்ஜுனா விருது பெற்ற வே. சந்திரசேகரின் வாழ்க்கையைச் சூறையாடிய மருத்துவ அவலம். சோதனைகளைத் தாங்கியவராய் உறுதியோடு மீண்டும் எழுந்து நிற்கும் சாதனையாளரின் உருக்கமான வரலாறு.

ஆரோக்கியம் உங்கள் கையில் - டாக்டர் எம். சபாபதி. ஸ்ரீ ஐஸ்வர்யா பப்ளிகேஷன், 40/16, பெருமாள் செட்டித் தெரு, ஆரணிப்பாளையம், ஆரணி - 632 301. விலை ரூ. 50.00

எல்லா உடல் கோளாறுகளுக்கும் நோய் நாடி, நோய் முதல் நாடிய ஆலோசனைகளுடன், காய்கறி, மூலிகைகளால் பயன்பெற வழிசொல்கிறார் ஆசிரியர். 'உணவே மருந்து' என வலியுறுத்தும் நல்ல நூல்.

- வாசகன்



அன்று ஹேமாவைப் பெண் பார்க்க வருகிறார்கள். "அம்மா, சுமதியும் ரேகாவும் இன்னைக்கி என் கூடவே இருக்கப் போறாங்க" என்றாள் ஹேமா. அம்மா கொஞ்சம் யோசித்தாள். "பிள்ளை வீட்டுக்காரங்க வரும்போது சுமதி உன் கூட இருக்க வேணாம். ரேகா இருக்கட்டும்" என்றாள். இதைக் கேட்டபடி உள்ளே நுழைந்த ரேகாவுக்கு உற்சாகம். தன்மீதுதான் ஆன்ட்டிக்கு எவ்வளவு பாசம்.

ஆனால் அடுத்த நொடியே அவள் சந்தோஷம் மறைந்துவிட்டது. ரேகா நுழைந்ததைக் கவனிக்காமல் "உன் பக்கத்திலே ரேகா நின்னாதான் நீ எடுப்பா அழகாகத் தெரிவே" என்றாள் ஹேமாவின் அம்மா.

ரேகாவுக்கு துக்கமாக இருந்தது. சமீபத்தில் நிறையத்தான் எடை போட்டுவிட்டாள். போதாக்குறைக்கு தொடர்ந்த அலுவலக வேலையால் கண்களைச் சுற்றிக் கறுப்பு வளையங்கள். தோல் கூட உலர்ந்து வருகிறது. 'தனக்குக் கல்யாணமே நடக்காதோ? புகைப்படத்தைப் பார்த்துவிட்டே எல்லோரும் தன்னை வேண்டாம் என்று சொல்லி விடுவார்களோ?' வருத்தத்தோடு ஹேமாவின் வீட்டிலிருந்து சத்தமில்லாமல் கிளம்பி கால்போன போக்கில் நடந்த ரேகாவின் கண்களில் அந்த பெயர்ப்பலகை பட்டது. 'ஸ்லிம் அண்ட் கேர்' ஏதோ உள்ளுணர்வு கூற, உள்ளே நுழைந்தாள். அங்கு ரிஷிதா அவளை மலர்ச்சியுடன் வரவேற்றார்.

"உடல் எடை கூடிட்டா மறுபடி குறைக்க முடியாதுன்னும், குறைச்சாலும் மறுபடி வந்து சேர்ந்துடுமென்ற பயம் நிறையப் பேருக்கு இருக்கு. அது நடக்காமலிருக்க சின்னச்சின்ன ஆலோசனைகளைத் தருவோம். எல்லாமே எளியான வழிகள் தான்" என்றார் ரிஷிதா.

நம்பிக்கை, அவநம்பிக்கை இரண்டும் போட்டி போட எடைக்குறைப்பு வகுப்புகளில் சேர்ந்தாள் ரேகா. பதினாறு வகுப்பு கொண்ட ஒரே கோர்ஸிலேயே சுமார் 20 கிலோ எடை குறைந்ததும் ஆனந்தப்பட்டாள். "தொடர்ந்து 28 செஷன்களில் நாற்பது கிலோ எடையைக் குறைச்சக்கிட்டவங்களும் உண்டு" என்று ரிஷிதா கூறியதை இப்போது முழுவதுமாக நம்பத் தோன்றியது. "எங்களுடைய ஃபேஸ்லிஃப்டிங் வகுப்புகளில் நீங்கள் சேரலாமே" என்று ரிஷிதா கூறியதை ஏற்றுக் கொண்டாள். அது எவ்வளவு நல்ல தீர்மானம் என்பது விரைவிலேயே தெரிந்தது. ரேகாவின் முகத்திலிருந்த டபுள்சின், கண்களைச் சுற்றியிருந்த கருவளையங்கள், சுருக்கங்கள் எல்லாமே மறைந்துவிட்டன.

ரேகாவுக்கு ஸ்லிம் அண்ட் கேர் மையத்தின் வேறு பல சிறப்புகளும் பிடித்துப் போயின. அங்கே பெண்களுக்கு மட்டும்தான் அனுமதி. ஆலோசனை தருகிற டாக்டர், டயடீஷியன், பிசியோதெரபிஸ்ட் எல்லோருமே பெண்கள்தான். (ஞாயிற்றுக் கிழமை உட்பட) தங்களுக்கு வசதியான நேரத்தை அவரவரே தேர்ந்தெடுக்கலாம். உடல் பருமனாக இருக்கும் சில பேருக்கு குடும்பப் பிரச்னைகளால் டென்ஷன் அதிகமாகி டிப்ரஷன் ஆகிவிடும். முதலில் அவர்களின் மனதை இயல்பு நிலைக்குக் கொண்டுவந்த பிறகுதான் எடையைக் குறைக்கிறார்கள். மனநலத்துக்கு ஆலோசனை தருவதற்காகவே, வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று பயிற்சி தரும் ஒரு பெண் சைகாலஜிஸ்ட் அங்கே உண்டு. கருவளையங்கள் நீங்க, தோல் டோனிங் பெற்று சிறக்க என்று சின்னச் சின்ன தனி சிகிச்சைகளும் அங்கு உண்டு.

வேண்டிய எடை வேண்டும் உடலமைப்பு

"நார்மலான எடையை நான் பெற என்ன வழி? தீவிர உடற்பயிற்சிகள், உணவுக்கட்டுப்பாடுன்னு வழக்கமான பதிலை சொல்லிடாதீங்க" என்றாள் ரேகா.

"நாங்க அப்படிச் சொல்வதில்லை. கடுமையான டயட் தேவையில்லை. உணவுப் பழக்கத்திலே சின்ன மாறுதல்கள் போதும். வாக்கிங் பயிற்சி கூட அவசியம் இல்லே. வீட்டில் சில எளிய செயல்களைச் செய்தால் போதும். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எங்க உயர்தரக் கருவிகள் உங்க எடையைக் குறைச்சிடும். பக்க விளைவுகள் எதுவும் கிடையாது. தவிர இந்தக் கருவிகள் உடலில் அதிகப்படி சதை போட்டிருக்கும் பகுதிகளாகப் பார்த்து எடையைக் குறைப்பதால் உடல் அழகும் அதிகமாகுது. பயிற்சிகளை நிறுத்தின அடுத்த மாசமே போன எடை மறுபடியும் வந்து



சில மாதங்கள் கழித்து ரேகா ரிஷிதாவை சந்தித்தபோது அவளது கையில் திருமண அழைப்பிதழ். "என்ன, உங்க மனசுக்குப் பிடிச்ச மாப்பிள்ளையா?" என்று ரிஷிதா புன்னகையுடன் கேட்க, "ஆமாம். என்னைப் பார்த்தவுடனே சரின்னு சொல்லிட்டார்" என்றபடி ரிஷிதாவின் கைகளைப் பற்றினாள் ரேகா. அதில் நன்றி உணர்ச்சி புலப்பட்டது.

தொடர்பு கொள்ள - ரிஷிதா
Slim and Caare, 14/56, 1D, 1st Floor,
Hill Crest Apts., Venkatanarayana
Road, T.Nagar, Chennai - 17.
Ph: (044) 2433 2838 / 94444 13224



காய்ன் பாக்ஸ் வைக்கலாமே!

பள்ளிகளில் செல்ஃபோன் உபயோகப்படுத்த மாணவர்களுக்குத் தடை இருப்பதால், அவசர மான தகவல்களை மாணவ மாணவியர் பெற்றோருக்குத் தெரிவிக்க வசதியாக, பள்ளி நிர்வாகமே ஒரு காய்ன் பாக்ஸை பள்ளி வளாகத்தில் வைக்கலாமே!

- எல். மோஹனசுந்தரி
கோபி, கிருஷ்ணகிரி.

ஆஹா 50!

இவை எல்லாமே ஆஹா 50! தான்!

வெந்நீரில் குளிக்கும்போது வாயில் சிறிது நீரை அடக்கி பல முறைக் கொப்பளித்து ஈறுகளை மென்மையாய் தேய்த்துக் கொடுப்பது அருமையான டூ இன் ஒன் பராமரிப்பு.

- எஸ். மாலதி, முசிறி.

காலையில் 5, 6 பூண்டுப்பற்களை நல்லெண்ணெயில் வதக்கி காலை உணவுடன் சாப்பிட்டு வரவேண்டும். இதனால் மூட்டு வீக்கம் குணமாகும். வலியும் குறையும்.

- என்.டி. லதா, நல்லிச்சேரி.

விடுமுறை, திருவிழா போன்ற நாட்களில் பேருந்துகளில் ஏறும் போது பேருந்தின் முன்புறம் உள்ள போர்டை பார்ப்பதுடன் நடத்துநரையும் கேட்டு ஏறுவதே நல்லது. பேருந்தின் இருபுறமும் எழுதியுள்ள ஊர்களின் பெயர்களைப் பார்த்து ஏறக்கூடாது. விசேஷ நாட்களில் எந்தப் பேருந்தையும் எந்த ஊருக்கும் சிறப்புப் பேருந்து என விடுவார்கள்.

- எஸ். மங்கையர்க்கரசி,
நெய்வேலி - 3.

நம் வீட்டுக்குப் பெண்கள் வந்து விட்டுச் செல்லும்போது குங்குமம் கொடுத்து மரியாதை செய்வோம். அவர்களில் கணவனை இழந்தவர்கள் இருந்தால் என்ன செய்வது என எண்ண வேண்டாம். அவர்களுக்கும் நீட்டினால், பிரியப்பட்டால் எடுத்துக் கொள்ளட்டும் அல்லது தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்ளட்டும். பெரியவர்களை வரவேற்க பூர்ணகும்ப மரியாதை செய்கிறோம். அதை அவர்கள் கையால் மட்டுமே தொடுகிறார்கள் அல்லவா?

- எம். அபர்ணா, சென்னை -4.

பலர் திருமண அழைப்பிதழ்களை, டிக்கெட் புக் பண்ண வசதியாக இருக்கும் என்ற எண்ணத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்னரே உறவினர்களுக்கு அனுப்புகின்றனர். அவ்வாறு அனுப்பினால் பலர் திருமணத் தேதியை மறந்து விடுகின்றனர். முக்கியமானவர்களுக்கு தொலைபேசியில் தேதியைச் சொல்லிவிட்டு பத்திரிகையை ஒரு வாரம் முன்பு அனுப்புவது சிறந்தது.

- ரம்யா சீனிவாசன், சிட்லபாக்கம்.

இந்துமதி மோகன்



தூரத்துக்

காலாண்டுப் பரீட்சை இதோ நெருங்கி விட்டது. என்னுடைய டென்ஷனும் அதிகரித்தது. எல்லாம் இந்த அரவிந்த் பையன் கணக்கில் வாங்கும் மார்க் பற்றித்தான். பாஸ் மார்க்கைத் தாண்ட மாட்டேங்கிறான். மற்ற பிள்ளைகள் எப்படித்தான் வாங்குகிறார்களோ?

''எல்லாம் நானும் இப்படித்தானிருந்தேன். வீணா டென்ஷன் ஆகாதே'' இது கணவர்ன் அட்வைஸ். விஜியைத் தான் கேட்க வேண்டும்.

எத்தனை சமயங்களில் ஆறுதலாய் அறிவுரை தந்திருக்கிறாள். விஜிக்கு ஃபோன் போட்டுச் சொன்னேன்.

''கவலைப்படாதே வித்யா'' என்றாள்.

''இதையேதான் இவரும், டியூஷன் மிச்சரும் சொல்றாங்க. நீ வேறு ஏதாவது சொல்லுடி'' என்றேன்.

''நீ ஒண்ணு செய், அந்த அம்பாளைத் தரிசித்து விட்டு வா, சரியா?'' என்றாள்.

''தாம்பரம் தாண்டி இருக்கும் அந்த அம்மன் கோயில் பற்றி நிறைய படிச்தும், கேட்டும் இருக்கேன். சரி, போய்ப் பார்க்கிறேன்'' என்றேன்.


''சரி, அரவிந்த் எப்படி இருக்கான்? அதைச் சொல்'' என்று கேட்டாள்.

''அவனுக்கென்ன ரொம்ப கூலாக இருக்கான்'' என்றதற்கு,

''தோ பார், எல்லா அம்மாக்களுக்கும் வர்ற பரீட்சை டென்ஷன்தான் வந்திருக்கு, எல்லாம் அவ பார்த்துப்பா. உன் மனசும் கூலாயிடும். போயிட்டு வந்து ஃபோன் செய்'' ரிஸிவரை வைத்துவிட்டாள்.

வெள்ளிக்கிழமை அவசர அவசரமாய் சமையலை முடித்து, பூக்கடை பஸ் ஸ்டாண்டை அடைந்தேன். பஸ்ஸில் ஏகக்கூட்டம். ஒருவழியாய் இடம் கிடைத்து அமர்ந்தேன். பஸ், நகர்ப்புறத்தைத் தாண்டியவுடன், குளிர்க்காற்று வீசியது. இருபுறமும் பசுமை. இதுவே மனதுக்கு இதமாய் இருந்தது.

பஸ் ஸ்டாப் வந்துவிட்டது. எதிரே கோயிலைச் சார்ந்த முதியோர் இல்லம்.



கோபுரம்!

பக்கத்தில் அனாதை குழந்தைகளுக்கான பள்ளிக்கூடம் நிறைய மரங்களும், செடிகளும் சூழக் காணப்பட்டது. பார்த்துக் கொண்டே நடந்தேன். வழியின் இரு புறமும் பூஜைப் பொருட்கள் விற்கும் கடைகள்.

''வாங்கம்மா, வாங்கய்யா அர்ச்சனைத் தட்டு இந்தாங்க. மாலை வாங்கிக்கம்மா'' கூவிக்கொண்டிருந்தார்கள்.

செருப்பை விட்டுவிட்டு, காலை கழுவிக்கொண்டு, வரிசையில் நின்றேன். பெண்கள் வரிசைதான் மிகவும் நீளமாக இருந்தது. பாவம், எல்லா வேண்டுதல்களும் அவர்களுக்குத்தான். காக்கி அரை பான்ட்டும், வெள்ளைச் சட்டையுமாய் ஒரு சிறு பையன் அர்ச்சனைத் தட்டுகளை க்யூவிலேயே வந்து விற்றுக்கொண்டிருந்தான்.

என் அருகில் வந்ததும், நானும் ஒன்றை எடுத்துக்கொண்டு 'படிக்கிறியா புள்ள' என்று கேட்டேன். ''ஆமாங்க. அஞ்சாம் க்ளாஸ் படிக்கிறேன். மதியம்தான் பள்ளிக்கோடம், இதை வித்துட்டுப் போயிருவேன்'' என்றான்.

''ஏன்? உன் வீட்டில் யாருமில்லையா தம்பீ?'' என்றதற்கு, ''அதோ அம்மாவும், அக்காவும் மாலை கட்டறாங்க. நா போன பொறவு அவுங்க விப்பாங்க. வெள்ளிக்கிழமை இல்லியா, வியாவாரம் சாஸ்தியிருக்கும்'' என்றவன் பணத்தை எண்ணி பையில் போட்டுக்கொண்டு போக, நான் திரும்பிப் பார்த்தேன்.

அந்தக் காட்சி, எனக்குள் இரக்கத்தை ஏற்படுத்தியது. எதையோ பார்த்துச் சிரித்துக் கொண்டும், கைகளால் அவள் புடைவைத் தலைப்பை இழுத்துக்கொண்டும் இருந்த பையனுக்கு பதினைந்து வயதாவது இருக்கும். தத்தித் தத்தி நடந்து வந்து கொண்டிருந்தான். நான் பார்ப்பதைப் புரிந்துகொண்ட அவள், ''பிறந்ததுல இருந்து நடக்காமலே இருந்தான். இடுப்புல தூக்கிட்டு தூக்கிட்டு வாரா வாரம் வருவேன். தோ - புள்ள இப்ப நடக்குது பாரு. எல்லாம் ஆத்தா மகிமே.''

க்யூ வேகமாய் நகர்ந்தது. இதோ கோயில் பிரகாரம் வந்து விட்டது. இன்னும், ஒரு பத்து, பதினைந்து நிமிஷம் நின்றால் அவள் தரிசனம் கிடைத்துவிடும்.

எனக்கு முன்னால் நின்று கொண்டிருந்த பெண்ணுக்கு நிச்சயம் முப்பது வயதாவதிருக்கும். நரை மயிர் ஆங்காங்கே தலையில் தெரிந்தது. அவளுடன், அவள் தாயாராக இருக்க வேண்டும். ''கலியாணம் கைகூடோணும் தாயீ... தாலியோட வர்றேன் 'ஆத்தா'ன்னு வேண்டிக்கடி'' சத்தமாகவே பெண்ணிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். திரும்ப க்யூ நகர ஆரம்பித்தது.

கையில் பெட்டி, பைகளுடன் அந்த வயதான தம்பதியினர் யாரையோ தேடிக் கொண்டிருந்தார்கள். ''மாமா... தோ... இங்க பாருங்கோ'' என்று கையில் ஒரு சீட்டுடன் ஒரு பெண்மணி அவர்களை நெருங்கினாள். ''இந்தாங்கோ... அந்த



ஆஹா 50!

திருமணங்களில் விருந்து சுவையாக அமைந்திருந்தால் கேட்டரிங் சர்வீஸ் எண்களை செல்போனில் பதிவுசெய்து கொள்ளவும். நம் வீட்டில் நடக்கும் சுப நிகழ்ச்சிகளுக்கு அவர்களை ஏற்பாடு செய்ய வசதியாக இருக்கும்.

- ரமா ஸ்ரீதரன், சென்னை - 94.

இல்லத்துக்குப் போங்க, உங்களுக்கு இடம் கிடச்சுடுச்சு'' என்றாள்.

''ரொம்ப தாங்க்ஸ்டி ஜானு. எனக்கு ஒண்ணுமில்ல. இவதான் ரொம்ப நொந் துட்டாடி'' தன் மனைவியைப் பார்த்துச் சொன்னார்.

''பெத்த பிள்ளைல்லாம் இப்படி மாறு வான்னு தெரியுமா? எத்தனை கஷ்டப்பட் டுப் படிக்க வச்சு, ஆளாக்கி...'' வார்த்தை களை முடிக்க முடியாமல் அந்த இடுங்கிய கண்களிலிருந்து கண்ணீர் வந்ததைக் காண மனம் சங்கடப்பட்டது. அந்த வயதான தம்பதியரை முதியோர் இல்லத்துக்கு அழைத்துக்கொண்டு போகிறாள் போலிருக் கிறது. ஏனோ, காசி, கயா என்று டூர் போயிருக்கும் என் மாமியார் நினைவு வர, கடைசி வரை கைவிடாமல் பார்த்துக் கணும் என்று தீர்மானித்தேன்.

உள் பிராகாரம் வந்து விட்டது. கற்பூர மணமும், மலர்களின் மணமும், மஞ்சள் - குங்கும மணமும் கலந்து வீச புதியதொரு அனுபவம் கிடைத்தது. இங்கிருந்து ஸ்வாமி சந்நிதானம் மிக அருகிலேயே தெரிந்தது. கூட்ட நெரிசலில் அம்மன் முகம் தெரியவில்லை. இதுவரை பொறு மையாய் நின்று வந்தவர்கள், அருகே வந்ததும் முண்டியடித்துக்கொண்டு முன் னால் போக, ''போங்கம்மா.. ம்... போங்க. நகருங்க...'' காவலர்கள் விரட்ட, சந்நிதா னத்தை நெருங்கிவிட்டேன்.

இதோ, கருணைக் கண்கள், நெற்றியில் பெரியதாய் குங்குமம், பச்சை நிறப் புடைவை, மலர் மாலைகள் அருள்பாலிக் கும் கரம், மற்றொரு கரத்தில் சூலம் - இன்னும் இன்னும் சரியாகப் பார்த்தோமா என்று இன்னொரு முறை கண்குளிரத் தரிசித்தேன்.

வெளியே வந்து நமஸ்கரித்தேன். ஒரு நிமிடம் அமர்ந்துவிட்டு, இருகரம் கூப்பி வேண்டிவிட்டு வேகமாய் நடந்தேன். 'பளிச்' என்று ஒரு மின்னல் தோன்றி மறைந்தது. 'அடடா! தெய்வத்திடம் அரவிந்துக்காக எதுவும் வேண்டவேயில் லையே? ஆனாலும் என் மனம் குளிர்ந்து விட்டதே எப்படி?'

விஜி, நீ ரொம்ப புத்திசாலி. என்னைக் கோயிலுக்குப் போகச் சொன்னதன் பொருள் புரிந்துவிட்டது. ஆம், எத்தனை பேரைப் பார்த்தோம். ஏழை பூக்காரச் சிறுவன், ஊனமுற்ற பிள்ளை, கல்யாண மாகாத பெண், ஆதரவற்ற முதியவர்கள் அப்பப்பா... அனைவருக்குமே ஏதேதோ பிரச்னைகள். தீர்வு காணவே, முறை யிடவே 'அவளிடம்' வருகிறார்கள். இதில் என் பிரச்னை என்ன ஒரு பிரச்னையா? தூசு! எனக்குப் புரிந்து விட்டது. இனி நான் அலட்டிக் கொள்ள மாட்டேன்.. எல்லாம் அவள் பார்த்துப்பாள்!''

சாலையின் இருபுறத்து மரங்களும் தந்த குளிர் நிழலில் மெள்ள நடந்தேன்.

தூரத்தில் கோபுரம் கம்பீரமாய்த் தெரிந் தது. ●



ஆஸ்துமா பிரச்னை உள்ளவர்களுக்கு வெல்லம், வேர்க்கடலை, கலந்த சாதம் போன்றவை உடனடியாக நோயை அதிக மாக்கும். உப்பைக் குறைத்துச் சாப்பிட்டால் ஆஸ்துமா இளைப்பு பெருமளவு குறையும். இது எனக்கு ஹோமியோபதி மருத்துவர் கூறிய அறிவுரை.

- கே. உமாமகேஸ்வரி, பள்ளிக்கரணை.

உடல் பருமன்

அதிகமான உடல் எடை, உயர் இரத்த அழுத்தம் மற்றும் இரத்தத்தில் கொலஸ்டிராலின் அளவை அதிகரித்து இருதய நோய்க்கு வழி வகுக்கிறது. மேலும் இரத்தத்தின் சர்க்கரை தாங்குதிறனை அதிகரிக்கிறது. உதாரணமாக 800CC எஞ்சின் சிறிய மாருதி காரில் மிக எளிதாக குறித்த நேரத்தில் குறித்த இடைவெளியை கடக்க முடியும். ஆனால் அதே 800CC எஞ்சின் பெரிய லாரியின் எடையை இழுத்துக் கொண்டு அதே வேகத்தில் அதே தூரத்தை அடைவது மிகவும் சிரமமானதாகும். அதனால் மூன்றில் ஒரு பங்கு உடல் பருமனுடையவர்கள் இதயத்திற்கு மிக அதிகமான வேலையைத்தருகிறார்கள். தொடர்ந்து அவர்கள் இதயம் தனது சக்தியை மீறி வேலை செய்து ஒய்ந்துவிடுகிறது. இதன் காரணமாக, உயர் இரத்த அழுத்தம் மற்றும் இருதய நோய் வரும் வாய்ப்பு அதிகமாகிறது. உடல் பருமனுள்ளவர்கள் மிதமான இதய நோயாளிகளாவதற்கு வாய்ப்பு அதிகமாகிறது.



உடற்பயிற்சி இரத்தக்குழாய்களில் உற்பத்தியாகும் சிறுசிறு இரத்தக் கட்டிகளை கரைத்து விடுவதால் நாளடைவில் அவை பெரிதாகி இரத்த ஓட்டத்தை அடைக்கும் பாதிப்பை தவிர்க்கவும் கொழுப்புச் சத்தான HDL (நல்ல கொழுப்பு)ன் அளவை அதிகரிக்க உதவுகிறது.

மேலும் நமது இரத்தத்திலுள்ள (LDL) (கெட்ட கொழுப்பு மற்றும் TGL, இவற்றின் அளவை கட்டுப்பாட்டிற்குள் வைக்க வேண்டுமென்றால் கொழுப்புச் சத்தின் அளவை உணவில் குறைத்து அதற்குப் பதில் நல்ல கொழுப்புச் சத்துள்ள உணவுப் பொருட்களை கூட்டி நமது உணவுப் பழக்கத்தை மேற்கொண்டால் போதுமானது.

உடல் பருமனைக் கணக்கிட இரண்டு முறைகள் உள்ளன. அவையாவன;

1. வயிற்றுப் பகுதியில் அதிக கொழுப்பு சேர்வதால் அவர்களின் வளர்சிதை மாற்றம் பாதிக்கப்பட்டு,

இரத்தத்தில் சர்க்கரை தாங்குதிறன் பாதிக்கப்படுகிறது. இதனால் TYPE - II சர்க்கரை வியாதியும், இதய நோயும் வரும் வாய்ப்பு அதிகமாகிறது.

2. அடுத்தது **WHR** வயிறு மற்றும் இடுப்பின் விகித அளவைக் கொண்டும் உடல் பருமனைக் கணக்கிடலாம். இடுப்பின் அளவை. வயிற்றின் அளவோடு வகுக்கும்போது கிடைக்கும் எண்ணின் அளவு ஆண்டுகளுக்கு 1.0 ஆகவும், பெண்களுக்கு 0.9 ஆகவும் இருக்கு வேண்டும். அதிகமானால் உடல் பருமனுள்ளவர்கள் எனக்கொள்ளலாம். மேலும் **Body Mass Index** (உடல் எடை அட்டவணை) என்ற கணக்கீடு மூலமும் உடல் பருமனை நிர்ணயிக்கலாம்.

$$\frac{\text{உடல் எடை (கிலோ)}}{(\text{உயரம்})^2\ \text{மீட்டர்}} \qquad \frac{\textbf{Wt in Kg}}{\textbf{(ht)}^2\ \textbf{m}}$$

நமது உடல் எடையை (கிலோவி லும்) உயரத்தை மீட்டர்^{2}-ல் வகுக்கும் போது கிடைக்கும் எண்ணிக்கை 18 முதல் 24ற்குள் இருந்தால் எடை சரியாக இருக்கிறது. 24ற்கு மேல் 30ற்குள் இருந்தால் 10 முதல் 20 சதவீதம் அதிக எடை என்றும். 30–ஐ தாண்டினால் உடல் பருமன் **(obesity)** என்று கொள்ளலாம்.

சென்னை , நந்தனம், ஆக்ஸிமெட் மருத்துவமனையில் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ள 3DCCG / ATOCOR, FDA (USA அங்கீகாரம் பெற்றது) என்ற பரிசோதனை மூலம் பின்வரும் இதய நோய்களிலிருந்து நம்



Dr. அயாஸ் அக்பர்

இதயத்தை எப்படி இதமாக காப்பது என்பதை அறியலாம்.

1. இதயத்தில்உள்ளஇரத்தக்குழாய்களில் படிந்திருக்கும் கொழுப்பு மற்றும் கொழுப்புக் கட்டிகளின் அளவு.
2. இதயத்துடிப்பின் கடினம்.
3. இரத்த ஓட்டத்தில் உள்ள குறைபாடுகள்
4. உடல் எடையின் அட்டவணை
5. இரத்தம் உறைதலின் குறியீடு
6. ஆர்ட்டரிகளின் கடினத் தன்மை
7. இதயத்தசைகளின் வயது
8. AORTIC (எயோட்டிக்) நாடித் துடிப்பின் அழுத்தம்
9. SVER விகிதம்
10. உடல் கொழுப்பின் அளவு (கிலோவில்)
11. உடல் ஓய்வின் போதும் தேவைப் படும் சக்தியின் அளவு

வெறும் வயிற்றில் (8 மணி நேரம்) முன் பதிவு செய்து ரூபாய் 4,500/- செலுத்தி இந்த பரிசோதனை செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:


OXYMED HOSPITALS
PRIVATE LIMITED
CLOSE TO YOUR HEART

No.786, Anna Salai, Nandanam,
Chennai. Phone : 42131010/14/18
www.oxymedhospital.in
email : oxymedhospitals@yahoo.com

வண்ணக்



12 புள்ளி 12 வரிசை
(நேர்ப் புள்ளி)
- கே. வத்சலா, புனே.



18 புள்ளி 2 வரிசை 2 முடிய
(நேர்ப் புள்ளி)
- டி. பேபி மீனா, மதுரை - 107.



11 11 (நேர்ப்புள்ளி)
- எஸ். வசந்தி, தஞ்சாவூர்.




15 - 8 (சந்துப்புள்ளி)
- அ. லாவண்யா அன்புசெல்வம்,
சென்னை - 51.

கோலங்கள்

16 புள்ளி 2 வரிசை 2 முடிய
(நேர்ப் புள்ளி)
- சாந்தி பாஸ்கர், கிருஷ்ணகிரி.





15 புள்ளி 3 வரிசை நேர்ப்புள்ளி
சுற்றிலும் 3, 1
- எம். ஷர்மிளா, சேலம் -, 8.

15 - 8 (சந்துப்புள்ளி)
- எஸ். ரமாமணி,
சின்ன காஞ்சிபுரம்.





- என். தர்மாம்பாள்,
சென்னை - 4.

வாசல் அழகு

ஆல்பம்



தாத்தா : எம். பாலகிருஷ்ணன்
பாட்டி : பி. கன்னிகா காந்திபாய்
பேரன் : எம்.எஸ். சோமஸ்கந்தன்






தாத்தா : யு.ஆர். வெங்கட்ராவ்
பாட்டி : யு.வி. விஜயலட்சுமி
பேரன் : எஸ். விஸ்வஜித்

தாத்தா : கே. ரவி
பாட்டி : ஆர். ரேணுகா
பேத்தி : எஸ்.ஸ்வேதா





தாத்தா : எம். சந்திரதாஸ்
பாட்டி : சி. மஞ்சுளா
பேத்தி : எஸ். தீப்தி

என் செல்லமே!





தாத்தா : எம். ஸ்ரீநாத்
பாட்டி : கிருஷ்ணா ஸ்ரீநாத்
பேரன் : எஸ். ஸ்ரீராம்

''கடவுளிடம் நம்முடைய மனத்தை ஒருமுகப்படுத்தி ஆத்மார்த்தமாக வேண்டினால் இறையருள் பெறலாம்'' என்று நமது இந்து சாஸ்திரங்கள் கூறுகின்றன.

கடவுளைத் தாயாகவும், தந்தையாகவும், குழந்தையாகவும் பாவித்து அவரது அழகிய கோலத்தையும், கருணையையும், வீர தீர பராக்கிரமங்களையும் போற்றி நம் மனக் குறைகளைக்கூறி அருள்புரியும்படியும் வேண்டுகிறோம். அவற்றின் காரணப் பெயரும் பொருளும் அறிந்து பாடினால் இன்னும் சிறப்பல்லவா?

சமஸ்கிருத ஸ்லோகங்களுக்கு சூட்டப்பட்டுள்ள பொதுவான பெயர்களின் பொருளும் விளக்கங்களும் பயன்களும் இங்கே தரப்பட்டுள்ளன.

இறையருள் தரும்

* அஷ்டோத்ர சத நாமாவளி

பொருள் : கடவுள்களின் 108 திரு நாமங்களைக் கூறி, மலர்களால் அர்ச்சனை செய்வது.

எல்லா கடவுள்களுக்கும் பொதுவாக அஷ்டோத்ரம் சொல்வது நன்மை தரும்.

* சஹஸ்ர நாமாவளி

பொருள் : கடவுள்களின் 1008 திருநாமங்களைக் கொண்ட தொகுப்பு. எல்லா கடவுள்கள் பெயரிலும் சஹஸ்ர நாமம் சொல்வதுண்டு. விஷ்ணு சஹஸ்ரநாமம், லக்ஷ்மி சஹஸ்ர நாமம் முதலியவை பிரபலமானவை.



* திரிசதீ நாமாவளி

தேவியின் 300 திருநாமங்களைக் கொண்ட தொகுப்பு.

உதாரணம் லலிதா திரிசதீ நாமாவளி, ச்யாமளா திரிசதீ நாமாவளி மற்றும் பல.

* பஞ்ச சதி

செய்யுள் வடிவிலான ஐந்நூறு துதிகள் கொண்ட தொகுப்பு.

உதாரணம் புலவர் காளிதாஸர் ஸ்ரீ காமாக்ஷி பெயரில் பாடிய 500 ஸ்லோகங்களே மூக பஞ்ச சதி என்று போற்றப்படுகிறது.

* ஸ்துதி, ஸ்தோத்திரம்

செய்யுளாகவோ அல்லது உரைநடைகளாகவோ



இனிய துதிகள்!

அமைந்த மேலான பிரார்த்தனைகள்

ஸ்துதி : உதாரணம் : மஹாகணபதி ஸ்துதி, ஆஞ்சநேயர் ஸ்துதி, மஹாலட்சுமி ஸ்துதி மற்றும் பல.

ஸ்தோத்திரம் :

உதாரணம் : விஷ்ணு சஹஸ்ரநாம ஸ்தோத்திரம் பகவான் ஸ்ரீகிருஷ்ணனின் திருநாமங்களைக் கொண்ட தொகுப்பு. பிரத்யேகமாக விஷ்ணு ஆலயங்களில் இது வாசிக்கப்படும்.

காரியசித்திக்கும், மழைவேண்டியும், உடல் நலமடையவும் இதை பொது இடங்களில் பாராயணம் செய்வார்கள்.

லலிதா மற்றும் லக்ஷ்மி சஹஸ்ரநாம ஸ்தோத்திரம் அம்பாளின் திருநாமங்களைக் கொண்டது. இது நவராத்திரி மற்றும் மற்ற விசேஷ நாட்களில் பெண்களால் மிகச் சிறப்பாகத் துதிக்கப்படுகிறது. இதையே பாடலாக பாடினால் 'பாராயணம்' எனப்படும்.

* அஷ்டகம் எட்டுப் பகுதிகள் கொண்ட ஸ்துதி

உதாரணம் : சுப்ர மணிய அஷ்டகம், அன்னபூர்ண அஷ்டகம், லக்ஷ்மி அஷ்டகம், ரங்கநாத அஷ்டகம், மதுரா அஷ்டகம், ஜய துர்கா ரோக நிவாரண அஷ்டகம், லிங்காஷ்டகம், மற்றும் பல.

* பஞ்சரத்னம் :

செய்யுள் வடிவில் ஐந்து துதிகள் கொண்ட தொகுப்பு.

உதாரணம் : கணேச பஞ்சரத்னம், தக்ஷிணா மூர்த்தி பஞ்சரத்னம், அனுமத் பஞ்சரத்னம், மீனாக்ஷி பஞ்சரத்னம் மற்றும் பல.

* புஜங்கம்

பாம்பு நெளிந்து ஊர்ந்து செல்வது போன்ற நடையில் எழுதப்பட்ட செய்யுள்கள்

உதாரணம் : கணேச புஜங்கம், தேவி புஜங்கம், சுப்ரமணிய புஜங்கம், பவானி புஜங்கம், சாரதா புஜங்கம் மற்றும் பல.

* லஹரி

அலைகள் அடிப்பது போன்ற நடையில் அமைந்த செய்யுள்கள்

உதாரணம் : அம்பாளின் குணங்களையும் அழகையும் வர்ணிக்கும் ஸௌந்தர்ய லஹரீ, ஆனந்த லஹரீ, சிவானந்த லஹரீ மேலும் பல.

* தண்டகம்

ஒரு வகை அளவு கட்டுப்பாடு கொண்ட உரைநடை துதி.

உதாரணம் : சியாமளா தண்டகம், கருட

சுக்லாம் பரதரம் பானம்!



நளபாகப் போட்டி - 18ல் 'காப்பிக்கு தேவபானம்' என 'க்ளு' கொடுத்திருந்தீர்கள். உண்மையில் அது 'தேவ பானம்'தான் என்பதற்கு விளக்கம் கீழே :

பிள்ளையாரை வணங்கும் பொழுது, 'சுக்லாம் பரதரம்' சொல்லி இரண்டு பக்கங்களி லும் குட்டிக் கொள்கிறோம் அல் லவா? சுவையான, தமாஷான விளக்கம் :

சுக்லம் - நல்ல வெண்ணிறமுடைய

பரதரம் - தரமான பால்

விஷ்ணும் - கருப்பு நிற டிகாக்ஷன்

சசிவர்ணம் - இரண்டும் சேர்ந்தால் 'காப்பி' நிறம்

சதுர்புஜம் - நான்கு புஜங்கள் (கணவன், மனைவி இருவரும்)

பிரசன்னவதனம் த்யாயேத் - காப்பியை ருசித்துச் சாப்பிட முகம் பிரகாசமடைகிறது.

சர்வவிக்னோபசாந்தயே - அனைத்து தொடங்கும் எல்லா காரியங்களும் 'விக்னம்' இல்லாமல் நடைபெறும்.

- உபன்யாச சக்ரவர்த்தி காலஞ் சென்ற டி.எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரி களின் விளக்கம்தான் மேற்கண்டது.

- என். லட்சுமி, மடிப்பாக்கம்.

தண்டகம் மேலும் பல.

✱ கவசம்

நினைப்பவரைக் காக்கும் மந்திரம். எந்த கடவுளின் கவசத்தை பக்தியுடன் சொல்லுகிறோமோ அந்த கடவுள் நம்மைக் காப்பார். இது செய்யுள் நடையிலோ அல்லது உரைநடையாகவோ இருக்கும்.

உதாரணம் : குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை சொல்லக்கூடிய கந்தசஷ்டி கவசம், கந்த குரு கவசம், ஷண்முக கவசம் மற்றும் ஸ்ரீ ஹனுமன் கவசம், கருட புராண நாராயண கவசம் மற்றும் பல.

✱ ஸுப்ரபாதம்

இறைவனைப் பள்ளி எழுச்சி செய்ய விடியற்காலையில் பாடும் துதி.

உதாரணம் ஸ்ரீ வெங்கடேச ஸுப்ரபாதம், குருவாயூர் ஸுப்ரபாதம், ஐயப்ப ஸுப்ரபாதம், ஸ்ரீராகவேந்திர ஸுப்ரபாதம் மற்றும் பல.

✱ காயத்ரி

காயத்ரி என்றால் ஜபிப்பவனைக் காப் பாற்றுகிறது என்று பொருள்.

உதாரணம் : நவகிரக காயத்ரி, அனுமன் காயத்ரி, விஷ்ணு காயத்ரி, துர்க்கை காயத்ரி மற்றும் பல.

ஸ்தோத்திரங்களும், துதிகளும், பாடல் களும் நமது முன்னோர்களால் நமக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். இவற்றில் நம்மால் இயன்ற அளவு துதித்து இறை வனின் அருளைப் பெறுவோமாக.

- எஸ். செல்லம்மாள், வேளச்சேரி.

தெய்விகம்



பண்டிகை ஸ்பெஷல் 1

ஆசி தந்த வளையல்கள்!

நானும், என் கணவரும் திருப்பதி சென்று வந்தோம். அப்படியே திருச்சானூர் பத்மாவதி தாயாருக்கு திருமஞ்சனம், குங்கும அர்ச்சனை செய்தோம். ஆடி வெள்ளியாதலால் கூட்டம் தாங்க முடியவில்லை. அபிஷேகம் நடந்துகொண்டிருந்த சமயத்தில், நின்றிருந்த ஒருவர், என்னைக் கை காட்டி 'அம்மகாரு' என்று அழைத்தார். பிறகு, ஒரு டஜன் வளையல்களைக் கொடுத்து, ''இந்தக் கண்ணாடி வளையல்களை அம்மனுக்கு சார்த்தி, நல்லா பிரார்த்தனை செய்யுங்க. எனக்கு பஸ்ஸுக்கு நேரமாச்சு!'' என்று சொல்லிவிட்டு, வேகமாக கூட்டத்திலிருந்து விலகிச் சென்றுவிட்டார். நானும், அர்ச்சகரிடம் சொல்லி, தாயாரின் திருவடிகளில் சமர்ப்பித்து விட்டு, ''அம்மா, பெண் கல்யாணத்துக்கோ, வளைகாப்பு வேண்டியோ எதற்கு வளையல்களைச் சாற்றினார்களோ, தெரியாது. அவர்களது பிரார்த்தனை நிறைவேற்றிடு தாயே'' என்று மனம் உருக வேண்டிக் கொண்டேன். வளையல்களுடன் பேரழகியாகத் திகழ்ந்த தாயாரின் திரு உருவத்தை மனதில் ஏற்றிக் கொண்டு பயணத்தைத் தொடங்கினோம்.

திருச்சி வந்து, ஒரு வாரத்துக்குள்ளேயே, என் மகன் ஃபோன் செய்து, ''அம்மா, சந்தோஷமான செய்தி. நீ பாட்டி ஆகப் போகிறாய்'' என்று சொன்னான். என்னால் ஒன்றுமே பேச முடியவில்லை. மெய்சிலிர்த்துப் போனேன். எங்கள் வீட்டில் வளைகாப்பு வரப் போவதை, சூசகமாகத் தெரிவித்து விட்டாள் அந்தத் தாய்! அது மட்டுமல்ல. மற்றவர்களுக்கும் நல்லது நடக்க வேண்டும் என்று நினைத்தாலே, நமக்கும் நல்லது தான் நடக்கும் என்று உபன்யாசத்தில் கேட்டது நினைவுக்கு வந்தது. எத்தனை ஆடி வெள்ளி வந்து போனாலும், மெய் சிலிர்க்க வைத்த அந்த ஆடி வெள்ளியை மறக்க மாட்டேன்!



- ஆர். ராஜலக்ஷ்மி,
திருச்சி - 21.

கடவுளின் உயர்ந்த

அனுஷா நடராஜன்

ஜே. வைஷாலி, சென்னை - 4.

திருமணமானவர்கள், பிரம்மச்சாரிகளை விட நீண்ட நாட்கள் உயிர் வாழ்வதாக விஞ்ஞானிகள் சொல்கிறாங்களே!

ஆமாமாம்! வாழ்க்கை நீண்டு கொண்டே இருப்பது போன்ற மாயையைத் தருவதால் கூட இருக்கலாம்!

கோமதி நாராயணன், ஹைதராபாத் - 1.

பெண்ணின் கற்பு நிலையைப் பொறுத்த வரை, அனுஷா முற்போக்குவாதியா? பிற்போக்கு வாதியா?

முள்ளின் மீது வாழை இலை பட்டாலும், வாழை இலை மீது முள் பட்டாலும், சேதாரம் என்னவோ வாழையிலைக்குத்தான் என நம்பும் யதார்த்தவாதி!

கே. கஸ்தூரி கதிர்வேல், வேலூர் - 6.

உங்கள் பதில்களில் நகைச்சுவை மிளிர்கிறதே? இப்படி நகைச்சுவையாக பதிலளிக்க யாரிடம் கற்றுக் கொண்டீர்கள், அனுஷா?

என்கிட்ட இருந்துதான்! எனக்கு என்னவோ பிரமாதமா காமெடியா எழுதத் தெரியும்னு நினைச்சு, இதுமாதிரி கேள்வியெல்லாம் கேட்கும்போது, எனக்கு உள்ளூரச் சிரிப்புச் சிரிப்பா வரும். அது அப்படியே 'புஸ்'னு எழுந்து பதில்கள்லேயும் பொங்கி வழிஞ்சுடுது!



லோ. மோகனசுந்தரி கோபி, கிருஷ்ணகிரி - 1.

கடவுளின் மிக உயர்ந்த படைப்பு என்று எதைக் கூறலாம்?

பெண்ணைத்தான்! அபூர்வ அழகு, அளப்பரிய பண்பு, அபரிமிதமான கருணை, ஆவேசம், அசட்டுத்தனம், அபாரமான ஞாபகசக்தி, அடங்காத ஆசை, அல்ப சந்தோஷம், அறிவாற்றல் போன்ற பல விஷயங்களின் அதிசயமான கலவையே பெண்! அவளே கடவுளின் விசேஷ சிருஷ்டி!

இதைப் படிச்சுட்டு, 'எப்படி எங்களைப் பத்தி இப்படியெல்லாம் சொல்லத் தோணிச்சு?'னு யாராவது டுஷ்யூம் போட நினைச்சா, ப்ளீஸ்... அறிஞர், அய்யா அரிஸ்டாட்டிலைப் பிடியுங்க... அவர்தான் இப்படியெல்லாம் சொல்லிட்டுப் போனவர்!

எம். பத்மாவதி, கல்லிடைக்குறிச்சி.

வெற்றின்னா என்ன?

எப்ப ஒருத்தரோட கையெழுத்து, ஆட்டோகிராஃபா மாறுதோ, அதுதான் வெற்றி!

எஸ். விஜயராணி, ஓசூர் - 2.

அனுஷா, சமீபத்தில் அதிர்ச்சி அடைந்தது எதற்காக?

நான் டீனேஜில் இருந்தபோது, 'அலைகள் ஓய்வதில்லை!' படத்தைப் பார்த்தேன். அந்த வயசுக்கு அது கலாசார அதிர்ச்சியாகத்தான் இருந்தது. சமீபத்தில் அதை டி.வி.யில் பார்த்தேன். பெரிதாகப் பாதிக்கவில்லை.

இரண்டு நாட்களுக்கு முன், எங்கள் அலுவலகத்துக்கு அருகே உள்ள ஐ.டி. அலுவலக வாசலில், இரண்டு இளம் பெண்கள் சகஜமாக





'தம்' அடித்துக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். வெளிநாட்டுப் பெண்கள் புகைபிடிப்பதை மட்டுமே பார்த்திருந்த எனக்கு இந்தக் காட்சி தூக்கிவாரிப் போட்டது. பத்து வருஷம் கழித்து இந்தக் காட்சியும் பழகிப் (மரத்து) போகுமோ என்னவோ!

எஸ். ப்ரியதர்ஷினி, திருநெல்வேலி - 7.

படைப்பு எது?

உங்களுக்குப் பிடிச்ச காலை டிபன் எது?

சென்னையில் -
பொங்கல், வடை
மதுரையில் -
ரோட்டோர இட்லி, வகை வகையான சட்னி!
மைசூரில் -
குருமா தோசே, மயிலாரி மனே ஸ்பெஷல் தோசே!
பெங்களூரில் - துப்பா தோசே, காராபாத்!
ஆந்திராவில் - பெசரட்டு
வடநாட்டில் - பாவ்பாஜி, வடாபாவ்!
இதெல்லாம் வேறு யாராவது 'பில்' தரும்போது
என் சொந்தக் காசுன்னா.. டீயும் பன்னும்தான் டிபன்!

ஜெயந்தி ராஜன், மதுரை - 2.

'நடப்பதெல்லாம் நன்மைக்கே!' என்கிறார்களே... அதை அனுஷா உணர்ந்ததுண்டா?

தினமுமே உணர்கிறேன் ஜெயந்தி... குறிப்பாக 'வாக்கிங்' போகும்போது!

எஸ். மீனாட்சிவரதன், திருச்சி - 2.

இந்தக் காலத்தில் கைநிறைய பணம் இல்லாட்டி வாழவே முடியாதா...?

யார் சொன்னது? யார் சொன்னதுங்கறேன்! அப்படியெல்லாம் கிடையவே கிடையாது. ஏடிஎம் கார்டு, கிரெடிட் கார்டுகள் இருந்தாலும் ஓரளவு சமாளிச்சுக்கலாம்தான்!

சுபா ஸ்ரீநிவாஸன், சென்னை - 40.

'குசேலன்' பாடல்கள் கேட்டீங்களா..?

கேட்டேன். 'சாரல்'னு ஆரம்பிக்கிற ஷ்ரேயா கோஷல் பாடல் மட்டும் நெஞ்சில் கொஞ்சமாய் சாரலடிக்குது... மற்றதெல்லாம்... ரஜினிக்கு ஏற்ற பரபரப்பு பில்டப் ரகமாகத் தெரியவில்லை.

என். லட்சுமி நாகராஜன், மடிப்பாக்கம்.

? அனுஷா, நீங்க கோகுலாஷ்டமியை எல்லாம் கொண்டாடுவதுண்டா?

குட்டி கிருஷ்ணரை வெல்கம் பண்ணாமல் இருக்க முடியுமா?

நைவேத்யம், பூஜை முன் ஏற்பாடுகளை என்னுடைய 916, ஹால்மார்க் தங்க மாமியார் தடபுடலாகப் பார்த்துக் கொண்டு விடுவார். கோலம், அலங்காரம், கிருஷ்ணர் பாதம் போடும் வேலை மட்டும் என்னுடையது.

''கிருஷ்ணர் பாதத்தை வெளிகேட்டிலிருந்து போடு!'' என்பார் பின்புறமாக வந்து கண்காணித்தபடியே!

''அதுக்கென்ன? பஸ் ஸ்டாண்டிலிருந்தே போடறேன். ஆனா கிருஷ்ணர் ரயில்ல வந்தா என்னம்மா பண்றது?'' என்று கேட்பேன் அப்பாவியாக!

சரி, கிருஷ்ணர் பாதம் போடுவது ஏன் தெரியுமா?

கண்ணன்தான், வெண்ணெய் திருடுவதில் எக்ஸ்பர்ட் ஆச்சே! கோபியர் வீட்டுக்குள் நுழைந்து, தயிர், வெண்ணெய் எல்லாம் அள்ளி அள்ளி தின்றுவிட்டு, பானைகளையும் உடைத்து விடுவானாம். சத்தம் கேட்டு கோபியர் வந்தால், உடம்பெல்லாம் தயிரும் வெண்ணெயும் வழிய, வீடெங்கும் ஓடி அவர்கள் கையில் சிக்காமல் மறைந்து போவானாம். வெண்ணெயில் பதிந்த கண்ணனின் கால் தடங்கள் இல்லாத வீடே ஆயர்பாடியில் இருக்காதாம்! அந்த 'பட்டர் - பாய்' செய்த லூட்டிகளை நினைவுப்படுத்திக் கொள்ளவே வெண்ணெய் நிறமுள்ள கிருஷ்ணர் பாதங்களைப் போடுகிறோம் என்கிறார்கள் பெரியோர்கள்.



தற்காலங்களில் அனைத்து வீடுகளிலும் கேஸ் இணைப்பு உள்ளது. அதன் உரிமையாளர் இறந்து விட்டால் அந்த இணைப்பை பெயர் மாற்றம் செய்ய வாரிசு சான்றிதழ், அடையாள அட்டை, வக்கீல் கையெழுத்து என நிறைய பணம் செலவழிக்க வேண்டியுள்ளது. இதைத் தவிர்க்க கேஸ் நிறுவனங்கள் அந்த இணைப்புக்கு வாரிசுதாரர் முறையை அறிமுகப்படுத்தலாமே!

– விசாலாட்சி ஜம்புநாதன்,
சென்னை – 4.

கோயில் பெருமை



அருள் தரும்

சென்னை மாநகரை அடுத்து, பரங்கி மலைக்குப் பக்கத்தில் உள்ளது நந்தம் பாக்கம். ஒருகாலத்தில் ப்ருங்கி முனிவர் தவம் செய்து வந்ததால் ப்ருங்கி மலை யென்று பெயர் பெற்ற மலையை ஒட்டி பெரிய சோலைவனமாக ஒரு நந்தவனம் இருந்தது. பின்னர் வந்த ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் ப்ருங்கிமலை, பரங்கி மலையானது போல் நந்தவனமும் நந்தம் பாக்கமாக மாறியதாக கூறப்படுகிறது. டிபென்ஸ் காலனி, பர்மா காலனி என்று பல பகுதிகளை உள்ளடக்கிய நந்தம் பாக்கத்தில் உள்ளதுதான் அங்காள ஈஸ்வரி, முனீஸ்வரர் ஆலயம்.

இரண்டாவது உலகப் போரின் தாக்கத்தினால் பர்மாவில் இருந்து வெளியேற்றப்பட்ட தமிழர்கள், தமிழ கத்தின் பல பகுதிகளில் தங்க வைக்கப் பட்டனர். அப்படி நந்தம்பாக் கத்தில் தங்க வைக்கப்பட்ட தமிழர்கள் வாழ்ந்த பகுதி பர்மா காலனி என்று பெயரிடப்பட்டது. அவர்கள், பர்மா வில் இருந்தபோது தாங்கள் கும்பிட்ட குலதெய்வமான அங்காள ஈஸ்வரிக்கு இங்கும் கோயில் கட்ட ஆர்வம் கொண்டனர். அதன்படி ஆரம்பத்தில் ஒரு ஓலைக் குடிசையில் உருவான அம்மன் ஆலயம், பர்மா தமிழர்களின் பக்தியாலும், அக்கம் பக்கம் பகுதி களில் வாழ்ந்த பக்தர்களின் ஆதரவா லும், அம்மனின் அருளாசியாலும், இன்று பெரிய கோபுரம் கொண்ட கோயிலாக உயர்ந்திருக்கிறது.

அங்காள ஈஸ்வரி அம்மன் தன்னை மட்டும் உயர்த்திக் கொள்ளவில்லை. தன்னை அண்டி வரும் பக்தர்களின் குறை களைக் களைந்து, அவர்களையும் உயர்த்தி விடுகிறார். அவ்வளவு சக்திவாய்ந்த அம் மனாக அருள்பாலிக்கிறார். மேல்மலைய னூர் செல்லும் பக்தர்கள் கூட இங்கு வந்து தங்கி, தங்களின் குறைகளை இறக்கி, அம்மனின் நிறைவான அருளை பெற்றுச் செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு ஏப்ரல் மாத முதல் வாரத்தில் நடக்கும் தீமிதி திருவிழா மிகவும் சிறப்பு



வாய்ந்தது. ஆரம்பத்தில் நான்கு பேர்கள் மட்டுமே கலந்து கொண்ட தீமிதித் திருவிழாவில் இன்று நூற்றுக் கணக்கில் பக்தர்கள் கலந்து கொள்வதே இந்த அம்மனின் அருள்கடாட்சத்திற்கு ஒரு அடையாளம்தான்.

இக்கோவிலை ஒட்டியே உள்ளது ஸ்ரீ முனீஸ்வர சாமி சிலை. சுமார் 40 அடி உயரத்தில் உட்கார்ந்த நிலையில் தரிசனம் தரும் முனீஸ்வரரை பார்க்கும் பொழுதே நமக்குப் பயம் கலந்த பக்தி வந்து விடும். அந்தப் பகுதி மக்களின் காவல் தெய்வமாக விளங்கும் முனீஸ்வரரின் கையில் உள்ள கத்தியின் நீளம் மட்டும் சுமார் 16 அடி. இவருக்கு ஒவ்வொரு வருஷமும் மகா சிவராத்திரியன்று விழா எடுக்கப்படுகிறது.



அங்காள ஈஸ்வரி!



டிபென்ஸ் காலனியில், பிரதான சாலையின் 10வது தெருவில் உள்ளது அருள்மிகு கூத்தாளம்மன் ஆலயம். மேற்கூரையில்லாமல் வானமே கூரையாய், பொது மக்கள் எப்பொழுதும் வழிபடும் வண்ணம் கூத்தாளம்மன் தரிசனம் தருகிறார். பலர், சன்னிதிக்கு மேற்கூரை போட முயற்சித்த பொழுதெல்லாம், அம்மன் அனுமதிக்கவில்லையாதலால் இன்றும் அப்படியே மேற்கூரையில்லாமல் பக்தர்களின் குறைகளைப் போக்குகிறார். வன துர்கை என்று அழைக்கப்படும் காவல் தெய்வமான கூத்தாளம்மன்.

- சரோஜ் சந்திரசேகர்

தொகுப்பு : கோழியாலம் நந்தகுமார்





விரயம் அல்ல... விஷயம் இருக்கு!

ஜூன் மாத இதழில் 'வீண் விரயத்தைத் தவிர்க்கலாமே' என்ற தலைப்பில் வாசகி ரங்கமணி எழுதியிருந்தார். ஏதோ ஓரளவுக்கு ஏற்றுக் கொள்வதாய் இருந்தது.

மீண்டும் ஜூலை மாதம் 'இது தேவையா?' என்று சகோதரி கீதா எழுதியுள்ளார். இது நெகடிவ் பார்வையாக உள்ளது.

'இந்தக் காலத்தில் துணிகள் விதவிதமாகவும் மிகவும் மலிவாகவும் கிடைக்கின்றன. எல்கேஜி வாண்டு முதல் 80 வயது தாத்தா வரை ஆளுக்கொரு டேஸ்ட் உள்ளது. அதனால் பணமாகக் கொடுத்து விட்டால் பிரச்னையில்லையே' என்று கூறுகிறார் வாசகி கீதா. இதை வேறுவிதமாகவும் சொல்லலாமே.

பிறர் நமக்கு வாங்கினார் என்றால், அவரை பொறுத்தமட்டில் நாம் அதை உடுத்தினால் நன்றாக இருக்கும் என்று நினைத்திருக்கலாம் இல்லையா? மேலும் நாமே எல்லாவற்றையும் எடுக்கிறோம். மாற்றத்திற்கு அடுத்தவர் ஆசையாகக் கொடுத்தால், மாறுதலாக ஒரு துணி அணிந்தால் அதில் என்ன குறை?

நமக்கு இந்த மனப்பக்குவம் எப்பொழுது வரும்? நாம் அடுத்தவருக்குக் கொடுத்ததை ரொம்பவும் உயர்வாகப் பேசணும் என்று ஏன் எதிர்பார்க்கணும்? நம் ஆசை; நாம் செய்தோம். அதை அதே மாதிரி அவர்களும் ஏற்றுக் கொள்ளணும் என்று ஏதாவது சட்டமா?


அதே போல வசதி படைத்தவர்கள் கல்யாணத்தையும் மிக எளிமையாக நடத்தவேண்டிய அவசியம் இல்லை.

கல்யாணம் பெரியதோ சிறியதோ பூக்காரர், அச்சகம், கல்யாண மண்டபம் நடத்துபவர்கள், கேட்டரிங், ஜவுளிக் கடைக்காரர்கள், ட்ராவல்ஸ், நாயனக்காரர்கள் என நிறையப் பேர் பிழைக்கிறார்கள்.

''இது தேவையா?'' என்று நினைத்து எல்லாவற்றையும் விரயம் என்று நினைத்தால், எத்தனையோ பேர் வேலை இல்லாமல் கஷ்டப்படுவார்கள்.

இப்பொழுதெல்லாம் எல்லோருக்கும் 1 அல்லது 2க்கு மேல் குழந்தைகள் இல்லை. நாலு பேர் விசேஷத்துக்குச் சேர்ந்தால்தான் உறவுகள் தழைக்கும்! குடும்ப அமைப்பு பலப்படும்!

- லலிதா கிருஷ்ணமூர்த்தி,
மும்பை.


Manisha
MYBRA
www.mybraindia.com
MYBRA LINGERIE PVT. LTD

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

சங்கரா அறிவியல் & வணிகவியல் கல்லூரி

இணைந்து வழங்கும்



நளபாக நேரம்

நடத்தப் போவது...

நளபாகச் சக்கரவர்த்தி செஃப் ஜேக்கப்

ருசியான குறிப்புகள்... பயனுள்ள பயிற்சிகள்...

எளிமையான போட்டிகள்... ஏராளமான பரிசுகள்...

பங்கேற்பு + பார்வையாளர் கூப்பன்

நாள் : **08.08.2008** (வெள்ளிக்கிழமை)

இடம் : சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி, சரவணப்பட்டி, கோவை - 641 035.

நிகழ்ச்சி நேரம் : காலை 11.00 - 4.00 மணி

சமையல் போட்டித் தலைப்பு - கொங்கு நாட்டுச் சமையல்

பதிவு நேரம் : காலை 10.00 மணி

மேலும் விவரங்களுக்கு :

திரு. நந்தகிரி, தொலைபேசி : 97865 55333

திரு. பெர்னார்ட், தொலைபேசி : 94437 32928

பார்வையாளர்களுக்கும் எளிமையான போட்டிகள் உண்டு. திரளாகப் பங்கேற்கவும்.

ஒருவர் மட்டுமே அனுமதி

இந்தப் பக்கத்தைக் கத்தரித்துக் கொண்டு வரவும், ஜெராக்ஸ் கூடாது.

7
ருசியோ ருசி

நாஞ்சில் நாட்டுச் சமையல்



அடடே... வடை டிப்ஸ்!

★ மசால் வடை செய்யும்போது, பூண்டு, சோம்பு, பச்சை மிளகாய், வெங்காயம் சேர்த்துச் செய்வது வழக்கம். ஒரு மாறுதலுக்கு, ஒரு டேபிள் ஸ்பூன் ஜாதிக்காய்த் துருவல் சேர்த்துச் செய்து பாருங்கள். வாசனை பிரமாதமாக இருக்கும்.

★ அரிசி மாவு, கேழ்வரகு மாவு, உளுந்து மாவு போன்றவற்றில் வடை தட்டும்போது, போகப் போக இளகிவிடும். தட்ட வராது. எண்ணெயில் போட்டாலும் பிரிந்து விடும். ஒரு கைப்பிடி கார்ன்ஃப்ளார் கலந்து தட்டினால், பதம் சரியாகிவிடும்.

★ மெதுவடை செய்யும்போது, உளுந்தை சரியாக அரைமணி நேரம் ஊறவைத்தால் போதும். முக்கால் பாகம் ஊறியும், கால் பாகம் ஊறாமலும் இருப்பதுதான் சரியான பதம்.

நளபாகச் சக்ரவர்த்தி





கேழ்வரகு வாழைத்தண்டு வடை!

ராஜேஸ்வரி மோகன்

தேவையான பொருள்கள் :

ராகி மாவு - 2 கப்,
அரிசி மாவு - 1 கப்,
வாழைத்தண்டு - 1 கப் (பொடியாக நறுக்கியது),
வெங்காயம் - 1/2 கப்,
கொத்துமல்லி - 1 கட்டு,
கறிவேப்பிலை - 3 கொத்து,
பச்சை மிளகாய் - 10,
இஞ்சி - 50 கிராம்,
எண்ணெய் - பொரிப்பதற்கு,
உப்பு - தேவைக்கேற்ப,
மஞ்சள் தூள் - சிறிதளவு.

செய்முறை :

★ வாழைத்தண்டை சுத்தம் செய்து உப்பு, மஞ்சள் தூள் சேர்த்து வேக வைத்துக் கொள்ளவும்.



★ ராகி மாவு அரிசி மாவை சேர்த்துக் கலக்கி இத்துடன் தேவையான அளவு உப்பு, வேகவைத்த வாழைத்தண்டு, வெங்காயம், கொத்துமல்லி, கறிவேப்பிலை, பச்சை மிளகாய், இஞ்சி சேர்த்து கெட்டியாகப் பிசைந்து கொள்ளவும். தேவைப்பட்டால் சிறிது நீர் சேர்க்கவும்.



★ சூடான எண்ணெயில் இந்தக் கலவையை சிறு உருண்டையாக உருட்டி தட்டிப் போட்டுப் பொரித்து எடுக்கவும்.



வெற்றிலை வடை

ஷெர்லி சகாயம்






தேவையான பொருள்கள் :

பச்சைப்பயறு - 1கப்,
வெற்றிலை - 15,
பூண்டு - சிறிது,
வெங்காயம் - 2,
பச்சை மிளகாய் - 4
கறிவேப்பிலை - 1 கொத்து,
கொத்துமல்லி - சிறிது,
இஞ்சி - சிறிது,
உப்பு - தேவையான அளவு,
எண்ணெய் - பொரித்தெடுக்க.

செய்முறை :

★ பச்சைப் பயறை ஒரு மணி நேரம் ஊறவைத்து வடிகட்டி அரைத்துக் கொள்ளவும்.

★ இத்துடன் பொடியாக நறுக்கிய வெங்காயம், கொத்துமல்லி, கறிவேப்பிலை, வெற்றிலை,


Ethnic glory adds
character and pride



கறுப்பு உளுந்து முள்ளங்கி வடை!

அனிதா ராஜசேகர்





தேவையான பொருள்கள் :

கறுப்பு உளுந்து - 1 கப்,
கடலைப் பருப்பு - 1 கப்,
முள்ளங்கி - ½ கப் (பொடியாக நறுக்கியது),
வெங்காயம் - 1,
பச்சை மிளகாய் - 10,
கொத்துமல்லி- ½ கட்டு,
கறிவேப்பிலை - 2கொத்து,
இஞ்சி - 50 கிராம்,
உப்பு - தேவையான அளவு,
மஞ்சள் தூள் - சிறிதளவு,
எண்ணெய் - பொரிப்பதற்கு.



பூண்டு, இஞ்சி, உப்பு சேர்த்து நன்றாகக் கலக்கிக் கொள்ளவும்.

★ இதை வடை போலத் தட்டி பொரித்து எடுத்துக் கொள்ளவும்.

★ சூடான வெற்றிலை வடை தயார்.





செய்முறை :

★ உளுந்து, கடலைப் பருப்பை ஊறவைத்து நன்றாக நீரை வடிய விட்டு கெட்டியாக அரைத்துக் கொள்ளவும்.

★ முள்ளங்கியை பொடியாக நறுக்கி உப்பு, மஞ்சள்





தூள் சேர்த்து வேகவைத்துக் கொள்ளவும்.

★ அரைத்த மாவுடன் வேகவைத்த முள்ளங்கி, பொடியாக நறுக்கிய அனைத்து பொருட்களையும் சேர்த்து, உப்பு சேர்த்து கலக்கிக் கொள்ளவும்.

★ இதை வடை போலவோ, கட்லட் போலவோ தட்டிப் பொரித்து எடுத்துக் கொள்ளவும்.

க்காச்சோள வடை!

அங்கம்மாள் வேல்சாமி



தேவையான பொருள்கள் :

மக்காச்சோளம் - 1 கப் (வேகவைத்தது),
காராமணி - 2 கப்,
வெங்காயம் - ½ கப்,
பச்சை மிளகாய் - 10,
கறிவேப்பிலை - 3 கொத்து,



கொத்துமல்லி - ½ கட்டு,
இஞ்சி - 50 கிராம்
உப்பு - தேவைக்கேற்ப,
எண்ணெய் - பொரிப்பதற்கு



செய்முறை :

★ காராமணியை ஊறவைத்து வடிகட்டி கரகரப்பாக அரைத்துக் கொள்ளவும்.

★ மக்காச்சோளத்தை வேக வைத்து ஒன்றிரண்டாக அரைத்து, அரைத்த காராமணியுடன் சேர்த்துக் கலந்து கொள்ளவும்.

★ இத்துடன் பொடியாக நறுக்கிய வெங்காயம், கொத்து மல்லி, கறிவேப்பிலை, இஞ்சி, உப்பு சேர்த்துக் கலக்கவும்.

★ சிறு சிறு உருண்டை யாக உருட்டி தட்டி சூடான எண்ணெயில் பொரித்தெடுக் கவும்.

★ சுவையான மக்காச் சோள நெல்லிக்காய் வடை தயார்.

நளபாகப் போட்டி–19 (முடிவு)

ஜூலை 2008ல் இடம்பெற்ற போட்டியின் விடை

வந்து குவிந்த கூப்பன்களில்
ரூ. 150/- பரிசு பெறும்
20 அதிர்ஷ்டசாலி வாசகர்களுக்கு
வாழ்த்துகள்!

கு	ர	வ	ழ்	கே	கோ	து	மை
பி	ட்	பா	க்	லி	ட	வ	க
ஏ	த்	இ	தை	ர	வெ	ரை	ரு
ஜ	யு	தோ	ட்	பி	ந்	ப்	ப
வு	வ்	க	அ	ஸ்	த	ங்	ப
மா	ம	வ	வொ	தி	ய	கொ	ப
ள	ல்	எ	ரி	யீ	ம்	மூ	சி
சோ	ல்	க்	ரு	சி	ள	வு	பா

1. லா.ரா.ச. சிவஜனனி, ஹோசூர், 2. கௌசல்யா, செகந்திராபாத், 3. ஜி. நிர்மலா, கிருஷ்ணகிரி, 4. நிவேதிதா, வேலூர், 5. எம். பிரேமா, சென்னை - 92. 6. உமா ராஜாமணி, சென்னை - 4, 7. சாலை மதுரநாயகி, புதுக்கோட்டை, 8. நா. கலைச்செல்வி, புதுச்சேரி, 9. என். கோகுலநாதன், அம்மாபேட்டை, 10. ஜி. ராதா, கே.ஜி.எஃப், 11. கே. பாரதி, திருவனந்தபுரம், 12. எஸ். அனிதா, மதுரை, 13. லக்ஷ்மி வாசுதேவன், மும்பை, 14. ஜெயந்தி, சித்தூர், 15. கு. கலைவாணி, புதுச்சேரி, 16. சி.ஆர். ராஜம்மா, பெங்களூர், 17. எஸ். கமலா, திருவிடைமருதூர், 18. எஸ். பானுமதி, பாபநாசம், 19. சுந்தரி சுப்பிரமணியன், அவிநாசி, 20. ஜி. நிர்மலா, திருச்சி.



நீண்ட காலமாக நிலவி வரும் பழமொழிகள் அல்லது சொலவடைகள் கீழே உள்ளன. கோடிட்ட இடத்தில் நிரப்ப வேண்டிய உணவுப் பொருளின் பெயர்களைக் கண்டுபிடியுங்கள்.

1. "நீ .... கொண்டா நான் உமி கொண்டாறேன் சமமாய்க் கலந்து நாம் ஊதி ஊதி சாப்பிடலாம்" என்றானாம்.
2. அழுகிற பிள்ளைதான் .... குடிக்கும்.
3. ஊரான் வீட்டு .... என் பொண்டாட்டி கையே...
4. ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ ....
5. விட்டதடி ஆசை .... ஓட்டோடு!
6. கையிலே காசு வாயிலே ....
7. .... முற்றினால் கடைத்தெருவுக்கு வந்துவிடும்.
8. .... யைத் தின்னச் சொன்னால் துளையை எண்ணுவானேன்?

தொகுப்பு : ஜி.எஸ்.எஸ்.

இங்குள்ள புதிரைச் சரியாக நிரப்பி வெட்டி மங்கையர் மலருக்கு அனுப்புங்க. குலுக்கல் முறையில் 20 பேருக்கு 150 ரூபாய் பரிசு! ஜெராக்ஸ் அனுப்பக் கூடாது!

கடைசித் தேதி : 15.8.2008

உறையின் மீது நளபாகப் போட்டி - 20 என்று குறிப்பிடவும்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

பெயர் : .... விலாசம் : ....

....

....

தொலைபேசி எண் : ....



பாதமும் பளிச்! படுக்கையும் பளிச்!

பாத்ருமிற்கு வெளியே ஒரு மிதியடியை நீங்கள் போட்டு வைத்திருந்தாலும் கூட, இரவில் படுக்கும் கட்டிலுக்கு அருகிலும், ஒரு மிதியடியைப் போட்டு வையுங்கள். கட்டிலில் படுப்பதற்கு முன் கால் பாதங்களை அந்த மிதியடியில் துடைத்து விட்டுப் படுத்தால் படுக்கை அழுக்காகாது.

- கே. ராஜலக்ஷ்மி, நங்கநல்லூர்.

ஆஹா 50!

இவை எல்லாமே ஆஹா 50! தான்!

முக்கியமான காகிதங்களை, டிடி, அப்ளிகேஷன் பார்ம் போன்றவற்றைக் கவரில் வைத்து அனுப்பும் பொழுது சின்னத் துண்டு பேப்பரை ஒட்டும் இடத்தில் வைத்து ஒட்டினால் உள்ளே இருப்பதைக் கிழிபடாமல் எடுக்க முடியும்.

- கங்கா, பெங்களூரு.

பண்டிகை நாட்களில் உதிரியாக பூ வாங்கிக் கட்டுவதைத் தவிர்க்கலாம். நேரம் எடுப்பதுடன் பிற வேலைகளையும் பாதிக்கும். நெருக்கமாக வாழை நாரில் கட்டிக் கொடுக்கச் சொல்லி பூக்காரரிடம் சொல்லி விட்டால் பிரச்னையில்லை.

- எஸ். மகாலெக்ஷ்மி சுப்ரமணியன், காரைக்கால்.

கோயில்களுக்குச் செல்லும் வயதானவர்கள் காலில் சாக்ஸ் அணிந்து சென்றால் பிராகாரத்தில் உள்ள சிறு கற்கள், மண் துகள்கள் காலை பதம் பார்க்காமல் இருக்கும். பித்தவெடிப்பு உள்ளவர்களும் இதனைப் பின்பற்றினால் கால் பட்டுப் போல மென்மையாக இருக்கும்.

- சுபஸ்ரீ வாசுதேவன், தஞ்சை.

வெயிலுக்கு இதமானது தயிர். விலை மலிவானது பொரி. அதனால் அரை லிட்டர் பொரியுடன் அரை கப் தயிர் சேர்த்து சிறிது உப்பு, மிளகுத் தூள் சேர்த்துச் சாப்பிட்டால் உடம்புக்கு மிகவும் நல்லது. எளிமையான, செலவில்லாத சத்தான உணவு.

- சுதா, சென்னை - 64.

மோர்க் குழம்புக்கு காயோ, வற்றலோ இல்லையென்றால் கவலை வேண்டாம். பப்படத்தை நான்கைந்தாக உடைத்து மோர் குழம்பில் போட்டு ஒரு கொதி வந்து இறக்கினால் போதும். ருசியோ ருசி.

- ஜெயா சுப்ரமணியன், மும்பை.

வீட்டில் உபயோகிக்காத பிளக்குகளை டம்மி பிளக்குகள் கொண்டு மூடி வைக்கச் சொல்லி ஒரு அன்புச் சகோதரி எழுதியிருந்தார். இப்போதெல்லாம் 'ப்ளக் கவர்ஸ்' கிடைக்கின்றன. அவற்றினால் மூடி வைக்கலாம். எல்லா எலக்ட்ரிக் ஷாப்பிலும் கிடைக்கிறது. பளிச்சென்று இருக்கும். ரொம்பப் பாதுகாப்பு.

- எஸ். விஜயலெட்சுமி, மயிலாப்பூர்.

தேவர்கள் எவருக்கும் இல்லாத ஆற்றலைக் கொண்டவர் விநாயகப் பெருமான். அதற்கு எத்தனையோ சிறப்பு அம்சங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

★ இடையின் கீழ் மனித உடல். இடைக்கு மேல் கழுத்து வரை தேவ உடம்பு அதற்கு மேலே விலங்கினத்தின் தலையைக் கொண்டவர் விநாயகப் பெருமான்.

★ தெய்வ உடம்பு உயர் திணையாக வும், யானைத் தலை அஃறிணையாகவும், ஒரு பக்கம் கொம்பு இருப்பதனால் ஆண் பாலாகவும் இன்னொரு பக்கம் கொம்பு இல்லாமல் இருப்பதால் பெண் பாலாக வும் இவர் தேவராய், மனிதராய், விலங்காய், ஆணாய், பெண் ணாய், உயர்திணையாய், அஃறிணையாய் எல்லாமு மாய் திகழ்கிறார்.

★ அண்ட சராசரம் அனைத்திலும் 'ஓம்' என்ற பிரணவ ஒலி எப்போதும் ஒலித் துக் கொண்டிருக் கிறது.

விநாயகரின் திருவுருவம் ஓங் காரத்தை உணர்த்து கிறது.

உலகிலுள்ள உயிர்கள் அழிந்தா லும், பிரணவ ஒலி அழிவதில்லை. அது போல விநாயகரும் அழிவற்றவர்.

முக்கண்கள் :

★ சூரியன், சந்திரன், அக்னி ஆகிய மூன்றும் விநாயகரின் முக்கண் களாகத் திகழ்கின்றன. இவை இச்சை, கிரியை, ஞானம் ஆகியன வற்றைக் குறிப்பிடுவன. அறிவை உரு வாக்குதல், அதனை வளர்த்தல், பதம் செய்தல் ஆகியவற்றின் மூலம் ஆன்மாக் களைப் பக்குவப்படுத்துகிறார்.

நீண்ட செவிகள் :

★ கர்மவினைகளால் ஏற்படும் துன்பங் கள், உயிர்களை அழிக்காமல் பாதுகாத்து, வினை வெப்பம் போக்கி அருள்கிறார் பகவான். உலகக் குறைகளையெல்லாம் செவிமடுக்க வேண்டும் என்பதால் பெரிய காதுகளைக் கொண்டிருக்கிறார்.

கொம்பு : விநாயகப் பெருமானின் இரு கொம்புகளை பதிஞானம், பாச ஞானம்





என்று அழைக்கிறார்கள். ஒடிக்கப் பெற்ற கொம்பு 'பாச ஞானம்'!

பிறை : தவ விரதங்களால் அறியாமை தேய்ந்து உண்மை ஞானம் பெற்ற உயிர்களே மேன்மை பெறும் என்பதைக் காட்டுவதே 'பிறை' சூடிய தத்துவம்.

வயிறு : அவரது பெரிய தொப்பை, உலகங்கள் அனைத்தையும் தம்முள் அடக்கியிருப்பவர் என்பதை உணர்த்துகிறது.

திருப்பாதம் : திருப்பாதம் இன்பத்தை அளிக்கும் ஞானத்தை விளக்குகிறது. இவரது திருவடிகளும், அபயவரத கரங்களும், திரோதனம் செய்யும் துதிக்கையும், ஐந்து உறுப்புகளும் அன்பர்கள், பக்தர்கள், எங்கிருந்தாலும் அவர்களைக் காக்கும் சிறப்பை உடையவை.

மூஞ்சுறு வாகனம் : கஜமுகன் என்ற அரக்கன், விலங்கு, மனிதன், ஆயுதங்கள் முதலியவற்றால் கொல்ல முடியாத வரம் பெற்றிருந்தான்.



வினை தீர்க்கும் விநாயகன்!



ஐந்து கரங்கள் : விநாயகப் பெருமானின் ஐந்து கரங்களும், ஐந்தொழிலைக் காட்டுவதாகும்.

பாசம் ஏந்திய கை, படைத்தலையும்

தந்தம் ஏந்திய கை, காத்தலையும்

அங்குசம் ஏந்திய கை, அழித்தலையும்

மோதகம் ஏந்திய கை, அருளையும்

தும்பிக்கை மறைத்தலையும் உணர்த்துகின்றன.

எனவே விநாயகர் யானை முகமும், மனித உருவமும் கொண்டு தந்தத்தை ஒடித்து கஜமுக அசுரனின் மார்பில் குத்தினார். அவன் மூஞ்சுறு வடிவெடுக்க அவனை அடக்கித் தன் வாகனமாகக் கொண்டார். ஹேரம்ப கணேசருக்குச் சிங்கமும் வாகனமாக உள்ளது.

விநாயகர் திருவுருவங்கள் : விநாயகர் எல்லா மக்களின் தெய்வம். அவரை நாம் சாணி, மஞ்சள் தூள், தங்கம் என எப்பொருளிலும் எவ்வடிவிலும் வணங்கலாம். இவரை மட்டுமே இப்படிப் போற்ற இயலும்.

- எஸ். நிரஞ்சனி, மௌலிவாக்கம்.



வெளிச்சம்

திருச்சி அருகே அல்லூர், சிறுக மணி என இரண்டு கிராமங்களில் இயங்கி வருகின்றன மகளிர்க்கான திறன் வளர்க்கும் மையங்கள் இயங்கி வருகின்றன.

திருச்சி, ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரியும், அல்லூர் சேவை நிறுவனமும் இணைந்து நடத்தி வரும் அவற்றை நேரில் பார்வையிட்டோம்.



''எனக்கு வயசு பதினேழு. பத்தாம் வகுப்போட நின்னுட்டேன். வீட்டுல பீடி சுத்திகிட்டு இருந்தேன். இந்த மையத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு, இங்கே டைப்ரைட்டிங் கத்துக்கறேன். அடுத்து கம்ப்யூட்டர் கத்துக்குவேன்!'' என்கிறார் ஆஷா பேகம்.

''கல்யாணம் ஆகி நாலு வருஷம் வீட்ல சும்மா இருந்தேன். மார்க்கெட்டிங் மேனேஜ்மென்ட் படிச்சிருக்கேன். இப்ப மையம் வந்து கம்ப்யூட்டர் கத்துகிறேன். கம்ப்யூட்டர் கத்துக்கிட்டு வேலைக்குப் போயிடுவேன்னு நம்பிக்கை வந்திருக்கு'' எனச் சொல்கிறார் காவல்காரப்பாளையம் சுதா.



பத்துப் பதினைந்து பெண்கள் அமர்ந்து கைச்சித்திர தையல் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

''பெட்டவாய்த்தலை வேந்து வர்றேன். எனக்கு எம்பிராய்டரி கத்துக்கணும்னு ரொம்ப ஆசை. கொஞ்ச நாளா வந்து கைச்சித்திர தையல் பயிற்சி எடுத்துக்கிட்டு வர்



தெரிகிறது!

றேன்!'' எனக் கூறுகிறார் பதினெட்டு வயதாகும் ஹாஜிரா பானு.

சில பெண்கள் தங்களின் கைக் குழந்தைகளோடு இங்கு வந்திருக்கின்றனர். புன்னை மரக் கிளைகளில் சேலைத் துணியில் தூளி கட்டி, குழந்தைகள் சுகமாகத் தூங்குகின்றன. ''ஃபர் டால்ஸ் செய்ய பயிற்சி எடுத்துக்கிட்டு இருக்கேன். இதுல பூனை முதல் யானை வரை செய்யலாம். நாங்க செய்யற பொம்மைகளை வெளில விற்பனைக்கும் ஏற்பாடுகள் பண்ணித் தருது மையம்'' என்கிறார் சுலோச்சனா.

சின்னச் சின்ன மண் கலயங்கள் கூட, இங்கு அழகிய கலைப் பொருட்கள் ஆகிவிடுகின்றன. ''மண் குடுவைகள் எனத் தெரியாத வண்ணம் வேலைப்பாடு செய்து அழகிய பூ ஜாடிகளாக மாற்றி விடுகிறோம்!'' என்கிறார் பெருகமணி கிராமத்திலிருந்து வருகின்ற கிருஷ்ணவேணி.

''திருச்சி இந்திராகாந்தி கல்லூரியின் முன்னாள் மாணவி நான். இந்த ஊரில் இப்படியொரு மையம் துவங்குவதாக கேள்விப்பட்டு, நானே இங்கு வந்து பணியில் சேர்ந்து கொண்டேன். இங்கு பெண்களுக்கு கம்ப்யூட்டர், டைப்ரைட்டிங், எம்பிராய்டரி, தையல், கைவினைப் பொருட்கள் மற்றும் மண் புழு உரம் தயாரிப்பு என பலவும் கற்றுத் தரப்படுகின்றன!'' எனக் கூறுகிறார் மையத்தின் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டு வரும் குப்புலட்சுமி.

கட்டுரை, படங்கள் :
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

''கிராமப் பெண்களுக்கு 'மழை பெய்தால் மட்டுமே வேலை' என்கிற நிலை. அதனால்தான் அவர்களில் பெரும்பாலோர் கட்டடத் தொழிலாளிகளாக நகரங்கள் நோக்கி தினசரி படையெடுத்து வருகின்றனர். கிராமப்புறப் பெண்களுக்கு, நல்ல வருவாய் கிடைத்தால் அவர்களது வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிடும் என்கிற நோக்கத்தில் உருவானதே 'மகளிர்க்கான திறன் வளர்க்கும் மையம்'.



* முதல்வர் கே. மீனா

''வாரத்தில் மூன்று அல்லது நான்கு நாட்கள் இயங்குகிறது இந்த மையம். சுற்றுவட்டாரக் கிராமங்களில் இருந்து சுமார் நூற்றியிருபது பெண்கள் இதன் அங்கத்தினர்களாக இணைந்துள்ளனர். பயிற்சிகள் நிறைவு பெற்று, பெண்கள் ஒவ்வொருவரும் சுயதொழில் முனைவோராக செயல்பட வேண்டுமென்பதே மையத்தின் முக்கிய நோக்கம். பெண்கள் உற்பத்தி செய்து தரும் கைவினைப் பொருட்களை, விற்பனை பண்ணித் தரும் திட்டங்களும் உள்ளன. கிராமங்களில் வசித்து வரும் ஒவ்வொரு பெண்ணும், தன் சுய உழைப்பின் மூலமாக வருவாய் ஈட்டிக் கொள்ள வழிவகுத்துத் தருவதே 'மகளிர்க்கான திறன் வளர்க்கும்' மையங்களின் அடிப்படைக் குறிக்கோள்!' மங்கையர் சக்திகள் இணைந்தால் நாடே சுபிட்சமாகிவிடும்'' என்கிறார் திருச்சி, ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி முதல்வர் முனைவர் கே. மீனா.

சுய முன்னேற்றத் தொடர்



சுகிசிவம்



நம் மீது வீசப்படும் விமர்சனங்களை எப்படி அணுக வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தேன் அல்லவா? என்னைப் பற்றியே ஓர் உதாரணம் சொல்லலாம்!

இந்தத் தொடரை நான் எழுதும்போது பலர் வெளிப்படையாகப் பாராட்டுகிறார்கள். சிலர் என் மீது சொல்லெறிகிறார்கள். சிலர் மனசுக்குள் தலையசைக்கிறார்கள். சிலர் உதடுகளின் மௌனத்தைக் கூட உடைப்பதில்லை. அதே சமயம், முகவரியே இல்லாமல் புனைப்பெயரில் ஒளிந்து கொண்டு, கடிதம் என்ற பெயரில் காறித்துப்பும் நபர்களும்

பெண்ணே, நீ வாழ்க!

உண்டு. இவர்கள் விமர்சனங்கள் என்னை பாதிக்கத் தொடங்கினால் என்னால் எழுத முடியுமா? பலரையும் விழிப்படையச் செய்யும் பணிக்காக மட்டுமே வாழ்வது என்கிற என் தீர்மானத்தைக் கைவிட்டுவிட முடியுமா?

ஒரு விமானம் மேலே புறப்படுது என்று தீர்மானித்து விட்டால் புவியீர்ப்பு சக்தி தரையிழுக்கும். காற்று மண்டலம் அந்த எந்திரப் பற

வையை ஒரு குடு குடுப்பையைப் போல குலுக்கிப் பார்க்கும். மேகங்கள் ஒரு ரசிகனைப் போல் அதன் மேனி தடவி மெல்ல விலகும். விமானம் தன் சிறகு விரித்தபடி பறந்து போய் லட்சியப் பரப்பில் தரையிறங்குமே ஒழிய, புவி ஈர்ப்புச் சக்தியையோ, காற்று மண்டலத்தையோ, மேகத்தின் தடவலையோ அது பெரிதுபடுத்துவதில்லை. அந்த விமானம் போலத்தான் நான் சஞ்சரிக்கிறேன்.



அந்தத் தெளிவால்தான், நீங்களும் பிறரது கண்ணியமற்ற அல்லது குழந்தைத்தனமான விமர்சனங்களால் பாதிக்கப்படாதீர்கள் என்று தைரியம் சொல்கிறேன்.

பெருவாரியான விமர்சனங்கள் ஆழமற்றவை. மேம்போக்கானவை. ஓர் உதாரணம் சொல்கிறேன். கவியரசர் கண்ணதாசன் அவர்கள் ஒரு கல்லூரி விழாவில் உரை நிகழ்த்தப் போயிருந்தார். அவரை அழைத்துப் போன மாணவர் தலைவர், தம் வரவேற்புரையில் ஒரு கவிதையைப் படித்தார். மாணவர்கள் விசிலடித்து கைதட்டி, அந்தக் கவிதையைப் படிக்க விடவில்லை. பிறகு எழுந்த கவியரசர் அவர்கள் ஒரு கவிதையைப் படித்ததும் ஆஹா... ஓகோ.. என்று ஏகப்பட்ட பாராட்டு... கைதட்டல்.

கைதட்டல் ஓய்ந்ததும் கண்ணதாசன் சொன்னார், அந்த மாணவர் படித்தது என் கவிதை... நான் படித்ததோ அவருடைய கவிதை...' கூட்டம் நொந்தே போனது. 'நீங்கள் கவிதையைப் பெரிதாக மதிக்க வில்லை. எழுதியவனைக் கொண்டே மதிக்கிறீர்கள்... இப்படி இருந்தால், தரமான உயர்ந்த கவிதைகள் எப்படி பிறக்க முடியும்?' என்றார். பிறரது பாராட்டிலும் உண்மையில்லை... குறைகளிலும் உண்மை இல்லை. விமர்சனங்களிலும் உண்மை வெகு குறைவு என்று புரிந்து கொண்டு துணி வுடன் வாழ்வைச் சந்தியுங்கள்.

பிறரது பாராட்டை எதிர்பார்க்கும் பலவீனம் உள்ளவர்கள்தான் விமர்சனங்கள், பழியுரைகள் எதிர்ப்படும் போது வாடி வதங்கிப் போய் விடுவார்கள். எனவே பாராட்டையே எதிர் பார்க்காதீர்கள். பாராட்டு, விமர்சனம் இரண்டுமே உண்மையல்ல என்கிற தெளிவு பிறந்து விட்டால், உங்கள் வாழ்க்கை வசந்தமாகிவிடும்.

வாழைப்பழ பாயசம் வைத்து மாமனாருக்குப் பரிமாறினாள் ஒரு மருமகள். சாப்பிட்டபடியே 'தண்ணீர் போதாது' என்றார் மாமனார். 'பாயசத்துக்குத் தண்ணீர் போதாதா?' என்று பயந்துபோய் பதறினாள் மருமகள். 'இல்லை... இல்லை... வாழைப்பழம் விளைந்த வயலுக்குத் தண்ணீர் போதாது' என்றார் மாமனார். இவர்களை எப்படி திருப்தி செய்ய முடியும்?

தயவுசெய்து அவர்களை அவமதிக்க வேண்டாம்... அது கூடாது. அதற்காக நீங்கள் அழவும் வேண்டாம்... அது ஆகாது. புன்னகையுடன் விமர்சனங்களைப் புறக்கணிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். அதுதான் சரி. காற்றைப் போல் லேசாகி விடுவீர்கள். காற்றை அடக்கி வைத்திருக்கும் கால்பந்து பலராலும் கால்களில் உதைபடுகிறது. ஆனால், காற்றை உள்வாங்கி அழகாய் வெளியிடும் புல்லாங்குழலோ உதடுகள் முத்தமிடும் உயரத்தில் இருக்கிறது. ஒருபோதும் உணர்ச்சிகளை அடக்க வேண்டாம். எதையுமே சரியாக உள்வாங்கி கவனமாக வெளியிடும் யுக்தியைப் பயிலுங்கள். காற்றாய் உள்வாங்கி இசையாய் வெளியேற்றும் புல்லாங்குழலிடமிருந்து இந்தக் கலையைப் பயிலுங்கள். வசையை உள்வாங்கி இசையை வெளியிடும் குழலைப் போல் வாழ்வை இனிய சங்கீதத்தால் நிரப்புங்கள்.

இசையரசி அவர்கள் வெங்கடேச சுப்ரபாதம், விஷ்ணு சஹஸ்ரநாமம் வழங்கிய புதிதில் எத்தனைவிதமான விமர்சனங்கள் வந்தன தெரியுமா? எத்தனை கண்டனங்கள் பிறந்தன தெரியுமா? ஆனால், எல்லா விமர்சனங்களுக்கும் அவரது புன்னகைதான். ஒரே பிரகாசமான அந்தச் சிரிப்புதான். விமர்



சனங்கள் எதற்குமே பதில் தர இசையரசி விரும்பவில்லை. தம் கனமான மௌனத்தால், விமர்சனங்களை விழுங்கி இறவாப் புகழ் பெற்றார்கள். இன்று சுப்ரபாதம், விஷ்ணு சஹஸ்ர நாமம் என்றால், அது எம்.எஸ். பாடியதுதான் என்று ஆகிவிட்டதே. இப்படி விமர்சனங்களில் இருந்து விலகி நிற்கப் பழக வேண்டும்.

வேண்டும் என்றே குறை சொல்வது சிலரது மனநோய். அதற்கும் அவர்களைக் குறைசொல்ல முடியாது. இப்படி பிறரைப் பழித்தும் இழித்தும் பேசுகிறவர்கள் இளம்வயதில் அப்படிப் பழிக்கப்பட்டவர்கள். அவர்கள் வளர்ந்த சூழல் அவர்களை அப்படி ஆக்கிவிட்டது. எனவே அவர்களுக்காக இரக்கப்படலாமே ஒழிய, அவர்களது விமர்சனங்களால் நாம் அமைதியை இழப்பது புத்திசாலித்தனமாகாது. நாம் அமைதி இழக்கத் தொடங்கினால் நமக்குப் புத்திசாலித்தனம் போதாது என்பதுதான் உண்மை.

இசையரசி எம்.எஸ்.சுப்புலக்ஷ்மி அவர்கள் வெங்கடேச சுப்ரபாதம் வழங்கிய புதிதில் எத்தனை விதமான விமர்சனங்கள் வந்தன தெரியுமா? எத்தனை கண்டனங்கள் பிறந்தன தெரியுமா?

ஒரு மாமியார் தம் மருமகளைக் காயப்படுத்துகிறார் என்றால், அவர் தம் மாமியாரால் காயப்படுத்தப்பட்டவராக இருப்பார். பிறரால் கொடுமைப் படுத்தப்பட்ட ஒரு நபர் தமக்குக் கட்டுப்படுகிறவர்களைக் கொடுமைப் படுத்தவே விரும்புவார். பரம்பரை பரம்பரையாகச் சொத்துகள் மட்டுமே பாதுகாக்கப்படுவதில்லை. அவமானங்களும், மன இறுக்கங்களும் கூட பாதுகாக்கப்படுகின்றன. ஆம், உடல் நோய்களும், மனநோய்களும் கூட ஒரு சிலரது பரம்பரைச் சொத்துக்கள். இவற்றை உணர்ந்து நடந்து கொள்வது அவசியம். அது ஒருவகை மனமுதிர்ச்சி.

பல மாமியார்கள், மருமகளாய் வரும் பெண்களுக்குக் கரடுமுரடாகக் காட்சி தருவதற்கு இன்னும் ஒரு நுட்பமான காரணம் உண்டு. அது மாமியாரின் வயது காரணமாக அவரது உடலில் ஏற்படும் ரசாயன மாற்றம். ஆம்... பொதுவாக மகனுக்குத் திருமணம் ஆகி மருமகள் வரும் காலத்தில் ஒரு மாமியாரின் சராசரி வயது நாற்பத்தைந்துக்கு மேல்தான் (இப்போது) இருக்க முடியும்.

ஒரு பெண் பன்னிரண்டு பதின் மூன்று வயதில் பருவம் அடைகிறாள். அவளது உடலில் உள்ள பெண்மை முழுவதும் பொங்கித் திரண்டு புதுப் படைப்புக்குப் பொங்கல் வைக்கத் தயாராக, படைப்பாற்றல் மிக்கதாக நிற்கிறது. அந்த பெண்மைத் திறன் கிட்டத்தட்ட நாற்பது நாற்பத்தைந்து வயதுகளில் தன் பணியை முடித்துக் கொள்கிறது. ஒழுங்கற்றுப் போய் மாதவிலக்கு நிற்கத் தொடங்கும் அந்தக் காலகட்டத்தில் இனம்புரியாத பயம், கோபம், கண்ணீர், எரிச்சல் அவளுக்குள் உண்டாகிறது. அந்தக் காலக்கட்டத்தில் வீட்டில் இருக்கும் பழைய நபர்களான கணவன், மகன், போன்றவர் மீதுள்ள பாசத்தாலும், அவர்களிடம் ஏற்கனவே அடங்கிப் போய் பழகிவிட்டதாலும் அவர்களிடம் அவளால் கோபப்பட முடிவதில்லை. ஆனால் மருமகள் புதுவரவு. தன் அதிகார எல்லைக்கு உட்படும் புது நபர். எனவே அவளிடம் தன் குணக்கேடான உணர்ச்சிகளை மாமியார் காட்டத் தொடங்குகிறார் என்பது ஒரு சின்ன விஞ்ஞான வெளிச்சம்.

அதையும் ஏன் கொஞ்சம் கடுமையாக, கொடுமையாகக் காட்டுகிறார் என்று கேள்வி வரும்... சொல்லுகிறேன்.

(தொடரும்)

மௌன மொழி!

இந்த மொபைல உலகில் 'மௌனம் பேசும் மொழி' ஒரு சக்திவாய்ந்த பொருளைத் தருகிறது. போய்ச் சேர்ந்ததும் ஒரு மிஸ்டு கால், வீட்டை விட்டுக் கிளம்பும்போது ஒரு மிஸ்டு கால், என பல அர்த்தங்கள்! மற்றும் காதலர்களிடையே இந்த மௌன மொழி பல பொருளைத் தாங்கி நிற்கிறது. ஒரு கால் கொடுத்தால் பெற்றோர் அருகில் உள்ளனர். இரண்டு மிஸ்டு கால், நண்பர்களுடன் இருக்கிறேன். இப்படி பல பல அர்த்தங்கள்.

இந்தியர்கள் மட்டுமேதான் இந்த மிஸ்டு கால்களை அதிகம் பயன்படுத்துவதாக ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. மிஸ்டு கால்களை ஃபிரான்ஸ் மக்கள் 'சானர்' என்றும், ஸ்பெயின் நாட்டினர் 'ஜம்பர்' என்றும் சொல்கின்றனர். ஃபிரான்சில் சாப்பிடும்போது மொபைல் ஃபோனை ஆஃப் செய்து வைத்து விடுவார்களாம். சீனாவில் ஒருவரை ஒருமுறை அழைத்துவிட்டு நாகரிகம் கருதி, உடனே ஆஃப் செய்து விடுவார்களாம். அவருக்கு நேரம் இருந்தால் கூப்பிடட்டும் என்ற எண்ணம். ஸ்பெயின் நாட்டில் பேசுவதைவிட எஸ்.எம்.எஸ். மூலம் கருத்துத் தெரிவிப்பதில்தான் ஆர்வமாம்!

இந்தியாவில் மிஸ்டு கால் எண்ணிக்கைகளின் மொத்த எண் ணிக்கையில் 25 - 30 சதவிகிதம். இதனால் யாருக்கு இழப்பு என்றால் மொபைல் ஃபோன் நிறுவனத்துக்குத்தான்.



மிஸ்டு கால் கொடுப்பது அல்பத்தனம் என்ற எண் ணம் பரவலாக இருந்தாலும், பணம் மிச்சமாகிறதே என்கிறார்கள் மிஸ்டு கால் மன்னர்கள்!

- ஜெ. நாகராஜன், சிதம்பரம்.

தத்துவம்



ஸ்ரீ மேல்புத்தூர் நாராயண பட்டதிரி கவியால் அருளிச் செய்ததுதான் பாகவதத்தின் ஸாரமான 'ஸ்ரீமந் நாராயணீயம்!'

சமீபகாலமாக நான் இதனை சென்னை அண்ணாநகரில் வசிக்கும் பாமா கிருஷ்ணனிடம் கற்றுக் கொள்கிறேன். ஒரு பயிற்சியின் பொழுது எங்கள் குரு நமது வாழ்க்கையும் கிரிக்கெட் விளையாட்டும் எவ்வாறு பிணைக்கப்பட்டுள்ளது என்பதை விளக்கி வகுப்புக்கு வந்த அனைவரது உள்ளத்தையும் கவர்ந்து விட்டார்.

வேதாந்த கிரிக்கெட் போட்டி

மைதானம் - பிரபஞ்சம்
ஆட்டக்காரர்கள் 10 பேர் - 5 கர்மேந்த்ரியங்கள், 5 ஞானேந்த்ரியங்கள்
11வது ஆள் - பௌலர் : கால புருஷர்
பந்து - மனது : பௌலர் பால் போடுவது மனதை பாதிப்பது
ஸ்டம்ப் 3 - மூன்று குணங்கள்: ரஜோ, தமோ, ஸத்வ
பெயில்ஸ் 2 - ஹ்ருதயம், ஜீவன் (ஆத்மா)
அம்பயர் - பகவான்
ஸ்கோரர் - சித்ரகுப்தன்
வர்ணனையாளர்கள் - வால்மீகி, வ்யாஸர்
பௌலர்ஸ் இருவர் - ஆண் மற்றும் பெண்
1 ஓவர் அதாவது 6 பந்துகள் - 6 ருதுக்கள்
விக்கெட், ரன்கள் - இருபக்கம் (ஒரு ரன் / ஒரு ரன்) சுகம் மற்றும் துக்கம்
ஃபோர் (4 ரன்கள்) - பூமியின் எல்லைக் கோட்டை தாண்டுவது: தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம்
சிக்ஸர் (6 ரன்கள்) - மகான்கள்: காஞ்சி பெரியவர், ரமணரிஷி போன்றோர்
ரன் அவுட் - ஆயுள் முடிவு: விபத்து போன்றது
ஹிட் அவுட் - தற்கொலை போன்றது
எல்.பி.டபிள்யு - தன் உடலையே நினைத்துக் கொண்டிருப்பது

- திருமதி லலிதா ஜகதீசன், சென்னை - 40

வேதாந்த கிரிக்கெட்!





உடுப்பி ரசப்பொடி,

உடுப்பி ஸ்ரீகிருஷ்ணர் கோவில் பொது பந்தி போஜனம் உண்டவர்கள் அங்கு சாப்பிட்ட சாம்பாரின் சுவையையோ, ரசத்தின் சுவையையோ மறக்கவே முடியாது. கார சாரமான அந்த சாம்பார், ரசத்தினூடே எட்டிப் பார்க்கும் மெல்லிய இனிப்பும், புளிப்பும் அதன் அழகு கலரும்தான் அதன் ஸ்பெஷாலிட்டி.

உடுப்பியை சொந்த ஊராகக் கொண்ட எங்கள் வீட்டில் சாப்பிடும் ஒவ்வொரு வரும் கேட்கும் ஒரு கேள்வி இதுதான். ''எப்படி இந்த சாம்பாரையும், ரசத்தையும் பண்றீங்க? ப்ளீஸ். சொல்லித் தாங்களேன்.''

அம்மா ஒரு பர்ஃபெக்ஷனிஸ்ட் ஆனதால் அவரது ரசப்பொடியும், சாம்பார்ப் பொடியும் கண்ணளவால் செய்யப் பட்டது அல்ல. எல்லா சாமான்களையும் கடையில் அளந்து பார்த்து வாங்கிப் பதமாக வறுத்துச் செய்யப்பட்டது. அதே முறையைப் பின்பற்றினால் கமகம உடுப்பிப் பொடிகள் உங்கள் கையில்.

உடுப்பி ரசப் பொடி :

தேவையான பொருள்கள் :

தனியா - 110 கிராம்,
சுருள் வரமிளகாய் 100 கிராம் (பியாடிகே அல்லது காஷ்மீரி சில்லீஸ்),
சேலம் வரமிளகாய் - 75 கிராம்,
மிளகு - 50 கிராம்,
வெந்தயம் - 25 கிராம்,
கடலைப் பருப்பு - 25 கிராம்,
சீரகம் - 30 கிராம்,
கடுகு - 1 டீஸ்பூன்,
பெருங்காயம் - ஒரு சின்னக் கட்டி.

தயார் செய்யும் முறை :

★ எல்லா மிளகாயையும் முதலில் வெயிலில் நன்கு உலர்த்தி எடுத்துக்



ஆஹா 50!

எந்த ஒரு பழ வகையாக இருந்தாலும், காயாக இருக்கும்பொழுது வாங்கி வந்து வீட்டில் பழுக்க வைத்துச் சாப்பிடவும். தற்போது காய்களைப் பழுக்க வைப்பதற்கு செயற்கை மருந்து பயன்படுத்துகிறார்கள். இந்த மருந்தின் பக்கவிளைவுகளிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள இதுதான் வழி!

- என். பி. சிவகாமி செல்வம்,
குஜராத்.



சாம்பார்ப் பொடி பண்ணலாமா?

கொள்ளவும்.

★ கடுகையும், வெந்தயத்தையும் எண்ணெய் விடாமல் சிறு தீயில் சிவப்பாகும் வரை வறுத்துக் கொள்ளவும்.

★ சிறிது எண்ணெய் விட்டு மிளகை சிறு தணலில் வறுக்கவும்.

★ வாணலியில் அரை ஸ்பூன் எண்ணெய் விட்டு மிளகாயை மிக லேசாக வறுத்து எண்ணெய் பாலீஷ் போட்டுக் கொள்ளவும்.



★ மித்ரா முரளீதரன்

★ அடுத்ததாக, ¼ ஸ்பூன் எண்ணெய் விட்டு காயத்தையும், தனியாவையும் பச்சை வாசனை போகும் வரை வறுத்துக் கொள்ளவும்.

★ இப்போது ¼ ஸ்பூன் எண்ணெய் விட்டு கடலைப் பருப்பை சிவப்பாக வறுத்துக் கொண்டு, அதே சூட்டில் சீரகத்தை இலேசாக வறுத்துக் கொள்ளவும்.

★ வறுத்த எல்லா சாமான்களையும் கடாயில் ஒன்றாகக் கலந்து மெல்லியதாக சூடாக்கி, மிக்ஸரில் நைஸாக அரைத்து, ஆறவிட்டு, காற்று புகா டப்பாவில் போட்டு வைக்கவும்.

உடுப்பி சாம்பார் பொடி தயார் செய்யும் முறை :

★ சாம்பார்ப் பொடியில் சீரகம், மிளகு, கடுகு போட வேண்டாம்.

★ சுருள் வரமிளகாய், சேலம் வர மிளகாய் மற்றும் வெந்தய அளவில் சிறு மாற்றமில்லை. 1 டீஸ்பூன் அரிசி சேர்த்து வறுக்கவும். அதே போல் கடலைப் பருப்பிற்கு பதில் உளுத்தம் பருப்பை வறுத்து சேர்க்க வேண்டும். மற்றபடி ரசப் பொடி செய்வது போலவே சாமான்களை வறுத்து அரைத்து வைத்துக் கொண்டால் மூக்கைத் துளைக்கும். உடுப்பி 'கொத்தேல்' (அதுதான் உடுப்பி சாம்பார்) செய்து வீட்டிற்கு வருபவர்களை அசத்தலாம்.

பின்குறிப்பு : ரசமோ, சாம்பாரோ சிறு கட்டி வெல்லம் போட்டு இறக்கவும்.

- மித்ரா முரளீதரன்,
(முழு விலாசம் தேவை)

மருந்துகள் (சிரப்கள்) பிளாஸ்டிக் பாட்டிலிலேயே தயாரிக்கலாம். கைத்தவறி விழுந்தாலும் சீக்கிரம் உடையாது. பெரும்பாலும் சிரப்பு குழந்தைகளுக்குத்தான்.

- இந்திரா முரளி,
சென்னை - 20.



தமாஷ் கற்பனை



சொன்னதும் சொல்லாததும்!

வீட்டுத் தரகர் வேதநாயகம், பொய் சொல்லவே மாட்டார். ஆனாலும் ஒரு சிக்கல், முழு உண்மையையும் கூற மாட்டார். வாங்க... வீட்டைப் பார்க்க வந்தவரிடம் எப்படிப் பேசறார்னு பார்ப்போம்...

சொன்னது : ''வீட்டுல காத்து பிச்சுக் கிட்டு போகும்''

சொல்லாதது : ''சந்தேகம் இருந்தால் எந்தக் குழாயை வேணாலும் திறந்து பாருங்க...''

சொன்னது : ''கதவைத் திறந்தா வெளிச்சம், கரெண்ட் பில் ரொம்பக் கம்மி யாக வரும்..''

சொல்லாதது : ''கரண்டே கொஞ்ச நேரம்தான் வரும்...''

சொன்னது : ''இந்த வீட்டுல ஒரு விசேஷம், பரணை எல்லாம் 'லோ லெவல்' தரையில நின்னாப்பல பொருளை வைக்கலாம் எடுக்க லாம்.''

சொல்லாதது : ''அப்பப்ப 'டாங்கு'னு தலையை இடிச்சுப் பீங்க, கவனமா இருக்கணும்.''

சொன்னது : ''வீட்டுல செக்யூரிடி பிராப்ளமே இல்லை. அனாவசியமா ஒரு பய உள்ளே நுழைய முடியாது.''

சொல்லாதது : ''எப்படி முடியும்? வீட்டு வாசலில் நாமே நுழைய முடியாதபடி ஆட் டோக்களை நிறுத்திட்டு வம்பளந்து கொண்டிருப்பாங்க, ஆட்டோ ஓட்டுனர்கள்!''

சொன்னது : ''இந்த வீட்டுல சீக்கிரமா எழுந்திருக்கிற நல்ல பழக்கம் வருமாக்கும்!''

சொல்லாதது : '' எழுந்திருக்காட்டி தண்ணி கிடைக்காது. காலைல 3 மணி யிலிருந்து 5 மணி வரைக்கும் பம்ப் அடிச்சாத்தான் தண்ணி!''

சொன்னது : ''அக்கம் பக்கத்து வீட்டு லேருந்து ரம்யமா சங்கீதம் காத்துல மிதந்து வரும். அப்படியே மயங்கிடுவீங்க.

சொல்லாதது : ரெண்டு மூணு வீட்டுல பாட்டுக் கத்துத் தர்றாங்க. மியூஸிக் கிளாஸ்ல ஒவ்வொருத்தரும் உச்சஸ்தாயியில கத்து வாங்க. நீங்க மயக்கம் போட்டு விழுந்துடு வீங்க.

சொன்னது : ''கடவுள் இருக்கார் என்பதை இந்த வீட்டுல அடிக்கடி உணரு வீங்க!''

சொல்லாதது : ''பின் தெருவில அம்மன் கோவில். அடிக்கடி சத்தமா ரிக்கார்டு போடுவாங்க. வீடே சும்மா அதிரும்ல...''

சொன்னது : ''அக்கம் பக்கத்துல வசிக்கிறவங்களுடன் சுமுகமான உறவு இருக்கும்.''

சொல்லாதது : ''அதாவது, கழுகு லேருந்து காப்பித்தூள் வரைக்கும் இரவல் கேட்டு ஓயாம வர்றவங்களுக்கு நீங்க கர்ணனாக இருக்குற வரைக்கும்!''

சொன்னது : ''காலையும் மாலையும் வாக்கிங் போகலாம்.''

சொல்லாதது : ''பஸ் ஸ்டாப் இங்கிருந்து ஒன்றரை கிலோ மீட்டர்!''



- ஆர். மாலதி தமன், சென்னை - 106.

கவிதை

இவர்களும் சாதனையாளர்களே...

அன்பாய்ப் பேசும்
நடத்துநர்
நேர்மையான
போக்குவரத்துக் காவலர்
அமர்ந்து பயணிக்கும்
மாணவன்
அமைதியாய்ப் படம்பார்க்கும்
இளைஞன்
உண்மை பேசும்
அரசியல்வாதி
அயராது உழைக்கும்
அரசு ஊழியர்
மறைவிடம் தேடாத
காதலர்கள்
கைபேசியில்லாத
கல்லூரி மாணவி
மெகா சீரியல்
விரும்பாத
குடும்பப் பெண்
தாய்மொழி பேசும்
தமிழன்!



-பா.இனியவன்

சிறுகதை

நீல வானம்!

உமாராணி

"அம்மா, நாங்க போயிட்டு வர்றோம்'' அழகாக அலங்கரித்துக் கொண்டு சுந்தரும் அவன் மனைவி ராதாவும் முன்னால் வந்து நின்றனர்.

''போய்ட்டு வாங்கப்பா. ஜாக்கிரதையா வண்டி ஓட்டிக் கொண்டு போயிட்டு வா'' என்று மங்களம் சொன்னாள். சுந்தர் சிரித்துக் கொண்டே தலையாட்டி விட்டுப் போனான். மங்களம் வாசல் வரை வந்து நின்று, அவர்கள் தெருமுனை திரும்பும் வரை நின்று பார்த்து விட்டு வந்தாள்.

பக்கத்து வீட்டு ராஜம், மங்களத்தைப் பார்த்து, ''என்ன, கைக்குழந்தையை வண்டியில் ஏற்றி 'டாடா' காட்டிவிட்டு வந்தாயா? குழந்தை அழாமல் போனானா?'' என்று கிண்டலடித்தாள். தொடர்ந்து, ''உன் வீட்டுக்காரரைப் பார். உன்னை மாதிரி ஏதாவது அலட்டிக்கறாரா?'' என்றாள்.

''ஆமா மாமி, அவளுக்கு இன்னும் தன் பிள்ளை தொட்டிலில் விட்டு ஆட்டும் குழந்தை என்றுதான் எண்ணம். கல்யாணம் ஆகி அவன் பெண்டாட்டி வந்து விட்டாள். இன்னும் குழந்தை, குழந்தை என்று அலட்டிக்கிறா'' என்று மங்களத்தின் கணவர் சுவாமிநாதன் அலுத்துக் கொண்டார்.

இவர்கள் இருவரும் பேசுவதைச் சற்றும் தவறாக எடுத்துக் கொள்ளாத மங்களம், தன் பாசத்துக்குத் தானே விளக்கம் தந்தாள்.

''அவனுக்குக் கல்யாணம் ஆகி மூணு வருஷம்தானே ஆறது? அதுக்கு முன்னாலிருந்து பெத்து, வளர்த்து, ஆளாக்கியது நான்தானே? தவிர, அவனுக்குக் கல்யாணம் ஆகியும் இன்னமும் எதையும் என்கிட்ட கேட்டுத்தான் செய்யறான். இப்ப திடீர்னு மனசு மாறிடுமா?'' என்றாள்.

''ரொம்ப அழகுதான் போ. என் மருமகள் வந்த மறுநாள்ல இருந்தே என் பிள்ளை மாறித்தான் போயிட்டான். 'அம்மா, அம்மா' என்று மூச்சுக்கு





மூச்சு கூப்பிட்டுக் கொண்டிருந்த பிள்ளை, இப்ப பெண்டாட்டி முந்தானையைப் பிடிச்சுக்கிட்டுத்தான் சுத்தறான். அவளும்தான் என்ன மந்திரம் போட்டாளோ? காலையில் காப்பி சாப்பிடறதுல ஆரம்பிச்சு, சவரம் செய்வது வரை அவளைக் கேட்டுத்தான் செய்யறான். இத்தனை வருஷமா நான் சமைச்ச சாப்பாடு நல்லா இருந்தது. இப்ப அவ பண்ற குழம்பு 'கிளாஸ்' ஆம். சொல்லிச் சொல்லிச் சாப்பிட்டுட்டுப் போறான். அவளும், என்ன எதுவும் கேட்கறதில்ல. தன் இஷ்டத்துக்கு, 'அவருக்கு இது தான் புடிக்கும்'னு ஏதேதோ சமைச் சுப் போடறா. நான் வளர்த்த புள்ள தானான்னு எனக்கே சந்தேகமா இருக்கு. நீ எப்படித்தான் பொறுத்துப் போறியோ தெரியல. சரி, நான் கிளம்பறேன். என் ராமாயணத்துக்கு முடிவே கிடையாது. இன்னொரு நாள் வந்து பேசறேன்'' என்று ராஜம் எழுந்து போனாள்.

அதற்குள் பேரன் அர்ஜுன் எழுந்து



''அம்மா'' என்று குரல் கொடுக்கவும், மங்களம் பெட்ரூமுக்கு ஓடினாள். சுவாமிநாதன் தன் மனைவியைப் பார்த்து பெருமூச்சு விட்டுவிட்டு பேப்பரில் மூழ்கிப் போனார். கண் பேப்பரில் அலைந்தாலும் மனசு வேறு எண்ணங்களில் லயித்தது.

மங்களம் உண்மையிலேயே பாச சொரூபம்தான்! அன்பும், கடமை உணர்வும் கலந்து குடித்தனம் நடத்தினாள். சுந்தர் பிறந்தவுடன் அவனைச் சுற்றியே தன் உலகத்தை வளர விட்டாள். அவன் நிழல் போல கூட இருந்து, அவன் தேவைகளைப் பூர்த்தி செய்து, அவனுக்காகவே உயிர் வாழலானாள். தனக்கும் கணவருக்கும் நடுவில்தான் குழந்தையைப் படுக்க வைப்பாள். துளி இருமல் சளி வந்து விட்டால் கூட தவித்துப் போவாள். அவன் சாப்பிடாவிட்டால் தானும் பட்டினி கிடப்பாள். சுவாமிநாதன் எப்பவும் அவனை



ஜாக்கெட்டுகள் பழையதாகி விட்டால், அவற்றின் கைப்பகுதியை மட்டும் வெட்டிவிட்டு, நைட்டி அணியும்போது அதை உள்ளாடையாக அணியலாம்.

- கே. உமா மகேஸ்வரி,
பள்ளிக்கரணை.

'அம்மா கோண்டு' என்றுதான் சொல்வார். இதைக் கேட்கும் போதெல்லாம் மங்களத்துக்குப் பெருமை பிடிபடாது. 'என் பிள்ளை என் பிள்ளை, என்று சதா காலமும் அவனைப் பற்றியே நினைத்துக்கொண்டு, அவனை நல்லபடி வாழவைக்க என்ன செய்யலாம் என்றே யோசிப்பாள்.

பிள்ளை நல்லபடியாக படித்து முடித்து நல்ல வேலைக்கும் சேர்ந்தான். வேலை கிடைத்ததும் மங்களம் பெண் பார்க்கும் படலத்தில் இறங்கினாள். முதலில் சுந்தரும் 'இப்பக் கல்யாணம் வேண்டாம் பிறகு பார்க்கலாம்' என்றுதான் சொன்னான். ஆனால் மங்களம் விடவில்லை. தினமும் பலதரம் அதைப் பற்றியே பேசி பிள்ளையைச் சம்மதிக்கச் செய்துவிட்டாள்.

சுந்தர், அம்மா மீது அதீதமான நம்பிக்கை வைத்திருந்தான். ''நான் பெண் பார்க்க வரமாட்டேன். நீ பார்த்து எனக்கு எது சரியாக இருக்கும் என்று தோன்றுகிறதோ அந்தப் பெண்ணையே நிச்சயம் செய்'' என்று சொல்லிவிட்டான்.

இப்போது மங்களத்தின் பொறுப்பு இன்னும் அதிகமாகிவிட்டது. வேண்டாத தெய்வங்களை எல்லாம் வேண்டி, பல பூஜை பரிகாரங்கள் செய்து கடைசியாக ராதாவைப் போய்ப் பார்த்தாள். லட்சக் கணக்கில் வரதட்சிணை சீர் செய்வதாக பலர் விரும்பிக் கேட்டும், அதை எல்லாம் ஒதுக்கிவிட்டு ராதாவை நிச்சயம் செய்தாள்.

பெண் வீட்டார் என்ன செய்யப் போகிறார்கள் என்று கேட்காமல், வீட்டுக்கு வரும் மருமகப் பெண்ணுக்குத் தான் என்ன செய்யலாம் என்று யோசித்து நெக்லஸ், வளை, தோடு, கைக்கு மோதிரம், செட்டாகச் செய்து நிச்சயதார்த்தத்துக்கு அளித்தாள். புதுமோஸ்தரில் நாலைந்து புடைவைகள் வாங்கி வியக்கச் செய்தாள்.

தன் பெண்ணைப் போல் நடத்தினாள். வீட்டு வேலை எதையும் அவளைச் செய்ய விடாமல் தானே செய்தாள். அவர்கள் வழியில் குறுக்கிடாமல் ஒதுங்கிக் கொண்டு, அன்பு சொரியும் இவள் மாமியார்தானா

என்று சுவாமிநாதன் வியக்காத நாளே இல்லை.

விடுமுறை நாளில் தன் மனைவியை வெளியில் கூட்டிப் போகும் பிள்ளை, தன்னையும், தன் அம்மாவையும் கூட வாருங்கள் என்று கூப்பிடவில்லையே என்று சுவாமிநாதன் ஒவ்வொரு சமயம் யோசிப்பார். தான் வேண்டாம், தன் மேல் இத்தனை அன்புபொழிந்த அம்மாவைக் கூட ஏன் கூப்பிடத் தோன்றவில்லை? கல்யாணம் ஆகிவிட்டால், தானும் தன் மனைவியும்தான் என்ற எண்ணம் மேலோங்கி விடுமா? அந்த வட்டத்துக்குள் பெற்றோர் கிடையாதா? ராதா நல்ல பெண்தான் என்றாலும் சுந்தரைத் தவிர வேறு யாரும் முக்கியமில்லை என்று நினைக்கிறாளா?

தனக்குள் இத்தனைக் கேள்விகளையும் கேட்டுக்கொண்டு மருகிய சுவாமிநாதன் தாங்க மாட்டாமல், ''மங்களம், இங்கே வாயேன்'' என்று கூப்பிட்டு, தன் சந்தேகங்கள் எல்லாவற்றையும் மடமடவென்று ஒப்பித்தார்.

அத்தனையையும் பொறுமையாகக் கேட்டு விட்டுச் சிரித்த மங்களம், ''நீங்கள் இத்தனை வருஷம் என்னுடன் வாழ்ந்த பிறகும் இப்படிப் பேசலாமா? வந்த பெண்ணை மருமகள் என்று நினைத்தால் தானே மனதுக்குக் குறை தோன்றும்? அவளைப் பெற்ற பெண்ணாக நினைத்து விட்டால் இந்த மனப்பான்மை உண்டாகுமா? நான் சுந்தரை நல்லா புரிஞ்சுக்கிட்டிருக்கேன். இத்தனை வருஷம் அவன் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள நான் மட்டும்தான் இருந்தேன். இப்போது அவன் வயசுக்கு ஏற்ற ஒருத்தி வந்து விட்டாள். இனி நான் ஒதுங்கிவிட்டு, அவர்கள் இருவரும் புரிந்து கொண்டு வாழ நான் வகை செய்ய வேண்டுமே ஒழிய, அவளுடன் போட்டி போட்டுக் கொண்டு பிள்ளையை ஆக்ரமிக்க வழி தேடக் கூடாது.

''என் காலத்துக்குப் பிறகு என் ஸ்தானத்தை வகிக்க ஒருத்தி வேண்டும் என்றுதானே நான் தேடினேன். நானே அவர்களுடைய அன்யோன்யத்தைக் கெடுக்கலாமா? எட்ட இருந்து அவர்கள் ஒற்றுமையைக் கண்டு சந்தோஷப்பட வேண்டும். தவிர, பொறாமைப்படலாமா? சுந்தர் என்னுடன் அதிகமாக நேரம் செலவிடாமல் இருக்கலாம். ஆனாலும் அவன் மனத்தின் அடித்தளத்தில் என் மீது பாசமும், மரியாதையும் இருக்கு. அதைப் புரிந்து கொண்டால்தான் என்னால் இங்கு சந்தோஷமாக இருக்க முடிகிறது. நிலையறிந்து நடந்து கொண்டால் மாமியார் மருமகள் உறவும் நீல வானத்தைப் போலத் தெளிவாகவே இருக்கும்!''

பாசமுள்ள சுந்தரின் அம்மா மறைந்து, விவேகமுள்ள ராதாவின் மாமியாராக அவள் பேசப் பேச... வாயடைத்து நின்றார் சுவாமிநாதன். ●

எள், துருவிய தேங்காய், வேர்க்கடலை இவற்றை எண்ணெயில் வதக்கி, மிக்ஸியில் அரைத்து, கத்தரிக்காய் மசாலாவில் சேர்த்தால் சுவையோ சுவை!

- சுமித்ரா ராஜு,
கொளத்தூர்.



நெருக்கத்தை ஏற்படுத்தும்

வெளி மனிதர்கள் யாராவது நம் வீட்டுக்கு வந்தால் 'வாங்க' என்று வரவேற்கிறோம். நாம் யார் வீட்டுக்காவது போனால் கிளம்பும்போது 'வரட்டுமா?', 'போயிட்டு வர்றேன்' என்று விடைபெறுகிறோம். இது ஒரு அடிப்படை பண்பாடு.

ஆனால் நாம் நம் வீட்டில் நம் வீட்டு மனிதர்களிடம் இந்தப் பண்பாட்டை பல நேரங்களில் கடைப்பிடிப்பதில்லை. யாராவது வந்தால் கதவைத் திறந்து விட்டால் போதும் என்று நினைக்கிறோம். வெளியில் போகும் போது ஸ்கூலுக்கு - ஆபீஸுக்குப் போகிறேன் என்பது தெரிந்ததுதானே, எதற்கு சொல்லிக் கொண்டு போக வேண்டும் என்று அசிரத்தையாக அப்படியே கதவைச் சாத்திக் கொண்டு போய்விடுகிறோம்.

குழந்தைகள் - கணவர் சாயங்காலம் ஸ்கூல் - ஆபீஸ் விட்டு வரும்பொழுது வெறுமனே கதவைத் திறந்து விட்டு உள்ளே போகாமல், ஆசையாக, குஷியாக ஒரு ஹாய் அல்லது ஹலோ என்றாவது சொல்வது, அவர்கள் வந்திருப்பதை நாம் சந்தோஷமாக வரவேற்கிறோம் என்பதை வெளிப்படுத்தும். ''ஹாய் ப்ரியா, ''வாங்க மணி'' என்று பெயரைச் சொல்வது மேலும் ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தும்.

வீட்டில் வேலை செய்பவர் வந்தாலும் அதுபோல 'வாம்மா' என்றோ, 'இன்னிக்கு நல்ல வெய்யில் இல்ல' என்றோ ஏதேனும் ஒரு வார்த்தை சொல்லி, விசாரித்து வரவேற்பது அவளையும் ஒரு மனுஷியாக மதிக்கிறோம் என்பதைக் காட்டும்.

வெளியில் போகிறவர்கள், 'பை' என்றோ 'போய்விட்டு வருகிறேன்' என்றோ, 'இந்த இடத்திற்கு போகிறேன், இவ்வளவு நேரம் ஆகும்' என்று சொல்லிவிட்டுப் போவது ஒரு நல்ல பழக்கம் மட்டுமல்ல. வீட்டில் இருப்பவர்களுக்கு ஒரு மரியாதை கொடுக்கும் செய்கையும் ஆகும். இது அன்பை, அன்யோன்யத்தை வளர்க்கும்.

எங்கப்பாவுக்கு இந்த நல்ல பழக்கங்கள் எல்லாம் உண்டு.

எங்கப்பா தினமும் ஒரே நேரத்தில்தான் ஆபீஸ் கிளம்புவார். அவர் கிளம்பும் நேரத்தில் அம்மா முன் அறையில்தான் இருப்பார். அவருக்குத் தெரியும் அப்பா தயாரானதுமே ஆபீஸுக்குக் கிளம்பி விட்டார் என்று. ஆனாலும் அப்பா வெளியே போகும்போது, 'வரேம்மா, வீட்டைப் பார்த்துக்கோ' என்று





சொல்லிவிட்டுத்தான் கதவைச் சாத்திக் கொண்டு போவார். அது தான் 'போய்விட்டு வருகிறேன்' என்று அவர் சொல்லும்விதம்.

அது போல இரவில் சாப்பிட்டதும் எல்லோரும் உட்கார்ந்து டீவி பார்க்கும்போது அப்பா அங்கேயே தூங்கிவிடுவார். அரை மணி நேரம் தூங்கியபின் எழுந்து படுக்கைக்கு போகுமுன் அம்மாவோ அண்ணியோ யார் இருந்தாலும் 'குட் நைட்' என்று சொல்லிவிட்டுப் போவார். தூக்கக் கலக்கத்தில் கொஞ்சம் தடுமாறிக் கொண்டு போகும் அப்பாவிடம், 'பார்த்துப் போங்கோ அப்பா' என்று மன்னி சொல்வது அவர்களிடையேயான ஓர் இனிமையான உறவைப் பிரதிபலிக்கும். இது தினமும் நடப்பது. இந்த உரையாடல் அவசியமே இல்லை என்று எண்ணலாம். அப்பா எழுந்து போனாலே படுத்துக் கொள்ளப் போகிறார் என்று நிச்சயமாக தெரிந்தாலும் அப்படி சொல்லிவிட்டுப் போவதை அவர் ஒரு நல்ல பழக்கமாக வைத்துக் கொண்டுள்ளார்.

குழந்தைகள் ஸ்கூலுக்குப் போகும்போது ''பை குட்டி!'' என்று சொல்லி வழியனுப்புவது ஓர் ஆசீர்வாதம் போல. சாயங்காலம் அவர்கள் வீடு திரும்பும் வரை உடன் இருந்து காக்கும்.

தானாகவே கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாலும், ''அம்மா, நான் வந்தாச்சு'' என்று அறிவித்துக் கொண்டே வருவது ஒரு குதூகலத்தை வெளிப்படுத்தும்.

வார்த்தைகள்!



ஆபீஸில் நீங்கள் உயர் அதிகாரியாக இருந்தாலும், யாருக்கும் ரிப்போர்ட் செய்ய வேண்டிய அவசியம் இல்லாவிட்டாலும், வெளியில் போகும்போது சக ஊழியர்களிடம் நீங்கள் எங்கே போகிறீர்கள், எப்பொழுது வருவீர்கள் என்று சொல்லிவிட்டுப் போவது ஒரு மரியாதை மட்டுமல்ல, அவசியமானதும் கூட. அலுவலகத்தில் இந்த வெளிப்படையான நடவடிக்கை உங்கள் அன்றாட செயல்பாட்டில் பெரிய அளவில் உதவும்.

மேலைநாட்டு கலாசாரத்தில் நிறைய நல்ல பழக்கங்கள் இருக்கின்றன. 'குட் மார்னிங்' 'குட் டே' 'தாங்க்யூ, 'பை' என்று சொல்வது எல்லாமே மிகவும் சுலபமாக பின்பற்றக்கூடியதே. ஆனால் நம் வீட்டு மனிதர்களிடமும், அலுவலகத்திலும் அப்படிச் சொல்லலாம் என்பதைத்தான் நாம் அவசியம் என்று நினைப்பதில்லை. இந்தச் சின்ன பண்பாட்டை பின்பற்றுவது நிச்சயமாக உறவுகளிடையே நெருக்கத்தை ஏற்படுத்தும்.

- வி. ஜெயா, ராணிப்பேட்டை.

ஜவுளிக் கடையோ, நகைக் கடையோ, வாசலில் நின்று வாடிக்கையாளர்களை வரவேற்பதும். கவுண்டர்களில் வியாபாரத்தைக் கவனிப்பதும் பெண்கள்தான்! சேல்ஸ் கேர்ள்ஸ் சிலரை 'எங்க வாழ்க்கை' பகுதிக்காகச் சந்தித்தோம்...

★ ''இந்தப் பணிக்கு வருபவர்கள் அனைவருமே சமூகத்தின் கீழ்தட்டு குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். வேலைக்குப் போனால் கிடைக்கிற ஓரிரு ஆயிரம் ரூபாய் குடும்பத்துக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்று தான் வேலைக்கே வரு கிறோம். கடைகளில் வேலைக்குப் போனால் குறைந்தபட்சம் பத்தாம் கிளாஸ் அல்லது பிளஸ் 2 படித்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க் கிறார்கள். அது இல்லாத பட்சத்தில் வேலை கிடைப்பது சிரமம்தான். சில பெரிய கடைகளில் டிகிரி முடித்திருக்க வேண்டும்; ஆங்கிலத் தில் பேசத் தெரிந்திருக்க வேண்டும் என்கிறார்கள். எனவே எங்களைப் போன்ற வர்களுக்கு அங்கே வேலை தருவதில்லை.

★ சுபாவத்திலேயே பெண்கள், ஆண்களைவிட பொறுமையானவர்கள்; சட்டென்று கோபப்பட்டு, எடுத்தெறிந்து பேசிவிட மாட்டார்கள் என்பதால், பல கடைகளில் சுமார் 80% வரை கூட பெண்களையே வேலைக்கு வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள். துணிக்கடைகள், நகைக் கடைகள், சூப்பர் மார்க்கெட்டுகள் என்று எதை எடுத்துக் கொண்டாலும் பெரும் பாலான வாடிக்கை யாளர்கள் பெண்கள்







தான் என்பதாலும் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அதிகமாக இருக்கிறது.

★ எங்களுடைய மிகப் பெரிய பிரச்னையே வேலை நேரமும், வேலைக்குப் போய் வருவதும்தான். பொதுவாக, பெரிய கடைகள் எல்லாம் பிஸியான கமர்ஷியல் ஏரியாக்களில்தான் இருக்கும். அநேகமாக அங்கே வேலை பார்க்கிற பெண்கள் அனைவருக்கும் வீடு வெகு தொலைவிலிருக்கும். ரயில் அல்லது பஸ்ஸைத்தான் நாங்கள் நம்பி இருக்கிறோம். காலையில் வேலைக்கு நேரத்துக்கு வரவேண்டும். அடிக்கடி லேட்டானால், டென் ஷன்தான்!

எனவே, காலையில் எழுந்ததும், அரக்க பரக்க ரெடியாகி அடித்து, பிடித்துக் கொண்டு ஓடி வர வேண்டும்.

★ கவர்ன்மென்ட் ஆஃபீஸ் மாதிரி எல்லாவற்றையும் அப்படியே போட்டு விட்டு புறப்பட்டுப் போய்விட முடியாது. துணிக்கடை என்றால் பிரித்துப் போட்ட துணிகளையெல்லாம் மறுபடியும் ஒழுங்காக மடித்து எடுத்து வைக்க வேண்டும். வழக்கமாக கடை மூடுகிற நேரம் ஒன்பது மணி என்றால், தினமும் புறப்படுவதற்கு ஒன்பதரையாவது ஆகிவிடும். கடைசி பஸ்ஸை பிடிக்க முடியாமல் போனால், அன்றைக்கு ஒரே திண்டாட்டம்தான். இதில் குடிகாரன்கள் தொல்லை வேறு!

★ ''காலையில்

வருஷம் முழுக்க வேலை... வேலை...



வேலைக்குப் புறப் படுகிற அவசரத்தில் ஒழுங்காகச் சாப்பிட முடியாது. பத்தரை, பதினொரு மணிக்கு ஒரு டீ கிடைக்கும். மத்தியானம் சாப்பிட இரண்டு மணியாகிவிடும். சில நாட்களில் மூணு மணி கூட ஆகிவிடும். பிற்பகலில் மறுபடி டீ. இரவு சாப்பிடுவதற்கு மணி பத்துக்குக் குறையாது. தாய்க்குலம் பார்த்து ரசிக்கும் டி.வி. சீரியல்களையெல்லாம் பார்க்க நாங்கள் கொடுத்து வைக்கவில்லை.

★ மற்ற வேலைக்குப் போகிற பெண்கள் எல்லாம் லீவு நாட்களில் ஜாலியாக இருக்கிறபோது, கடைகளில் வேலை பார்க்கும் எங்களைப் போன்றவர்களுக்கு அந்த சந்தோஷத்துக்கு வழி இல்லை. வாரம் ஒருநாள் லீவு எடுத்துக் கொள்ளலாம் என்றாலும், பிஸியான வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமை தவிர்த்து மீதி நாட்களில் தான் ஒருநாள் லீவு எடுத்துக் கொள்ள வேண்டும். தேவையான அவசரத் துக்கு ஏற்ப அட்ஜஸ்ட் பண்ணி லீவு எடுத்துக்கொள்ளும் வசதி இதில் இருப்பதை மறுப்பதற்கில்லை.

★ சில பெரிய நிறுவனங்கள் தொழிலாளர் சட்டப்படி லீவு விதிமுறைகளைக் கடைப் பிடிப்பார்கள் என்றாலும், பெரும்பாலான நிறுவனங்களில் முதலாளிகள் வைத்ததே சட்டம். திரு மணம் ஆகாதவரை சரி. அதன் பிறகு குடும்பப் பொறுப்பும் சேர்ந்து கொள்வதால், பல பெண்கள் வேலையை விடும் படி ஆகிவிடுகிறது. பல நிறுவனங்களில் மகப்பேறு லீவு தர மாட்டார்கள்; ''இப்போதைக்கு வேலையை விட்டு விடுங்கள்; அப்புறமாக வாருங்கள்; சேர்த்துக் கொள்கிறோம்'' என்று சொல்லிவிடுவார்கள். லீவு விஷயத்தில்தான் இப்படி என்று இல்லை. பொதுவாகவே, 'எப்போது வேண்டுமானாலும் சீட்டுக் கிழித்து விடுவார்கள்' என்ற பயம் அடிமனத்தில் இருந்துகொண்டே இருக்கும்.

★ அலுவலகம் போல நாற்காலியில் அமர்ந்து வேலை பார்ப்பதெல்லாம் எங்களுக்குச் சாத்தியமில்லை. நாள் முழுக்க கால்கடுக்க நின்று கொண்டே இருக்க வேண்டும். அதுவும் தீபாவளி சீசனில் பெண்டு கழன்றுவிடும். எங்களுக்கு டல் சீசன் என்பதே இல்லை; வருஷம் முழுவதுமே வேலை இருக்கும்.

★ வேலைக்குச் சேரும் புதிதில் விதம்விதமான டிரஸ்களை கஸ்டமர்கள் தாராளமாகப் பணம் கொடுத்து வாங்கிக் கொண்டு போவதைப் பார்க்கிறபோது, உள்ளூர ஏக்கமாக இருக்கும்; ஆனால் நாளடைவில் யதார்த்தம் புரிந்துவிடும்!

★ சபலபுத்திக்காரர்கள், வக்கிர எண்ணம் கொண்ட சக ஆண் ஊழியர்கள் மற்றும் ஆண் கஸ்டமர்களின் பேச்சுகள், ஆபாச கமென்ட்கள் மனதை நோகச் செய்யும்; கோபமூட்டும்; ஆனாலும் அதை வெளிப்படுத்திவிட முடியுமா?

தொகுப்பு, புகைப்படங்கள் : எஸ். சந்திரமௌலி



விதம்விதமான டிரஸ்களை கஸ்டமர்கள் தாராளமாகப் பணம் கொடுத்து வாங்கிக் கொண்டு போவதைப் பார்க்கிறபோது உள்ளூர ஏக்கமாக இருக்கும்!

ஊரைத் தெரிஞ்சுக்குங்க!

நான் என் பேரனுடன் பத்ரிநாத் சென்றிருந்தேன். பத்ரியில் கடும் குளிர் நிலவுவதால், ஸ்வெட்டர், ஷால், சாக்ஸ் போன்ற உடைகளை எடுத்து வரும் படி முன்பே கூறியிருந்தனர்.

எங்களுடன் 80 வயது மதிக்கத்தக்க தம்பதியரும் பயணித்தனர். அப் பெரியவர் பத்ரியில், கடும் குளிர் நிலவிய போதும், சாதாரண சட்டையும் வேட்டியும் அணிந்துகொண்டு, நடமாடிக் கொண்டிருந்தார்.

நாங்கள் சென்று இறங்கிய அன்று இரவு 11 மணிக்கு, குளிரினால் உடம்பில் ரத்தம் ஓடாமல் உறைந்து, இறந்து விட்டார். செய்வதறியாது தவித்த அந்த வயதான மனைவியை இறந்த உடலுடன் டில்லிக்கு மிகவும் கஷ்டப்பட்டு அனுப்பி வைத்தார்கள்.

வாசகர்களே, நீங்கள் எந்த ஊருக்குச் செல்வதாக இருந்தாலும், அவ்வூரின் தட்பவெப்ப நிலையை முன்பே தெரிந்து கொண்டு நடந்தால் உங்கள் பயணம் சிறக்கும்.

- சூடாமணி வாசுதேவன்,
மதுரை - 14.







விதவிதமாய்




✱ வனஜா சௌந்தர்ராஜன்

வரவிருக்கும் வரலக்ஷ்மி நோன்புக்கு நாமே வீட்டில் விதவிதமான ஜடைகளைச் செய்தால் மனசுக்கும் மகிழ்ச்சி. அழகுக்கும் அழகு! இவற்றைப் பத்திரமாக எடுத்து வைத்துக் கொண்டால் எத்தனை வருடங்களுக்கு வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த மாதிரி ஜடைகள் செய்யும்போது அதிக எடை இல்லாமல் இருந்தால் நல்லது. எல்லோராலும் செய்யக்கூடிய வெகு சுலபமான அதே சமயம் மிகக் குறைந்த விலையில் செய்யும் ஜடையின் செய்முறையை நாம் இப்போது பார்ப்போம்.













தேவையான பொருட்கள்

- மேல் வட்டத்துடன் கறுப்பு அட்டை -
- ஜடையை தேங்காயின் உச்சிக் குடுமியில் மாட்ட - கறுப்பு [அ] ஜரிகை நூல் சிறிது,
- சம்பா ஜரிகை - தேவையான அளவு,
- சிறிய பூக்கள், மணிகள், கற்கள் அலங்கரிக்க,
- உல்லன் நூல் 3 [அ] 4 வண்ணங்கள் - தலா 3 மீட்டர்,
- உல்லன் பூ செய்யும் சக்கரம்,
- ஜரிகை குஞ்சலம், வளையல் 2.5' ஒன்று
- கோட்டா ஜரிகை வேண்டிய அளவு, பெவிகால், ஊசி, கத்திரி - உதவிக்கு



அம்மன் ஜடைகள்!

செய்முறை :


முதலில் உல்லன் சக்கரம் கொண்டு பெரிய பூ ஒன்று, நடுத்தர பூ ஒன்று, சிறிய பூ ஒன்று செய்து வைத்துக் கொள்ளவும்.

அடுத்து உல்லன் நூலை நான்கு விரல்களில் சுற்றி வெளியே எடுத்து ஒரு முனையை அதே நூலால் முடி போட்டு மறு முனையில் கத்தரித்து நுழைந்து வெட்டினால் கொத்தாகக் குஞ்சலமாக விரியும். அதைப் பல கலர்களில் செய்து வைத்துக் கொள்ளவும்.

ஜடை செய்முறை :

முதலில் வட்டமாக ஒரு மூடி கொண்டு கறுப்பு அட்டையில் வரைந்து கத்தரித்துக் கொள்ளவும். அதை நடுப் புள்ளி வரை பாதியாகக் கத்தரித்து சிறிது மடக்கி நடுவில் பெவிகால் கொண்டு ஒட்டிவிட்டால் அது அகண்ட கூம்பு வடிவத்தில் இருக்கும். அதுதான் கொண்டை


4


5


6

வடிவம்!

அதே அட்டையை ¼" நீளத்தில் மேலே 3 இன்ச், கீழே 1½" இருக்கும் படி கத்தரித்துக் கொள்ளவும். வட்டத்தையும் நீளமாகக் கத்தரித்து வைத்திருக்கும் அட்டையையும் சேர்த்து ஒட்டிவிடவும். அதன் ஓரங்களில் சம்பா ஜரிகையை ஒட்டி விடவும். இப்போது ஜடையின் அடிப்பகுதி தயார்!


★ நாம் ஏற்கெனவே செய்து வைத்திருக்கும் உல்லன் குஞ்சலங்களை நீளமாக உள்ள அட்டையில் கலர்களை மாற்றி மாற்றி மேல்புறத்திலிருந்து கீழே வரை ஒட்டி விடவும். கலர் காம்பினேஷன் பார்த்து, ரசனையுடன் ஒட்டவும்.

★ பின்பு பிளாஸ்டிக் வளையலில் ஜரிகையைச் சுற்றி ஒட்டி அதன் உள்ளே நாம் செய்து வைத்துள்ள உல்லன் பூக்களினை ஒன்றின் மேல் ஒன்று ஒட்டி மேலே பூக்கள் நம் விருப்பத்திற்கேற்ப அலங்கரிக்கலாம். இந்தக் கூம்பை, ஜடையின் மேற்புறம் இருக்கும் வட்ட வடிவத்தின் மீது ஒட்டவும்.

★ ஜடைக்குக் கீழே ஜரிகைக் குஞ்சலங்களை (கடைகளில் கிடைக்கும்) வைத்துத் தைக்கவும்.











1. இதே போல நம் கற்பனைத் திறனுக்கேற்ற அதே அட்டையில் முத்துக்களைப் பதித்தும் செய்யலாம்.

2. அதே அட்டையில் கறுப்பு உல்லனை நீளமாக ஒரு கத்தை போல நேரே வெட்டி அதில் தங்கநிற வளையல்களை நுழைத்து இடையிடையே செயற்கை மணி, ஜிமிக்கி வைத்து அலங்கரிக்கலாம்.

3. கடைகளில் விற்கும் சவுரியைப் பின்னலாகப் போட்டு அதில் நகைகள் கொண்டும் அலங்கரிக்கலாம்.

4. உல்லன் சக்கரத்தைக் கொண்டு நிறைய பெரிய, சிறிய பூக்களாகச் செய்து வரிசையாக ஒட்டி அலங்கரிக்கலாம்.

5. அதே போல உல்லனுக்குப் பதிலாக வெட்டிவேரை வெட்டி, ஜடையாகப் பின்னியும் அழகான ஜடை செய்யலாம்.

6. அம்மனுக்கு ஜடையை வைக்கும் போதும், சிறிது தண்ணீரை ஜடையின் மீது தெளித்து விட்டால், பூஜை அறையே வெட்டிவேர் வாசனையில் மண மணக்கும்!

- வனஜா சௌந்தர்ராஜன்,
சென்னை - 83.

முன்னோர்களுக்கு திதி செய்ய மறந்தவர்களுக்கும், திதி, தர்ப்பணம் செய்யத் தவறியவர்களுக்கும் பித்ரு பூஜை நிறைவேற்ற ஏற்ற காலம் மஹாளயபக்ஷ அமாவாசையே. பித்ரு தர்ப்பண க்ஷேத்ரமான

காசியில் மஹாளய அமாவாசை அன்று

(28-9-2008) நடைபெறும் பித்ரு பூஜையிலும் அன்னதானத்திலும்

அனைவரும் கலந்து கொண்டு பித்ருக்களின் ஆசிர்வாதத்தை பெற அன்புடன் அழைக்கிறோம்

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட் 10 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து நடத்தும் முன்னோர் வழிபாடு

பித்ரு க்ஷேத்ரமாக விளங்கும் காசியில் அன்பர்கள் அனைவராலும் **கங்கைக்கு ஜல தீபம் ஏற்றி மஹாளய அமாவாசை** அன்று முன்னோர் வழிபாடு செய்து, அவர்கள் நினைவாக அன்னதானம் செய்ய முடியும் என்ற இறை சிந்தனையோடு அனைத்து வாசக அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க **ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்** மூலம் **மஹாளய அமாவாசை அன்று காசியில் பித்ருக்கள் நினைவாக கங்கையில் ஜலதீபம் ஏற்றி அவர்கள் நினைவாக வஸ்தரதானத்துடன் அன்னதானமும் வைதீக முறைப்படி செய்யப்படுகிறது.** மஹாளய அமாவாசை அன்று **தர்ப்பணமும், அன்னதானமும்** செய்தால் பித்ருக்கள் பூரண திருப்தி ஏற்பட்டு அவர்கள் நமக்கும் நம் சந்ததிகளுக்கு அனைத்து வகை ஆரோக்யத்தையும் அளிக்கிறார்கள். மஹாளய அமாவாசை அன்று நடைபெறும் **அன்னதான திருப்பணி** மற்றும் **முன்னோர் வழிபாட்டுக்கு** தங்களால் இயன்ற நன்கொடையை அனுப்பி **பித்ருக்களின் ஆசிர்வாதத்தை பெற்று அனைத்து பித்ரு தோஷங்களில் இருந்து** நிவர்த்தி பெற அன்புடன் அழைக்கிறோம்.

பித்ருக்கள் நினைவாக நடைபெறும் அன்னதானத்திற்கு தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு திருக்கயிலாயத்தில் இருந்து நேரடியாக பெறப்பட்ட கீழ்கண்ட ருத்ராட்சங்கள் அனுப்பி வைக்கப்படும்

- **ரூ. 300** - அனுப்பும் அன்பர்களுக்கு, 5 முகம் கொண்ட ருத்ராட்சம் 5 அனுப்பி வைக்கப்படும்.
  (5 முக ருத்ராட்சத்தை அணிபவர்களுக்கு அனைத்து தோஷங்களும் நிவர்த்தியாகும். ரத்த அழுத்தம், இதய கோளாறுகளை சீர் செய்யும்).
- **ரூ. 500** - அனுப்பும் அன்பர்களுக்கு, ருத்ராட்ச மாலை அனுப்பி வைக்கப்படும்.
  (ருத்ராட்ச மாலை அணிபவர்கள் அனைத்து சிவ ஸ்தலங்களையும் தரிசித்த மஹாபுண்ணிய பலனை பெறலாம்).
- **ரூ. 1000** - அனுப்பும் அன்பர்களுக்கு, 3 முகம் (மஹா சரஸ்வதி) கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
  (3 முக ருத்ராட்சத்தை அணிபவர்களுக்கு அறிவு வளர்ச்சி, கல்வி மேம்பாட்டிற்கும் உதவும். குழந்தைகளுக்கும் மாணவர்களுக்கும் பொருத்தமானது).
- **ரூ. 2000** - அனுப்பும் அன்பர்களுக்கு, 6 முகம் (ஸ்ரீசுப்பிரமணியர்) கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
  (6 முக ருத்ராட்சத்தை அணிபவர்களுக்கு வியாபாரத் தடை நீங்கி, தொழில் வளர்ச்சி சிறப்பாகும். மேலும் அஸ்வமேத யாக பலனையும் தரவல்லது).
- **ரூ. 3000** - அனுப்பும் அன்பர்களுக்கு, 7 முகம் (சப்த ரிஷி) கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
  (7 முக ருத்ராட்சத்தை அணிபவர்களுக்கு தடைபட்ட திருமணம் நடக்கும். மேலும் செவ்வாதோஷம் விலகி சுப நிகழ்ச்சிகள் கைகூடும்).
- **ரூ. 4000** - அனுப்பும் அன்பர்களுக்கு, 11 முகம் (வீர ஹனுமான்) கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
  (11 முக ருத்ராட்சத்தை அணிவதால் குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திர பாக்கியம் உண்டாகும்).
- **ரூ. 5000** - அனுப்பும் அன்பர்களுக்கு, கௌரி சங்கர் (சிவ-பார்வதி) ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
  (கௌரி சங்கர் ருத்ராட்சத்தை அணிபவர்கள் கணவன் - மனைவி ஒற்றுமையுடன் வாழ்வார்கள். நீண்ட ஆயுளையும் தரும்).
- **ரூ. 6000** - அனுப்பும் அன்பர்களுக்கு, ஒரு முகம் (ஸ்ரீபரமேஸ்வரன்) ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
  (ஒரு முக ருத்ராட்சத்தை அணிந்தவர்களை எதிரிகளால் கூட வெல்ல முடியாது மற்றும் பிரம்மஹத்தி தோஷமும் நீங்கும்).
- **ரூ. 7000** - அனுப்பும் அன்பர்களுக்கு, ஸ்ரீகணேஷ் (விநாயக பெருமானின் முழுத்தோற்றம்) ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
  (ஸ்ரீகணேஷ் ருத்ராட்சத்தை அணிபவர்களுக்கு செழிப்பான வளர்ச்சியுடன் எடுத்த காரியத்தில் வெற்றியும், அஷ்ட லக்ஷ்மிகளின் அருளும் கிடைக்கும்).
- **ரூ. 10000** - அனுப்பும் அன்பர்களுக்கு, 21 முகம் (குபேர ஸ்வரூபம்) கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
  (சகல ஆன்மீக சக்திகளையும், ஆத்ம பலத்தையும், ஆரோக்கியத்தையும் வழங்கி, சகல செல்வங்களும் சொத்துக்களும், சுகங்களும் கிடைக்கும்).

பித்ருக்களுக்கு பிண்டப்பிரதானம், தர்ப்பணம் செய்ய **காசி, கயா,** பிரயாகை **ஆகிய மூன்று** பித்ரு க்ஷேத்ரங்களுக்கும் சேர்த்து ரூபாய் 1000 அனுப்பும்போது யாருக்கு திதி செய்ய விரும்புகிறீர்களோ அவரின் **பெயர், திதி மற்றும் கோத்ரம்** போன்ற விபரங்களை தெரிவித்தால், தங்கள் விருப்பபடி மஹாளய அமாவாசை அன்று முன்னோர் வழிபாடு முறையாகவும், முழுமையாகவும் செய்து, **அவர்களின் நினைவாக வஸ்திரதானத்துடன் அன்னதானமும்** செய்யப்படும். பித்ரு காரியங்களுக்கு பணம் அனுப்புபவர்களுக்கு காசி, கயா, பிரயாகை ஆகிய 3 இடங்களிலும் உள்ள தெய்வீக ஆலமரமான **'அக்ஷய வடத்தின்'** படமும், கயாவில் உள்ள **விஷ்ணு பாதமும், விஷ்ணு பாதத்தின்** படமும் மற்றும் ஸ்ரீஅன்னபூரணி அன்னையின் விக்ரஹமும் கங்கா தீர்த்தத்துடன் கூடிய காசி சொம்பு, காசி கயிறு அனுப்பி வைக்கப்படும். நம் வீட்டில் செய்யும் சிரார்த்தத்திற்கு தாய், தந்தையர், உறவினர்கள் மட்டுமே பங்குகொள்ள வாய்ப்புண்டு. 3 பித்ரு க்ஷேத்ராங்களில் ஏதாவது ஒரு **க்ஷேத்ரத்தில்** பிண்டப்பிரதானம் செய்தால் **ஏழு தலைமுறைக்கு பித்ருக்கள் அனைவரும் முக்தி அடைவதுடன் பித்ரு தோஷமும் நிவர்த்தியாகும்.**

பணம் அனுப்பும் அன்பர்களுக்கு ரசீதும், மேற்கண்ட பிரசாதங்களும் மஹாளயபக்ஷம் முடிந்த பிறகு அனுப்பி வைக்கப்படும்

மஹாளய அமாவாசை அன்று முன்னோர்கள் நினைவாக நடைபெறும் அன்னதான சேவையிலும், முன்னோர் வழிபாட்டிலும் ஈடுபட விரும்பும் அன்பர்கள் தங்கள் நன்கொடையை Cheque/D.D/M.O. மூலம் **Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai** என்ற பெயருக்கு எடுத்து கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி பித்ருக்களின் ஆசியை பெறுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.



நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வரி விலக்கு உண்டு

ஸ்ரீஅன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்

SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd)

4, Appavoo Gramani IIIrd Street R.A.Puram, Chennai - 28. Ph: 044 - 32464848





ஆகஸ்ட் முதல் வாரம் உலக தாய்ப்பால் வாரமாக உலகெங்கும் கொண்டாடப்படுகிறது 'தாய்ப்பால் குழந்தைகளின் தார்மீக உரிமை. அதைக் கொடுக்கத் தயங்கக் கூடாது' என வலியுறுத்தவே தாய்ப்பால் வாரம் கொண்டாடப்படுகிறது. குழந்தை வயிற்றுக்குள் இருக்கும்போது பத்திரமாகக் காப்பது, கர்ப்பப்பை. அது வெளியே வந்தபின் நோய்களிலிருந்து பாதுகாக்கும் கேடயம், தாய்ப்பால்தான்!

அம்மா தரும்

தாய்மார்களின் கவனத்திற்கு :

★ எல்லா தாய்மார்களையும் போல் உங்களாலும் பாலூட்ட முடியம் என்று தீர்க்கமாக நம்புங்கள். இந்த எண்ணம் தான் தாய்ப்பாலைச் சுரக்க வைக்கக்கூடிய இயற்கையான வழி!

★ குழந்தை பிறந்தது முதல் ஆறு மாதம் வரை தாய்ப்பாலை மட்டுமே கொடுங்கள். வேறு எந்த உணவோ, பானமோ தேவை இல்லை.

★ குழந்தை பிறந்தவுடனே தாய்ப்பால் கொடுக்க ஆரம்பித்துவிட வேண்டும்.

★ முதல் மூன்று நாட்கள் சுரக்கும் 'கொலஸ்ட்ரம்' என்ற மஞ்சள் நிறத் திரவத்தை, கண்டிப்பாகக் கொடுக்க வேண்டும். இதில்தான் குழந்தைகளை நோயிலிருந்து காக்கக்கூடிய நோய் எதிர்ப்பு சக்தி உள்ளது.

★ தாய்ப்பால் கொடுக்க நேர அவகாசம் எல்லாம் கிடையாது. குழந்தை எப்போதெல்லாம் கேட்கிறதோ, அப்போதெல்லாம் தடையின்றிப் புகட்டலாம்.

★ மற்ற பால் வகைகள், பால் பவுடர் எல்லாமே தாய்ப்பாலை விட, தரம் தாழ்ந்தவைதான். புட்டிப்பால் குழந்தையின் ஆரோக்கியத்திற்குக் கேடானது. வயிற்றுக் கோளாறுகளுக்கு மூலகாரணமே புட்டிப்பால்தான்.

தாய்ப்பால் ஊட்டுவதால் உண்டாகும் நன்மைகள் :

★ தாய்ப்பால் கொடுக்கும் போது, குழந்தைக்கும், தாய்க்கும் இடையே ஒரு உணர்வுபூர்வமான நெருக்கம் உருவாகிறது. குழந்தைக்குக் கிடைக்கும் உணவை விட அந்த அன்பும், அரவணைப்பும்தான் அதிமுக்கியம்.

★ தாய்ப்பாலில் குழந்தைக்குத் தேவை



அமிர்தம்!

யான புரதம், கொழுப்பு, லாக்டோஸ், வைட்டமின், இரும்புச் சத்து, தாது உப்புகள், நீர், என்ஸைம்கள் ஆகியவை சரியான விகிதத்தில் அமைந்துள்ளன.

★ பசும்பாலுடன் ஒப்பிடும்போது, தாய்ப்பாலில் இரும்புச் சத்து, வைட்டமின் ஏ, சி, டி மற்றும் ஈ ஆகியவை அதிகமாக உள்ளன.

★ தாய்ப்பால் பரிசுத்தமானது; கிருமித் தொற்று இல்லாதது; நோய் எதிர்ப்புச் சக்தி மிகுந்தது.

★ தாய்ப்பால் அருந்தும் குழந்தைகளுக்கு பிற்காலத்தில் நீரிழிவு, இதய நோய், எக்ஸிமா, ஆஸ்துமா, அலர்ஜி ஆகிய தொந்தரவுகள் குறையும்.

★ தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளின் ஐ.க்யூ. அதிகரிக்கும். அவர்களின் மூளை வளர்ச்சிக்குத் தாய்ப்பால் உறுதுணையாக இருப்பதால், படிக்கும் திறனும், கணித அறிவும் கூடும்.



★ தாய்ப்பால் கொடுப்பதால் தாய்க்கு பிரசவத்திற்குப் பின் ஏற்படும் இரத்தக் கசிவு, இரத்த சோகை ஆகியவை குறையும். சினைப்பை புற்றுநோய், மார்பகப் புற்று நோய் வராமல் காக்கும்.

தாய்ப்பாலைப் பற்றிய சில தவறான நம்பிக்கைகள் :

1. தாய்மார்கள் அதிகமான அளவு பால் குடிக்க வேண்டும்.

இதில் உண்மை இல்லை. எந்த வகையான உணவோ, பானமோ, சத்தான, சரிவிகிதமுள்ளதாக சாப்பிட்டால் போதும். பால் சுரக்கும் அளவு, தாய் குடிக்கும் பாலின் அளவில் இல்லை. குழந்தையின் உறிஞ்சும் திறனில் உள்ளது.

2. பால் கொடுக்கும் தாய்மார்கள் சில வகை உணவுகளைச் சாப்பிடக்கூடாது.

ஏதாவது ஒரு உணவைப் பற்றி உங்களுக்கு சந்தேகம் இருந்தால், சிறிதளவு சாப்பிட்டுப் பாருங்கள். அது குழந்தைக்கு தொந்தரவு இருந்தால், அந்த உணவுப் பொருளைத் தவிர்த்து விடவும்.

3. சிறிய மார்பகங்கள் போதுமான அளவு பால் சுரப்பது இல்லை.

மார்பகங்களின் அளவுக்கும், பால் சுரப்பிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. மார்பிலுள்ள கொழுப்புத் திசுக்களைப் பொறுத்தே, அளவு அமையும். ஆனால், பால் சுரப்பது, மார்பின் விசேஷ சுரப்பிகள் மூலம் நடைபெறும்.

4. குழந்தைக்கு இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை பால் கொடுக்க வேண்டும்.

அப்படி எந்த வரைமுறையும் இல்லை. குழந்தை எப்போதெல்லாம் பசித்து அழுகிறதோ, அப்போதெல்லாம் கொடுக்கலாம்.

5. குழந்தை அழுதாலே பால் கேட்கிறது என்றுதான் அர்த்தம்.

இல்லை. தூக்கமின்மை, வலி, பசி, அசௌகரியம் என்று பல காரணங்களால் குழந்தை அழலாம். பால் கொடுக்கும் போது, குழந்தையின் வயிறு நிறையும் வரை கொடுங்கள். அழுகைக்கான காரணத்தை கண்டுபிடித்து தீர்வு காண்பது நல்லது. வயிறு நிறைந்தும், குழந்தை அடிக்கடி தொடர்ந்து அழுது கொண்டிருந்தால், மருத்துவரை அணுகுவது நல்லது.

– *இணையதளத்திலிருந்து*

மு. சுலைஹா உம்மாள்,
கீழக்கரை.

ஜெயஸ்ரீ ராஜ் நினைவுச் சிறுகதைப் போட்டி - 2008

வாசகியரே... உங்கள் படைப்புத் திறனை நிரூபிக்க மீண்டும் ஒரு வாய்ப்பு!

முதல் பரிசு	இரண்டாம் பரிசு	மூன்றாம் பரிசு
ரூ.10,000	ரூ.7,500	ரூ.5,000



விதிமுறைகள் :

★ பெண்கள் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும். முழு முகவரி, புகைப்படம் தேவை.

★ மங்கையர் மலரில் 4 பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.

★ சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதி மொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்பட மாட்டா.

★ கையால் எழுதப்பட்ட அல்லது தட்டச்சு செய்யப்பட்ட கதைகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். ஜெராக்ஸ் பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

★ முழு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.

★ ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

★ போட்டிக்கு அனுப்பும் கதையை, முடிவுகள் வெளியாகும் வரை வேறு இதழுக்கோ, இணையதளத்துக்கோ, போட்டிக்கோ அனுப்பக் கூடாது.

★ பரிசுக்குரிய கதைகளை நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.

★ முடிவு வெளியாகும் வரை, எவ்வித விசாரிப்புகளும் கூடாது.

★ தேர்வாகாத கதைகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

★ வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க முடிவுத் தேதி 'ஆகஸ்ட்-10' வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

★ முதல் பரிசுக் கதை செப்டெம்பர் இதழில் வெளியாகும்.

ஜெயஸ்ரீ ராஜ் நினைவுச் சிறுகதைப் போட்டி - 2008

என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், மங்கையர் மலர்,
கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.

கதைகள் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி : ஆகஸ்ட்-10

ஆகஸ்ட் மாதம் எப்படி?

	1.8.2008 அன்று ராசி கிரகநிலை		சந், சூரி, சுக், புத, கே
ரா			சனி செ
குரு			


கிரக நிலை



ராசி பலன்களும் எளிய பரிகாரங்களும்

கணித்து வழங்குபவர் :

டாக்டர் முருகடிமை துரைராஜ்



மேஷம்



(அசுவினி, பரணி,
கார்த்திகை 1 ஆம் பாதம்)

மேஷ ராசி நேயர்களே!

புதிய முயற்சிகளில் வெற்றிகள் கிட்டும். பூர்வீகச் சொத்தில் பிரச்னை தீரும். உமது மகன் (அ) மகள் வெளிநாடு செல்ல நேரும். செய்யும் தொழிலில் கூட்டாளிகளிடம் சற்று அனுசரித்துப் போக நேரும். பெண்களுக்குப் புகுந்த வீட்டில் நல்ல சூழ்நிலை நிலவும். மாணவர்களுக்கு வெளிநாடு சென்று மேல்படிப்பைத் தொடர வாய்ப்பு கிட்டும். உத்யோகஸ்தர்களுக்கு மேல் முறையீடுகளில் வெற்றி கிட்டும். சிலருக்குப் பதவி உயர்வு கிட்டும். கலைஞர்கட்குச் செல்வாக்கு பெருகும். வருவாய் பல வழிகளில் வரும். வெளியூர் பிரயாணம் அதிகம் இருக்கும். 9.8.2008 மாலை மணி 4.35 முதல் 12.8.2008 காலை மணி 5.07 வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

அதிர்ஷ்ட எண் : 3, 6, 9.

அதிர்ஷ்ட நிறம் : சிவப்பு, ரோஸ்,மஞ்சள்.

பரிகாரம் : ஸ்ரீ நரசிம்மரையும், ஸ்ரீ ஆஞ்சநேயரையும் வழிபடவும். 'அனுமன் சாலீஸா' வாசிக்க, தொழிலில் நிலவும் குழப்ப நிலை அகலும்.

ரிஷபம்

(கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி,
மிருகசீரிஷம் 1, 2 ஆம் பாகங்கள்)

ரிஷப ராசி நேயர்களே! நல்ல சரளமான பணப்புழக்கம் உண்டு. வீடு, மனை, வாகனம் வாங்க வங்கி (அ) அரசு மூலம் கடன் கிடைக்கும். சிலர் பெற்றோர் பெயரில் அறக்கட்டளை நிறுவுவர். மாணவர்கள் கடின உழைப்பினால் படிப்பில் உரிய இடம்பெறுவர். வியாபாரிகளுக்கு அரசு வழி கெடுபிடி அகலும். உத்யோகஸ்தர்களுக்குச் சாதகமான பதவி உயர்வும் இடமாற்றமும் கிடைக்கும். கலைஞர்களுக்கு அரசு முறையில் விருது, பரிசு, பாராட்டு என கிடைக்கும். 12.8.2008 காலை மணி 5.07 முதல் 14.8.2008 மாலை மணி 4.41 வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

அதிர்ஷ்ட எண்கள் : 5, 6, 8.

அதிர்ஷ்ட நிறம் : ரோஸ் மற்றும் பச்சை.

பரிகாரம் : பிரதி வியாழன் ஸ்ரீ தட்சிணாமூர்த்தியையும், பிரதி வெள்ளிக்கிழமை ஸ்ரீ மகா லக்ஷ்மியையும் பக்திசிரத்தையுடன் வழிபட நன்று. தடைகள் விலகும். சௌபாக்யம் பெருகும்.



மிதுனம்



(மிருகசீரிஷம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

மிதுன ராசி நேயர்களே! வாக்கினால் வளமும் நலமும் கிட்டும். கண் சம்பந்தமான உபாதைகள் வர வாய்ப்பு உள்ளது. பிரயாணத்தின்போது உமது உடைமைகளில் கூடுதல் கவனம் தேவை. அரசு வழி அனுகூலம் தேடி வரும். கடன் தீரும். கவலை விலகும். பெண்களுக்கு, சுபகாரியம் நடக்கும். மாணவர்களுக்குப் படிப்பு தொடர்பான நற்செய்திகள் வரும். சிலர் வெளிநாடு செல்ல நேரும். வியாபாரிகளுக்குப் பொருளா தார உதவி செய்யக்கூடிய கூட்டாளிகள் கிடைப்பர். உத்யோகஸ்தர்களுக்கு வேலை பளு கூடும். சாதகமான இடமாற்றத்துக்கு வாய்ப்பு உள்ளது. 14.8.2008 மாலை மணி 4.41 முதல் 17.8.2008 காலை மணி 2.03 வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

அதிர்ஷ்ட எண்கள் : 5, 6, 9.

அதிர்ஷ்ட நிறம் : பச்சை மற்றும் கத்திரிப்பூ நிறம்.

பரிகாரம் : பிரதி புதன் ஸ்ரீ சக்கரத்தாழ்வாரையும் பிரதி சனி ஸ்ரீ யோகநரசிம்மரையும் வழிபடவும். எதிலும் வெற்றியே கிட்டும்.

கடகம்

(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம்)

கடக ராசி நேயர்களே! தொட்டது துலங்கும். முடியாது எனத் தள்ளிப் போட்டு வந்த காரியம் ஒன்று நடக்கும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். நல்ல பணியாட்கள் கிடைப்பர். தொழிலில் புதிய முதலீடுகள் பெருகும். வழக்கில் வெற்றி கிட்டும். சிறு சிறு மனஸ்தாபம் காரணமாகப் பிரிந்து வாழும் தம்பதிகள் இணைந்து வாழ்வதற்கு இடமுண்டு. பெண்களுக்குத் தகப்பனார் மூலம் கணிசமான பொருள் உதவி கிட்டும். மாணவர்கள் உயர்கல்வி பயில நல்ல வாய்ப்புகள் கிட்டும். சிலருக்கு அரசு மூலம் பெருமையும் புகழும் தேடி வரும். வியாபாரிகள் அகலக்கால் வைக்கக் கூடாது. உத்யோகஸ்தர்களுக்கு மேல் முறையீடுகளில் வெற்றிகிட்டும். கலைஞர்களுக்கு வெளியூர் பிரயாணம் மூலம் அனுகூலம் கிட்டும். 17.8.2008 காலை மணி 2.03 முதல் 19.8.2008 இரவு மணி 8.55 வரை சந்திராஷ்டமம்.

அதிர்ஷ்ட எண்கள் : 2, 3, 6, 9.



அதிர்ஷ்ட நிறம் : பச்சை மற்றும் இளஞ்சிவப்பு.

பரிகாரம் : பிரதி சோமவாரம் சிவன் கோயில் சென்று வழி பட்டு வரவும். மகிழ்ச்சி கிட்டும்.

சிம்மம்



(மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்)

சிம்ம ராசி நேயர்களே! தொழில் வழி பிரயாணங்கள் நல்ல லாபம் தரும். நட்பு வட்டம் விரிவடையும். உமது மகன் (அ) மகள் வழியில் நற்செய்திகள் வரும். கோர்ட், வழக்கில் எதிர்பாராத திருப்பங்கள் நிகழும். கடன் தீரும். இளம்தாய்மார்கள், உடல்நலனில் கவனம் வைக்க வேண்டும். பெண்கள் வாழ்வில் ஏற்பட்ட தற்காலிகக் கவலைகள் மாறும். மாணவர்களுக்கு எதிர்பார்த்த கல்விக் கடன் கிடைக்கும். வியாபாரிகளுக்கு அரசு வழியில் நிலவிய சங்கடம் அகலும். வியாபார அபிவிருத்தி கிட்டும். உத்யோகஸ்தர்களுக்கு மேல்முறையீடுகளில் வெற்றி கிட்டும். பதவி உயர்வு கிட்டும். கலைஞர்களுக்கு அரசு வழி அனுகூலம் தேடி வரும். 19.8.2008 இரவு மணி 8.55 முதல் 21.8.2008 நண்பகல் மணி 1.42 வரை சந்திராஷ்டமம்.

அதிர்ஷ்ட எண்கள் : 3, 5, 9.

அதிர்ஷ்ட நிறம் : சிவப்பு மற்றும் ஆரஞ்சு.

பரிகாரம் : தினசரி சூரிய நமஸ்காரம் செய்க. காயத்ரி மந்திரம் சந்தியா காலங்களில் தவறாமல் செய்க. பிரதோஷ வழிபாடு அவசியம்.

கன்னி

(உத்திரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)

கன்னி ராசி நேயர்களே! வெளிநாட்டிலிருந்து எதிர்பாராத நற்செய்திகள் வரும். மூத்த சகோதரரால் உதவியும் இளைய சகோதரரால் எதிர்பாராத செலவும் உண்டாகும். அவசியம் இல்லாத பிரயாணங்களைத் தவிர்த்தல் நன்று. கடன் கணிசமாகத் தீரும். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை. கணவன் - மனைவி இடையில் சிறு சிறு கோபதாபங்கள் வந்தவண்ணமிருக்கும். எனினும் பிரிவுக்கு இடமில்லை. வீடு, மனை வாங்க எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிட்டும். பெண்களுக்குத் தாயார் வீட்டின் மூலம் உதவியும் ஒத்தாசையும் கிட்டும். மாணவர்கள் வெளியூர் (அ) வெளிநாடு சென்று படிக்க நேரிடும். வியாபாரிகளுக்கு அரசு வழி நெருக்கடிகள் உண்டாகும். உத்யோகஸ்தர்களுக்குச் செல்வாக்கான நேரம். 21.8.2008 நண்பகல் மணி 1.42 முதல் 23.8.2008 மாலை மணி 5.06 வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

அதிர்ஷ்ட எண்கள் : 5, 6, 9.

அதிர்ஷ்ட நிறம் : பச்சை.

பரிகாரம் : தினசரி ஸ்ரீ விநாயகர் வழிபாடு செய்க. காரியசித்தி மாலை பாராயணம் செய்க. தினமும் காக்கைக்கு அன்னமிடவும்.



துலாம்



(சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்)

துவளாத மனமும், துல்லியமாகச் சிந்தித்துச் செயல்படும் ஆற்றலும் கொண்ட துலாம் ராசி நேயர்களே! கனவுகள் நனவாகும். காதல் கல்யாணத்தில் முடியும். கடன் தீரும். இளைய சகோதர வழியில் நற்செய்திகள் வரும். வெளிநாடு செல்ல வாய்ப்பு கிட்டும். ஏற்றுமதி இறக்குமதி வாணிபம் சிறப்படையும். மாணவர்களுக்கு வெளிநாடு சென்று உயர்கல்வி பயில வாய்ப்பு கிட்டும். வியாபாரிகளுக்கு அரசு வழியில் உள்ள கெடுபிடிகள் குறையும். ஆதரவு பெருகும். விவசாயிகளுக்கு அரசு சலுகை விலையில் உரம் மற்றும் விதைகள் கிடைக்க இடமுண்டு. கலைஞர்களுக்கு நிலுவை ஊதியம் கணிசமாகக் கிடைக்கும். பரிசும் பாராட்டும் பெறுவர். 23.8.2008 மாலை மணி 5.06 முதல் 25.8.2008 இரவு மணி 7.42 வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

அதிர்ஷ்ட எண்கள் : 3, 6, 8, 9

அதிர்ஷ்ட நிறம் : ரோஸ்

பரிகாரம் : பிரதோஷ காலத்தில் சிவாலய தரிசனம் செய்க. பிரதி வெள்ளிக்கிழமை ஸ்ரீ மகாலக்ஷ்மி பூஜை செய்க. வெள்ளியிலான மலர்களை, குங்குமத்தில் தொட்டு அர்ச்சனை செய்க. மகாலக்ஷ்மி சதநாம ஸ்தோத்திரம் பாராயணம் செய்க. தடைகள் விலகும். தனவிருத்தி கிட்டும்.

விருச்சிகம்

(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

விருச்சிக ராசி நேயர்களே! சரளமான பணப்புழக்கம் உண்டாகும். எதிர்பாராத தனவரவுக்கும் இடம் உண்டு. சிறு சிறு பிரயாணம்மூலம் உடல்நலம் கெடும். காலந்தவறிய உணவுப் பழக்கம் நல்லதல்ல. குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். மாமன், மைத்துனருடன் இணக்கமான போக்கு நிலவும். பெண்களுக்குத் தாயார் வீட்டின் மூலம் தாரா்ள உதவியும் ஒத்தாசையும் கிட்டும். மாணவர்கள் விரும்பிய கல்விப் பிரிவில் சேர்ந்து பயனடைவர். சிலர் வெளிநாடு செல்லவும் நேரும். வியாபாரிகளுக்கு அரசு வழி அனுகூலம் தேடி வரும். உத்யோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிட்டும். வீடு கட்ட கடன் கிடைக்கும். 25.8.2008 இரவு மணி 7.42 முதல் 27.8.2008 இரவு மணி 10.11 வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

அதிர்ஷ்ட எண்கள் : 3, 6, 9.

அதிர்ஷ்ட நிறம் : சிவப்பு மற்றும் ஆரஞ்சு.

பரிகாரம் : தினசரி காலை எழும்போதும் இரவு படுக்கைக்குச் செல்லும்போதும் உமது குலதெய்வத்தை மனமுருகப் பிரார்த்திக்கவும். பிரதி செவ்வாய் அருகில் உள்ள ஸ்ரீ மாரியம்மனுக்கு குங்கும அர்ச்சனை செய்யவும். மனதில் அமைதியும் இல்லத்தில் சந்தோஷமும் நிலவும்.



தனுசு



(மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்)

தனுசு ராசி நேயர்களே! உமது முயற்சிகளில் புதிய உற்சாகம் மலரும். அரசு வழியில் அனுகூலமான செய்திகள் வரும். பூர்வீகச் சொத்தில் உள்ள வில்லங்கம் தீரும். வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். பிரயாணத்தின்போது பணம் பத்திரம். தம்பதியர் இடையில் கருத்து வேறுபாடுகள் விலகும். மாணவர்கள் உயர்கல்வி பயில அரசு (அ) வங்கி மூலம் உதவி கிட்டும். வியாபாரிகள் புதிய ஒப்பந்தம் போடுவார்கள். உத்யோகஸ்தர்களுக்கு தடைப்பட்டு வந்த பதவி உயர்வு (அ) இடமாற்றம் சாதகமாகக் கிடைக்கும். கலைஞர்களுக்குக் கணிசமான வருமானமும் கிட்டும். 27.8.2008 காலை மணி 10.11 முதல் 29.8.2008 இரவு மணி 1.24 வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

அதிர்ஷ்ட எண் : 3, 6, 9

அதிர்ஷ்ட நிறம் : பொன்வண்ணம்.

பரிகாரம் : பிரதி சோமவாரம் சிவாலய தரிசனம் செய்க. பிரதி வியாழன் தட்சிணாமூர்த்திக்கு நெய் தீபம் ஏற்றி மஞ்சள் நிற மலர்களால் (அ) வில்வம், வன்னி போன்றவை மூலம் அர்ச்சனை செய்க. குருவின் ஆசி கிட்டும்.

மகரம்

(உத்திராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2ஆம் பாதங்கள்)

மகர ராசி நேயர்களே! குடும்பத்தில் சுபச் செலவுகள் வரும். புனித ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்ல நேரும். கணவன் - மனைவி இடையில் கருத்தொற்றுமை அவசியம் தேவை. கோபம் லாபம் தராது. கண் சம்பந்தமான சிறு சிறு உபாதைகள் வந்து விலகும். புதிய முயற்சிகளில் பகீரதப் பிரயத்தனம் தேவை. வீடு, மனை என வாங்கத் திட்டமிட நேரும். பெண்களுக்குத் தாயார் வீட்டு ஒத்துழைப்பு கிட்டும். மாணவர்களுக்கு, புதிய இலக்கை திட்டமிட்டுப் பெறலாம். வியாபாரிகளுக்கு அரசு முறை நெருக்கடிகள் நிலவும். உத்யோகஸ்தர்களுக்கு வேலை பளு கூடும். கலைஞர்களுக்கு வரவேண்டிய வாய்ப்புகள், காலதாமதம் ஆகும். வெளியூர் பயணம் செல்லும் போது உடல்நலனில் கவனம் தேவை. 2.8.2008 மாலை மணி 4.14 முதல் 4.8.2008 இரவு மணி 9.03 வரை மற்றும் 2.9.2008 இரவு மணி 1.24 முதல் மாதம் முடியும் வரை சந்திராஷ்டமம். அதிர்ஷ்ட எண்கள் : 3,6,8

அதிர்ஷ்ட நிறம் : நீலம்.



பரிகாரம் : தினசரி காலை ஸ்ரீ வெங்கடேஸ்வர சுப்ரபாதம் கேட்கவும். பிரதி புதன் பெருமாளுக்குத் துளசி மாலை சாற்றவும். 'ஓம் நமோ நாராயணா' என்ற நாமஜெபம் செய்க.

கும்பம்



(அவிட்டம் 3, 4ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3ஆம் பாதங்கள்)

கும்ப ராசி நேயர்களே! எண்ணியது ஈடேறும். இறையருள் கூடும். இன்னல்கள் விலகும். எனினும், எதிலும் கடின முயற்சி மேற்கொள்ள நேரும். சகோதர வழியில் முன்னேற்றம் கிட்டும். நீண்ட கால கனவுகள் நனவாகும் நேரமிது. காதல் கைகூடும். மாணவர்கள் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். வெளி வட்டார பழக்க வழக்கங்களிலும் பொழுது போக்கு அம்சங்களிலும் கவனம் திரும்பாமல் இருப்பது நலம். வியாபாரிகளுக்கு அரசு வழி நெருக்கடிகள் குறையும். உத்யோகஸ்தர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிட்டும். பதவி உயர்வு பெறவும் வாய்ப்பு உள்ளது. கலைஞர்களுக்கு வேறு மொழி பட வாய்ப்புகள் பெருகும். 4.8.2008 இரவு மணி 9.03 முதல் 6.8.2008 பின் இரவு அதாவது 7.8.2008 காலை மணி 5.16 வரை சந்திராஷ்டமம்.

அதிர்ஷ்ட எண்கள் : 3, 6, 8, 9.

அதிர்ஷ்ட நிறம் : புகை வண்ணம்.

பரிகாரம் : பிரதி வியாழன் ஸ்ரீ குருவாயூரப்பனை வழிபடவும். பிரதி சனிக்கிழமை ஸ்ரீ சனிபகவானுக்கு எள் தீபம் ஏற்றவும். ஏழைகளுக்கு இயன்ற அளவு தானதர்மம் செய்க.

மீனம்

(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

மீனராசி நேயர்களே! எடுக்கும் முயற்சிகளில் அபார வெற்றி கிட்டும். கடன் தீரும். சகோதர வழி உறவுகளில் நிலவிய மனஸ்தாபம் விலகும். ஒரு சுபகாரிய நிமித்தமாக கூடி மகிழ வாய்ப்பு வரும். எதிர்பாராத தனலாபத்துக்கு இடமுண்டு. சிலர் வெளிநாடு செல்ல வாய்ப்பு தேடி வரும். பெண்களுக்குத் தாயார் வீட்டு உதவியும் ஒத்தாசையும் கிட்டும். மகன் (அ) மகள் வழியில் மகிழ்ச்சியான செய்தி கிட்டும். மாணவர்களுக்கு உயர்கல்விக்கான வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. சிலர் வெளிநாடு சென்று பயிலவும் இடம் உண்டு. வியாபாரிகளுக்கு புதிய முதலீடு பெருகும். நல்ல பணியாட்கள் கிடைப்பர். உத்யோகஸ்தர்களுக்கு அரசு அதிகாரிகளிடம் நன்மதிப்பு பெறும் வாய்ப்பு உண்டு. விரும்பும் இலாகா மாற்றம் பெறலாம். எனினும் பணிச்சுமை அதிகரிக்கும். கலைஞர்களுக்கு வர வேண்டிய சம்பள பாக்கி கணிசமாக வரும்.



அதிர்ஷ்ட எண்கள் : 3, 6, 9

அதிர்ஷ்ட நிறம் : பொன் நிறம்

பரிகாரம் : பிரதி வியாழன் ஸ்ரீ தட்சிணாமூர்த்திக்கு நெய் தீபம் ஏற்றவும். பிரதோஷ கால வழிபாடு செய்க. சிவநாம ஜெபம் சகல காரிய சித்தி தரும்.

பண்டிகை ஸ்பெஷல் 1



கை வைத்தியம்

பெருங்காயம் ஒரு காயகல்பம் என்பது எவ்வளவு பேருக்குத் தெரியும்? பெருங்காயத்தைப் பயன்படுத்தி என் பாட்டி பல வைத்தியங்கள் செய்வார்.



★ நமைச்சல் ஏற்பட்டு உடம்பெல்லாம் தடிப்பு தடிப்பாக ஆகும். பெருங்காயம் அரை அங்குலத் துண்டை வாழைப்பழத்தில் வைத்து விழுங்கி விட்டால் அரிப்பு நின்று தடிப்பு மறையும்.

★ பசியில்லாமலிருப்பவர்களுக்கு பெருங்காயம், சீரகம், ஓமம், உப்பு சேர்த்து வறுத்துத் தூளாக்கிச் சாப்பிட்டால் அல்லது மோரில் கலக்கிக் குடித்தால், உடனே பசிக்கும்.

★ சுக்கு, பெருங்காயம், பட்டை, ஓமம், இந்துப்பு இவற்றைத் தனித்தனியே வறுத்துத் தூளாக்கி வைக்கவும். சூடான சாதத்தில் அரை ஸ்பூன் கலந்து நெய் சேர்த்துச் சாப்பிட வேண்டும். வாய்க்கு ருசியூட்டி நிறையச் சாப்பிடத் தூண்டும். சோர்வும் நீங்கும்.

★ பாடுபவர், பள்ளிக்கூடத்தில் பாடம் நடத்தும் ஆசிரியர்கள் போன்றோருக்கு திடீரென தொண்டைக் கட்டி விட்டால் 1 துண்டு இஞ்சியில் 1 துண்டு பெருங்காயம் வைத்து மென்று வெதுவெதுப்பான நீர் அருந்தினால் தொண்டை சரியாகும்.

★ பல் வலி (சொத்தைப் பல்) வரும் போது கிராம்புடன் சிறிது பெருங்காயத்தை இடித்து, வலியுள்ள இடத்தில் வைக்கவும். வாயில் உமிழ்நீர் ஊறும். அதை அவ்வப்போது துப்பி விட வேண்டும். சீக்கிரமே வலி குறையும்.

★ பெருங்காயத்தை வறுத்துத் தூளாக்கி நெய்யில் குழைத்து, குழந்தை களின் வயிற்றின் மீது தடவினால் வலி மாயமாகும்.

★ தொண்டை கரகரப்பு உள்ளபோது 5 புதினா, ஓமம் 1 ஸ்பூன், 1 சிறு துண்டு பெருங்காயம் சேர்த்து அரைத்து சிறு உருண்டையாக்கி வெற்றிலையில் வைத்து அரை ஸ்பூன் தேன் சேர்த்து மென்று விழுங்க வேண்டும். பாக்கு, சுண்ணாம்பு போட வேண்டாம்.

★ வயிற்றுக் கோளாறால் பேதியாகும் போது மாங்கொட்டையின் உள்ளே இருக்கும் பருப்பு, பெருங்காயம் இரண்டையும் அரைத்து, சிறிது சிறிதாக உருட்டி 3 முறை சாப்பிட்டால் வயிறு சரியாகிவிடும்.

★ பொதுவாகவே சமையலில் பெருங்காயம் சேர்த்தாலே பல வியாதிகளைத் தவிர்க்கலாம் என்பது நம் முன்னோர்கள் சொல்லி வந்த மருத்துவ வாக்கு!

- பிரேமா ராவ், திருச்சி - 6.



பெருங்காயத்தின் பெருமை!




மின்சார சிம்னி பொருத்தியிருக்கீங்களா?

எங்கள் நண்பர் திர்தீப் முகர்ஜி அவரது ஃப்ளாட்டில் (அடுக்குமாடிக் கட்டிடத்தில் 8வது தளம்) எலக்ட்ரானிக் சிம்னியை சமையலறையில் பொருத்தியிருந்தார். ஒருமுறை சமையல் செய்யும் போது திடீரென அது தீப்பற்றி எரியத் தொடங்கியது. நல்ல வேளையாக, சமயோசனையுடன் மின்சாரத்தைத் துண்டித்து, அருகில் இருந்த தீயணைப்பு சிலிண்டர் உதவியுடன் தீயை அணைத்தார்.

இருந்தாலும் இந்தச் சம்பவம் தீ விபத்தை அறிவிக்கும் அலாரத்தை இயக்கி, தீயணைக்கும் குழுவைக் கூட்டி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பிறகு, கம்பெனி சர்வீஸ் மெக்கானிக் வந்து சிம்னியை சரிசெய்தார். அப்போது தீ விபத்துக்கான காரணத்தை விளக்கமாகச் சொன்னார்.

“சமையலின் போது எழும் எண்ணெய்ப் புகை சிம்னியில் உள்ள சல்லடையில் (ஃபில்டர்) கசண்டு, அல்லது மெழுகு போல படிந்து அதன் துவாரங்களை ஓரளவு அடைத்து விடுகிறது. இந்தக் கசண்டு அதிகமாகப் படிந்து விட்டால் சமையலின் போது ஏற்படும் வெப்பத்தால் உள்ளடங்கிய தீயாக மாறி தீப்பிடித்து விடும் என்று விளக்கினார். இதைத் தடுக்க வாரத்தில் ஒருமுறையாவது சல்லடையைக் கழற்றி எண்ணெய்ப் பிசுக்குப் போக நன்றாகச் சுத்தம் செய்து பொருத்துவது அவசியம்'' என்றார்.



இந்தப் பாதுகாப்பு விதியை, சிம்னி பொருத்தப்பட்ட ஒவ்வொரு இல்லத்திலும் கடைப்பிடிப்பது அவசியம். குறிப்பாக, அசைவ உணவில் அதிகமான மிருகக் கொழுப்பு இருப்பதால் அதைச் சமைக்கும் இல்லத்தில் சிம்னியில் அதிகமாகவே கசண்டு படிய வாய்ப்பிருக்கிறது. அவர்கள் சற்று அதிகப்படியாக கவனம் செலுத்துவது நல்லது.

- ரோஹிணி கிருஷ்ணன்,
கொரேகான்



பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கு

யுவஸ்ரீ கலா பாரதி விருது

மதுரை பாரதி யுவ கேந்திரா சார்பில் இசை, படிப்பு, ஓவியம், சமூகப்பணி, பரதநாட்டியம், பேச்சு, கவிதை, விளையாட்டு ஆகிய துறைகளில் ஏதேனும் ஒரு துறையில் சிறந்து விளங்குகிற L.K.G முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவியருக்கு **'யுவஸ்ரீ கலா பாரதி'** என்ற விருதினையும் கல்லூரி மாணவ மாணவியருக்கு **'சுவாமி விவேகானந்தர்'** விருதினையும் ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட வாரியாக வழங்கி வருகிறோம். ஒவ்வொருவருக்கும் வெள்ளிக்கேடயம் மற்றும் விருதுக்கான பெரிய அளவிலான பட்டயமும், ஸ்படிக மாலையும் வழங்கப்படும்.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள அனைத்து மாவட்டத்தைச் சார்ந்த பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கு இவ்விருது வழங்கும் நிகழ்ச்சி அந்தந்த மாவட்டத்தில் நடைபெற உள்ளது.

ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் ஒவ்வொரு வகுப்பில் உள்ள அனைத்து பிரிவுகளில் இருந்தும் முதல் 5 ரேங்க் பெற்ற மாணவ மாணவியர் மற்றும் இசை, UC MAS, ABACUS ஓவியம், பேச்சு, சமூகப்பணி, பரதநாட்டியம், கவிதை, அனைத்துவிளையாட்டு, பொது அறிவுத்திறன், யோகா ஆகிய துறைகளில் தகுதியுடைய பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர் தாங்கள் பெற்ற பரிசுக்கான ஜெராக்ஸ் பிரதிகளின் நகல்களுடன் அடியிற்கண்ட முகவரிக்கு ஒவ்வொருவருக்கும் வீட்டு முகவரி, தொலைபேசி எண்ணுடன் கூடிய ரூ.10 அஞ்சல் தலை ஒட்டப்பட்ட சுய விலாசமிட்ட கவருடன் உடன் அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் கடந்த மூன்று ஆண்டுகளில் 10ம் வகுப்பு மற்றும் +2 பொதுத்தேர்வில் 80% மற்றும் அதற்கு மேலும் மதிப்பெண் பெற்றவர்கள் தங்கள் பெற்ற மதிப்பெண் பட்டியலின் ஜெராக்ஸ் பிரதியுடனும் விண்ணப்பிக்கலாம்.

தேர்வு செய்யப்பட்டவர்களின் விவரம் அவர்களது வீட்டு முகவரிக்கு அனுப்பப்படும். விருது வழங்கும் விழாவில் அவரவருக்கு எடுக்கப்படும் புகைப்படச் செலவை ஒவ்வொருவரும் கண்டிப்பாக ஏற்க வேண்டும்.





அரிமா நெல்லை பாலு,
நிறுவனர்-பாரதி யுவ கேந்திரா,
G-28, சாந்தி சதன் குடியிருப்பு,
கோச்சடை, மதுரை-625 016.
செல் 94439-30815, 94426 30815.



பண்டிகை ஸ்பெஷல் 1

தமாஷ் கற்பனை

அர்த்தமே தனிதான்!

சேல்ஸ்மேன் உபயோகப்படுத்தும் வார்த்தைகளுக்குப் புதிய அர்த்தங்களை, இன்டர்நெட்டில் கண்டேன். அதை 'மங்கையர் மலர்' வாசகியரும் படித்துச் சுவையுங்களேன்!

New - புதியது - போன மாடலின் புதிய நிறம்.

All new - எல்லாமே புதியது - போன மாட



லின் பார்ட்டுகளை இன்டர்சேஞ்ச் செய்ய முடியாது. எல்லாம் புதிதாகத்தான் வாங்க வேண்டும்.

Designed simplicity - எளிய முறையில் வடிவமைக்கப்பட்டது - அதாவது குறைந்த செலவில் உருவாக்கப்பட்டது.

Advanced design - புத்தம் புதிய வடிவம் - உருவாக்கிய அவர்களாலேயே புரிந்து கொள்ள முடியாதது.

Direct sales only - நேரடி விற்பனை - டிஸ்டிரிபியூட்டர்கள் வாங்க மறுத்து விட்டார்கள்.

Years of development - பல வருடங்களாக முயன்று உருவாக்கியது - அதை இயங்க வைக்க அத்தனை வருடம் பிடித்தது.

Improved - மேம்படுத்தப்பட்டது - முதலில் இயங்காததால் சரிசெய்யப்பட்டது.

Hand crafted - கைவினைப் பொருள் அசெம்பிளி மிஷின் ஆபரேட் செய்யும் போது கிளவுஸ் போட்டுக் கொள்ளவில்லை.

Performance proven - செயல்திறன் நிரூபிக்கப்பட்டது - அதாவது வாரண்டி பீரியட் முடியும் வரை கண்டிப்பாக வேலை செய்யும்.

Meets all standards - எல்லாத் தரப்பினருக்கும் ஏற்றது - அதாவது வியாபாரிகளுக்கு, உங்களுக்கல்ல.

New generation machine - போன தலைமுறையைத் திருப்திப்படுத்த எங்களால் முடியவில்லை.

Customer service across the country - எந்த ஊருக்குப் போனாலும் எங்கள் கஸ்டமர் சர்வீஸ் சென்டர் இருக்குமிடம் தெரிந்து கொள்ளவும்.

Unprecedented performance - எப்படி வேலை செய்யுமென்று எங்களுக்கே தெரியாது.

After sales service - எட்டிக் கூடப் பார்க்க மாட்டோம்.

You will come again and again - பின்னே, அத்தனை சீக்கிரம் நல்ல பொருளைக் கொடுத்து விடுவோமா?

- சி.எஸ். சித்ரா, கோயமுத்தூர்.

சமையல் போட்டி

குக்கரி க்வீன்!

மிக்ஸ் அண்ட் மேட்ச் சமையல் போட்டி முடிவுகள்!

ரூ.250/- பரிசு பெறும் ரெஸிபிகள்

வெரிடோரிங்

தேவையான பொருள்கள் :

வறுத்த சேமியா (நீளமானது) - 100 கிராம்,
கெட்டித் தயிர் - 1 கப்,
சோள மாவு - 3 டேபிள் ஸ்பூன்,
தக்காளி - ¼ கிலோ,
இஞ்சி, பூண்டு விழுது - 2 டேபிள் ஸ்பூன்,
சிறிய வெங்காயம் - 5,
பெரிய வெங்காயம் (நறுக்கியது) -2,
கறி மசாலா பவுடர் - 2 டேபிள் ஸ்பூன்,
மிளகாய்ப் பொடி - 1 டேபிள் ஸ்பூன்,
கொத்துமல்லித் தழை (நறுக்கியது) - சிறிதளவு,
எண்ணெய் - சிறிதளவு,
உப்பு - தேவைக்கு.

செய்முறை :

★ தக்காளி மற்றும் சின்ன வெங்காயத்தை பேஸ்ட்டாக அரைத்துக் கொள்ளவும்.

★ சேமியாவை 20 நிமிடங்கள் தயிரில் ஊறவைக்கவும்.

★ ஊறிய சேமியாவை சிறிது சிறிதாக சோள மாவு கலந்து சிறிய வட்ட வடிவமாக (ரிங் போல) சுற்றிக் கொள்ளவும்.

★ இதைக் காய்ந்த எண்ணெயில் பொன்நிறம் வரும் வரை பொரித்து எடுக்கவும்.

★ ஒரு வாணலியில், நறுக்கிய பெரிய வெங்காயத்தைச் சிறிது எண்ணெயில் வதக்கி அதனுடன் கொத்துமல்லி, கறி மசாலா பவுடர், மிளகாய்த் தூள், இஞ்சி, பூண்டு விழுது சேர்த்து வதக்கவும்.

★ அரைத்து வைத்த தக்காளி மற்றும் சிறிய வெங்காயக் கலவையை இதனு



குக்கரி க்வீன்

போட்டிக்கு வந்து குவிந்த சமையல் குறிப்புகளைப் பொறுமையாக அலசி, சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்துத் தந்த திருமதி.பிரேமா மோகனுக்கு நன்றி!

டன் சேர்க்கவும்.

★ கொதி வந்தவுடன் ஏற்கெனவே தயாரித்து வைத்த சேமியா ரிங்குகளை சேர்க்கவும். அவ்வப்போது கிளறி, ஐந்து நிமிடங்கள் கழித்து இறக்கி விடவும்.

★ சப்பாத்தி, நாண் போன்றவற்றுடன் சாப்பிட சுவையான 'டிஷ்' தயார்.

வெர்மிசெலியுடன் தக்காளி சேர்த்து ரிங் வடிவமாகத் தயார் செய்வதால் இதன் பெயர் வெர்மிடோரிங்!


– எஸ். சுகாஸ்ரீ, மதுரை – 19.



தக்காளி-தயிர் சப்பாத்தி



தேவையான பொருள்கள் :
கோதுமை மாவு - 2 கப்,
தயிர் - ½ கப்,
தக்காளிச் சாறு - ½ கப் (அரைத்து வடிகட்டியது),
கரம் மசாலாத் தூள் - ½ டீஸ்பூன்,



தனியாத் தூள் - ½ டீஸ்பூன்,
மிளகாய்த் தூள் - ½ டீஸ்பூன்,
நெய் - 1 டீஸ்பூன்,
மஞ்சள் தூள் - 1 டீஸ்பூன்,
நறுக்கிய கொத்துமல்லி - சிறிதளவு,
உப்பு, எண்ணெய் -
தேவையான அளவு

செய்முறை :

கோதுமை மாவில் எல்லாப் பொருட்களையும் போட்டு நெய், உப்பு சேர்த்து கெட்டியாகப் பிசையவும். பிசைந்த மாவிலிருந்து சிறிது எடுத்து சப்பாத்திகளாக இட்டு தோசைக்கல்லில் போட்டு எண்ணெய் விட்டு இருபுறமும் திருப்பி எடுக்கவும். சுவையான தக்காளி - தயிர் சப்பாத்தி தயார்!

- கா. சிவசங்கரி,
உப்பிலிப்பாளையம்.


தக்காளி மோர்க் களி

தேவையான பொருள்கள் :

தக்காளி - 4,
தயிர் - 1 கப்,
அரிசி மாவு - 1 கப்,
பச்சை மிளகாய் - 4,
கறிவேப்பிலை - கொஞ்சம்,
உப்பு - தேவையான அளவு,
கடுகு - தாளிக்க,
எண்ணெய் - 2 தேக்கரண்டி,
பெருங்காயம் - கொஞ்சம்.

செய்முறை :

கொதிக்கும் நீரில் தக்காளியைப் போட்டு ஐந்து நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரில் போட்டு வைக்கவும். பிறகு மேல் தோலை உரித்து விட்டு, மிக்ஸியில் போட்டு அரைத்து வைத்துக் கொள்ளவும். அரிசி மாவை வெறும் வாணலியில் வறுத்து எடுத்து வைத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் அரிசி



மாவு, தக்காளி கூழ், உப்பு, பெருங்காயத் தூள், நன்றாகக் கடைந்த தயிர் இவற்றைப் போட்டு கட்டியில்லாமல் கரைத்துக் கொள்ளவும்.

வாணலியில் எண்ணெய் ஊற்றி அடுப்பில் வைத்து கடுகு போட்டு வெடித்ததும் நறுக்கிய பச்சை மிளகாயையும், கறிவேப்பிலையையும் போட்டு வதக்கியதும், கரைத்து வைத்துள்ள தக்காளிக் கலவையைக் கொட்டி நன்கு கிளறவும். அடுப்பை நிதானமாக எரிய விட்டு கலவையைக் கிளறவும். சுருண்டு, கையில் ஒட்டாமல் வந்ததும் கீழே இறக்கவும். இப்போது தக்காளி மோர்க் களி ரெடி. செய்வது சுலபம். சாப்பிடச் சுவையானது. சத்தானதும் கூட.

- சபிதா ஸ்ரீநிவாஸன், வேப்பேரி.

தக தக தக்காளி தோசை

தேவையான பொருள்கள் :

புழுங்கல் அரிசி - ½ கிலோ,
பச்சரிசி - 100 கிராம்,
மிளகாய் வற்றல் - காரத்திற்கேற்ப,
சின்ன வெங்காயம் - ¼ கிலோ,



பச்சை மிளகாய் - 5,
இஞ்சி - 1 விரல் நீளம்,
பூண்டு - 20 பற்கள்,
தக்காளிப் பழம் - ½ கிலோ,
கறிவேப்பிலை - கைப்பிடியளவு,
கொத்துமல்லி - 1 சிறிய கட்டு,
உப்பு - தேவைக்கேற்ப,
கெட்டித் தயிர்- ½ லிட்டர்,
பெரிய வெங்காயம் - ¼ கிலோ,
கடுகு, கடலைப் பருப்பு, உளுத்தம் பருப்பு - 1 ஸ்பூன் (தாளிக்க),
எண்ணெய் - ¼ லிட்டர்.

செய்முறை :

புழுங்கல் அரிசி, பச்சரிசி இரண்டையும் சேர்த்து ஊறவைத்து அத்துடன் இஞ்சி, பூண்டு, மிளகாய் வற்றல் சேர்த்து அரைக்கவும். முக்கால் பதம் வந்ததும் தக்காளியை நறுக்கி மாவுடன் கலந்து அரைத்து உப்பு சேர்த்துக் கொள்ளவும்.

பொடியாக நறுக்கிய சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் இவற்றை கடுகு, உளுந்து கடலைப் பருப்புடன் 5 ஸ்பூன் எண்ணெய் விட்டுத் தாளித்து மாவுடன் கலந்து கொள்ளவும். பிறகு பொடியாக நறுக்கிய கறிவேப்பிலை, கொத்துமல்லி இலையையும் அரைத்த மாவில் சேர்க்கவும்.

எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து தோசையாக வார்க்கவும். மெல்லிய தோசையாக வார்த்து 2 ஸ்பூன் எண்ணெய் விட்டு சிவந்தவுடன் திருப்பவும்.

அரைத்தவுடன் உடனே செய்து சுவையாக திடீர் விருந்தினர்களுக்கும் கொடுத்து மகிழ சுவையான தகதக தக்காளி தோசை ரெடி.

- ச. சுசிலா, மல்லூர்.

தக்காளி அவியல்

தேவையான பொருள்கள் :
தக்காளி - 4 (கெட்டியானது),
தயிர் (கெட்டி) - 2 கப்,
தேங்காய்த் துருவல் - 2 கப்,
பச்சை மிளகாய் - 6,
கடுகு, சீரகம் - சிறிதளவு,
மஞ்சள் பொடி - சிறிது,
தேங்காய் எண்ணெய் - 1 தேக்கரண்டி,
உப்பு - தேவைக்கேற்ப.

செய்முறை :

★ தக்காளியை சிறு துண்டுகளாக நறுக்கி மஞ்சள் பொடி சேர்த்து 5 நிமிடம் மிதமான சூட்டில் வேகவிடவும்.

★ தேங்காய்த் துருவல், பச்சை மிளகாய், சீரகம் சேர்த்து மைய அரைத்து கெட்டித் தயிர் சேர்த்துக் கலக்கவும்.

★ காய்கள் வெந்தவுடன் அரைத்த விழுதை கொட்டிக் கிளறவும்.

★ ஒரு கொதி வந்தவுடன் உப்பு போட்டு, தேங்காய் எண்ணெய்யில் கடுகு தாளித்துச் சேர்த்தால் வாசனை கூடும்.

★ சுவையான விருந்துக்கு தக்காளி அவியல் தயார்.

- சரண்யா மணியன், சென்னை - 4.

சொல்ல விரும்புகிறோம்



✉ 'அம்மன் 64' இணைப்பில் இடம் பெறாதவள், திருச்சி பெரம்பலூர் சிறுவாச்சூர் மதுரகாளி அம்மன். திங்கள், வெள்ளி இரண்டு நாட்கள்தான் இந்தக் கோவில் திறந்திருக்கும். பக்தர்கள் அங்கேயே அரிசியை உரலில் இடித்து வெல்லம் சேர்த்து மாவிளக்குப் போடுவார்கள்.
மேற்கு மாம்பலம்.
ரா. ராஜேஸ்வரி.

✉ இயந்திர கதி வாழ்க்கையில் சிக்கித் தவித்து வரும் என் போன்ற பல குடும்பத் தலைவிகளுக்கு ஒரே சமயத்தில் 64 அம்மன்களை வீட்டிலிருந்தபடியே தரிசிக்க உதவிய மங்கையர் மலருக்கு நன்றி!
சென்னை, மேகலா மாணிக்கம்.

✉ லக்ஷ்மி ராஜரத்தினம் வழங்கிய 'அம்மன் 64' பார்த்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கிய ஆயிரக்கணக்கான வாசகிகளில் நானும் ஒருத்தி.
திருநெல்வேலி,
என். செண்பகவல்லி.

✉ ஷாப்பிங் ஸ்பெஷலில் 'நாங்க ரெடி; நீங்க ரெடியா?' தலைப்பில் ஜெயபாரதம் [ஜே.எஃப்.ஏ.] ஃபர்னிச்சர் நிறுவனம் பற்றிய செய்தி வெளியானது. அந்த விவரங்களைக் கொடுத்தது அதன் நிர்வாக இயக்குநரான திரு.ஈ. ராஜேந்திரன் தான்! ஆனால், கட்டுரையில் ஆர். நாகராஜன் கொடுத்ததாக வெளியானதோடு ஈ. ராஜேந்திரனின் புகைப்படத்திற்குக் கீழே ஆர். நாகராஜன் எனவும் தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கவனக்குறைவுக்கு வருந்துகிறோம்.
[ஆர்.]

✉ ஹேப்பி ஷாப்பிங்! கட்டுரை மிக அருமை. பாராட்டுகள்!
திருப்பாபுலியூர்,
எஸ். அங்கம்மாள்.

✉ நன்மை தரும் நட்சத்திர ஸ்லோகங்கள் வழங்கிய லலிதா வெங்கட்ராமணனுக்கு, மனப்பூர்வமான வாழ்த்துக்கள்!
தஞ்சாவூர், ஜி. ராஜலட்சுமி வரதராஜன்.

✉ 'போட்டின்னாலே அலர்ஜி' வாசகர் குமுறல் அருமை! நடந்ததை புட்டுப் புட்டு வைத்துள்ளார். அனுபவத்தில் நானும் கண்டது.
ஆழ்வார்ப்பேட்டை, பத்மா பாஸ்கர்.

✉ அறுபது வயதைக் கடந்த என் வாழ்க்கையில் பலமுறை ஆரத்தி எடுத்துள்ளேன். ஆனால், மஞ்சள் சுண்ணாம்புக் கலவையின் விளக்கத்தை ஜூலை மாத மங்கையர்



மலரின் மூலம் தெரிந்து கொண்டேன். எல்லாவற்றிற்கும் ஏன், எதற்கு என்று விளக்கம் கேட்கும் என் அடுத்த சந்ததியினருக்கு விளங்க வைக்க உதவிய வாசகிக்கு நன்றி.

சூளைமேடு, லலிதா ராஜப்பா.

✉ 'கடவுள் - நாம் - கேள்விகள்!' கட்டுரை மனிதநேய சிந்தனைக்கு தூண்டுகோலாக அமைந்திருந்தது.

திருச்சி - 18, வி. மோனிஷா பிரியங்கா.

✉ மங்கையர் மலரின் விலை உயர்வுக்கு இவ்வளவு பெரிய விளக்கமெல்லாம் தேவையில்லை. நாங்கள் அனைவரும் நாட்டு நடப்பு அறிந்தவர்களே.

அம்மையப்பன், டி. சாந்தி.

✉ 'ஒரு வார்த்தை' பகுதியில் கூறப்பட்ட இசைஞானி இளையராஜா, எஸ்.பி. முத்துராமன் அவர்களின் வாழ்க்கைச் சம்பவம் மற்றும் ஒரு மனைவியின் ஆதங்கக்கடிதம் படித்தேன். 'இனி ஒரு சமயம் இளமை வராது. இது தரும் சுகத்தை முதுமை தராது' என்ற கவிஞரின் பாடல் என் மனத்தில் ஒலித்தது.

சிவகங்கை, பார்வதி கல்யாணராமன்.

✉ தஞ்சை சகாவின் 'பாதங்கள்' கவிதை அருமை, அழகு!

நெய்வேலி, சு. இந்துமதி.

✉ ஏதோ பிறக்கும்போதே பக்திப் பழமாக பிறந்தாற் போல் அலட்டாமல், ஒரு சராசரி பெண்ணுக்குரிய எளிமையுடன், திறந்த மனதுடன் 'பகவான் பாபா'வை ஆரம்பித்து வைத்திருக்கும் அனுராதா சேகரின் கட்டுரை என் மனத்தை மிகவும் கவர்ந்து விட்டது. இனி பக்திச் சுவை பருக நாங்க ரெடி.

திண்டுக்கல், டி.எம். விஸ்வதா.

மச் மகிழ்ச்சி!

✉ 'பூஞ்சாரல் பக்கங்கள்' - உற்சாக ஊற்றாய், சந்தோஷச் சாரலாய் மனதை மயக்குகிறது.

கிருஷ்ணகிரி, ஜி.எம். மஞ்சரி கோபி.

✉ நளபாகச் சக்ரவர்த்தி ஜேக்கப் தந்துள்ள டிப்ஸால் செந்நிற தோசை எங்கள் வீட்டில் மினுமினுக்கிறது.

காகிதபுரம், பூரணி விஜயகுமார்.

✉ ஏறுமுக விலைவாசி பற்றிய கேள்விக்கு அனுஷாவின் பதில், டு மச், த்ரீ மச் கற்பனைதான் என்றாலும் நாங்கள் ரசித்து மகிழ்ந்தது ஃபோர் மச்!

திருவள்ளூர், சி. கஸ்தூரி ரத்தினம்.

வருத்தம் தெரிவிக்கிறோம்

ம.மலர், ஜூலை இதழில், 46ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள 'இது தேவையா?' என்ற கட்டுரைக்கு, இணையதளத்திலிருந்து எடுக்கப்பட்ட திருமணக்காட்சி புகைப்படம் ஒன்று பயன்படுத்தப்பட்டது. அந்தப் புகைப்படத்தில் இடம்பெற்ற மணமக்களுக்கும், அவர்தம் குடும்பத்தாருக்கும் இதனால் மனவருத்தம் ஏற்பட்டதாக அறிகிறோம். அந்தப் புகைப்படத்துக்கும், கட்டுரைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதையும், அன்னாருக்கு ஏற்பட்ட மனவருத்தத்தை உணர்ந்து, நடந்த தவறுக்கு வருத்தத்தையும் தெரிவிக்கிறோம்.

(ஆ-ர்)


நினைவலைத் தொடர்

தொட்டால்

பி.சரோஜாதேவி

'இந்த அத்தியாயத்தில், உங்களுடன் நிறையப் படங்களில் நடித்த, சில நடிப்புச் செல்வர்களைப் பற்றிச் சொல்லுங்களேன்!' என்ற அன்பு வேண்டுகோள் 'மங்கையர் மலர்' பத்திரிகையிடமிருந்து எழுந்த போது, கொஞ்சம் திக்குமுக்காடித்தான் போனேன். யாரைச் சொல்வது, யாரை விடுவது? எல்லாருமே நான் மிகவும் வியந்து போற்றுபவர்கள்தான்.





நல்லவேளை... ''எம்.என். நம்பியார், எஸ்.வி. ரங்காராவ், எம்.ஆர். ராதா பற்றிச் சொல்லுங்களேன்!'' என்று திருமதி. அனுராதா சேகரே குறிப்பெடுத்தும் கொடுத்துவிட்டதால், என் பணி கொஞ்சம் எளிதாகி விட்டது.

எம்.என். நம்பியார் அண்ணா, திரு. எஸ்.வி. ரங்காராவ், அண்ணன் எம்.ஆர். ராதா! இவர்களின் பங்கு இல்லாமல் தமிழ்ச் சினிமா வரலாற்றை எழுதவே முடியாது என்று சொல்லும்படியான மிக அற்புதமான கலைஞர்கள் அவர்கள்!


'எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி' என ஜோடிப் பொருத்தத்துக்காகச் சொல்வது



போல, எம்.ஜி.ஆர். - நம்பியார் என்ற காம்பினேஷனும் சூப்பர் ஹிட்! நேரில் பார்ப்பதற்கு சாந்தமான, புன்னகை ததும்பும் முகம் கொண்டவர் எம்.என். நம்பியார். ஆனால் சினிமா காட்சிகளில் பார்க்கணுமே... கண்களில் வில்லத்தனம் தெறிக்கும்!

நான், நம்பியார் அண்ணாவை முதன் முதலில் பார்த்தது, 'நாடோடி மன்னன்' படப்பிடிப்பின் போதுதான். மூணாறு காட்டுப் பகுதிகளில் ஷூட்டிங் நடந்து கொண்டிருந்தது. அது நான் கதாநாயகியாக நடித்த முதல் படம். அறியாத வயசு வேறே! வில்லன் என்றாலே கெட்டவர்கள் என்ற நினைப்பு இருந்தது. அதனால் எம்.என். நம்பியாரைக் கண்டாலே ஒருவித பயம். சற்றுத் தள்ளியே நிற்பேன். ''என்னப்பா... உன் ஹீரோயின் ரொம்பப் பயப்படறாங்க. கொஞ்சம் சொல்லி வைப்பா!'' என்று எம்.ஜி.ஆரிடம் சொல்வார். இருவரும் மலையாளத்தில்தான் பெரும்பாலும் பேசிக் கொள்வார்கள்.

முதல் நாள் காட்சியிலேயே அவர் என்னைத் தூக்கி, தோள் மீது போட்டுக் கொண்டு போக, நான் குழந்தை போல கால்களை உதைத்துத் திமிறும் காட்சி. அந்த ஷெட்யூல் முழுக்க, கைகால் அடிச்சு அவரை உதைச்சேன். அதைப்பற்றியெல்லாம் அவர் தப்பாக நினைக்கவில்லை. தினமும் ஷூட்டிங் முடிஞ்சதும், ''ஸாரி ஸார்... கால் பட்டுடுச்சு'' என்பேன். ''இன்னும் நல்லா உதைம்மா! அப்பதான் இயற்கையா இருக்கும்!'' என்று சொல்லிக் கொடுப்பார். ஆரம்ப நாட்களில் அவருடன் காம்பினேஷன் என்றாலே கொஞ்சம் மிரண்ட நான், போகப் போக எம்.என். நம்பியார் அண்ணா, எத்தனை இனிமை



யான உள்ளம் கொண்டவர் என்பதை அறிந்து கொண்டேன்.

'நாடோடி மன்னன்' சூப்பர் ஹிட் ஆனதும், மதுரை, கோவை, சேலம் என ஊர் ஊராக, தியேட்டர்களுக்குச் சென்று, ரசிகர்களைச் சந்தித்தோம். அப்போது, எம்.ஜி.ஆர்., பெண்களை மிகவும் அக்கறை யுடனும், மதிப்புடனும் நடத்துவார்.

''பெண்களுக்குக் காப்பி, டிபன் கொடுத் தாச்சா? அவங்களுக்குத் தலைக்கு வைச் சுக்க மல்லிகைப்பூ வாங்கிக் கொடுங்க!'' என்று விழா ஏற்பாட்டாளர்களுக்குச் சிறு சிறு கட்டளைகள் இடுவார். உடனே எம்.என். நம்பியார் அண்ணா, ''ஏம்பா ஹீரோ! நம்பப் பக்கமும் கொஞ்சம் திரும்பிப் பாரப்பா!'' என்று கிண்டலடிப் பார்.

எங்கள் காம்பினேஷனில் எடுக்கப் பட்ட 'எங்க வீட்டுப் பிள்ளை' படம் பெரும் வெற்றிப் படமானது. அந்தப் படத்தின் நூறாவது நாள் வெற்றி விழா, பாண்டிச்சேரியின் ஓரிரு தியேட்டர்களில் கொண்டாடப்பட்டது. 'எங்க வீட்டுப் பிள்ளை'யில் நடித்த, எம்.ஜி.ஆர்., எம்.என். நம்பியார் அண்ணா, நான், நாகேஷ், ரத்னா, கேமிராமேன் ராமமூர்த்தி என ஒரு நட்சத் திரப் பட்டாளத்தையே பெரிய கொண்டாட் டத்துடன் ஊர்வலமாக அழைத்துப் போனார்கள். சாலையின் இருமருங்கிலும் ரசிகர்கள் கூட்டம்.

தியேட்டரின் முன்பாக நின்றிருந்த ஓர் இளம்பெண் சட்டென்று போலீஸாரின் கட்டுப்பாட்டை மீறி, என் அருகே ஓடி வந்தார். என்னைக் கட்டிப் பிடித்து, கன்னத் தில் முத்தமிட்டு விட்டார்.

ஏற்கெனவே, கூட்டத்தைப் பார்த்து மிரண்டிருந்த நான், கொஞ்சம் விதிர்த்துப் போய், அழ ஆரம்பித்து விட்டேன். அந்தப் பெண், என் மீது கொண்டிருந்த எல்லை யற்ற அன்பினால் அப்படி நடந்து கொண்டு விட்டார் என்பதைப் புரிந்து கொண்டா லும், என்னவோ ஒரு பதற்றத்தில் அழுது விட்டேன்.

நான் அழுவதைப் பார்த்த எம்.ஜி.ஆர்., அந்த ரசிகை என் கன்னத்தில் கடித்து விட் டாளோ என்று நினைத்து பயந்து விட்டார்.

''பல் பட்டா விஷ மாச்சே! டாக்டரைக் கூப் பிடுங்க!'' என்று பதறி னார்.

அதைக் கேட்ட என் அழுகை இன்னும் அதிக மாகி விட்டது. எம்.ஜி.ஆர். எங்கே சென் றாலும், அவருடைய குடும்ப டாக்டர் சுப்ர மணியம் கூடவே வரு வார். அவர் உடனே வர வழைக்கப்பட்டார். அவர் வந்து பரிசோதித்துப் பார்த்துவிட்டு, ''பல் பட வில்லை! பயப்பட வேண்டாம்'' என்று சொன்ன பிறகே என் அழுகை நின்றது.

உடனே மற்ற நட்சத்திரங்கள் என்னைச் சூழ்ந்துக் கொண்டு சமாதானப்படுத்தினார் கள். அப்போது எம்.என். நம்பியார் அண்ணா, ஒரு கமெண்ட் அடித்தார் பாருங்கள்!



* 'எங்க வீட்டுப் பிள்ளை' படத்தில்...



✱ நம்பியாருடன்..

''சீ! என்ன பொண்ணு அது! சரோஜா வுக்கு முத்தம் கொடுக்கறதுக்குப் பதில், எனக்குக் கொடுத்திருக்கக் கூடாதா?'' என்று முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டு கேட்டார் பாருங்க! நானே 'பக்' என்று சிரித்து விட்டேன்.

'பாகப்பிரிவினை', 'திருடாதே', 'பணத்தோட்டம்', 'படகோட்டி', 'நீதிக்குப் பின் பாசம்', 'தாயின் மடியில்', 'ஆசை முகம்', 'கல்யாணப் பரிசு', 'கலங்கரை விளக்கம்', 'நான் ஆணையிட்டால்', 'தெய்வத்தாய்', 'அரச கட்டளை' என எம்.என். அண்ணாவுடன் நான் நடித்த அனைத்துமே ஹிட் படங்கள்தான்!

சினிமாப் படப்பிடிப்புகளில் என்னைப் பார்த்தாலே, ''டெக்கான் ஹெரால்டு வந்தாச்சு!'' என்பார் கிண்டலாக.

எனக்கு ஆரம்பத்தில் புரியவே இல்லை. அப்புறம்தான் தெரிந்தது, 'டெக் கான் ஹெரால்ட்' என்பது கர்நாடகத்தின் பிரபல நாளிதழ் என்று!

திரைப்படத்தில்தான் எம்.என். நம்பியார், நெகடிவ்வானவர்... உண்மை யில், தங்கமான கேரக்டர். உடலையும் மனத்தையும் இளமையாக வைத்துக் கொள்வது எப்படி என்பதை இவரது வாழ்க்கையைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம். எங்கேயும் எப்போதும் ஒழுக்கமாக இருப்பார். கடவுள் பக்தி அதிகம். கடுமையாக உழைத்தாலும், எப் போதும் உற்சாகமாகவே இருப்பார். ஜாலி யாக அரட்டை அடித்துக் கொண்டு, வேலைப் பளுவே தெரியாதவண்ணம் செய்து விடுவார். அவர் பல காலம் வாழ இறைவனை வேண்டுகிறேன்.

எஸ்.வி. ரங்காராவ்- அந்தக் காலத்து அப்பா வேஷத்துக்கு மிகச் சரியான உருவம் கொண்டவர். நானும் அவரும் நடித்தால், உண்மையான அப்பா - பொண்ணு போன்ற அன்னியோன்யம் இழையோடும்.

பாசமான, கம்பீரமான, பணக்கார, ஜாலியான அப்பா என்றால் எஸ்.வி. ரங்கா ராவ்... பொண்ணு எது சொன்னாலும் ஓகே! துடுக்கான, செல்லமான, மகள் என்றால் அது நான்தான்!

'இரும்புத் திரை', 'விடிவெள்ளி', 'இருவர் உள்ளம்', 'கல்யாணியின் கணவன்', 'எங்க வீட்டுப் பிள்ளை', 'தேனும் பாலும்' என நிறையப் படங் களில் நடித்திருக்கிறோம். அவற்றில் என் நெஞ்சில் நிற்கக்கூடிய ரங்காராவின் நடிப்பு என்றால் 'தேனும் பாலும்', 'குலவிளக்கு'



போன்றவை.

'தேனும் பாலும்' படக்கதை நீங்கள் அறிந்ததுதான். ஏற்கெனவே பத்மினியைத் திருமணம் செய்து கொண்டிருக்கும் சிவாஜிக்கு, இரண்டாந்தாரமாக வாழ்க்கைப்பட்டு, ஊரை விட்டே போய் விடுவேன். ஆனால் நான் இறந்து விட்டதாக எண்ணி, என்னுடைய அப்பா எஸ்.வி. ரங்காராவுக்கு சித்தபிரமை ஏற்பட்டு விடும். உச்சக்கட்ட காட்சியில், கர்ப்பிணியாக நிற்கும் என்னைப் பார்த்து அதிர்ந்து போவார். ஒரு நிமிடத்துக்கும் குறைவான நேரத்தில் பாசம், சந்தோஷம், அதிர்ச்சி, ஆற்றாமை, குழப்பம், வேதனை என எல்லாவற்றையும் ஒருசேரக் காண்பிப்பார்.

''அப்பா...'' என்று கதறிக் கொண்டே நான் காலில் விழுவேன். நடிப்பையும் தாண்டி அப்பா - மக ளாகவே வாழ்ந்த கணங்கள் அவை!

ஜாலியான அப்பா - மகள் என்றால் 'எங்க வீட்டுப் பிள்ளை' தான் டாப்! பயந்தாங்கொள்ளியான ஜமீன்தார் எம்.ஜி.ஆரை மாப்பிள்ளை பார்க்கப் போவோம். அப்பாவியும், கோழையுமான எம்.ஜி.ஆரை எனக்குப் பிடிக்காமல் போகும். ''அப்பா... போலாம்பா! தலையை வலிக்குதப்பா!'' என்று ஒவ்வொரு 'பா'வையும் அழுத்தி அழுத்தி எரிச்சல் காட்டுவேன்.

''ஓகே... ஓகே'' என்று ரங்காராவ் சமாளிப்பார்.

ஜமீன்தார் எம்.ஜி.ஆர்., ரத்னாவுடன் ''நான் மாந்தோப்பில் நின்றிருந்தேன்!'' என டூயட் பாடிக் கொண்டிருப்பார். அதைப் பார்த்து விட்டு, கோபமும் ஆத்திரமுமாக ஃப்ராடு, அது இது என என்னிடம் முறையிடுவார்.

''ஏம்பா.. வெயில்ல வந்தீங்களா?'' என்று தமாஷ் செய்வேன்! அப்போது அவர் ஒருவித முக பாவம் காட்டுவார் பாருங்கள்! அந்த கம்பீரமான உருவம், யதார்த்தமான நடிப்பு, பாவத்துடன் கூடிய வசன உச்சரிப்பு.. எஸ்.வி. ரங்காராவுக்கு இணை அவரேதான்!

'டிப்-டாப்' அப்பாவாகவே எஸ்.வி. ரங்காராவைப் பார்த்துப் பழகிய ரசிகர்களுக்கு அவரது நடிப்பின் பரிமாணத்தைக் காட்டிய படம் பற்றியும், எம்.ஆர். ராதா அண்ணனைப் பற்றியும் அடுத்த இதழில் சொல்கிறேன்.

(மலரும்)

சந்திப்பு : **அனுராதா சேகர்**

படங்கள் உதவி : ஃபிலிம் நியூஸ் ஆனந்தன், ஜெயபாபு, ஞானப்பிரகாசம்

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

வழங்கும்

அறிவுப் போட்டி-7

ரூ. 5,000 பரிசு

சமீபத்தில் நடைபெற்ற செய்திகளை எந்த அளவுக்கு அறிந்து வைத்திருக்கிறீர்கள்? ஒவ்வொரு கேள்விக்கும் கீழே மூன்று பதில்கள் அளிக்கப்பட்டுள்ளன. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து '✓' பண்ணி அனுப்புங்கள். குலுக்கல் முறையில் 20 பேருக்கு தலா ரூ. 250/- பரிசளிக்கப்படும். எங்கே.. உங்க பொது அறிவை சோதிச்சுப் பாருங்க!

1. முதல்வர் பதவியை ராஜினாமா செய்த குலாம் நபி ஆசாத் எந்த மாநிலத்தின் முதல்வராக இருந்தார்?

அ. ஜம்மு காஷ்மீர் ☐ ஆ. மத்தியப்பிரதேசம் ☐ இ. ராஜஸ்தான் ☐

2. விம்பிள்டன் வென்ற டென்னிஸ் வீரர் ரஃபேல் நடால் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

அ. ஸ்பெயின் ☐ ஆ. ஸ்விட்சர்லாந்து ☐ இ. ஜெர்மனி ☐

3. சீன மண்ணில் ஒலிம்பிக் ஜோதியை எடுத்துச் சென்ற ஒரே இந்தியப் பெண்மணி யார்?

அ. மீனா பரோட் ☐ ஆ. ராதா ஸின்ஹா ☐ இ. ரூப் கன்வர் ☐

4. தற்போதைய இந்திய வெளியுறவு அமைச்சர் யார்?

அ. ஜார்ஜ் ஃபெர்னான்டஸ் ☐ ஆ. அந்தோனி ☐ இ. பிரணாப் முகர்ஜி ☐







5. சர்ச்சைக்குரிய பங்களாதேஷ் எழுத்தாளர் தஸ்லீமா நஸ்ரீன், எந்த நகரின் கௌரவ குடிமகளாக விளங்கவிருக்கிறார்?

அ. லண்டன் ☐ ஆ. பாரிஸ் ☐ இ. கொல்கத்தா ☐

6. குசேலனில் ரஜினி ஏற்கும் பாத்திரத்தை, அதன் மூலமான மலையாளத் திரைப்படத்தில் ஏற்றவர் யார்?

அ. திலகன் ☐ ஆ. மம்முட்டி ☐ இ. மோகன்லால் ☐

7. வேலூர், தூத்துக்குடி ஆகியவை இந்த மாதத்திலிருந்து எந்த அந்தஸ்தைப் பெற உள்ளன?


அ. நகராட்சி ☐ ஆ. மாநகராட்சி ☐ இ. மாவட்டத் தலைநகர் ☐

8. மறைந்த ஃபீல்டு மார்ஷல் மானெக்ஷா தன் இறுதி காலத்தை எங்கு கழித்தார்?

அ. பஞ்சாப் ☐ ஆ. உத்தராஞ்சல் ☐ இ. தமிழ்நாடு ☐

9. தமிழக காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவர் யார்?

அ. கிருஷ்ணசாமி ☐ ஆ. இளங்கோவன் ☐ இ. தங்கபாலு ☐



10. அஸ்ட்ரா என்பது என்ன?

அ. புதிய இந்திய ஏவுகணை ☐

ஆ. ஆசியாவை நோக்கி வந்து கொண்டிருக்கும் ஒரு எரிகல் ☐

இ. சமீபத்தில் பாலிவுட்டை கலக்கிக் கொண்டிருக்கும் ஒரு கவர்ச்சிப் புயல் ☐

தொகுப்பு : ஜி.எஸ்.எஸ்.

போட்டி விதிகள் :

அறிவு விடைகளை நிரப்பி இந்தப் பக்கத்தைக் கிழித்து அனுப்புங்க. ஒருவரே எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். ஜெராக்ஸ் கூடாது.

அனுப்ப வேண்டிய முகவரி : அறிவுப் போட்டி - 7
மங்கையர் மலர்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.


கடைசித் தேதி : 15.8.2008


பெயர் : .... **விலாசம் :** ....

....

....

தொலைபேசி எண் : .... **ஈ-மெயில் :** ....


Diabetics
Dezire®
*Patented
டயபெடீஸ் உள்ளவர்களுக்கும்
திருமணங்களில் இனிப்பு !!!
இனி உங்கள் இல்லத் திருமணங்களில்
டயபெடீஸ் உள்ளவர்களும்
இனிப்புகளை மகிழ்ச்சியாக உண்டு
மணமக்களை மனமார வாழ்ந்த
டயபெடிக்ஸ் டிஸையர்
திருமண இனிப்புகளை பரிமாறுங்கள்
திருமணங்கள் விசேஷங்கள்
மற்றும்
பல்க் புக்கிங்கிற்கு
தொடர்பு கொள்ளவும்
9840044093, 9840741783
T. Nagar
Ankur Plaza, Near Vani Mahal
New No. 113, G.N. Chetty Road, T.Nagar
Chennai-17. Ph: 42121415
Annanagar
New No. 4, 62 AC Block, 5th Avenue



சமீபத்தில் 'தூரிகை மொழி' என்ற தலைப்பில் சென்னை, வின்யாசா ஆர்ட் கேலரி பத்து நாட்கள் நடந்தேறியது ஸ்வேதாவின் ஓவியக் கண்காட்சி.

பிற ஓவியக் கலைஞர்களின் கண்காட்சிக்கும் ஸ்வேதாவின் கண்காட்சிக்கும் இரு பெரும் வித்தியாசங்கள் உண்டு. அது, ஸ்வேதா முறையாக ஓவியம் பயின்றவள் அல்ல, +2 பள்ளி மாணவி. ஸ்வேதாவுக்கு பிறவியிலேயே காது கேட்காது; வாய் பேச இயலாது.

தனது கருத்துப் பகிர்வுக்கு சூட்சுமமான சொற்களை விட வண்ணங்களின் மொழியே வசதியானது என்று சிறுவயதிலிருந்தே தூரிகைப் பேனாவை தூக்கி விட்டவர் ஸ்வேதா.

தோராயமாக மாதத்திற்கு ஓர் ஓவியம் வரையும் ஸ்வேதா, விடுமுறையில் மட்டுமே தூரிகையோடு உரையாடுகிறார். அக்ராலிக் பெயிண்ட்டை தேர்வு செய்து எல்லாவற்றிலும் அடர்த்தியான வண்ணம் கூட்டும் அவர், தன்னை இயற்கையின் பிரிக்க முடியாத ஓர் அங்கமாக உணர்கிறார்.

டீ.வி. தொடர்கள் பெண்களைத் தன்வசப்படுத்தி மழுங்கடிக்கிறது. குடும்பப் பணிவிடைகள் பாதிக்கின்றன என்ற குற்றச்சாட்டு இன்றும் தொடர்கிறது. ஆனால் ஸ்வேதா இதற்கு எதிர்மறை. ஒரு கையில்' ரிமோட்டும் மறுகையில்'





இளைய சாதனை

தூரிகையுமாயிருப்பார். தனது ஒவ்வொரு ஓவியத்தையும் டீ.வியைப் பார்த்தபடியேதான் வரைகிறார். அப்படி வரைவதுதான், அவரது பாணி. ஆனால் டீவி காட்சிக்கும் அவரது ஓவியத்திற்கும் சம்பந்தமில்லை என்பது ஆச்சரியம்தான்.

கலைஞர்களின் சுதந்திரம் எல்லையற்றது. பொது இடையூறையும் அவர்கள் சகிப்பதில்லை. ஸ்வேதா வரைந்து கொண்டிருக்கையில் தந்தையோ அல்லது பிறரோ ஏதேனும் குறைகளை திருத்தங்களைச் சொன்னால் அவர் அதற்குப் பிறகு அந்த ஓவியத்தை வரைவதில்லை. பிறகு வேறொரு மனநிலையில் புதியதாய் இன்னொரு ஓவியம் பிறந்த குழந்தையாய் கண் திறக்க வேண்டியிருக்கும்.

மாற்றுத் திறனுடையோர்க்கான சிறப்புப் பள்ளியான லிட்டில் ஃபிளவர் பள்ளி மாணவியான ஸ்வேதாவுக்கு இது இரண்டாவது ஓவியக் கண்காட்சி.

நூறு ஓவியங்களுக்கு மேல் வரைந்துள்ள தனது திறனை இணையத்தளங்களும் தொலைக்காட்சிகளும் செய்தி இதழ்களும் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ள மகிழ்ச்சியில் மூழ்கியிருக்கிறார் ஸ்வேதா.

விடைபெறும்போது 'நன்றி' என்று வண்ணத்தில் எழுதிக் காட்டினார். அட, இது கூட அழகிய பண்பாட்டு ஓவியம்தான்.

- காவியப்ரியதர்ஷன்,
ஜி.எம்.டி.டி.வி. பள்ளி,
கொத்தளம்.








‘வண்ணத் தோறுதான் நான் பேசுவேன்!”

திருச்சியில் புகழ் பெற்ற ஆர்கி டெக்ட் ரமணன். அவரது மனைவி விருந்தாரமணன். இருவரும் இணைந்து நடத்தும் 'சயின்ஸ் அண்டு அட்வென்சர் கிளப்' மூலம் கடந்த எட்டு ஆண்டுகளாக மலையேறும் பயிற்சியை ஒவ்வொரு வருட கோடை விடுமுறையில் இமயமலையில் உள்ள மலைப் பிரதேசங்களுக்கு கூட்டிச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இந்த வருடம் உலகத்தின் 3-வது உயரமான சிகரமான கஞ்சென்ஜங்காவின் அடிவாரம் கோய்ச்சலா கணவாய்க்கு (16,208'') செல்ல திட்டமிடப்பட்டிருந்தது. இந்தக் குழுவில் இடம் பெற்றிருந்த பன்னிரண்டு பெண்களில் நானும் ஒருத்தி. இந்த பயணம் 19.4.08ல் ஆரம்பித்து 6.5.08ல் முடிந்தது. இந்த பயணம் பற்றிய சில அனுபவங்களை நம்முடைய மங்கையர் மலர் வாசகிகளாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமிதமடைகிறேன்.

மிகுந்த எதிர்பார்ப்புடனும், சாதிக்கப் போகிறோம் என்ற எண்ணத்துடனும், திருச்சியிலிருந்து சென்னைக்கு ரயிலில் சென்று, பின்னர் சென்னையிலிருந்து விமானம் மூலம் பாக்டோக்ரா (மேற்கு வங்காளம்) சென்றோம். திரு. ரமணன், திருமதி விருந்தா ரமணன் தலைமையில் 28 பேர் கொண்ட

சிங்க நடை போட்



குழு (சென்னை, திருச்சி, பெங்களூர், மும்பை, அமெரிக்கா) பாக்டோக்ராவிலிருந்து பேருந்து மூலம் சிக்கிம் தலைநகர் கேங்டாகிற்கு சென்றோம். அங்கே இரண்டு நாட்கள் தங்கி மலர் பூங்கா, ரோப்கார், பன்ஜக்கிரி நீர்வீழ்ச்சி, ரூம் டெக், என்ச்சி, கர்மா ஸ்ரீ நலந்தா பல்லைக்கழகம், விலங்கியல் பூங்கா ஆகிய இடங்கள் சென்று பார்த்து மகிழ்ந்தோம். அடுத்தநாள் ஏழு மணி நேரம் பேருந்தில் பயணம் செய்து யுக்ஸம் சென்றோம். வழியில் Bonn Monastery பார்த்தோம்.

முதல் நாள் நடை பயணத்தை காலை சிற்றுண்டி முடித்தபின் ஆரம்பித்தோம். தினமும் நடக்க ஆரம்பிக்கும் முன் எல்லோரும் வட்டமாக நின்று கை கோர்த்து, கடவுளிடம் நல்ல மனஉறுதியையும் தடங்கலில்லாத பயணத்தையும் கொடுக்க பிரார்த்தனை செய்வோம். அட்டை பூச்சியிடமிருந்து எங்களை காப்பாற்றிக் கொள்ள, டெட்டால் மருந்தை கால்களிலும், காலணிகளிலும் தடவிக் கொள்வோம். எங்களுக்கு வழிகாட்டவும், எங்கள் பைகளை தூக்கவும், எங்களுக்காக சமைக்கவும் மொத்தம் 15 பேர் உடன் வந்தார்கள்.



எங்கள் நடைபயணம் Pine, Oak, ரோடோடென்ட்ரான் (Rhododendron) மலர்கள் கொண்ட அடர்ந்த காடுகள் வழியாக அமைந்திருந்தது. மிகவும் ரசித்தபடியே ப்ரெக்ச (Prekchu) என்ற ஆற்றை கடந்தபின், செங்குத்தான மலை ஏறி பக்ஹிம் (Bakhim) என்ற இடத்தை அடைந்தோம்.

மறுநாள் பேதாங் என்ற இடத்தை அடைந்தோம். அங்கு நாங்கள் பிள்ளையார் உருவம் போல் இருந்த மலர், பலவித மான காட்டு ரோஜாக்கள், நாகப்பாம்பு தலைபோல் உள்ள செடிகள் எல்லாம் பார்த்து


சிகரத்தில் ஏறு!



பிரமிப்படைந்தோம்.

26.4.08

காலை 4 மணி அளவில் ஷோங்கிரி மலை மேல் ஏறி சூரியனின் முதல் உதயம் பார்த்தோம். கபுறு, ரேத்தோங், பாண்டிம் (6691'')மலைகளின் மீது சூரிய ஒளிக்கதிர்கள் படும்போது, தங்கம் போல் அந்த சிகரங்கள் ஒளிர்ந்தன. இந்த மலைகளின் பின்புறத்திலிருந்து கஞ்சென்ஜங்கா, கம்பீரமாக ஒளி வீசியது. கண்கொட்டாமல், மூச்சுவிட மறந்து ரசித்தோம்.



மறுநாளிலிருந்து எங்கள் பயணம் அன்று செங்குத்தான மலையில் இருந்து இறங்கும் வழியாக இருந்தது. அன்றைக்கு பலத்த காற்று வீசியது. அந்த காற்றில் பறந்து விடுவேனோ என்று பயந்து உட்கார்ந்து விட்டேன். அதன் பிறகு 3 மணி நேரம் கழித்து தான்சிங் (Thansing) அடைந்தோம்.(3930m)

◆ Swayamvaram invitation from parents of Kerala Brahmin/Palghat Tamil Vadama Iyer groom with good family lineage and no encumbrances for Kaundinya, Poorattadhi, Intelligent, Fair, Cosmopolitan, Pretty girl, 24, B.Tech distinction, H1BVisa holder, working in USA for a Top end Global Software Company. Girl might pursue post-graduate Management study, Career after marriage. Boy should be working in Fortune 100, MNC, Nasdaq, Nifty listed Company, Self accomplished financially, below 30 years, Healthy, highly impressionable, articulate, with pleasant disposition balancing Global Mindset and Religious traditions. Boy may be based in India/USA/Singapore. If favourable, girl may be willing to relocate. Horoscope matching is essential. Contact particulars : V. Balasubramaniam, Flat No. 401, Golden Enclave, 50-50-27/1, Balaji Hills, Seethammadhara, Visakhapatnam - 530013 (A.P) Tel : (0891) 2538945, 9849798945

நண்பரின் மகள் திருமணத்துக்குச் சென்றிருந்தேன். காலையில் 'பரதேச கோலம்' நடந்தது. புரோகிதர் காசிக்கு யாத்திரை போகும் ஆடவரைத் தடுக்க, பெண்ணின் தகப்பனார் தன் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளு மாறு அவரை அழைப்பது தான் அந்த நிகழ்ச்சியின் சாராம்சம்.

புரோகிதர் சொன்னதை என் நண்பர் இவ்வாறு மாற்றிக் கூறினார்.

"நீங்கள் இந்தக் கோலத்தில்



ஃப்ளைட்டில் காசி யாத்திரை!

பிரம்மச்சாரி வாழ்க்கை வெறுத்து காசியாத்திரை போகவே வேண்டாம். என் பெண்ணை மணம் செய்து கொண்டு, அவளுடன் தேன் நிலவுக்கு ப்ளைட்டில் வட இந்தியாவைச் சுற்றிப் பார்த்துவிட்டு அப்படியே காசியையும் பார்த்து விட்டு வாருங்கள்" என்று அன்பாக அழைத்தார்.

நான் கைதட்டும் ஒலியை ஆரம்பிக்க, எல்லோரும் கரகோஷம் செய்தார்கள்.

- ராதா கிருஷ்ணமூர்த்தி, கும்பகோணம்.

சிறுகதை


''என்னங்க, தங்கவேலு மாமா வந்தாரா?'' என்று கேட்டபடியே உள்ளே வந்தார் என் தங்கை உமாவின் கணவர் கணேஷ்.

''வாங்க, உட்காருங்க. வர்ற நேரம்தான். உமா வரலையா? சுஜி என்ன பண்றா?'' என்று கேட்டுக்கொண்டே நாற்காலியை நகர்த்திப் போட்டு உட்கார வசதி செய்தேன்.

''வாங்க மாப்பிள்ளை'' என்றாள் அம்மா உள்ளேயிருந்து வந்தபடி.

''இவ சும்மா சும்மா ஜட்டிய நாளைச் சுக்கிட்டேயிருக்கா பாருக்கா. இந்நா

கை





மாறிய பூக்குவியல்!

ஜூலியட் ராஜ்

சுஜியப் பிடி'' என்று குழந்தையை என் கையில் திணித்தாள் பின்னாலே வந்த உமா.

ஆறு மாதக் குழந்தை பூக்குவியலாய் என் கைக்குள் புதைந்தது. ''சுஜிக் கண்ணு'' என்று ஆசையுடன் முத்தமிட்டேன்.

''ஏண்டி குழந்தைதானே? என்னவோ பத்து வயசுப் பொண்ணைத் திட்டற மாதிரியில்ல திட்டறே...?'' என்றாள் அம்மா.

''ம்... இரண்டு வருஷம் கழிச்சு பிள்ளையைப் பெத்திருக்கலாம். பாரு, இப்பத்தான் நல்ல நல்ல படமா வருது. எதுவுமே பார்க்க முடியலை...'' என்றபடி கணேஷ் அருகில் அமர்ந்தாள் உமா.

''குழந்தை பிறந்ததாலே எதை விட்டுக் கொடுத்திருக்கான்னு கேளுங்க... இப்போ இங்க வந்தது கூட சுஜிய விட்டுட்டு படத்துக்குப் போறதுக்குத்தான்'' என்ற கணேஷைப் பார்த்து, ''அப்படியா! சொல்லவேயில்லையே...'' என்றாள் சீரியசாய்.

இதுதான் உமா. அவ இருக்கும் இடமே குலுங்கும். ரொம்பச் சந்தோஷமான பெண். அப்பா இறந்த போதுதான் உடைந்து போனாள். கொஞ்ச நாளில் மீண்டு விட்டாள்.

''விஜி எங்கே?'' என்றாள் உமா.

''அவ கம்ப்யூட்டர் கிளாஸ் போயிருக்கா...''

''எலி பிடிக்கன்னு சொல்லு. சரி, சுஜிக்கு பால் பாட்டில், நேப்பீஸ் எல்லாம் வைச்சிருக்கேன். பெரியம்மாவா, லட்சணமா பிள்ளையைப் பார்த்துக்க. ஆமா, தங்கவேலு மாமா வந்தாரா?'' புடைவையைச் சரிசெய்து கொண்டே கிளம்பினாள் உமா.

''இனிமேல்தான் வரணும். ஏம்மா, நீ நாளைக்குப் போயேன். மாமா வந்தா என்ன ஏதுன்னு விசாரிக்கலாமில்லையா...?' என்ற அம்மாவை, ''ஏம்மா, டேர்ம்ஸ் பேசறது. பொண்ணு பார்க்கறது எல்லாம் இப்ப வேவா? ஃபோட்டோவைக் காமிச்சு, பிடிச்சிருந்தா மேற்கொண்டு பேசலாம்னு தானே போயிருக்கார். இதுக்கே எதுக்கு நாங்க? படம் இன்னையோட கடைசிம்மா. உமா பாவம்தானே..? என்னக்கா சொல்வேன்...'' என்றாள்.

''நீங்க போங்க. நான் ஃபோன் பண்ணிச் சொல்றேன்'' என்றேன்.

''பயப்படாதேம்மா. எங்க கல்யாணி அக்காவை யாருக்குத்தான் பிடிக்காது?'' என்றாள் உமா என் கன்னத்தை அன்பாக வருடியபடி.

'பிடித்தால் மட்டும் போதுமா...?' என்று தோன்ற சுஜியைத் தோளில் சாய்த்து அணைத்துக் கொண்டேன்

'இது என் குழந்தையோ... எனக்குப் பிறந்திருக்க வேண்டியதோ... ச்சீ... என்ன யோசிக்கிறேன் நான்...' என்று சிலிர்த்துக் கொண்டு, சுதாரித்தேன்.

''நீ குழந்தையை எங்கிட்ட கொடுத்துட்டுப் போய் காப்பி போடு'' என்று அம்மா சொல்ல நான் குழந்தையைக் கொடுத்துவிட்டு உள்ளே போனேன்.

''அக்கா, காப்பி வேண்டாம்; டீ, ஸ்ட்ராங்கா...'' என்றாள் உமா தொலைக் காட்சியை உயிர்ப்பித்தபடியே...

பாலை அடுப்பில் வைத்துவிட்டு டீத்தூளை போட்டுக் கொதிக்கும்போது உமா உள்ளே வந்தாள்.

''என்னக்கா சமையல்? எதுவானாலும் எனக்கும் சேர்த்து வைச்சுடு. நாங்க ராத்திரி இங்கேயே வந்து சாப்பிட்டுட்டுப் போயிடு றோம்...''

''சரி, சரி... வா உமா.''

''என்ன ரொம்ப டென்ஷனாயிருக் கியா? பட்டுப் புடைவை கட்டின போட் டோவதானே குடுத்துவிட்டிருக்க... இவரு விசாரிச்சாராம், மாப்பிள்ளை ரொம்ப நல்ல டைப்பாம். எந்தக் கெட்டப் பழக்கமும் இல்லையாம். முடிஞ்சுடும். நீ என்னக்கா சொல்றே?''

''பார்ப்போம். விஜிக்கு முடிச்சுட்டுப் பார்க்கலாம்னு நினைச்சேன். அம்மாதான் பிடிவாதம் பண்றாங்க'' என்றேன்.

''விஜி கல்யாணத்துக்கு என்ன அவ சரம்? இரண்டு வருஷம் போகட்டும்'' என்றபடி டீயை எடுத்துக் கொண்டு வெளியே போனாள்.

அவர்கள் புறப்பட்டுப் போகும் வரை தங்கவேலு மாமா வரவில்லை.

உமா, கணேஷோடு தோள் உரசிக் கொண்டு போவதைப் பார்க்கும் ஒவ் வொரு முறையும், அது நான் இருக்க வேண்டிய இடம் என்ற எண்ணம் தோன்றி அடங்கும்.

அப்பா திடீரென்று இறந்தபோது, அவரது வேலையையும், பொறுப் பையும் சேர்த்தே வாங்கிக் கொண்டேன். கணே ஷின் அப்பா, தங்க வேலு மாமாவுக்கு நெருங்கிய சிநேகம். அதனால் எனக்கு அவரைப் பேச வேண் டும் என்று பிரியப் பட்டு என்னிடம் கேட் டார். நான் உமாவின் திருமணம் முடிந்ததும் தான் எனது திருமணம் என்று கண்டிப்பாகச் சொல்லியதில், வீட்டில் எல்லோருக்குமே கொஞ் சம் வருத்தம்தான்.



பிரார்த்தனையால் சில வகைச் சுரப்பிகள் அதிக அளவு சுரக்கின்றன. இதனால் வலிகள் மறைகின்றன. மருந்து இல்லாமல் சில நோய்கள் குணமாகிறதென்றால் அதற்குக் காரணம் பிரார்த்தனையே!
-டிஸ்ரேலி

கே.வி. சீனிவாசன், திருச்சி

கணேஷ் பற்றி விசாரித்துப் பெற் றோரிடம் சொல்லிக் கேட்டதும் சம்மதம் என்றார். உமாவைப் பெண் பார்க்க வரச் சொல்லும்போதுதான் தெரிந்தது. அவர் சம்மதம் சொன்னது எனக்கு என்று. நான் சந்தோஷத்தில் தத்தளித்த நேரமது. நான் விரும்பிப் போகாமலே என்னை ஒருவர் தேடி வருகிறாரா... காரணமின்றி சிரிக்கத் தோன்றியது. உலகிலேயே நான்தான் மிக அதிர்ஷ்டசாலி என்று ஆடத் தோன்றியது. அந்த இரண்ட நிமிடத்தில் அவரோடு குடும்பம் நடத்தி பிள்ளை பெற்றேன்.

''கோயமுத்தூர் மாமா கல்யாணத்துக்குக் குடும்பத்தோட போயிருந்தோமில்லையா? அப்ப கணேஷ், நம்ப கல்யாணியைப் பார்த்திருக்கான். இப்ப சம்பந்தம் பேசப் போனதும் கல்யாணின்னு நினைச்சு உடனே தலையாட்டிட்டான். அப்புறம் தான்... கல்யாணப் பொண்ணு, கல்யாணி இல்லை. அவ தங்கை உமான்னு சொன் னதும் கணேஷுக்குக் கொஞ்சம் வருத்தம் தானாம்...'' என தங்கவேலு மாமா கதைக் கதையாய்ச் சொன்னார்.

திருமணம் முடிந்து வீட்டுக்கு உமாவும் கணேஷும் தம்பதியாக வந்தபோது கொஞ்ச நாள் தடுமாறித்தான் போனேன். கொஞ்சம் கொஞ்சமாய் என்னை மாற்றிக் கொண்டேன். இரண்டு வருடத்தில் எத் தனையோ முறை மனதுக்குள் சஞ் சலப்பட்டுத் தவித்திருக்கேன்.

''இந்தா சுஜியைப் பிடி. தங்க வேலு மாமா வர்றார்.'' என்று அம்மா வாசலுக்கு அழைக்கப் போக, பூக்குவியல் மீண்டும் என் கையில் வந்தது! உச்சந் தலையில் முத்தமிட் டதும் சுஜி என்னைப் பார்த்து கன்னங்குழியச் சிரித்தது.

''வாங்க மாமா...''

''ம்... உட்காரேன். எத் தனை நாளைக்குத்தான் தங்கச்சி குழந்தையைக் கொஞ்சறது? அடுத்த வருஷம் உன்

புள்ளையைக் கொஞ்சணும்'' என்று சொன்னதும் வீடு சந்தோஷத்தில் சிரித்தது.

வெட்கத்தில் என்னை மறைத்துக் கொள்ள குழந்தையை அணைத்து முத்தமிட்டேன்.

''எப்படியிருக்கார் மாப்பிள்ளை? குடும்பம் எப்படி?''

''நல்ல குடும்பம்மா. ரொம்ப நல்லா பேசறாங்க. மாப்பிள்ளை கதிரேசனோட அப்பாவும், அம்மாவும் கோயில்ல கல்யாணியைப் பார்த்திருக்காங்களாம். ஃபோட்டோவைப் பார்த்ததும் தெரியும்னு சொல்லிட்டாங்க. மாப்பிள்ளைதான் கம்ப்யூட்டர் கிளாஸ் போற பொண்ணுன்னு நினைச்சேங்கறார்... அவங்க அக்கான்னு சொன்னதும் சரின்னுட்டார். கணேஷ் மாதிரியே இந்த மாப்பிள்ளையும் ரொம்ப தங்கமான பையன்,'' என்ற மாமாவின் வார்த்தைகள் என்னை நடுக்கிப் போட்டன.

கடவுளே! ஏன், ஏன், எனக்கு மட்டும் இப்படி நடக்கிறது?

மீண்டும் மீண்டும் என் கனவுகளே பலியாகின்றனவோ? இரவல் கனவுகளில் தான் என் உறவு மலருமா? போனால் போகிறதென்று என் ஆசைகள் நிறைவேறினால் அது பிச்சையில்லையா... நான் எப்படி உரிமையாய் அவர் தோள் சாய முடியும்? அவருக்கும் விஜியைப் பார்க்கும்போதெல்லாம் ''இவ என் பொண்டாட்டியா இருக்க வேண்டியவள்!'' என்று தோன்றுமே! நினைவே கூசியது. இன்னொரு கணேஷை நான் சந்திக்கவே கூடாது. வெப்ப பெருமூச்சுகள் மேலிட பேச ஆரம்பித்தேன்.

''மாமா, ரொம்ப தங்கமான பையன்னு சொல்றீங்க. பேசாம விஜிக்கு முடிச்சிடலாமே.''

''என்ன பேசறோம்னு தெரிஞ்சுதான் பேசறியா... நீங்க எதையும் மனசில போட்டுக்காதீங்கண்ணா. நாளைக்குப் போய்ப் பார்த்துட்டு...'' அம்மா நடுவில் புகுந்தாள்.

''அம்மா, ப்ளீஸ்... நான் கொஞ்சம்



அசந்து போய் என் கல்யாணத்துக்கு சரின்னுட்டேன். மாமா, மாப்பிள்ளை விஜியைப் பார்த்திருக்காருன்னும், அவருக்கு விஜியைப் பத்தி நல்ல அபிப்ராயம்னும் சொல்றீங்க. சீக்கிரம் பேசி முடிங்க. விஜிக்கு முடிஞ்சதும் எனக்குப் பார்க்கலாம்...'' என்றேன் குரலில் அழுத்தம் சேர்த்து.

''ஏன் கல்யாணி, இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறே...? முதல்லேயே உனக்குக் கல்யாணம் செஞ்சிருக்க வேண்டிது. இப்போ அடுத்ததா முடிக்கலாம்னு பார்த்தா... ஏம்மா... நீ சரின்னு சொன்னதும்தானே பார்த்தோம். மாப்பிள்ளையைப் பிடிக்கலையா...?''

''எனக்குன்னு இனிமேலேயா பொறக்கப் போறாரு.? நல்ல இடம்னு சொன்னதாலதான் சொல்றேன். விஜி யார்மா? என் தங்கச்சியில்லையா... என் கல்யாணத்துக்கு முன்னால அவளுக்கு முடிக்கிறது நமக்கும் நல்லதுதானேம்மா... சுஜியைப் பிடி. தூங்கிட்டாப் பாரு, தொட்டில்ல போடு. நான் போய் மாமாவுக்குக் காப்பி போடறேன்'' என்றேன். பூக்குவியல் கைமாறியது.

பாலை அடுப்பில் வைத்துவிட்டு ஜன்னல் வழியே தோட்டத்தைப் பார்த்தேன். கணேஷ், கதிரேசன் இருவரது முகங்களும் மெள்ள புகையாய் மறைந்து போக... என் விழிகள் எனக்கான விடியலுக்குக் காத்திருக்க ஆரம்பித்தன.

கலங்கிய விழிநீரைக் காற்று துடைத்துவிட்டது. ●

இந்துத் திருமணங்களில் 'ஸப்தபதீ' மிக முக்கியமான சடங்கு. பாணிக்கிரஹணம் செய்து கொண்ட பிறகு நடைபெறும் இந்நிகழ்ச்சி மிகுந்த அர்த்தம் கொண்டது!

தாலி கட்டியதும் அக்னிக்கு வலது புறமாக பெண்ணின் வலது காலை, வரன் ஒவ்வொரு அடியாக எடுத்து வைக்க வேண்டும். இவ்வாறு அவள் ஏழு அடிகள் வைக்க வேண்டும். இதற்கு 'ஸப்தபதீ' என்று பெயர்.

இவ்வாறு ஒவ்வொரு அடியை எடுத்து வைக்கும் போதும் அதற்குரிய மந்த்ரத்தை மாப்பிள்ளை சொல்ல வேண்டும்.

1. **''ஏகமிஷே விஷ்ணுஸ் த்வாந்வேது''**

(''ஏ பெண்ணே! நீ முதலாவது அடியை எடுத்து வைத்தாய். உனக்கு வாழ்க்கையில் அன்னம் குறைவில்லாமல் அளிப்பதற்காக மஹாவிஷ்ணு நீ வைத்த அடியில் பின்தொடர்ந்து வருவாராக!'')

2. **''த்வே ஊர்ஜே விஷ்ணுஸ் த்வாந்வேது''**

(''நீ இரண்டாவது அடி வைத்தாய். அந்த விஷ்ணுவே உனக்கு உடம்பில் புஷ்டி ஏற்படுவதற்கு உன்னைப் பின் தொடர்ந்து வருவாராக!'')

3. **''த்ரீணி வ்ரதாய விஷ்ணுஸ் த்வாந்வேது''**

(''நீ மூன்றாவது அடியை வைக்கும் பொழுது, நீ உனது வாழ்நாட்களில், விரதங்களை அனுஷ்டிக்கச் செய்வதற்காக மஹா விஷ்ணு உன்னைப் பின்தொடர்ந்து வருவாராக!'')

விஷ்ணு வரட்டும்





4. ''சத்வாரி மாயோ பவாய விஷ்ணுஸ் த்வாந்வேது''

(''நான்காவது அடி வைக்கும் போது உனக்கு நல்ல சுகத்தைக் கொடுப்பதற்காக மஹாவிஷ்ணு உன்னைப் பின்தொடர்ந்து வருவாராக!'')

5. ''பஞ்ச பசுப்ப : விஷ்ணுஸ் த்வாந்வேது''

(''ஐந்தாவது அடியை நீ வைக்கும் பொழுது உனக்குப் பசுக்கள் முதலான நல்ல நாற்கால் ஜீவன்கள் விருத்தியடைவதற்காக விஷ்ணு உன்னைப் பின்தொடர்வாராக!'')

6. ''ஷட் ருதுப்ய : விஷ்ணு த்வாந்வேது''

(''ஆறாவது அடியை நீ வைக்கும் பொழுது எல்லாவிதமான ருதுக்களும்

பெண்ணே!

உனக்கு அநுகூலமாகும்படி செய்வதற்காக மஹாவிஷ்ணு உன்னைப் பின்தொடர்ந்து வருவாராக!'')

7. ''ஸப்த ஸப்தப்யோ ஹோத்ராப்யோ விஷ்ணுஸ் த்வாந்வேது''

(''நீ வைத்த ஏழாவது அடியில், நீ வாழ்க்கையில் பங்குகொள்ள வேண்டிய ஹோமங்களைக் குறைவின்றி நிறைவேற்றுவதற்காக மஹாவிஷ்ணு உன்னைப் பின்தொடர்ந்து வருவாராக!'')

இந்த ஸப்தபதீ, திருமணத்தை உறுதிப்படுத்தும் மந்திரங்களாகும். திருமாங்கல்ய தாரணம் ஆனவுடனே விவாஹம் பூர்த்தியடைந்ததாக எண்ணிக் கைகுலுக்குதல், பரிசுப் பொருட்கள் தருதல் போன்றவை தவிர்க்கப்பட வேண்டும்.

- சரஸ்வதி வெங்கட்ராமன்,
சென்னை - 33.



சமீபத்தில் எனது நண்பர் ஒருவரின் இல்லத் திருமணத்தில் கலந்து கொண்டேன். திருமணத்துக்கு வந்திருந்தவர்கள் அனைவருக்கும் நுழைவாயிலில் மஞ்சள் நிற சிறிய பொட்டலத்தைக் கொடுத்தார்கள்.

அந்தத் தாளைப் பிரித்த போது, அதில் மங்களகரமான அட்சதை இருந்தது. அந்தத் தாளின் ஒரு பக்கம் சம்பந்தர், மாணிக்கவாசகர் அருளிய தேவாரம், திருக்கோவையார் பாடல்களும் மறு பக்கம், மணமக்களின் பெயர்களும் அச்சிடப்பட்டிருந்தன. அது தவிர, ''உள்ளிருக்கும் அருட்பாடலை உளமுவந்து ஓதி இறைவனை நினைத்து மணமக்கள் மீது அட்சதையைத் தூவி வாழ்த்துங்கள்!'' என்ற வேண்டுகோளும் காணப்பட்டது.

புதுமையான அதே சமயம் நிறைவான இந்த வாழ்த்தும் முறையை அனைவரும் பயன்படுத்தலாமே!

- கே. ஜெகதீசன், அரக்கோணம்.

மங்கையர் மலரின்

திருமண மலர்

திருமண மலர் விளம்பரக் கட்டண விவரங்கள்

முதல் முப்பது வார்த்தைகளுக்கு ரூ. 500/-

30க்கு மேற்பட்ட வார்த்தைகள் ஒவ்வொன்றுக்கும் தலா ரூ. 15/-

வண்ணத்தில் ஹைலைட் செய்ய கூடுதல் கட்டணம் ரூ. 100/-

1" X 1" அளவில் வண்ணப் புகைப்படத்துடன் 30 வார்த்தைகள் அடங்கிய விளம்பரத்துக்கு ரூ. 800/- (அதிகப்படியான வார்த்தை ஒவ்வொன்றுக்கும் ரூ 15/-)



வண்ணப் புகைப்படத்துடன் விவரங்கள் அடங்கிய அரை பக்க Profile விளம்பரம் ரூ. 2500/-



வண்ணப் புகைப்படம் அனுப்புபவர்கள், தெளிவான புகைப்படமாக, பாஸ்போர்ட் அளவில் இரண்டு பிரதிகள் அனுப்பவும். புகைப்படங்களை திருப்பி அனுப்ப இயலாது.

கட்டணத்தை நேரில் ரொக்கமாகவோ அல்லது சென்னை செக்காகவோ, வெளியூர் டிமாண்ட் டிராப்டாகவோ, **மங்கையர் மலர்** என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

விவரங்களுக்கு தொடர்பு கொள்க:

மங்கையர் மலரின் திருமண மலர்

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.
தொலைபேசி: 4343 8888 Fax : 044 - 4343 8899



அதில் ‘செண்டு’ (scent) பாட்டில் இல்லாததைப் பார்த்த என் மாமியார் அவசரமாக அதைத் தேட முற்பட்டபோது என் கணவர், ‘‘பெண்ணே! ‘செண்டு’ பெண்தானே! அவளுக்கு scent அவசியமா?’’ என்று ஒரு போடு போட்டதும்,

‘கமகம’ப் பெண்!

எங்கள் திருமணத்தில் நடந்த தமாஷ் இது! மாலை நலுங்கு விளை யாட்டுத் தொடங்கும் முன் பெண்ணிற்கு ‘சோப்பு, சீப்பு, கண்ணாடி, பவுடர், பேஸ்டு போன்ற அலங்காரச் சாமான்களை ஒரு தட்டில் வைத்து, மாப்பிள்ளை வீட்டினர் கொடுப்பது ஐதிகம்.

கூடி இருந்த அனை வரும் குபீர் என்று கைதட்டி சிரித்து விட்டனர்!

ஆம்! என் அம்மாவின் செல்லப் பெயர் ‘செண்டு’ மாமிதான்!

- ராதா ராமன், அஹமதாபாத்.

எனது பெரியப்பா, தனது மகனுக்கு பெண் பார்க்க, எனது பாட்டியையும் அழைத் துப் போனார். அங்கு பெண்ணைப் பார்த்துவிட்டு, திரும்பும்போது என் பெரியப்பா, ‘‘என்ன அம்மா, பெண் எப்படி இருக்கா? நீ என்ன சொல்றே?’’ என்றார்.

அதற்கு என் பாட்டி, ‘‘அவங்க வீட்டு காப்பி கொஞ்சம் ‘திக்’ ஆகவும், பெண் கொஞ்சம் ‘தின்’ ஆகவும் இருந்திருக்க லாம்’’ என்று சொன் னாரே பார்க்கலாம்.

அங்கிருந்த அனைவரும் சிரித்து விட்டனர்.

பெண் பருமனாக இருப்பதை நகைச் சுவையாகவும், நாசுக்காகவும் அவர் சொன்ன விதம் பலே!


- காயத்ரி சுந்தர், கல்பாக்கம்.

பலே பாட்டி!



Registered with the Registrar of Newspaper of India under No. 30309/75 * Registered No. TN / CC (S) DN / 170 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 103 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka. Supplement to the Mangayar Malar August 2008 issue

வண்ண மீன் கோலம்!



எஸ்.லிங்கேஸ்வரி, பாபநாசம்

அட்டைப்படம் : ஸ்ரீஹரி


என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
ஆகஸ்ட் 2008 இதழுடன் இணைப்பு
அவதாரம் செய்த அருள் வடிவம்
நள்ளிரவு நேரம். சுப கிரகங்கள் எல்லாம் ஒன்றாகக் கூடின. அஷ்டமியும் ரோகிணியும் கூடிய வேளையில், திசைகளெல்லாம் ஒளி மின்ன, தேவ துந்துபிகள் முழங்க, தேவர்கள் எல்லாம் மலர்மாரி பொழிய, உலகம் முழுதுமே ஆனந்தக் கடலில் மூழ்கியதைப் போல, எல்லோர்
நாகை முகுந்தன்
வழங்கும்
கிருஷ்ணா 64!


என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
ஆகஸ்ட் 2008 இதழுடன் இணைப்பு
அவதாரம் செய்த அருள் வடிவம்
நள்ளிரவு நேரம். சுப கிரகங்கள் எல்லாம் ஒன்றாகக் கூடின. அஷ்டமியும் ரோகிணியும் கூடிய வேளையில், திசைகளெல்லாம் ஒளி மின்ன, தேவ துந்துபிகள் முழங்க, தேவர்கள் எல்லாம் மலர்மாரி பொழிய, உலகம் முழுதுமே ஆனந்தக் கடலில் மூழ்கியதைப் போல,
நாகை முகுந்தன்
வழங்கும்



உள்ளத்திலும் இனம்புரியாத குதூகலம் பொங்க, நள்ளிரவில் கம்சனின் சிறைச் சாலையில், ஸ்ரீ கிருஷ்ணன் என்ற அற்புதம் உதயமானது.

சின்னஞ்சிறிய வடிவம்; தாமரைக் கண்கள்; நான்கு திருத்தோள்கள்; கரங்களில் சங்கு, சக்கரம், கதை, தாமரை; திருமார்பில் ஸ்ரீவத்சம்; கழுத்தில் கௌஸ்துப மணி; மேனியில் பீதாம்பரம்; வைடூர்யங்கள் இழைத்த கிரீடம்; காதிலே குண்டலங்கள்; இடுப்பிலே காஞ்சீ (இடுப்பில் அணிவது). தோள்வளை; சுருள் சுருளான கேசங்கள் ஆகியவற்றுடன், நீருண்ட மேகத்தைப் போல அவதரித்தான் கண்ணன்.

கூடவே ஒருத்தி வந்தாளாம். அவள் யார்?

Supplement to Mangayar Malar August 2008



உள்ளத்திலும் இனம்புரியாத குதூகலம் பொங்க, நள்ளிரவில் கம்சனின் சிறைச் சாலையில், ஸ்ரீ கிருஷ்ணன் என்ற அற்புதம் உதயமானது.

சின்னஞ்சிறிய வடிவம்; தாமரைக் கண்கள்; நான்கு திருத்தோள்கள்; கரங்களில் சங்கு, சக்கரம், கதை, தாமரை; திருமார்பில் ஸ்ரீவத்சம்; கழுத்தில் கௌஸ்துப மணி; மேனியில் பீதாம்பரம்; வைடூர்யங்கள் இழைத்த கிரீடம்; காதிலே குண்டலங்கள்; இடுப்பிலே காஞ்சீ (இடுப்பில் அணிவது). தோள்வளை; சுருள் சுருளான கேசங்கள் ஆகியவற்றுடன், நீருண்ட மேகத்தைப் போல அவதரித்தான் கண்ணன்.

கூடவே ஒருத்தி வந்தாளாம். அவள் யார்?

என்றும் உங்களுடன்

கூடவே வந்தவள்

கண்ணன் திருஅவதாரம் செய்த போது, லட்சுமி தேவியும் கூடவே வந்ததாக நாராயண பட்டதிரி சொல்கிறார்.

வக்ஷஸ்தலீ ஸுக நிலீன விலாஸி லக்ஷ்மி
மந்தா க்ஷ லக்ஷித கடாக்ஷ விமோக்ஷ பேதை :

"குருவாயூரப்பா! உன் சின்னஞ்சிறு மார்பில் ஏதோ ஓர் ஒளி மின்னல் தெரிகிறது. அங்கு, எப்போதும் உன்னை விட்டுப் பிரியாத லட்சுமி தேவியல்லவா இருக்கிறாள்?

'ஐயோ! என் ஸ்வாமி, ஸர்வ மங்கலங்களுக்கும் உறைவிடமானவர். அவர் போய், மகா அசுத்தமான இந்தச் சிறைச்சாலையை அல்லவா அவதாரம் செய்வதற்குத் தேர்ந்தெடுத்து விட்டார்! அவர் தோன்றுமிடத்தைத் தூய்மை யாக்குவது, என் வேலை. அதை



கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2008

கூடவே வந்தவள்

கண்ணன் திருஅவதாரம் செய்த போது, லட்சுமி தேவியும் கூடவே வந்ததாக நாராயண பட்டதிரி சொல்கிறார்.

வக்ஷஸ்தலீ ஸுக நிலீன விலாஸி லக்ஷ்மி
மந்தா க்ஷ லக்ஷித கடாக்ஷ விமோக்ஷ பேதை :

"குருவாயூரப்பா! உன் சின்னஞ்சிறு மார்பில் ஏதோ ஓர் ஒளி மின்னல் தெரிகிறது. அங்கு, எப்போதும் உன்னை விட்டுப் பிரியாத லட்சுமி தேவியல்லவா இருக்கிறாள்?

'ஐயோ! என் ஸ்வாமி, ஸர்வ மங்கலங்களுக்கும் உறைவிடமானவர். அவர் போய், மகா அசுத்தமான இந்தச் சிறைச்சாலையை அல்லவா அவதாரம் செய்வதற்குத் தேர்ந்தெடுத்து விட்டார்! அவர் தோன்றுமிடத்தைத் தூய்மை யாக்குவது, என் வேலை. அதை





நானே செய்து விடுகிறேன்' என உன் இதயத்தில் இருந்தபடியே தன் கண் பார்வையால் சிறைச் சாலை முழுவதையும், அமங்கலங்களைப் போக்கி மங்கலங்களை உண்டாக்கத் தானே வந்தாள்?'' எனக் கேட்கிறார் நாராயண பட்டதிரி.

விசித்திரமான வேண்டுகோள்

கண்ணன் அவதரித்ததும் தேவகிக்கு மெய் சிலிர்க்கிறது. கைகளைக் கூப்பி, ''தெய்வமே! உன்னுடைய இந்த திருத்தோள்களையும் சங்கு சக்கரம் முதலானவற்றையும் மறைத்துக் கொண்டு சாதாரணக் குழந்தையைப் போலவே காட்சி தாருங்கள்! அவதாரம் செய்ய வந்த கடவுள் நீங்கள் என்பதை, கம்சன்

Supplement to Mangayar Malar August 2008



நானே செய்து விடுகிறேன்' என உன் இதயத்தில் இருந்தபடியே தன் கண் பார்வையால் சிறைச் சாலை முழுவதையும், அமங்கலங்களைப் போக்கி மங்கலங்களை உண்டாக்கத் தானே வந்தாள்?'' எனக் கேட்கிறார் நாராயண பட்டதிரி.

விசித்திரமான வேண்டுகோள்

கண்ணன் அவதரித்ததும் தேவகிக்கு மெய் சிலிர்க்கிறது. கைகளைக் கூப்பி, ''தெய்வமே! உன்னுடைய இந்த திருத்தோள்களையும் சங்கு சக்கரம் முதலானவற்றையும் மறைத்துக் கொண்டு சாதாரணக் குழந்தையைப் போலவே காட்சி தாருங்கள்! அவதாரம் செய்ய வந்த கடவுள் நீங்கள் என்பதை, கம்சன்

என்றும் உங்களுடன்

அறியாமல் இருக்கட்டும். அவனுக்குத் தெரியக்கூடாது'' என வேண்டினாள்.

அதற்கும் மேலாக மற்றொரு காரணத்தையும் சொன்னாள். ''ஸ்வாமி! தெய்வமே! என் உள்ளத்தில் உங்களைத் தியானிக்கும்போது, நான் தரிசிக்கும் திருக்கோலம்தான் இது. இக்காட்சி எனக்குப் புதிதல்ல. ஆனால் இப்போதோ, அழியக்கூடிய என் உடம்பில் இருந்து ஒரு குழந்தையாக அவதரித்த நீங்கள், சாதாரணக் குழந்தை போல அல்லாது, தெய்வமாகவே காட்சியளிக்கிறீர்கள். நான் மறுபடியும் தியானம் செய்ய உட்கார்ந்தால், 'இந்த வடிவம் என் பிள்ளைதானே?' என்ற மயக்கமுண்டாகும். ஆகவே இந்தத் தெய்வ வடிவத்தை மறைத்து, சாதாரணக் குழந்தை வடிவம் கொள்ளுங்கள்!'' என வேண்டினாள். அதாவது, 'மனக்கண்களில் பார்க்கக்கூடிய



கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2008

அறியாமல் இருக்கட்டும். அவனுக்குத் தெரியக்கூடாது'' என வேண்டினாள்.

அதற்கும் மேலாக மற்றொரு காரணத்தையும் சொன்னாள். ''ஸ்வாமி! தெய்வமே! என் உள்ளத்தில் உங்களைத் தியானிக்கும்போது, நான் தரிசிக்கும் திருக்கோலம்தான் இது. இக்காட்சி எனக்குப் புதிதல்ல. ஆனால் இப்போதோ, அழியக்கூடிய என் உடம்பில் இருந்து ஒரு குழந்தையாக அவதரித்த நீங்கள், சாதாரணக் குழந்தை போல அல்லாது, தெய்வமாகவே காட்சியளிக்கிறீர்கள். நான் மறுபடியும் தியானம் செய்ய உட்கார்ந்தால், 'இந்த வடிவம் என் பிள்ளைதானே?' என்ற மயக்கமுண்டாகும். ஆகவே இந்தத் தெய்வ வடிவத்தை மறைத்து, சாதாரணக் குழந்தை வடிவம் கொள்ளுங்கள்!'' என வேண்டினாள். அதாவது, 'மனக்கண்களில் பார்க்கக்கூடிய





வடிவம் ஊனக்கண்களுக்குத் தெரிவது, அதுவும் என் உடம்பிலிருந்தே தோன்றி யதைப் போலக் காட்சியளிப்பது என் தியான நிலையைக் கெடுத்துவிடும்' - என்பது பொருள்.

அறிவு செயல் இழந்தது

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய்க் கொண்டு போகப்பட்ட கண்ணன், கோகுலத்தில் இருக்கிறான். அந்தக் கண்ணனைக் கண்ட கோபியர்களின் நிலை :

கோடி சூரியப் பிரகாசமான கண்ணனைப் பார்க்கிறார்கள். ''ஐயோ! இந்த ஆனந்தத்தை நாம் மட்டும் பார்த்தால் போதுமா? ஆயர்பாடி

Supplement to Mangayar Malar August 2008



வடிவம் ஊனக்கண்களுக்குத் தெரிவது, அதுவும் என் உடம்பிலிருந்தே தோன்றி யதைப் போலக் காட்சியளிப்பது என் தியான நிலையைக் கெடுத்துவிடும்' - என்பது பொருள்.

அறிவு செயல் இழந்தது

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய்க் கொண்டு போகப்பட்ட கண்ணன், கோகுலத்தில் இருக்கிறான். அந்தக் கண்ணனைக் கண்ட கோபியர்களின் நிலை :

கோடி சூரியப் பிரகாசமான கண்ணனைப் பார்க்கிறார்கள். ''ஐயோ! இந்த ஆனந்தத்தை நாம் மட்டும் பார்த்தால் போதுமா? ஆயர்பாடி

என்றும் உங்களுடன்

முழுதும் அல்லவா பார்க்க வேண்டும்!'' என்ற ஆர்வத்தில் கண்ணனின் அருகில் வர வேண்டியவர்கள், வெளியே ஓடுகிறார்கள். மனம், கண்ணனை நோக்கி இழுக்கிறது. மனதுக்கும் கால்களுக்குமான போராட்டத்தில், உடம்பு 'பொத்' என்று விழுகிறது. கோபியர்களின் கோஷம் ஆயர்பாடி முழுதும் பரவுகிறது. ஏராளமானோர் பாட்டுப் பாடியும், தாளத்திற்கு ஏற்றபடி ஆடியும் வருகிறார்கள். கண்ணனைத் தரிசித்ததும், அவர்களின் நிலை மாறிப் போகிறது. வீட்டிலுள்ள உறிகளை முற்றத்தில் உருட்டி விடுகிறார்கள். தயிர், பால், நெய், வெண்ணெய் ஆகியவற்றை ஒருவர் மேல் ஒருவர் பூசியும் தூவியும் விளையாடுகிறார்கள். ஒரே வரியில் சொல்ல வேண்டுமானால், 'அறிவிழந்தனர் ஆய்ப்பாடியரே' என்கிறார் ஆழ்வார்.

மனிதனது சாதாரண அறி



கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2008

முழுதும் அல்லவா பார்க்க வேண்டும்!'' என்ற ஆர்வத்தில் கண்ணனின் அருகில் வர வேண்டியவர்கள், வெளியே ஓடுகிறார்கள். மனம், கண்ணனை நோக்கி இழுக்கிறது. மனதுக்கும் கால்களுக்குமான போராட்டத்தில், உடம்பு 'பொத்' என்று விழுகிறது. கோபியர்களின் கோஷம் ஆயர்பாடி முழுதும் பரவுகிறது. ஏராளமானோர் பாட்டுப் பாடியும், தாளத்திற்கு ஏற்றபடி ஆடியும் வருகிறார்கள். கண்ணனைத் தரிசித்ததும், அவர்களின் நிலை மாறிப் போகிறது. வீட்டிலுள்ள உறிகளை முற்றத்தில் உருட்டி விடுகிறார்கள். தயிர், பால், நெய், வெண்ணெய் ஆகியவற்றை ஒருவர் மேல் ஒருவர் பூசியும் தூவியும் விளையாடுகிறார்கள். ஒரே வரியில் சொல்ல வேண்டுமானால், 'அறிவிழந்தனர் ஆய்ப்பாடியரே' என்கிறார் ஆழ்வார்.

மனிதனது சாதாரண அறி



கிருஷ்ணா 64!



விற்கு எட்ட முடியாதவன் பகவான். ஆராய்ச்சி யால் அவனை உணரவோ, அறியவோ முடியாது. அறிவால் ஆராய்ச்சி செய்து அறிய முடியாத பகவானை, கோபியர் தங்கள் உள்ளங்களால் அதிவிரைவாக நெருங்கி விட்டார்கள் என்பதே இதன் கருத்து.

தொட்டில் அனுப்பியது யார்?

அவதாரம் செய்த கண்ணனை அனை வரும் பாடாய்ப்படுத்தினால் எப்படி? கண்ணன் தூங்க வேண்டாமா? அதற்கான தொட்டிலைப் பெரியாழ்வார் அமைத்துத் தருகிறார். அத்தொட்டில் இந்த உலகத்தில் தயாரிக்கப்பட்டதில்லை. பிரம்மன் அனுப்பி யது. தங்கத்தால் செய்யப்பட்டது. அதில்

Supplement to Mangayar Malar August 2008



விற்கு எட்ட முடியாதவன் பகவான். ஆராய்ச்சி யால் அவனை உணரவோ, அறியவோ முடியாது. அறிவால் ஆராய்ச்சி செய்து அறிய முடியாத பகவானை, கோபியர் தங்கள் உள்ளங்களால் அதிவிரைவாக நெருங்கி விட்டார்கள் என்பதே இதன் கருத்து.

தொட்டில் அனுப்பியது யார்?

அவதாரம் செய்த கண்ணனை அனை வரும் பாடாய்ப்படுத்தினால் எப்படி? கண்ணன் தூங்க வேண்டாமா? அதற்கான தொட்டிலைப் பெரியாழ்வார் அமைத்துத் தருகிறார். அத்தொட்டில் இந்த உலகத்தில் தயாரிக்கப்பட்டதில்லை. பிரம்மன் அனுப்பி யது. தங்கத்தால் செய்யப்பட்டது. அதில்

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!

மாணிக்கமும் வைரமும் இடையிடையே கட்டப்பட்டிருக்கின்றன.

பெரியாழ்வார், "அப்பனே! உன் சாமர்த்தியத்தையெல்லாம் ஏழையான யசோதை ஆட்டும் தொட்டிலில் காட்டி விடாதே! நீ வாமனராக வந்ததும், நெடு(ம்)மாலாகி வளர்ந்ததும் தெரியும். அது பழைய கதையாகவே இருக்கட்டும். இங்கே வேண்டாம்!" என வேண்டிக் கொள்கிறார் தொட்டிலில் கிடக்கும் கண்ணனிடம்.

தொட்டிலில் கிடக்கும் கண்ணனைப் பார்க்க மறுபடியும் கோபியர்கள் கூடிவிட்டார்கள். கண்ணன் தங்களைப் பார்க்க மாட்டானா, சிரிக்க மாட்டானா என்பது அவர்கள் எதிர்பார்ப்பு. ஆனால் கண்ணனோ, நகரத்திலிருந்து வரும் ஓர் அலங்காரப் பெண்ணையல்லவா எதிர்பார்க்கிறான்?

யாரவள்?



கிருஷ்ணா 64!


Supplement to Mangaiyar Malar August 2008

மாணிக்கமும் வைரமும் இடையிடையே கட்டப்பட்டிருக்கின்றன.

பெரியாழ்வார், "அப்பனே! உன் சாமர்த்தியத்தையெல்லாம் ஏழையான யசோதை ஆட்டும் தொட்டிலில் காட்டி விடாதே! நீ வாமனராக வந்ததும், நெடு(ம்)மாலாகி வளர்ந்ததும் தெரியும். அது பழைய கதையாகவே இருக்கட்டும். இங்கே வேண்டாம்!" என வேண்டிக் கொள்கிறார் தொட்டிலில் கிடக்கும் கண்ணனிடம்.

தொட்டிலில் கிடக்கும் கண்ணனைப் பார்க்க மறுபடியும் கோபியர்கள் கூடிவிட்டார்கள். கண்ணன் தங்களைப் பார்க்க மாட்டானா, சிரிக்க மாட்டானா என்பது அவர்கள் எதிர்பார்ப்பு. ஆனால் கண்ணனோ, நகரத்திலிருந்து வரும் ஓர் அலங்காரப் பெண்ணையல்லவா எதிர்பார்க்கிறான்?

யாரவள்?



கிருஷ்ணா 64!



அவதார காரியம் தொடங்கி விட்டது

கண்ணன் எதிர்பார்த்த பெண் வந்தாள். பிரமிக்க வைக்கும் அவளழகைக் கண்டு, கோபியர்கள் எல்லாம் சொக்கிப் போய் நின்றார்கள். வந்தவள் பூதனை. கண்ணனைக் கொல்ல கம்சனால் அனுப்பப்பட்டவள்! விஷம் கலந்த பாலைக் கொடுத்துக் கண்ணனைக் கொல்ல வேண்டுமென்று, அந்த வஞ்சக அழகி கண்ணனை வாரியெடுத்தாள். விஷம் கலந்த பாலை ஊட்டினாள். கண்ணனோ, பாலுடன் அவள் உயிரையும் சேர்ந்து உறிஞ்சி விட்டான். உயிர் போகும் நேரத்தில், அவள் தன் சுயவடிவைக் கொண்டு, கீழே விழுந்தாள். சத்தம் கேட்டு ஓடோடி வந்த யசோதை, பூதனையின் பிரும்மாண்டமான

10 Supplement to Mangayar Malar August 2008

அவதார காரியம் தொடங்கி விட்டது

கண்ணன் எதிர்பார்த்த பெண் வந்தாள். பிரமிக்க வைக்கும் அவளழகைக் கண்டு, கோபியர்கள் எல்லாம் சொக்கிப் போய் நின்றார்கள். வந்தவள் பூதனை. கண்ணனைக் கொல்ல கம்சனால் அனுப்பப்பட்டவள்! விஷம் கலந்த பாலைக் கொடுத்துக் கண்ணனைக் கொல்ல வேண்டுமென்று, அந்த வஞ்சக அழகி கண்ணனை வாரியெடுத்தாள். விஷம் கலந்த பாலை ஊட்டினாள். கண்ணனோ, பாலுடன் அவள் உயிரையும் சேர்ந்து உறிஞ்சி விட்டான். உயிர் போகும் நேரத்தில், அவள் தன் சுயவடிவைக் கொண்டு, கீழே விழுந்தாள். சத்தம் கேட்டு ஓடோடி வந்த யசோதை, பூதனையின் பிரும்மாண்டமான

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!



உடம்பில், கண்ணன் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டாள். பதறிப் போய்க் கண்ணனை எடுத்து, கோவிந்தனின் நாமங்களைச் சொல்லி, கோவிந்தனான கண்ணனுக்கே ரட்சை செய்தாள். கண்ணனுடைய அவதார காரியம் தொடங்கி விட்டது.

உலகத்தை தன் வாயில் காட்டியவன்

யசோதை, கிருஷ்ணனுக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டினாள். குழந்தையின் நாக்கில் பசு மஞ்சளை வைத்து நாக்கு வழித்தாள். அச்சமயம் வையம் ஏழும் கண்டாள் பிள்ளை வாயினுள்ளே என்கிறார் பெரியாழ்வார். உலகத்தை வாயில் காட்ட முடியுமா என நினைக்கக்கூடாது. இறைவனால் முடியாதது எதுவும் இல்லை.
மற்றொரு தத்துவம் பஞ்ச



கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2008 11


உடம்பில், கண்ணன் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டாள். பதறிப் போய்க் கண்ணனை எடுத்து, கோவிந்தனின் நாமங்களைச் சொல்லி, கோவிந்தனான கண்ணனுக்கே ரட்சை செய்தாள். கண்ணனுடைய அவதார காரியம் தொடங்கி விட்டது.

உலகத்தை தன் வாயில் காட்டியவன்

யசோதை, கிருஷ்ணனுக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டினாள். குழந்தையின் நாக்கில் பசு மஞ்சளை வைத்து நாக்கு வழித்தாள். அச்சமயம் வையம் ஏழும் கண்டாள் பிள்ளை வாயினுள்ளே என்கிறார் பெரியாழ்வார். உலகத்தை வாயில் காட்ட முடியுமா என நினைக்கக்கூடாது. இறைவனால் முடியாதது எதுவும் இல்லை.
மற்றொரு தத்துவம் பஞ்ச



கிருஷ்ணா 64!




பூதத்தால் ஆனது உலகம். பஞ்சபூத சேர்க்கை உடம்பு. அண்டத்தில் உள்ளது, பிண்டத்திலும் உள்ளது என காட்டியுள்ளான்.

திருமாலின் சக்கரம் பல கோடி சூரியனைப் போல் பிரகாசிக்கக்கூடியது. குறிப்பிட்ட ஒளிக்குப் பழக்கப்பட்டுள்ள கண்கள், அதிக ஒளியைப் பார்க்கும் சமயம் இருண்டு விட்டதாக உணரும். அதைப் போல் நடந்ததே ஒழிய, கண்ணன் அதர்மமாக சூரியனை மறைக்கவில்லை.

தேவகியின் தாலாட்டு

பூதனை சம்ஹாரம் கோகுலத்தில் நடந்த வேளையில், மதுராவில் தேவகி, தொட்டிலை ஆட்டி, தாலாட்டுப் பாடினாள். திடீரென்று

2 Supplement to Mangayar Malar August 2008



பூதத்தால் ஆனது உலகம். பஞ்சபூத சேர்க்கை உடம்பு. அண்டத்தில் உள்ளது, பிண்டத்திலும் உள்ளது என காட்டியுள்ளான்.

திருமாலின் சக்கரம் பல கோடி சூரியனைப் போல் பிரகாசிக்கக்கூடியது. குறிப்பிட்ட ஒளிக்குப் பழக்கப்பட்டுள்ள கண்கள், அதிக ஒளியைப் பார்க்கும் சமயம் இருண்டு விட்டதாக உணரும். அதைப் போல் நடந்ததே ஒழிய, கண்ணன் அதர்மமாக சூரியனை மறைக்கவில்லை.

தேவகியின் தாலாட்டு

பூதனை சம்ஹாரம் கோகுலத்தில் நடந்த வேளையில், மதுராவில் தேவகி, தொட்டிலை ஆட்டி, தாலாட்டுப் பாடினாள். திடீரென்று

என்றும் உங்களுடன் மங்கையர் மலர்

குனிந்து தொட்டிலைப் பார்க்கிறாள். அதுவரை வெறும் தொட்டிலை ஆட்டிக் கொண்டிருந்தது நினைவிற்கு வருகிறது. ''என் கண்மணி எங்கே? வெறும் தொட்டிலையல்லவா ஆட்டிக் கொண்டிருக்கிறேன். ஆயர்பாடியில் யாரோ ஒருத்தி, பெருமைபடும்படியாக, என் பிள்ளையை உரிமையோடு தொட்டிலிட்டு தாலாட்டுப் பாடிக் கொண்டிருப்பாளே! பெற்றவளான எனக்கு அந்தப் பாக்கியம் இல்லையே! என் தெய்வக் குழந்தை, 'அப்பா!' என்று தன் சின்னஞ்சிறிய விரலினாலும் கடைக் கண்ணாலும் நந்தகோபனைக் காட்டுவான். உண்மையிலேயே தந்தையான வசுதேவருக்கு அந்தப் பாக்கியம் இல்லையே!'' எனப்புலம்புகிறாள்.

தேவகி அப்போது இருந்த நிலையைப் பத்து பாடல்களில் பாடி நெஞ்சை நெகிழ வைக்கிறார் குலசேகர ஆழ்வார்.



கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2008 17

குனிந்து தொட்டிலைப் பார்க்கிறாள். அதுவரை வெறும் தொட்டிலை ஆட்டிக் கொண்டிருந்தது நினைவிற்கு வருகிறது. ''என் கண்மணி எங்கே? வெறும் தொட்டிலையல்லவா ஆட்டிக் கொண்டிருக்கிறேன். ஆயர்பாடியில் யாரோ ஒருத்தி, பெருமைபடும்படியாக, என் பிள்ளையை உரிமையோடு தொட்டிலிட்டு தாலாட்டுப் பாடிக் கொண்டிருப்பாளே! பெற்றவளான எனக்கு அந்தப் பாக்கியம் இல்லையே! என் தெய்வக் குழந்தை, 'அப்பா!' என்று தன் சின்னஞ்சிறிய விரலினாலும் கடைக் கண்ணாலும் நந்தகோபனைக் காட்டுவான். உண்மையிலேயே தந்தையான வசுதேவருக்கு அந்தப் பாக்கியம் இல்லையே!'' எனப்புலம்புகிறாள்.

தேவகி அப்போது இருந்த நிலையைப் பத்து பாடல்களில் பாடி நெஞ்சை நெகிழ வைக்கிறார் குலசேகர ஆழ்வார்.



கிருஷ்ணா 64!



சகடாசுரன் வதம்!

கண்ணனைக் கொல்வதற்காக வந்த பூதனை இறந்ததால், சகடாசுரன் என்பவன் வந்தான். ஒரு வண்டியின் அடியில் படுத்திருந்த கண்ணனைக் கண்டு, 'இவனைக் கொல்ல இதுவே தருணம்' என வண்டியில் புகுந்தான். கண்ணன் தன் சின்னஞ்சிறு பாதத்தை நீட்டி உதைத்தான். பெரும் சத்தத்துடன் வண்டி, துகளாகி விழுந்தது. சகடாசுரன் கதை முடிந்தது. ஆனால் பூதனையைப் போல இவன் தன் சுயவடிவைக் கொண்டு, விழவில்லை. இறைவன் திருவடி இவன் மேல் பட்டதால், இவன் தன் அரக்க வடிவம் கொண்டு விழவில்லை. இறைவனுடன் இரண்டறக்

4 Supplement to Mangayar Malar August 2008



சகடாசுரன் வதம்!

கண்ணனைக் கொல்வதற்காக வந்த பூதனை இறந்ததால், சகடாசுரன் என்பவன் வந்தான். ஒரு வண்டியின் அடியில் படுத்திருந்த கண்ணனைக் கண்டு, 'இவனைக் கொல்ல இதுவே தருணம்' என வண்டியில் புகுந்தான். கண்ணன் தன் சின்னஞ்சிறு பாதத்தை நீட்டி உதைத்தான். பெரும் சத்தத்துடன் வண்டி, துகளாகி விழுந்தது. சகடாசுரன் கதை முடிந்தது. ஆனால் பூதனையைப் போல இவன் தன் சுயவடிவைக் கொண்டு, விழவில்லை. இறைவன் திருவடி இவன் மேல் பட்டதால், இவன் தன் அரக்க வடிவம் கொண்டு விழவில்லை. இறைவனுடன் இரண்டறக்

என்றும் உங்களுடன்

கலந்து விட்டான் - என்று மகான்கள் இதற்கு விளக்கம் சொல்வார்கள்.

என்னையும் காப்பாற்று!

யசோதையின் மடியில் இருந்த கண்ணன், திடீரென கனத்தான். காரணம் தெரியாத யசோதை, கண்ணனைக் கீழே விட்டாள். எதிர்பாராவிதமாக சூறாவளிக் காற்று ஒன்று கிளம்பியது. புழுதி எழுந்து கண்களை மறைத்தது. த்ருணாவர்த்தன் என்ற அரக்கன் பயங்கரமான காற்று வடிவில் வந்து, கண்ணனை எடுத்துக் கொண்டு ஆகாயத்தில் பறந்தான். 'இந்தக் கண்ணனைக் கொன்று விடுவேன் நான்' என்ற எண்ணத்துடன் போய்க் கொண்டிருந்த அவனை, கண்ணன்



கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 15

கலந்து விட்டான் - என்று மகான்கள் இதற்கு விளக்கம் சொல்வார்கள்.

என்னையும் காப்பாற்று!

யசோதையின் மடியில் இருந்த கண்ணன், திடீரென கனத்தான். காரணம் தெரியாத யசோதை, கண்ணனைக் கீழே விட்டாள். எதிர்பாராவிதமாக சூறாவளிக் காற்று ஒன்று கிளம்பியது. புழுதி எழுந்து கண்களை மறைத்தது. த்ருணாவர்த்தன் என்ற அரக்கன் பயங்கரமான காற்று வடிவில் வந்து, கண்ணனை எடுத்துக் கொண்டு ஆகாயத்தில் பறந்தான். 'இந்தக் கண்ணனைக் கொன்று விடுவேன் நான்' என்ற எண்ணத்துடன் போய்க் கொண்டிருந்த அவனை, கண்ணன்



கிருஷ்ணா 64!



ஒழித்துக் கட்டினார். வாதரோகத்தால் பீடிக்கப்பட்டு, பாகவதத்தின் சுருக்கமாக 1034 பாடல்களில் 'நாராயணீயம்' பாடிய நாராயணபட்டதிரி. இந்த த்ருணாவர்த்த வதத்தைச் சொல்லி, "குருவாயூரப்பா! காற்று வடிவாக வந்த அந்த அரக்கனை அழித்த நீ, அதே காற்று வடிவாக என்னைப் பீடித்திருக்கும் இந்த வாதரோகத்தைப் போக்கி எனக்கு அருள் செய்!" என வேண்டுகிறார்.

ஆயர் பாடியில் தவழ்ந்த அலங்காரநாயகன்

கண்ணன் தவழ ஆரம்பித்துவிட்டான். கால்களில் கொலுசுகள்; இடுப்பில்

Supplement to Mangayar Malar August 2008



ஒழித்துக் கட்டினார். வாதரோகத்தால் பீடிக்கப்பட்டு, பாகவதத்தின் சுருக்கமாக 1034 பாடல்களில் 'நாராயணீயம்' பாடிய நாராயணபட்டதிரி. இந்த த்ருணாவர்த்த வதத்தைச் சொல்லி, "குருவாயூரப்பா! காற்று வடிவாக வந்த அந்த அரக்கனை அழித்த நீ, அதே காற்று வடிவாக என்னைப் பீடித்திருக்கும் இந்த வாதரோகத்தைப் போக்கி எனக்கு அருள் செய்!" என வேண்டுகிறார்.

ஆயர் பாடியில் தவழ்ந்த அலங்காரநாயகன்

கண்ணன் தவழ ஆரம்பித்துவிட்டான். கால்களில் கொலுசுகள்; இடுப்பில்

என்றும் உங்களுடன்



கிண்கிணிகள் கட்டிய அரைஞாண்; கைகளில் காப்பு; தலையின் பக்கவாட்டில் ஒதுங்கி அழகுடன் ஜொலிக்கும் தலைமுடி; அதன் மீது ஒரு மயிலிறகு. இப்படிப்பட்ட கோலத்தோடு கண்ணன் தவழும்போது கொலுசு, கிண்கிணி, காப்பு ஆகியவை 'ஜல்ஜல்' என ஒலிக்கின்றன. ஆயர்பாடி மக்கள் எல்லோரும் வேடிக்கை பார்க்கக் குவிந்து விட்டார்கள். கூட்டத்தைப் பார்த்ததும் கண்ணனுக்கு உற்சாகம் வந்துவிட்டது. கூடவே தவழ்ந்த பலராமனும் உற்சாகப்பட்டான். இருவருமாக வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். தலைமுடி கலைந்து ஆபரணங்கள் நழுவின. எல்லோரும் சிரித்தார்கள். 'எல்லோரும் பார்க்கிறார்களே!' எனக் குழந்தைகளும் வெட்கத்துடன், சின்னஞ்சிறு பற்கள் தெரியச் சிரித்தார்கள்.

கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2008 17



கிண்கிணிகள் கட்டிய அரைஞாண்; கைகளில் காப்பு; தலையின் பக்கவாட்டில் ஒதுங்கி அழகுடன் ஜொலிக்கும் தலைமுடி; அதன் மீது ஒரு மயிலிறகு. இப்படிப்பட்ட கோலத்தோடு கண்ணன் தவழும்போது கொலுசு, கிண்கிணி, காப்பு ஆகியவை 'ஜல்ஜல்' என ஒலிக்கின்றன. ஆயர்பாடி மக்கள் எல்லோரும் வேடிக்கை பார்க்கக் குவிந்து விட்டார்கள். கூட்டத்தைப் பார்த்ததும் கண்ணனுக்கு உற்சாகம் வந்துவிட்டது. கூடவே தவழ்ந்த பலராமனும் உற்சாகப்பட்டான். இருவருமாக வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். தலைமுடி கலைந்து ஆபரணங்கள் நழுவின. எல்லோரும் சிரித்தார்கள். 'எல்லோரும் பார்க்கிறார்களே!' எனக் குழந்தைகளும் வெட்கத்துடன், சின்னஞ்சிறு பற்கள் தெரியச் சிரித்தார்கள்.

கிருஷ்ணா 64!



திடீர்க் கூட்டம்

கண்ணன் தவழ்ந்து, எழுந்து, விழுந்து, நடந்து அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்ததால், கண்ணனின் உடம்பில் வியர்வை வழிந்தது. கண்ணன் சறுக்கி விழுந்தான். மறுபடியும் தானே எழுந்து நடந்தான். அதைப் பார்க்க ஆகாயத்திலும் மகரிஷிகள் கூட்டம் கூடி விட்டது. ஒவ்வொரு முறையும் கண்ணன் விழுந்து எழுந்து நடக்கும் போது, எல்லா மகரிஷிகளும் நமஸ்காரம் செய்கிறார்கள். காரணம்? தரையில் கண்ணன் நடக்கும்போது, அதில் சங்கு, சக்கரம் முதலான ரேகைகள் தெரிந்தன. அதைப் பார்த்த மகரிஷிகள், "ஆகா! இந்தக் கண்ணன்

18 Supplement to Mangayar Malar August 2008



திடீர்க் கூட்டம்

கண்ணன் தவழ்ந்து, எழுந்து, விழுந்து, நடந்து அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்ததால், கண்ணனின் உடம்பில் வியர்வை வழிந்தது. கண்ணன் சறுக்கி விழுந்தான். மறுபடியும் தானே எழுந்து நடந்தான். அதைப் பார்க்க ஆகாயத்திலும் மகரிஷிகள் கூட்டம் கூடி விட்டது. ஒவ்வொரு முறையும் கண்ணன் விழுந்து எழுந்து நடக்கும் போது, எல்லா மகரிஷிகளும் நமஸ்காரம் செய்கிறார்கள். காரணம்? தரையில் கண்ணன் நடக்கும்போது, அதில் சங்கு, சக்கரம் முதலான ரேகைகள் தெரிந்தன. அதைப் பார்த்த மகரிஷிகள், "ஆகா! இந்தக் கண்ணன்

என்றும் உங்களுடன்

எங்கள் வாசுதேவனே!'' என்று அந்தத் திருவடி களுக்கு நமஸ்காரம் செய்தார்கள்.

வெண்ணெய் திருடியது ஏன்?

வைகுண்டத்தில் பகவானுக்குப் பூஜை செய்து, அமிர்தத்தை நைவேத்தியம் செய்தார்கள். 'எத்தனை நாள் தான் இந்த அமிர்தத்தையே சாப்பிட்டுக் கொண்டு இருப்பது?' என நினைத்தார் பகவான். அப்போது பூலோகத்தில் யசோதை காய்ச்சும் வெண்ணெய் வாசனை வைகுண்டம் வரை வீசியதாம். 'ஒரு நொடிப் பொழுது அவகாசம் கிடைத்தால், கீழே இறங்கி அந்த வெண்ணெயை விழுங்கிவிட்டு வரவேண்டும்' என நினைத்தார் பகவான்.



கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2008 19

எங்கள் வாசுதேவனே!'' என்று அந்தத் திருவடி களுக்கு நமஸ்காரம் செய்தார்கள்.

வெண்ணெய் திருடியது ஏன்?

வைகுண்டத்தில் பகவானுக்குப் பூஜை செய்து, அமிர்தத்தை நைவேத்தியம் செய்தார்கள். 'எத்தனை நாள் தான் இந்த அமிர்தத்தையே சாப்பிட்டுக் கொண்டு இருப்பது?' என நினைத்தார் பகவான். அப்போது பூலோகத்தில் யசோதை காய்ச்சும் வெண்ணெய் வாசனை வைகுண்டம் வரை வீசியதாம். 'ஒரு நொடிப் பொழுது அவகாசம் கிடைத்தால், கீழே இறங்கி அந்த வெண்ணெயை விழுங்கிவிட்டு வரவேண்டும்' என நினைத்தார் பகவான்.



கிருஷ்ணா 64!



அப்போது வைகுண்டத்தில் பகவானுக்கு அகில் மணம் தவழும் தூபத்தைக் காட்டி னார்கள். அந்த தூமப் புகை, நித்திய சூரிகளின் கண்களில் இருந்து பகவானை மறைத்தது. 'இதுதான் சமயம்' என்று பகவான் பூமியிலே கண்ணனாகப் பிறந்து ஆசை தீர வெண்ணெய் தின்று பற்பல லீலைகளைச் செய்து, மறுபடியும் தன் இருப்பிடத்திற்கே திரும்பிவிட்டார். இதை அறியாத நித்திய சூரிகள், தூபம் முடிந்தபின், மிகவும் சகஜமாகத் தீபத்தைக்காட்டினார்கள்.

பூதத்தை என்னிடம் கொடு!

யசோதை தயிர் கடைந்து கொண் டிருந்தாள். பக்கத்தில் இருந்த கண்ணன்,

20 Supplement to Mangayar Malar August 2008



அப்போது வைகுண்டத்தில் பகவானுக்கு அகில் மணம் தவழும் தூபத்தைக் காட்டி னார்கள். அந்த தூமப் புகை, நித்திய சூரிகளின் கண்களில் இருந்து பகவானை மறைத்தது. 'இதுதான் சமயம்' என்று பகவான் பூமியிலே கண்ணனாகப் பிறந்து ஆசை தீர வெண்ணெய் தின்று பற்பல லீலைகளைச் செய்து, மறுபடியும் தன் இருப்பிடத்திற்கே திரும்பிவிட்டார். இதை அறியாத நித்திய சூரிகள், தூபம் முடிந்தபின், மிகவும் சகஜமாகத் தீபத்தைக்காட்டினார்கள்.

பூதத்தை என்னிடம் கொடு!

யசோதை தயிர் கடைந்து கொண் டிருந்தாள். பக்கத்தில் இருந்த கண்ணன்,

என்றும் உங்களுடன்

''அம்மா! இந்தத் தயிர்ச் சட்டி நடுவில் வெள்ளையாய் 'கும்கும்' என்று சுற்றி வருகிறதே. அது என்ன?'' எனக் கேட்டான். யசோதையோ, 'இது வெண்ணெய் என்பது கூடத் தெரியாத குழந்தையா நீ?' என எண்ணி, ''இது ஒரு மாதிரியான பூதம். நீ தூரத்தில் போய்விடு'' எனச் சிரித்தபடி சொன்னாள். கண்ணன் விடவில்லை, ''அப்படியா அம்மா! பூதம் என்றால் ஆளை விழுங்கிவிடாதா? நீ மட்டும் அதன் பக்கத்தில் இருக்கலாமா? உன்னை அது விழுங்கி விட்டால், நான் என்ன செய்வேன்? அதை எடுத்து என் கையில் கொடு! நான் அதை விழுங்கி விடுகிறேன்'' என்றான்.

கண்ணனுக்குத் தேவை அந்த வெண்ணெய் தானே!



கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2008 21

''அம்மா! இந்தத் தயிர்ச் சட்டி நடுவில் வெள்ளையாய் 'கும்கும்' என்று சுற்றி வருகிறதே. அது என்ன?'' எனக் கேட்டான். யசோதையோ, 'இது வெண்ணெய் என்பது கூடத் தெரியாத குழந்தையா நீ?' என எண்ணி, ''இது ஒரு மாதிரியான பூதம். நீ தூரத்தில் போய்விடு'' எனச் சிரித்தபடி சொன்னாள். கண்ணன் விடவில்லை, ''அப்படியா அம்மா! பூதம் என்றால் ஆளை விழுங்கிவிடாதா? நீ மட்டும் அதன் பக்கத்தில் இருக்கலாமா? உன்னை அது விழுங்கி விட்டால், நான் என்ன செய்வேன்? அதை எடுத்து என் கையில் கொடு! நான் அதை விழுங்கி விடுகிறேன்'' என்றான்.

கண்ணனுக்குத் தேவை அந்த வெண்ணெய் தானே!



கிருஷ்ணா 64!



நவநீத நாட்டியம்

கண்ணன் என்னதான் சாதுரியமாகப் பேசினாலும் யசோதை வெண்ணெய் தர வில்லை. ''நான் கடைந்து முடிக்கும் வரை நீ ஆடினால்தான் வெண்ணெய் தருவேன். மத்துக் கயிற்றை நான் இடது கையால் இழுக்கும் போது, நீ உன் இடது காலைத் தூக்க வேண்டும்; வலது கையால் இழுக்கும் போது, நீ உன் வலது காலைத் தூக்கி ஆட வேண்டும். இப்படி மாற்றி மாற்றி, தவறாமல் ஆடினால், வெண்ணெய்ப் பரிசு தருவேன்'' என்று நிபந்தனை போட்டாள் யசோதை. கண்ணனும் அவ்வாறே வியர்க்க விறுவிறுக்க ஆடினான். எப்போதும், ஒரு கால் உயரே

22 Supplement to Mangayar Malar August 2008



நவநீத நாட்டியம்

கண்ணன் என்னதான் சாதுரியமாகப் பேசினாலும் யசோதை வெண்ணெய் தர வில்லை. ''நான் கடைந்து முடிக்கும் வரை நீ ஆடினால்தான் வெண்ணெய் தருவேன். மத்துக் கயிற்றை நான் இடது கையால் இழுக்கும் போது, நீ உன் இடது காலைத் தூக்க வேண்டும்; வலது கையால் இழுக்கும் போது, நீ உன் வலது காலைத் தூக்கி ஆட வேண்டும். இப்படி மாற்றி மாற்றி, தவறாமல் ஆடினால், வெண்ணெய்ப் பரிசு தருவேன்'' என்று நிபந்தனை போட்டாள் யசோதை. கண்ணனும் அவ்வாறே வியர்க்க விறுவிறுக்க ஆடினான். எப்போதும், ஒரு கால் உயரே

என்றும் உங்களுடன்

தூக்கிய வண்ணமாகவே இருந்தது. அவ்வளவு வேகம். அண்ட சராசரங்களையெல்லாம் ஆட்டிப் படைக்கும் கண்ணன், ஒரு கை வெண்ணெய்க்காக ஆடிய அந்த நாட்டியத்திற்கு 'நவநீத நாட்டியம்' என மகான்கள் பெயர் சூட்டினார்கள்.

யசோதையின் சாமர்த்தியம்

யசோதை கடைந்து முடித்தாள். 'அம்மா நிறைய வெண்ணெய் தருவாள்' என எண்ணிய கண்ணனிடம், ஒரு கடுக்காய் அளவு வெண்ணெயை எடுத்துத் தரப் பார்த்தாள். கண்ணனோ, ''சரி! இதையாவது இரண்டு பங்காகப் பெறலாம்'' என்று நினைத்து, அங்கிருந்த பளபளக்கும் தூணின் அருகில் போய் நின்றான். கண்ணாடி போன்ற



கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2008

தூக்கிய வண்ணமாகவே இருந்தது. அவ்வளவு வேகம். அண்ட சராசரங்களையெல்லாம் ஆட்டிப் படைக்கும் கண்ணன், ஒரு கை வெண்ணெய்க்காக ஆடிய அந்த நாட்டியத்திற்கு 'நவநீத நாட்டியம்' என மகான்கள் பெயர் சூட்டினார்கள்.

யசோதையின் சாமர்த்தியம்

யசோதை கடைந்து முடித்தாள். 'அம்மா நிறைய வெண்ணெய் தருவாள்' என எண்ணிய கண்ணனிடம், ஒரு கடுக்காய் அளவு வெண்ணெயை எடுத்துத் தரப் பார்த்தாள். கண்ணனோ, ''சரி! இதையாவது இரண்டு பங்காகப் பெறலாம்'' என்று நினைத்து, அங்கிருந்த பளபளக்கும் தூணின் அருகில் போய் நின்றான். கண்ணாடி போன்ற

கிருஷ்ணா 64!





அந்தத் தூணில் கண்ணன் உருவம் பிரதிபலித்து, இரண்டு கண்ணன் இருப்பதைப் போலக் காட்சியளித்தது. இரண்டு கிருஷ்ணர்களாகக் காட்சி தந்த கண்ணன், கைகளை நீட்டினான். யசோதையோ தன் கையில் இருந்த கடுக்காய் அளவு வெண்ணெயையே இரண்டு பங்காகச் செய்து இரண்டு கிருஷ்ணர்களுக்கும் விநியோகம் செய்தாள்.

பகவான் விடுவானா?

மோர்க்கடலில்...

ஆடிய களைப்பு தீர, தூங்குவது போல் கண்ணன் படுத்தான். கடைந்த வெண்ணெய்,

24 Supplement to Mangaiyar Malar August 2008



அந்தத் தூணில் கண்ணன் உருவம் பிரதிபலித்து, இரண்டு கண்ணன் இருப்பதைப் போலக் காட்சியளித்தது. இரண்டு கிருஷ்ணர்களாகக் காட்சி தந்த கண்ணன், கைகளை நீட்டினான். யசோதையோ தன் கையில் இருந்த கடுக்காய் அளவு வெண்ணெயையே இரண்டு பங்காகச் செய்து இரண்டு கிருஷ்ணர்களுக்கும் விநியோகம் செய்தாள்.

பகவான் விடுவானா?

மோர்க்கடலில்...

ஆடிய களைப்பு தீர, தூங்குவது போல் கண்ணன் படுத்தான். கடைந்த வெண்ணெய்,

என்றும் உங்களுடன்

தயிர் முதலானவற்றை பானைகளில் மூடி வைத்துவிட்டு, யசோதை அடுக்களைக்குப் போனாள். இது தான் சமயம் என்று கண்ணன், வெண்ணெயை முழுவதுமாக விழுங்கி விட்டு, பக்கத்தில் இருந்த குடத்தில் எட்டிப் பார்த்தான். அதில் மோர் இருந்தது. கோபத்தினால் ஒரு உதை உதைத்தான். குடம் சாய்ந்து கவிழ்ந்து உருண்டு மோர் எல்லாம் சிதறியது. சத்தம் கேட்டு ஓடி வந்தாள் யசோதை. அறை முழுதும் மோராகப் பரவியிருக்க அதன் நடுவில் மோர்க்கடலில் முழுகியிருந்த முகுந்தனைத் தரிசனம் செய்தாள் அவள்.



மனதைப் பறிகொடுத்த மகான்கள்

சாதாரணமாக, திருட்டு என்றால், பறிகொடுத்தவன்

கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2016

தயிர் முதலானவற்றை பானைகளில் மூடி வைத்துவிட்டு, யசோதை அடுக்களைக்குப் போனாள். இது தான் சமயம் என்று கண்ணன், வெண்ணெயை முழுவதுமாக விழுங்கி விட்டு, பக்கத்தில் இருந்த குடத்தில் எட்டிப் பார்த்தான். அதில் மோர் இருந்தது. கோபத்தினால் ஒரு உதை உதைத்தான். குடம் சாய்ந்து கவிழ்ந்து உருண்டு மோர் எல்லாம் சிதறியது. சத்தம் கேட்டு ஓடி வந்தாள் யசோதை. அறை முழுதும் மோராகப் பரவியிருக்க அதன் நடுவில் மோர்க்கடலில் முழுகியிருந்த முகுந்தனைத் தரிசனம் செய்தாள் அவள்.



மனதைப் பறிகொடுத்த மகான்கள்

சாதாரணமாக, திருட்டு என்றால், பறிகொடுத்தவன்

கிருஷ்ணா 64!



துயரப்படுவான். ஆனால், கண்ணனுடைய வெண்ணெய்த் திருட்டிலோ, திருட்டுக் கொடுத்தவர்களான கோபியர்களும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தார்கள். அவர்கள் மட்டுமா? அந்த லீலையில் லீலாசுகர் முதலானவர்களும் ஆழ்வாராதிகளும் தங்கள் மனதைப் பறிகொடுத்து, விதவிதமாகப் பாடியிருக்கிறார்கள்.

''ஹே! குருவாயூரப்பா! வெண்ணெய் திருடப் போவதைக் காரணமாகக் கொண்டு, கோபிகைகளின் உள்ளத்தில், ஆனந்தம் என்ற விலைமதிக்க முடியாத பொக்கிஷத்தை அல்லவா, தாங்கள் வீடு தோறும் ஏறி வழங்கிவிட்டு வந்தீர்கள்?'' எனக் கேட்கிறார் நாராயணபட்டதிரி.

20 Supplement to Mangayar Malar August 2008



துயரப்படுவான். ஆனால், கண்ணனுடைய வெண்ணெய்த் திருட்டிலோ, திருட்டுக் கொடுத்தவர்களான கோபியர்களும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தார்கள். அவர்கள் மட்டுமா? அந்த லீலையில் லீலாசுகர் முதலானவர்களும் ஆழ்வாராதிகளும் தங்கள் மனதைப் பறிகொடுத்து, விதவிதமாகப் பாடியிருக்கிறார்கள்.

''ஹே! குருவாயூரப்பா! வெண்ணெய் திருடப் போவதைக் காரணமாகக் கொண்டு, கோபிகைகளின் உள்ளத்தில், ஆனந்தம் என்ற விலைமதிக்க முடியாத பொக்கிஷத்தை அல்லவா, தாங்கள் வீடு தோறும் ஏறி வழங்கிவிட்டு வந்தீர்கள்?'' எனக் கேட்கிறார் நாராயணபட்டதிரி.

என்றும் உங்களுடன்

தீன ரட்சகன்

பகவான், தன்னுடன் ஒரு கோஷ்டியைச் சேர்த்துக் கொண்டு வெண்ணெய் திருடக் கிளம்பி விட்டான். எப்படிப்பட்ட கோஷ்டி அது? கோபர்கள் சிலர், நான்கைந்து பூனைகள், ஐந்தாறு குரங்குகள் ஆகியோர் கொண்ட கோஷ்டி அது. கால் இல்லாதவன், செவிடன், ஊமை, பக்கத்தில் பால் இருந்தாலும் பார்க்க முடியாத குருட்டுப் பூனைகள், தாவமுடியாத நொண்டிக்குரங்குகள் - இதுதான் பகவானின் பட்டாளம். தீனர்களைக் கை தூக்கிவிட வந்த பகவான் அல்லவா? அவன் பட்டாளம் பின் எப்படி இருக்கும்?

உள்ளும் புறமும்

வீட்டு வாசலில் கோபிகை



கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2008

தீன ரட்சகன்

பகவான், தன்னுடன் ஒரு கோஷ்டியைச் சேர்த்துக் கொண்டு வெண்ணெய் திருடக் கிளம்பி விட்டான். எப்படிப்பட்ட கோஷ்டி அது? கோபர்கள் சிலர், நான்கைந்து பூனைகள், ஐந்தாறு குரங்குகள் ஆகியோர் கொண்ட கோஷ்டி அது. கால் இல்லாதவன், செவிடன், ஊமை, பக்கத்தில் பால் இருந்தாலும் பார்க்க முடியாத குருட்டுப் பூனைகள், தாவமுடியாத நொண்டிக்குரங்குகள் - இதுதான் பகவானின் பட்டாளம். தீனர்களைக் கை தூக்கிவிட வந்த பகவான் அல்லவா? அவன் பட்டாளம் பின் எப்படி இருக்கும்?

உள்ளும் புறமும்

வீட்டு வாசலில் கோபிகை





ஒருத்தி, பால்கறந்து கொண்டிருந்தாள். கண்ணன் தனியாக நின்று அதைப் பார்த்துக் கொண்டிருந்தான். ''சாதுவாக இவன் வந்து நிற்கிறானே! என்ன நடக்குமோ?'' என்று நினைத்த கோபிகை, கண்ணனின் முகத்தைப் பார்க்கிறாள். அவ்வளவுதான். அவள் தன்னை மறந்தாள். திடீரென்று வீட்டிற்குள் 'சடபுடா' என்று பானைகள் உடையும் சத்தம். பதறிக் கொண்டு உள்ளே ஓடினாள் கோபிகை. பானைகள் உடைந்து கிடக்க, பாலும் தயிரும் கொட்டிக் கிடந்தன. அங்கிருந்த கண்ணனின் தோழர்கள், கோபிகையைப் பார்த்ததும் கொல்லைப் புறவாசல் வழியாகத் தப்பித்து விட்டார்கள். ''இவர்களை இங்கே நுழைய விட்டு, என்னை வேவு பார்க்கத்தான் என்

28 Supplement to Mangayar Malar August 2008



ஒருத்தி, பால்கறந்து கொண்டிருந்தாள். கண்ணன் தனியாக நின்று அதைப் பார்த்துக் கொண்டிருந்தான். ''சாதுவாக இவன் வந்து நிற்கிறானே! என்ன நடக்குமோ?'' என்று நினைத்த கோபிகை, கண்ணனின் முகத்தைப் பார்க்கிறாள். அவ்வளவுதான். அவள் தன்னை மறந்தாள். திடீரென்று வீட்டிற்குள் 'சடபுடா' என்று பானைகள் உடையும் சத்தம். பதறிக் கொண்டு உள்ளே ஓடினாள் கோபிகை. பானைகள் உடைந்து கிடக்க, பாலும் தயிரும் கொட்டிக் கிடந்தன. அங்கிருந்த கண்ணனின் தோழர்கள், கோபிகையைப் பார்த்ததும் கொல்லைப் புறவாசல் வழியாகத் தப்பித்து விட்டார்கள். ''இவர்களை இங்கே நுழைய விட்டு, என்னை வேவு பார்க்கத்தான் என்

என்றும் உங்களுடன்

முன்னால் நின்றாயா? கண்ணா! உன்னை விட மாட்டேன்!'' என வாசல் பக்கம் ஓடினாள் கோபிகை. கண்ணன் அங்கு இருந்தால் தானே!

ஆண்டவனுக்கும் லௌகிக வாழ்வுக்கும் இடையே அல்லாடும் ஜீவனின் நிலை இதுதான். கர்மத்தில் கட்டுண்டுகிடக்கிறது.

கைமேல் பலன்!

பால், தயிர், வெண்ணெய் ஆகியவற்றைப் பத்திரப்படுத்திவிட்டு யமுனைக்கு நீராடப் போய் விட்டாள் ஒரு கோபி. முரட்டு வடிவம் கொண்ட அவள் கணவன், தொட்டிலில் தூங்கும் குழந்தைக்குக் காவலாக இருந்தான். கண்ணன், தன் கும்பலுடன் அங்கே வந்தான்.



கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 200

முன்னால் நின்றாயா? கண்ணா! உன்னை விட மாட்டேன்!'' என வாசல் பக்கம் ஓடினாள் கோபிகை. கண்ணன் அங்கு இருந்தால் தானே!

ஆண்டவனுக்கும் லௌகிக வாழ்வுக்கும் இடையே அல்லாடும் ஜீவனின் நிலை இதுதான். கர்மத்தில் கட்டுண்டுகிடக்கிறது.

கைமேல் பலன்!

பால், தயிர், வெண்ணெய் ஆகியவற்றைப் பத்திரப்படுத்திவிட்டு யமுனைக்கு நீராடப் போய் விட்டாள் ஒரு கோபி. முரட்டு வடிவம் கொண்ட அவள் கணவன், தொட்டிலில் தூங்கும் குழந்தைக்குக் காவலாக இருந்தான். கண்ணன், தன் கும்பலுடன் அங்கே வந்தான்.





எந்தத் திட்டமும் அங்கு பலிக்காது என்பது கண்ணனுக்குத் தெரிந்தது. 'சரி! நமக்குத்தான் இங்கு வேலை இல்லை. முரட்டுத் தனமாக இங்கு உட்கார்ந்திருக்கும் இவனுக்காவது வேலை கொடுப்போம்'' என நினைத்த பகவான், தொட்டிலில் கிடந்த குழந்தையை அழவைத்தான். அந்தக் குழந்தை 'ஓ' என அலறியது. வீட்டு எஜமானன் குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டு திண்டாடினான். யமுனைக்குப் போன மனைவியைக் கூப்பிட லாம் என்றால், இங்கே வெண்ணெய் கொள்ளை போய்விடும். கண்ணனை அடிக்க லாம் என்றால், கையில் குழந்தை. அடம் பிடிக்கும் குழந்தையுடன் அவன் நிற்பதைப் பார்த்தபடியே, நகர்ந்தான் கண்ணன்.

Supplement to Mangayar Malar August 2009



எந்தத் திட்டமும் அங்கு பலிக்காது என்பது கண்ணனுக்குத் தெரிந்தது. 'சரி! நமக்குத்தான் இங்கு வேலை இல்லை. முரட்டுத் தனமாக இங்கு உட்கார்ந்திருக்கும் இவனுக்காவது வேலை கொடுப்போம்'' என நினைத்த பகவான், தொட்டிலில் கிடந்த குழந்தையை அழவைத்தான். அந்தக் குழந்தை 'ஓ' என அலறியது. வீட்டு எஜமானன் குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டு திண்டாடினான். யமுனைக்குப் போன மனைவியைக் கூப்பிட லாம் என்றால், இங்கே வெண்ணெய் கொள்ளை போய்விடும். கண்ணனை அடிக்க லாம் என்றால், கையில் குழந்தை. அடம் பிடிக்கும் குழந்தையுடன் அவன் நிற்பதைப் பார்த்தபடியே, நகர்ந்தான் கண்ணன்.

என்றும் உங்களுடன்

மணிகட்டிய கோபிகை

மிகவும் கெட்டிக்காரியான கோபி, உறியில் ஒரு மணியைக் கட்டி வைத்திருந்தாள். வெண்ணெய் திருட்டு நடந்தால் மணி ஒலிக்கும், பிடித்து விடலாம் என்பது அவள் எண்ணம். ஆனால், அவளுக்குத் தெரியாமல் வந்த கண்ணனோ, மணியைப் பார்த்ததும் நடந்ததைப் புரிந்து கொண்டு மணியின் நாக்கை ஒரு கையால் பிடித்துக் கொண் டான். மணி ஒலிக்காது. அடுத்த கையால் பானை களை எடுத்து தன் கோஷ்டிகளுக்குப் பங்கு வைத் தான். பாலும் தயிரும் வெண்ணெயும் கொள்ளை போனது. இதை அறியாத கோபிகை மணி மீது வைத்த நம்பிக்கையில் நிதானமாக அடுக்களைக்குள் நுழைந் தாள். நடந்ததைப் புரிந்து கொண்டாள். என்ன செய்ய?




கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2008

மணிகட்டிய கோபிகை

மிகவும் கெட்டிக்காரியான கோபி, உறியில் ஒரு மணியைக் கட்டி வைத்திருந்தாள். வெண்ணெய் திருட்டு நடந்தால் மணி ஒலிக்கும், பிடித்து விடலாம் என்பது அவள் எண்ணம். ஆனால், அவளுக்குத் தெரியாமல் வந்த கண்ணனோ, மணியைப் பார்த்ததும் நடந்ததைப் புரிந்து கொண்டு மணியின் நாக்கை ஒரு கையால் பிடித்துக் கொண் டான். மணி ஒலிக்காது. அடுத்த கையால் பானை களை எடுத்து தன் கோஷ்டிகளுக்குப் பங்கு வைத் தான். பாலும் தயிரும் வெண்ணெயும் கொள்ளை போனது. இதை அறியாத கோபிகை மணி மீது வைத்த நம்பிக்கையில் நிதானமாக அடுக்களைக்குள் நுழைந் தாள். நடந்ததைப் புரிந்து கொண்டாள். என்ன செய்ய?





கண்ணனோ தன் வாயில் இருந்த பாலை அவள் முகத்தில் உமிழ்ந்து, அவள் கண்ணைத் துடைத்துக் கொள்வதற்குள் தன் கோஷ்டியுடன் சிட்டாகப் பறந்து விட்டான்.

யாரப்பா நீ?

ஒரு சமயம், வெண்ணெய் எடுக்கப் போன கண்ணன் எக்குத்தப்பாக சிக்கிக் கொண்டான். உறியைப் பிடித்துத் தொங்கிய நிலையில் இருந்த கண்ணனிடம், அந்த வீட்டு கோபி கேள்விக் கேட்டாள். 'மாட்டிக் கொண்டான்' என்ற நினைப்பு அவளுக்கு.


கோபி: யாரப்பா நீ குழந்தை?

கண்ணன்: பலராமன் தம்பி

கோபி: எங்கள் வீட்டுக்குள் ஏன் வந்தாய்?

கண்ணன்: அவசரத்தில், எங்கள் வீடு

42 Supplement to Mangayar Malar August 2008



கண்ணனோ தன் வாயில் இருந்த பாலை அவள் முகத்தில் உமிழ்ந்து, அவள் கண்ணைத் துடைத்துக் கொள்வதற்குள் தன் கோஷ்டியுடன் சிட்டாகப் பறந்து விட்டான்.

யாரப்பா நீ?

ஒரு சமயம், வெண்ணெய் எடுக்கப் போன கண்ணன் எக்குத்தப்பாக சிக்கிக் கொண்டான். உறியைப் பிடித்துத் தொங்கிய நிலையில் இருந்த கண்ணனிடம், அந்த வீட்டு கோபி கேள்விக் கேட்டாள். 'மாட்டிக் கொண்டான்' என்ற நினைப்பு அவளுக்கு.

கோபி: யாரப்பா நீ குழந்தை?

கண்ணன்: பலராமன் தம்பி

கோபி: எங்கள் வீட்டுக்குள் ஏன் வந்தாய்?

கண்ணன்: அவசரத்தில், எங்கள் வீடு

என்று எண்ணி விட்டேன்.

கோபி: அப்படியா? எங்கள் வீட்டு வெண்ணெய்ப் பானையில் உனக்கென்ன வேலை?

கண்ணன் : அம்மா! எங்கள் வீட்டுக் கன்றுக்குட்டியைக் காணோம். அதைத்தான் இங்கு தேடிக் கொண்டிருக்கிறேன்.

(கண்ணனுக்கும் கோபிக்கும் நடந்த இந்த உரையாடலை நினைத்துக் கொண்டேயிருந்தால் போதுமே. தனியாக வேறு தவம் வேண்டுமா - என்கிறார் லீலா சுகர்)

கண்ணனை, ''உறியை விட்டுக் கீழே இறங்கு!'' என்றாள் கோபி. ''இறக்கி விடேன்'' என்றான் கண்ணன். ''உயர்ந்த நிலைக்கு எல்லோரையும் ஏற்றி விடுவது என் வேலை. உயர்ந்த நிலையிலிருந்து பள்ளத்தில் இறக்கி விடுவது மனிதர்களின் வேலை'' எனக் கண்ணன்



கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2008

என்று எண்ணி விட்டேன்.

கோபி: அப்படியா? எங்கள் வீட்டு வெண்ணெய்ப் பானையில் உனக்கென்ன வேலை?

கண்ணன் : அம்மா! எங்கள் வீட்டுக் கன்றுக்குட்டியைக் காணோம். அதைத்தான் இங்கு தேடிக் கொண்டிருக்கிறேன்.

(கண்ணனுக்கும் கோபிக்கும் நடந்த இந்த உரையாடலை நினைத்துக் கொண்டேயிருந்தால் போதுமே. தனியாக வேறு தவம் வேண்டுமா - என்கிறார் லீலா சுகர்)

கண்ணனை, ''உறியை விட்டுக் கீழே இறங்கு!'' என்றாள் கோபி. ''இறக்கி விடேன்'' என்றான் கண்ணன். ''உயர்ந்த நிலைக்கு எல்லோரையும் ஏற்றி விடுவது என் வேலை. உயர்ந்த நிலையிலிருந்து பள்ளத்தில் இறக்கி விடுவது மனிதர்களின் வேலை'' எனக் கண்ணன்





எண்ணினான் போலும்.

மனைவியிடம் சொல்லி விடாதே!

வெண்ணெய் களவாடும் கண்ணன் திரும்பி வரும்போது, அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார் லீலாசுகர்.

வாய் முழுதும் வெண்ணெய் மணக்க வந்து கொண்டிருந்த கண்ணனை ஒரு பெரியவர் நிறுத்தி, "திருடா! வாயெல்லாம் வெண்ணெய் வாசம் வீசுகிறதே! எங்கே திருடினாய்?" என அதட்டினார். "அந்தக் கோடி வீட்டில் புதிதாக மாடு வாங்கினார்களாம். அதன் பாலைத் தோய்த்து, தயிர் கடைந்து வெண்ணெயாக கொடுத்தார்கள். அதுதான் இந்த வாசனை" என்றான் கண்ணன். "பொய்யா

Supplement to Mangayar Malar August 2008



எண்ணினான் போலும்.

மனைவியிடம் சொல்லி விடாதே!

வெண்ணெய் களவாடும் கண்ணன் திரும்பி வரும்போது, அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார் லீலாசுகர்.

வாய் முழுதும் வெண்ணெய் மணக்க வந்து கொண்டிருந்த கண்ணனை ஒரு பெரியவர் நிறுத்தி, "திருடா! வாயெல்லாம் வெண்ணெய் வாசம் வீசுகிறதே! எங்கே திருடினாய்?" என அதட்டினார். "அந்தக் கோடி வீட்டில் புதிதாக மாடு வாங்கினார்களாம். அதன் பாலைத் தோய்த்து, தயிர் கடைந்து வெண்ணெயாக கொடுத்தார்கள். அதுதான் இந்த வாசனை" என்றான் கண்ணன். "பொய்யா

என்றும் உங்களுடன்



சொல்கிறாய்?'' என்ற பெரியவர் கையை ஓங்கினார். அவ்வளவு தான்! கண்ணன் அழ ஆரம்பித்து விட்டான். பெரியவர் குழைந்தார். ''அழாதே கண்ணா! நான் அதட்டியதை என் மனைவியிடம் சொல்லிவிடாதே! உள்ளே போ! எங்கள் வீட்டிலும் வெண்ணெய் புதிதாகக் கடைந்து வைத்திருக் கிறாள். வாங்கிக் கொண்டு போ!'' என்றார். அழுகையை நிறுத்திவிட்டு, ஒரு குதிகுதித்துக் கொண்டு போனான் கண்ணன்.

கோபம் ஏன்?

யசோதையின் முதுகில் சாய்ந்து அவள் கழுத்தைக் கட்டிப் பிடித்தபடி இருந்தான் கண்ணன். ஆய்ச்சிகள் கூடி, புகார் பட்டியல் வாசித்தார்கள். ''எங்கள் வீட்டில் நுழைந்த உன் பிள்ளை, பானையில் இருந்த வெண்ணெ

கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2018



சொல்கிறாய்?'' என்ற பெரியவர் கையை ஓங்கினார். அவ்வளவு தான்! கண்ணன் அழ ஆரம்பித்து விட்டான். பெரியவர் குழைந்தார். ''அழாதே கண்ணா! நான் அதட்டியதை என் மனைவியிடம் சொல்லிவிடாதே! உள்ளே போ! எங்கள் வீட்டிலும் வெண்ணெய் புதிதாகக் கடைந்து வைத்திருக் கிறாள். வாங்கிக் கொண்டு போ!'' என்றார். அழுகையை நிறுத்திவிட்டு, ஒரு குதிகுதித்துக் கொண்டு போனான் கண்ணன்.

கோபம் ஏன்?

யசோதையின் முதுகில் சாய்ந்து அவள் கழுத்தைக் கட்டிப் பிடித்தபடி இருந்தான் கண்ணன். ஆய்ச்சிகள் கூடி, புகார் பட்டியல் வாசித்தார்கள். ''எங்கள் வீட்டில் நுழைந்த உன் பிள்ளை, பானையில் இருந்த வெண்ணெ

கிருஷ்ணா 64!



யைத் தின்றதோடு இல்லாமல், அந்தப் பானையைக் கல்லில் போட்டு அதன் ஓசையைக் கேட்டுக் கைகொட்டிச் சிரிக்கிறான். இதோ! உடைந்த பானை! செய்தானா இல்லையா? கேள் உன் பிள்ளையை'' என்றாள் ஒருத்தி.

''உடம்பாகிய பானையை தெய்வீக அனுபவத்தில் லயிக்க விடாமல், உலக இன்பங்களில் கூத்தாடிக் கூத்தாடி யமன் என்ற கல்லிலே போட்டு உடைக்கும் நீங்கள் என்னைக் குற்றம் சொல்லலாமா?'' என்பது போலக் கண்ணன் சிரித்தான்.

குழந்தை மனசு

அடுத்த புகார், ''பாலைக் கறந்து

16 Supplement to Mangayar Malar August 2008



யைத் தின்றதோடு இல்லாமல், அந்தப் பானையைக் கல்லில் போட்டு அதன் ஓசையைக் கேட்டுக் கைகொட்டிச் சிரிக்கிறான். இதோ! உடைந்த பானை! செய்தானா இல்லையா? கேள் உன் பிள்ளையை'' என்றாள் ஒருத்தி.

''உடம்பாகிய பானையை தெய்வீக அனுபவத்தில் லயிக்க விடாமல், உலக இன்பங்களில் கூத்தாடிக் கூத்தாடி யமன் என்ற கல்லிலே போட்டு உடைக்கும் நீங்கள் என்னைக் குற்றம் சொல்லலாமா?'' என்பது போலக் கண்ணன் சிரித்தான்.

குழந்தை மனசு

அடுத்த புகார், ''பாலைக் கறந்து

என்றும் உங்களுடன்

அடுப்பில் வைத்துவிட்டு பார்த்தால், நெருப்பு அணைந்திருந்தது. பக்கத்து வீட்டில் தணல் வாங்கி வரலாம் எனக் கிளம்பினேன். என் மகளைக் கூப்பிட்டு 'கண்ணன் வந்து பாலைக் குடித்து விடுவான். பார்த்துக் கொள்!' என எச்சரிக்கை செய்து விட்டுத்தான் போனேன். வந்து பார்த்தால் பால் பாத்திரம் காலி. பச்சைப் பாலை உன் பிள்ளை இஷ்டப்படி குடித்திருக்கிறான். என் மகளிடம் கேட்டால், 'கண்ணன் வந்து குடிப்பான். பார்த்துக் கொள் என்றாயல்லவா! கண்ணன் வந்தான்; பானையைச் சாய்த்தான்; நன்றாகக் குடித்தான். நான் பார்த்துக் கொண்டேயிருந்தேன். எவ்வளவு அழகு... எவ்வளவு அழகு.. தெரியுமா? நீ பார்க்காமல் போய் விட்டாயே!' என்கிறாள். உண்டா இல்லையா? கேள் உன் பிள்ளையை!'' என்றாள் அடுத்தவள்.



கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2008 37

அடுப்பில் வைத்துவிட்டு பார்த்தால், நெருப்பு அணைந்திருந்தது. பக்கத்து வீட்டில் தணல் வாங்கி வரலாம் எனக் கிளம்பினேன். என் மகளைக் கூப்பிட்டு 'கண்ணன் வந்து பாலைக் குடித்து விடுவான். பார்த்துக் கொள்!' என எச்சரிக்கை செய்து விட்டுத்தான் போனேன், வந்து பார்த்தால் பால் பாத்திரம் காலி. பச்சைப் பாலை உன் பிள்ளை இஷ்டப்படி குடித்திருக்கிறான். என் மகளிடம் கேட்டால், 'கண்ணன் வந்து குடிப்பான். பார்த்துக் கொள் என்றாயல்லவா! கண்ணன் வந்தான்; பானையைச் சாய்த்தான்; நன்றாகக் குடித்தான். நான் பார்த்துக் கொண்டேயிருந்தேன். எவ்வளவு அழகு... எவ்வளவு அழகு.. தெரியுமா? நீ பார்க்காமல் போய் விட்டாயே!' என்கிறாள், உண்டா இல்லையா? கேள் உன் பிள்ளையை!'' என்றாள் அடுத்தவள்.



கிருஷ்ணா 64!



''குழந்தைகள் என்னைப் புரிந்துகொண்டு விட்டார்கள். நீங்கள்தான்...'' என்பதை வெளிப்படுத்துவதைப் போல, கண்களைச் சிமிட்டிக் கண்ணன் சிரித்தான்.

தீர்ப்பும் விளைவும்

கண்ணன் மேல் பலவாறாகப் புகார்கள் குவிந்ததும் யசோதை கண்ணனை அழைக்கின்றாள். ''வேதப்பொருளே! வித்தகனே!'' என அழைத்தவள் தீர்ப்பையும் வெளியிடுகின்றாள். ''இவர்கள் எல்லோரும் உன்னை ஏசுகிறார்கள். நேசமில்லாத இவர்கள் வீட்டிற்கு இனிமேல் நீ போகாதே! தாய் சொல்வதைக் கேள்!'' என்றாள். இதைக் கேட்டதும் கோபிகைகள் அவ்வளவு பேர்

18 Supplement to Mangayar Malar August 2008



''குழந்தைகள் என்னைப் புரிந்துகொண்டு விட்டார்கள். நீங்கள்தான்...'' என்பதை வெளிப்படுத்துவதைப் போல, கண்களைச் சிமிட்டிக் கண்ணன் சிரித்தான்.

தீர்ப்பும் விளைவும்

கண்ணன் மேல் பலவாறாகப் புகார்கள் குவிந்ததும் யசோதை கண்ணனை அழைக்கின்றாள். ''வேதப்பொருளே! வித்தகனே!'' என அழைத்தவள் தீர்ப்பையும் வெளியிடுகின்றாள். ''இவர்கள் எல்லோரும் உன்னை ஏசுகிறார்கள். நேசமில்லாத இவர்கள் வீட்டிற்கு இனிமேல் நீ போகாதே! தாய் சொல்வதைக் கேள்!'' என்றாள். இதைக் கேட்டதும் கோபிகைகள் அவ்வளவு பேர்

களும் கலங்கி விட்டார்கள். ''பகவானான கண்ணனின் தங்கத் திருவடிகள் இனிமேல் எங்கள் வீடுகளை அலங்கரிக்காதோ?'' என்று முகம் வெளிறி, உதடுகள் உலர்ந்து பரிதாபமாகப் பகவானைப் பார்த்தார்கள். கண்ணனோ, ''கவலைப்படாதீர்கள்! உங்கள் மத்தியில் ஆடிப்பாடி பால் தயிர் திருடி, உங்களைக் குதூகலத்தில் ஆழ்த்துவதற்காகவே இந்த அவதாரம். கண்டிப்பாக வருவேன்'' என்பது போல, சொல்லாமல் சொல்லிச் சிரித்தான்.

ஆயர்பாடியா? ஆகாய வீதியா?

இரவு நேரம். ஆயர்பாடி அமைதியாகி விட்டது. தொழுவத்தில் இருந்த மாடுகள் எப்போதாவது தலையை ஆட்டும்போது எழும் மணி ஓசையும் யமுனையின் சலசலப்பும்



கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2008 39

களும் கலங்கி விட்டார்கள். ''பகவானான கண்ணனின் தங்கத் திருவடிகள் இனிமேல் எங்கள் வீடுகளை அலங்கரிக்காதோ?'' என்று முகம் வெளிறி, உதடுகள் உலர்ந்து பரிதாபமாகப் பகவானைப் பார்த்தார்கள். கண்ணனோ, ''கவலைப்படாதீர்கள்! உங்கள் மத்தியில் ஆடிப்பாடி பால் தயிர் திருடி, உங்களைக் குதூகலத்தில் ஆழ்த்துவதற்காகவே இந்த அவதாரம். கண்டிப்பாக வருவேன்'' என்பது போல, சொல்லாமல் சொல்லிச் சிரித்தான்.

ஆயர்பாடியா? ஆகாய வீதியா?

இரவு நேரம். ஆயர்பாடி அமைதியாகி விட்டது. தொழுவத்தில் இருந்த மாடுகள் எப்போதாவது தலையை ஆட்டும்போது எழும் மணி ஓசையும் யமுனையின் சலசலப்பும்



கிருஷ்ணா 64!



மட்டுமே கேட்டது. தேய்வதும் வளர்வது மாக இருக்கும் சந்திரனுக்கு, தேயாத நிலவொளியான தன் பிள்ளையின் திருமுகத தைக் காட்ட வேண்டுமென்று நினைத்தாள யசோதை. "சந்திரனே! உன் முகத்தில் கண் இருந்தால், அவை பயன்பெற வேண்டி, நீ வந்து என் பிள்ளையைப் பார்த்துவிட்டுப போ!" என்றாள். இடுப்பில் கண்ணனை வைத்துக் கொண்டு, "வா! வா!" எனக கூப்பிடச் செய்தாள். சந்திரன் வரவில்லை. "இவன் சிறுபிள்ளை என்று அலட்சியமா? என் பிள்ளை சிறியவன்தானா என்பதை, மகாபலியிடம் கேட்டுப் பார்!" எனக கோபிக்கிறாள். சந்திரன் பார்த்தான். "தன்னை

Supplement to Mangayar Malar August 2008



மட்டுமே கேட்டது. தேய்வதும் வளர்வது மாக இருக்கும் சந்திரனுக்கு, தேயாத நிலவொளியான தன் பிள்ளையின் திருமுகத தைக் காட்ட வேண்டுமென்று நினைத்தாள யசோதை. "சந்திரனே! உன் முகத்தில் கண் இருந்தால், அவை பயன்பெற வேண்டி, நீ வந்து என் பிள்ளையைப் பார்த்துவிட்டுப போ!" என்றாள். இடுப்பில் கண்ணனை வைத்துக் கொண்டு, "வா! வா!" எனக கூப்பிடச் செய்தாள். சந்திரன் வரவில்லை. "இவன் சிறுபிள்ளை என்று அலட்சியமா? என் பிள்ளை சிறியவன்தானா என்பதை, மகாபலியிடம் கேட்டுப் பார்!" எனக கோபிக்கிறாள். சந்திரன் பார்த்தான். "தன்னை

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்



சாதாரண மனிதனாகவே காட்டிக் கொண்ட ராமாவதாரத்தில், அவர் கூப்பிட்டவுடன் வராத சமுத்திரராஜன் படாதபாடு பட்டான். இந்தக் கிருஷ்ணாவதாரமோ பூர்ணாவதாரம். கூப்பிடுவது பகவான், பாரம் அவனுக்கு'' என்று தீர்மானித்து ஆகாய வீதியை விட்டு ஆயர்பாடியை நோக்கி 'கிறுகிறு' என இறங்க ஆரம்பித்து விட்டான்.

யசோதை பார்க்காத விஸ்வரூபம்

சின்னஞ்சிறிய கிராமமான ஆயர்பாடியில் சந்திரன் வந்து இறங்கியதும், யசோதை மூர்ச்சையடைந்து விட்டாள். கண்ணன் கையில், ஒரு பழத்தைப் போல வந்து சேர்ந்து விட்டான் சந்திரன். ஒரு கிரகம் மட்டும் இப்படி நிலைபெயர்ந்தால், உலகின் இயக்கம் என்னவாகும்?

கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2008 41




சாதாரண மனிதனாகவே காட்டிக் கொண்ட ராமாவதாரத்தில், அவர் கூப்பிட்டவுடன் வராத சமுத்திரராஜன் படாதபாடு பட்டான். இந்தக் கிருஷ்ணாவதாரமோ பூர்ணாவதாரம். கூப்பிடுவது பகவான், பாரம் அவனுக்கு'' என்று தீர்மானித்து ஆகாய வீதியை விட்டு ஆயர்பாடியை நோக்கி 'கிறுகிறு' என இறங்க ஆரம்பித்து விட்டான்.

யசோதை பார்க்காத விஸ்வரூபம்


சின்னஞ்சிறிய கிராமமான ஆயர்பாடியில் சந்திரன் வந்து இறங்கியதும், யசோதை மூர்ச்சையடைந்து விட்டாள். கண்ணன் கையில், ஒரு பழத்தைப் போல வந்து சேர்ந்து விட்டான் சந்திரன். ஒரு கிரகம் மட்டும் இப்படி நிலைபெயர்ந்தால், உலகின் இயக்கம் என்னவாகும்?

கிருஷ்ணா 64!



பெரும் பிரளயமே உருவாகக்கூடிய நிலை. அதே விநாடியில் கண்ணன் விஸ்வரூபம் எடுத்து, எங்கும் பரவிய தன் திருமேனியால் பிரளயத்தைத் தடுத்து, ஒரு சிறு பொம்மையைப் பிடிப்பது போலச் சந்திரனைத் தன் கைகளில் தாங்கி நின்றான். இவ்வளவும் யசோதையின் வீட்டு நிலா முற்றத்தில் நடந்தது. சந்திரனை வானவெளிக்கு அனுப்பிய பகவான், தன் விஸ்வரூபத்தை மறைத்து, பழையபடியே குழந்தையாக ஆனான். யசோதை மயக்கம் தெளிந்து எழுந்தாள். நடந்தது எதுவும் அவளுக்குத் தெரியாது. "இன்று, நிலா மிகவும் குளிர்ச்சியாக உள்ளது. எனக்கே மயக்கம்

42 Supplement to Mangaiyar Malar August 2008



பெரும் பிரளயமே உருவாகக்கூடிய நிலை. அதே விநாடியில் கண்ணன் விஸ்வரூபம் எடுத்து, எங்கும் பரவிய தன் திருமேனியால் பிரளயத்தைத் தடுத்து, ஒரு சிறு பொம்மையைப் பிடிப்பது போலச் சந்திரனைத் தன் கைகளில் தாங்கி நின்றான். இவ்வளவும் யசோதையின் வீட்டு நிலா முற்றத்தில் நடந்தது. சந்திரனை வானவெளிக்கு அனுப்பிய பகவான், தன் விஸ்வரூபத்தை மறைத்து, பழையபடியே குழந்தையாக ஆனான். யசோதை மயக்கம் தெளிந்து எழுந்தாள். நடந்தது எதுவும் அவளுக்குத் தெரியாது. "இன்று, நிலா மிகவும் குளிர்ச்சியாக உள்ளது. எனக்கே மயக்கம்

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!

வந்து விட்டதென்றால், என் குழந்தை கதி என்னவாகும்?'' என்று சொல்லிக் கிளம்பி விட்டாள் அவள். அவள் தோளில் தலையைச் சாய்த்தபடியே, அவள் இடுப்பிலிருந்த கண்ணனும் கிளம்பினான்.

தெய்வங்களின் வருகை

நிலா முற்றத்தில் இருந்து, கண்ணனைத் தூங்குவதற்காக அழைத்துப் போனாள் யசோதை. கண்ணனும் தூங்குவதைப் போலக் கண்களை மூடினான். ஆனால் உடனே திடுக்கிட்டு எழுந்தவனைப் போல, ''யார்? மகா தேவரோ? வாருங்கள்! வாருங்கள்!'' என்றான். சற்று நேரத்திற்குப் பிறகு, ''பிரம்மாவா? இடதுபுறமாக இப்படி வாருங்கள்!''



Supplement to Mangayar Malar August 2008

வந்து விட்டதென்றால், என் குழந்தை கதி என்னவாகும்?'' என்று சொல்லிக் கிளம்பி விட்டாள் அவள். அவள் தோளில் தலையைச் சாய்த்தபடியே, அவள் இடுப்பிலிருந்த கண்ணனும் கிளம்பினான்.

தெய்வங்களின் வருகை

நிலா முற்றத்தில் இருந்து, கண்ணனைத் தூங்குவதற்காக அழைத்துப் போனாள் யசோதை. கண்ணனும் தூங்குவதைப் போலக் கண்களை மூடினான். ஆனால் உடனே திடுக்கிட்டு எழுந்தவனைப் போல, ''யார்? மகா தேவரோ? வாருங்கள்! வாருங்கள்!'' என்றான். சற்று நேரத்திற்குப் பிறகு, ''பிரம்மாவா? இடதுபுறமாக இப்படி வாருங்கள்!''





என்றான். பிறகு, ''முருகனா? வா! வா! தேவேந்திரா! நலமா? யாரது? குபேரனா? பார்வையிலேயே படவில்லை'' என்றெல்லாம் கூறினான். உலகத்திற்கே நாதனான பகவான் ஆயர்பாடியில், ஒளிந்து வளர்ந்தாலும் தெரியாமல் போகுமா? அதனால்தான் தெய்வங்களும் தேவதைகளும் தேடி வந்து விட்டன. கண்ணனோடு பேசவும் பேசின. இந்த மர்மத்தை அறியாத யசோதையோ, ''எங்கேயோ, எதையோ பார்த்து, குழந்தை பயந்து விட்டது போலிருக்கிறது'' என எண்ணி, ஒரு துரும்பைக் கிள்ளி, மூன்று முறை கண்ணனைச் சுற்றி, ''தூ! தூ!'' என்று தூர எறிந்தாள்.

44 Supplement to Mangayar Malar August 2008



என்றான். பிறகு, ''முருகனா? வா! வா! தேவேந்திரா! நலமா? யாரது? குபேரனா? பார்வையிலேயே படவில்லை'' என்றெல்லாம் கூறினான். உலகத்திற்கே நாதனான பகவான் ஆயர்பாடியில், ஒளிந்து வளர்ந்தாலும் தெரியாமல் போகுமா? அதனால்தான் தெய்வங்களும் தேவதைகளும் தேடி வந்து விட்டன. கண்ணனோடு பேசவும் பேசின. இந்த மர்மத்தை அறியாத யசோதையோ, ''எங்கேயோ, எதையோ பார்த்து, குழந்தை பயந்து விட்டது போலிருக்கிறது'' என எண்ணி, ஒரு துரும்பைக் கிள்ளி, மூன்று முறை கண்ணனைச் சுற்றி, ''தூ! தூ!'' என்று தூர எறிந்தாள்.

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்

ஒரு கையில் பால், மறு கையில்...

யசோதை கையில் பால் கிண்டியுடன் கண்ணனைக் கூப்பிடுகிறாள். ''கண்ணா! இங்கு வா! பலராமன், யமுனைக் கரைக்கு விளையாடப் போயிருக்கிறான். இதுதான் சமயம், அவன் வருவதற்குள், இந்தப் பாலைக் குடித்து விடு!'' என்கிறாள். கண்ணன் ஏற்கவில்லை. யசோதையும் விடவில்லை. ''கண்ணா! இந்தப் பாலை உடனே குடித்து விட்டால், 'கறுகறு' என்று உனக்குத் தலைமுடி வளரும்'' என்கிறாள். அதை நம்பியவன் போலப் பால் பாத்திரத்தை வாங்கிய கண்ணன், கொஞ்சம் பாலைக் குடித்துவிட்டு, ஒரு கையாலே தலைமுடியைத் தொட்டு, வளர்ந்திருக்கிறதா என்று பார்த்தானாம். அது வேண்டும் இது வேண்டும் என்று பகவானுக்



கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2008 · 45

ஒரு கையில் பால், மறு கையில்...

யசோதை கையில் பால் கிண்டியுடன் கண்ணனைக் கூப்பிடுகிறாள். ''கண்ணா! இங்கு வா! பலராமன், யமுனைக் கரைக்கு விளையாடப் போயிருக்கிறான். இதுதான் சமயம், அவன் வருவதற்குள், இந்தப் பாலைக் குடித்து விடு!'' என்கிறாள். கண்ணன் ஏற்கவில்லை. யசோதையும் விடவில்லை. ''கண்ணா! இந்தப் பாலை உடனே குடித்து விட்டால், 'கறுகறு' என்று உனக்குத் தலைமுடி வளரும்'' என்கிறாள். அதை நம்பியவன் போலப் பால் பாத்திரத்தை வாங்கிய கண்ணன், கொஞ்சம் பாலைக் குடித்துவிட்டு, ஒரு கையாலே தலைமுடியைத் தொட்டு, வளர்ந்திருக்கிறதா என்று பார்த்தானாம். அது வேண்டும் இது வேண்டும் என்று பகவானுக்





குப் பூஜை செய்பவர் சிலர், அவ்வப்போது 'எனக்கு ஏதாவது லாபம் கிடைத்ததா?' என்று சரிபார்த்துக் கொள்ளும் அவலநிலையைத் தான், இந்த லீலையால் கண்ணன் காட்டி னானோ?

அம்மிக் குழவியைத் தூக்கிய ஆயர்குல அதிபன்

யசோதை வீட்டில் ஏதோ விசேஷம். வெண் பட்டாடை அணிந்து, பூக்களால் அலங்காரம் செய்து கொண்டு, தயிர் கடைவதற்காக உட்கார்ந்தாள் அவள். கண்ணனும் அவள் மடியில் படுத்துக் கொண்டு ஆனந்தமாகப் பாலைக் குடித்துக் கொண்டிருந்தான். திடீரென, அடுப்பில்

36 Supplement to Mangayar Malar August 2008



குப் பூஜை செய்பவர் சிலர், அவ்வப்போது 'எனக்கு ஏதாவது லாபம் கிடைத்ததா?' என்று சரிபார்த்துக் கொள்ளும் அவலநிலையைத் தான், இந்த லீலையால் கண்ணன் காட்டி னானோ?

அம்மிக் குழவியைத் தூக்கிய ஆயர்குல அதிபன்

யசோதை வீட்டில் ஏதோ விசேஷம். வெண் பட்டாடை அணிந்து, பூக்களால் அலங்காரம் செய்து கொண்டு, தயிர் கடைவதற்காக உட்கார்ந்தாள் அவள். கண்ணனும் அவள் மடியில் படுத்துக் கொண்டு ஆனந்தமாகப் பாலைக் குடித்துக் கொண்டிருந்தான். திடீரென, அடுப்பில்

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!

வைத்த பால் பொங்கியது. மடியில் இருந்த மாதவனைப் 'படக்' என்று இறக்கி விட்டு ஓடினாள் யசோதை. பாற்கடலில் இருந்து யாரோ, தன்னை பலவந்தமாக இறக்கி விட்டதைப் போலக் கோபம் கொண்ட கண்ணன், அங்கிருந்த பானையில் இருந்து வெண்ணெயை மட்டும் வழித்து எடுத்துக் கொண்டு, பக்கத்தில் இருந்த அம்மிக் குழவியால் தயிர் பானையைத் தூள் தூளாக்கினான். உடம்பு அழியக்கூடியது; ஆனால் அதன் உள்ளே இருக்கும் ஆன்மா தூய்மையானது; என்னைச் சேர்ந்தது என்பதை உணர்த்தினானோ!

கலியுகக் கண்ணன்

கண்ணன் அம்மிக் குழவியால் பானையை உடைத்த தாக சுகாசார்யார் சொல்லியிருக்கிறார். பாகவதத்தைச் சுருக்கமாக



கிருஷ்ணா 64!

Supplement to Mangaiyar Malar August 2008

வைத்த பால் பொங்கியது. மடியில் இருந்த மாதவனைப் 'படக்' என்று இறக்கி விட்டு ஓடினாள் யசோதை. பாற்கடலில் இருந்து யாரோ, தன்னை பலவந்தமாக இறக்கி விட்டதைப் போலக் கோபம் கொண்ட கண்ணன், அங்கிருந்த பானையில் இருந்து வெண்ணெயை மட்டும் வழித்து எடுத்துக் கொண்டு, பக்கத்தில் இருந்த அம்மிக் குழவியால் தயிர் பானையைத் தூள் தூளாக்கினான். உடம்பு அழியக்கூடியது; ஆனால் அதன் உள்ளே இருக்கும் ஆன்மா தூய்மையானது; என்னைச் சேர்ந்தது என்பதை உணர்த்தினானோ!

கலியுகக் கண்ணன்

கண்ணன் அம்மிக் குழவியால் பானையை உடைத்த தாக சுகாசார்யார் சொல்லியிருக்கிறார். பாகவதத்தைச் சுருக்கமாக





எழுதிய நாராயண பட்டதிரியோ, கண்ணன் மத்தினால் பானையை உடைத்ததாகப் பாடியிருக்கிறார். இந்தப் பாடலைப் பாடி முடித்த பிறகே, இந்த வேறு பாட்டினை உணர்ந்தார் நாராயணபட்டதிரி. "குருவாயூரப்பா! பிரும்ம நிஷ்டரான சுகாசார்யாரின் வாக்கிற்கு விரோதமாக, நான் பாடி விட்டேனே! தவறாயிற்றே இது" எனப் பகவானிடம் முறையிட்டார். குருவாயூரப்பன் குரல் கொடுத்தான். "ஹே! பட்டதிரி! சுகர் பாடியதும் சத்தியம்தான். ஆனால் நீ பாடியதிலும் தவறில்லை. முதலில் அம்மிக் குழவியால் பானையை உடைத்தேன். கோபம் குறையவில்லை. மத்தை எடுத்து மறுபடியும் அடித்துப் பானையைத் தூள் தூளாக்கினேன்" என்றான் ஸ்வாமி. கலியுகத்

18 Supplement to Mangayar Malar August 2008



எழுதிய நாராயண பட்டதிரியோ, கண்ணன் மத்தினால் பானையை உடைத்ததாகப் பாடியிருக்கிறார். இந்தப் பாடலைப் பாடி முடித்த பிறகே, இந்த வேறு பாட்டினை உணர்ந்தார் நாராயணபட்டதிரி. "குருவாயூரப்பா! பிரும்ம நிஷ்டரான சுகாசார்யாரின் வாக்கிற்கு விரோதமாக, நான் பாடி விட்டேனே! தவறாயிற்றே இது" எனப் பகவானிடம் முறையிட்டார். குருவாயூரப்பன் குரல் கொடுத்தான். "ஹே! பட்டதிரி! சுகர் பாடியதும் சத்தியம்தான். ஆனால் நீ பாடியதிலும் தவறில்லை. முதலில் அம்மிக் குழவியால் பானையை உடைத்தேன். கோபம் குறையவில்லை. மத்தை எடுத்து மறுபடியும் அடித்துப் பானையைத் தூள் தூளாக்கினேன்" என்றான் ஸ்வாமி. கலியுகத்

தில் நடந்த நிகழ்ச்சி இது.

இரண்டு என்பது எவை?

பானை உடைந்த சத்தம் கேட்டுப் பதறிப்போய் வந்தாள் யசோதை. வெள்ளை வெளேரென்று எங்கு பார்த்தாலும் தயிராகத் தெரிந்தது. கண்ணனைத் தேடினாள். தனியானதோர் இடத்தில் உரலில் அமர்ந்தபடி, தன் கையிலிருந்த வெண்ணெயைக் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு பூனைக்குட்டிக்கு ஊட்டிக் கொண்டிருந்தான் கண்ணன். உரலோடு அவனைக் கட்ட வேண்டுமென்று கையில் கயிற்றுடன் கண்ணனை நெருங்கினாள் யசோதை. கயிறு இரண்டு அங்குலம் அளவு குறைவாக இருந்தது. எவ்வளவுதான் முயன்றும், வேறு கயிறுகளைக் கொணர்ந்தாலும், இரண்டு அங்குலம் குறைவாகத்



கிருஷ்ணா 64!

Supplement to Mangaiyar Malar August 2008

தில் நடந்த நிகழ்ச்சி இது.

இரண்டு என்பது எவை?

பானை உடைந்த சத்தம் கேட்டுப் பதறிப்போய் வந்தாள் யசோதை. வெள்ளை வெளேரென்று எங்கு பார்த்தாலும் தயிராகத் தெரிந்தது. கண்ணனைத் தேடினாள். தனியானதோர் இடத்தில் உரலில் அமர்ந்தபடி, தன் கையிலிருந்த வெண்ணெயைக் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு பூனைக்குட்டிக்கு ஊட்டிக் கொண்டிருந்தான் கண்ணன். உரலோடு அவனைக் கட்ட வேண்டுமென்று கையில் கயிற்றுடன் கண்ணனை நெருங்கினாள் யசோதை. கயிறு இரண்டு அங்குலம் அளவு குறைவாக இருந்தது. எவ்வளவுதான் முயன்றும், வேறு கயிறுகளைக் கொணர்ந்தாலும், இரண்டு அங்குலம் குறைவாகத்





தான் இருந்தது. உடம்பெல்லாம் வியர்க்க, தலைகலைந்து பூக்கள் பூமியில் உதிர, யசோதை செயலற்று நின்றாள். கண்ணனுக் குக் கருணை பிறந்தது. கட்டுப்பட்டான். அவனை உரலோடு கட்டிய யசோதை, உள்ளே போய் விட்டாள். 'இரண்டு அங்கு லம்' என்பது என்ன? இன்ப - துன்பமா? நல்வினை - தீவினையா? பிறப்பு - இறப்பா? காம - குரோதமா? எதுவாக இருந்தால் என்ன? பகவானின் இரண்டு திருவடிகளைப் பிடித்துக் கொண்டால் நம்மைப் பாதிக்குமா என்ன?

சாபம் நீக்கிய சர்வேஸ்வரன்

பிரும்மம் என்பது என்ன என்று உபநிடதங்

10 Supplement to Mangayar Malar August 2008



தான் இருந்தது. உடம்பெல்லாம் வியர்க்க, தலைகலைந்து பூக்கள் பூமியில் உதிர, யசோதை செயலற்று நின்றாள். கண்ணனுக் குக் கருணை பிறந்தது. கட்டுப்பட்டான். அவனை உரலோடு கட்டிய யசோதை, உள்ளே போய் விட்டாள். 'இரண்டு அங்கு லம்' என்பது என்ன? இன்ப - துன்பமா? நல்வினை - தீவினையா? பிறப்பு - இறப்பா? காம - குரோதமா? எதுவாக இருந்தால் என்ன? பகவானின் இரண்டு திருவடிகளைப் பிடித்துக் கொண்டால் நம்மைப் பாதிக்குமா என்ன?

சாபம் நீக்கிய சர்வேஸ்வரன்

பிரும்மம் என்பது என்ன என்று உபநிடதங்

என்றும் உங்களுடன்



களையெல்லாம் ஆராய்ந்து, வாதப் பிரதிவாதங்கள் செய்து, ஒரு முடிவுக்கும் வர முடியாமல் திணறும் பெரிய வேதாந்திகள் பலருக்கு, இந்நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டி, ''நீங்களெல்லாம் வாழ்நாள் முழுதும், உபநிடதங்களின் அர்த்தம் அறியாமல் தானே வாதம் செய்து கொண்டிருக்கிறீர்கள்! அந்த உண்மை யான அர்த்தத்தை ஒரு கோபிகாஸ்திரீ (யசோதை)தான் கண்டுபிடித்ததோடு நிற்காமல், நீங்களும் பார்க்க வேண்டும் என்பதற்காக உரலோடு கட்டிப் போட் டிருக்கிறாள். வாருங்கள்! வந்து பாருங்கள்!'' என்கிறார் லீலாசுகர். உபநிடதங்களின் உண்மைப் பொருள் கண்ணன் தானே!

தன்னைக் கட்டி வைத்திருந்த உரலையும் இழுத்துக் கொண்டு கண்ணன் தவழத் தொடங்கினான். உரலுடன் தவழ்ந்த கண்ணன் சற்று தூரம்

கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2008 51



களையெல்லாம் ஆராய்ந்து, வாதப் பிரதிவாதங்கள் செய்து, ஒரு முடிவுக்கும் வர முடியாமல் திணறும் பெரிய வேதாந்திகள் பலருக்கு, இந்நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டி, ''நீங்களெல்லாம் வாழ்நாள் முழுதும், உபநிடதங்களின் அர்த்தம் அறியாமல் தானே வாதம் செய்து கொண்டிருக்கிறீர்கள்! அந்த உண்மை யான அர்த்தத்தை ஒரு கோபிகாஸ்திரீ (யசோதை)தான் கண்டுபிடித்ததோடு நிற்காமல், நீங்களும் பார்க்க வேண்டும் என்பதற்காக உரலோடு கட்டிப் போட் டிருக்கிறாள். வாருங்கள்! வந்து பாருங்கள்!'' என்கிறார் லீலாசுகர். உபநிடதங்களின் உண்மைப் பொருள் கண்ணன் தானே!

தன்னைக் கட்டி வைத்திருந்த உரலையும் இழுத்துக் கொண்டு கண்ணன் தவழத் தொடங்கினான். உரலுடன் தவழ்ந்த கண்ணன் சற்று தூரம்

கிருஷ்ணா 64!



போனதும், இரண்டு அர்ஜுன மரங்களுக்கிடையே நுழைந்தான். கண்ணன் மட்டும் அந்தப் பக்கம் போய் விட்டான். உரல் சிக்கிக் கொண்டது. கண்ணன் பலமாக இழுத்தான். இரண்டு மரங்களும் பெருத்த ஓசையுடன் கீழே விழுந்தன. அவற்றில் இருந்து ஒளிமயமான வடிவத்தோடு வெளிப்பட்ட இருவர், கைகளைக் கூப்பிக் கண்ணனை வணங்கிப் பலவாறு துதி செய்துவிட்டு ஆகாய வழியாகப் போய் விட்டார்கள். அவர்கள் இருவரும் குபேரனின் பிள்ளைகளான நளகூபரன் - மணிக்ரீவன் என்போர். நாரதரின் சாபம் காரணமாக அவர்கள் மரங்களாக இருந்தார்கள். அந்த சாபத்தைத் தீர்த்து அருள்புரிந்தான் கண்ணன்.

52 Supplement to Mangayar Malar August 2008



போனதும், இரண்டு அர்ஜுன மரங்களுக்கிடையே நுழைந்தான். கண்ணன் மட்டும் அந்தப் பக்கம் போய் விட்டான். உரல் சிக்கிக் கொண்டது. கண்ணன் பலமாக இழுத்தான். இரண்டு மரங்களும் பெருத்த ஓசையுடன் கீழே விழுந்தன. அவற்றில் இருந்து ஒளிமயமான வடிவத்தோடு வெளிப்பட்ட இருவர், கைகளைக் கூப்பிக் கண்ணனை வணங்கிப் பலவாறு துதி செய்துவிட்டு ஆகாய வழியாகப் போய் விட்டார்கள். அவர்கள் இருவரும் குபேரனின் பிள்ளைகளான நளகூபரன் - மணிக்ரீவன் என்போர். நாரதரின் சாபம் காரணமாக அவர்கள் மரங்களாக இருந்தார்கள். அந்த சாபத்தைத் தீர்த்து அருள்புரிந்தான் கண்ணன்.

என்றும் உங்களுடன்

பக்த பராதீனன்

கண்ணன் வளர்கிறான். வீட்டிலேயே இருப்பதில்லை. யசோதைக்கு அடங்காத பிள்ளையாக அட்டகாசம் செய்த அருந்தெய்வம், அயலார் வீடுகளில் அவர்கள் ஏவிய எடுபிடி வேலைகளைப் பரமசாதுவாகச் செய்வானாம். ''கண்ணா! கொஞ்சம் ஆடு!'' ஆடுவான். ''கன்றுக்குட்டியைக் கட்டு கண்ணா!'' கட்டுவான். ''கிருஷ்ணா! அந்த மரக்காலைக் கொண்டு வா!'' என்றால் கொண்டு வருவான். வேடிக்கைக்காக, குழந்தை கண்ணனால் தூக்க முடியாத பெரிய மூட்டைகளைத் தூக்கச் சொல்வார்களாம். வெகு வேகமாகப் போய் மூட்டையின் அருகில் நின்று, கஷ்டப்பட்டுத் தூக்குவதைப் போல, வெறும் கைகளாலேயே அபிநயம் செய்து எல்லாரையும் சிரிக்கச் செய்வானாம். தன் மனக் கண்ணால் இவற்றையெல்லாம்



கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2008 57

பக்த பராதீனன்

கண்ணன் வளர்கிறான். வீட்டிலேயே இருப்பதில்லை. யசோதைக்கு அடங்காத பிள்ளையாக அட்டகாசம் செய்த அருந்தெய்வம், அயலார் வீடுகளில் அவர்கள் ஏவிய எடுபிடி வேலைகளைப் பரமசாதுவாகச் செய்வானாம். ''கண்ணா! கொஞ்சம் ஆடு!'' ஆடுவான். ''கன்றுக்குட்டியைக் கட்டு கண்ணா!'' கட்டுவான். ''கிருஷ்ணா! அந்த மரக்காலைக் கொண்டு வா!'' என்றால் கொண்டு வருவான். வேடிக்கைக்காக, குழந்தை கண்ணனால் தூக்க முடியாத பெரிய மூட்டைகளைத் தூக்கச் சொல்வார்களாம். வெகு வேகமாகப் போய் மூட்டையின் அருகில் நின்று, கஷ்டப்பட்டுத் தூக்குவதைப் போல, வெறும் கைகளாலேயே அபிநயம் செய்து எல்லாரையும் சிரிக்கச் செய்வானாம். தன் மனக் கண்ணால் இவற்றையெல்லாம்



கிருஷ்ணா 64!



பார்த்த லீலாசுகர், கோபியரின் பக்தியை மெச்சுகிறார்.

லீலாசுகரின் அறிவிப்பு

''கண்ணா! கோபிகைகள் உன்னைக் கூப்பிடாவிட்டால் கூட, அவர்கள் சேற்றிலும் முற்றத்திலும் சுற்றிச் சுற்றி வருவாய். உத்தம மான மகரிஷிகள் வேதமந்திரங்களைச் சொல்லி என்னதான் அழைத்தாலும், லட் சியமே செய்ய மாட்டாய். யோகிகள், உன்னைத் தங்கள் இதயசிம்மாசனத்தில் வந்து அமர வேண்டுமெனக் கடுந்தவம் செய்வார் கள். அவர்களை ஆண்டு கொள்ள நீ எஜமான னாகப் போக மாட்டாய். ''கூடையை எடு, உலக்கையை எடு'' என்றெல்லாம் கோபஸ்திரீ கள் உனக்கு ஆணையிடுவார்கள். நீயும்

54 Supplement to Mangayar Malar August 2008



பார்த்த லீலாசுகர், கோபியரின் பக்தியை மெச்சுகிறார்.

லீலாசுகரின் அறிவிப்பு

''கண்ணா! கோபிகைகள் உன்னைக் கூப்பிடாவிட்டால் கூட, அவர்கள் சேற்றிலும் முற்றத்திலும் சுற்றிச் சுற்றி வருவாய். உத்தம மான மகரிஷிகள் வேதமந்திரங்களைச் சொல்லி என்னதான் அழைத்தாலும், லட் சியமே செய்ய மாட்டாய். யோகிகள், உன்னைத் தங்கள் இதயசிம்மாசனத்தில் வந்து அமர வேண்டுமெனக் கடுந்தவம் செய்வார் கள். அவர்களை ஆண்டு கொள்ள நீ எஜமான னாகப் போக மாட்டாய். ''கூடையை எடு, உலக்கையை எடு'' என்றெல்லாம் கோபஸ்திரீ கள் உனக்கு ஆணையிடுவார்கள். நீயும்

என்றும் உங்களுடன் மங்கையர் மலர்

அவர்களை உன் எஜமானிகளாக நினைத்துக் கொண்டு, அவர்களுக்குத் தொண்டனாக வேலை செய்வாய். கிருஷ்ணா! எங்களுக்குப் புரிந்து விட்டது. பூஜையாலோ, தவத்தாலோ, யாகத்தாலோ சுலபமாக நெருங்க முடியாத உன்னை, தூய்மையான அன்பினால் வசப்படுத்தி விடலாம்'' என்கிறார் லீலாசுகர்.

ஏழைப் பங்காளன்

''நாவல் பழம், நாவல் பழம்'' என்று கூவி விற்கும் குரல் கேட்டது தெருவில். அதைக் கேட்டதும் கண்ணன், தலைதெறிக்க வீட்டிற்குள் ஓடினான். நெல் களஞ்சியத்தில் இரு கைகளையும் அழுத்தி, கைகள் கொள்ளும் வரை நெல்லை அள்ளிக் கொண்டு ஓடி வந்தான். அவசரத்தில் ஓடி வரும் போது, வழியெல்லாம் நெல்



கிருஷ்ணா 64!

Supplement to Mangaiyar Malar August 2009 53

அவர்களை உன் எஜமானிகளாக நினைத்துக் கொண்டு, அவர்களுக்குத் தொண்டனாக வேலை செய்வாய். கிருஷ்ணா! எங்களுக்குப் புரிந்து விட்டது. பூஜையாலோ, தவத்தாலோ, யாகத்தாலோ சுலபமாக நெருங்க முடியாத உன்னை, தூய்மையான அன்பினால் வசப்படுத்தி விடலாம்'' என்கிறார் லீலாசுகர்.

ஏழைப் பங்காளன்

''நாவல் பழம், நாவல் பழம்'' என்று கூவி விற்கும் குரல் கேட்டது தெருவில். அதைக் கேட்டதும் கண்ணன், தலைதெறிக்க வீட்டிற்குள் ஓடினான். நெல் களஞ்சியத்தில் இரு கைகளையும் அழுத்தி, கைகள் கொள்ளும் வரை நெல்லை அள்ளிக் கொண்டு ஓடி வந்தான். அவசரத்தில் ஓடி வரும் போது, வழியெல்லாம் நெல்



கிருஷ்ணா 64!



சிந்தியது. பழக்காரியின் கூடைப் பக்கம் வந்து, நிறையப் போடுவதைப் போல ஏதோ கைகளில் இருந்ததைப் போட்டு விட்டு, பழத்திற்காகக் கைகளை நீட்டினான். அதில் சங்கு, சக்கரம் முதலான ரேகைகளைக் கண்டு தன்னை மறந்த பழக்காரி, பழங்களை எடுத்துக் கண்ணன் கைகளை நிறைத்தாள். கூடையைப் பார்த்தாள். அங்கே பழங்கள் இல்லை. நவரத்தினக் குவியலாக இருந்தது. கண்ணன் அவளைப் பார்த்து, "பேசாமல் எடுத்துக் கொண்டு போ!" என்பது போலச் சிரித்தான். கண்ணனின் அருள் பார்வை யார் மேல், எப்போது விழும் என யாராலும் சொல்ல முடியாது. வேளை வந்து விட்டால் யாராலும் தடுக்கவும் முடியாது. குறைத்துக் கொடுக்க, கண்ணனுக்கும் தெரியாது.

Supplement to Mangayar Malar August 2008



சிந்தியது. பழக்காரியின் கூடைப் பக்கம் வந்து, நிறையப் போடுவதைப் போல ஏதோ கைகளில் இருந்ததைப் போட்டு விட்டு, பழத்திற்காகக் கைகளை நீட்டினான். அதில் சங்கு, சக்கரம் முதலான ரேகைகளைக் கண்டு தன்னை மறந்த பழக்காரி, பழங்களை எடுத்துக் கண்ணன் கைகளை நிறைத்தாள். கூடையைப் பார்த்தாள். அங்கே பழங்கள் இல்லை. நவரத்தினக் குவியலாக இருந்தது. கண்ணன் அவளைப் பார்த்து, "பேசாமல் எடுத்துக் கொண்டு போ!" என்பது போலச் சிரித்தான். கண்ணனின் அருள் பார்வை யார் மேல், எப்போது விழும் என யாராலும் சொல்ல முடியாது. வேளை வந்து விட்டால் யாராலும் தடுக்கவும் முடியாது. குறைத்துக் கொடுக்க, கண்ணனுக்கும் தெரியாது.

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்

பிருந்தாவனத்தில் கண்ணன்

எல்லோரும் பிருந்தாவனத்தில் இருந்தார்கள். ஒருநாள், ''அம்மா! நான் பெரியவனாகி விட்டேனல்லவா? இனிமேல் பசுக்களை மேய்க்கப் போகலாமல்லவா?'' என்று யசோதையிடம் கேட்டான் கண்ணன். ''என்ன இருந்தாலும் நீ எனக்குக் குழந்தைதானடா கிருஷ்ணா! நல்ல நாள் பார்த்து, நானே உன்னை மாடு மேய்க்க அனுப்புகிறேன்'' என்றாள் யசோதை. அப்போது சாண்டில்ய ரிஷி அங்கு வந்தார். அவரிடம், ''முனிவரே! கண்ணனை கோபாலனாக அதாவது பசுக்காப்பாளனாக ஆக்க வேண்டும். அவன் நட்சத்திரத்தைப் பார்த்து நல்ல நாளாகச் சொல்லுங்கள்!'' என வேண்டினாள் யசோதை. சாண்டில்யரிஷி, ''அம்மா! கார்த்திகை மாத



கிருஷ்ணா 64!

Supplement to Mangaiyar Malar August 2008 37

பிருந்தாவனத்தில் கண்ணன்

எல்லோரும் பிருந்தாவனத்தில் இருந்தார்கள். ஒருநாள், ''அம்மா! நான் பெரியவனாகி விட்டேனல்லவா? இனிமேல் பசுக்களை மேய்க்கப் போகலாமல்லவா?'' என்று யசோதையிடம் கேட்டான் கண்ணன். ''என்ன இருந்தாலும் நீ எனக்குக் குழந்தைதானடா கிருஷ்ணா! நல்ல நாள் பார்த்து, நானே உன்னை மாடு மேய்க்க அனுப்புகிறேன்'' என்றாள் யசோதை. அப்போது சாண்டில்ய ரிஷி அங்கு வந்தார். அவரிடம், ''முனிவரே! கண்ணனை கோபாலனாக அதாவது பசுக்காப்பாளனாக ஆக்க வேண்டும். அவன் நட்சத்திரத்தைப் பார்த்து நல்ல நாளாகச் சொல்லுங்கள்!'' என வேண்டினாள் யசோதை. சாண்டில்யரிஷி, ''அம்மா! கார்த்திகை மாத



கிருஷ்ணா 64!



வளர்பிறை அஷ்டமியன்று நல்ல நாள். அன்றே செய்யலாம்'' என்றார்.

கண்ணனும் பசுக்களும்

கண்ணனுக்கும் பசுக்களுக்கும் உள்ள தொடர்பைப் பற்றிப் பற்பல மகான்கள் பலவிதமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏகநாத பாகவதத்தில் ஒரு சுவாரசியமான தகவலை ஏகநாதர் சொல்லியிருக்கிறார். அது, ஸ்ரீராமசந்திர மூர்த்தி, அரக்கர்களை அழித்தார். யாகங்கள் செய்தார். தன் குடிமக்களுக்கு வேண்டியதெல்லாம் கிடைக்கச் செய்து, நல்ல அரசாட்சி நடத்தினார். ஆனால் அவர் அரசராக இருந்ததால், கோபூஜை செய்யவும் பசுக்களுக்குத் தொண்டு செய்யவும் அவரை அனுமதிக்க

Supplement to Mangayar Malar August 2008



வளர்பிறை அஷ்டமியன்று நல்ல நாள். அன்றே செய்யலாம்'' என்றார்.

கண்ணனும் பசுக்களும்

கண்ணனுக்கும் பசுக்களுக்கும் உள்ள தொடர்பைப் பற்றிப் பற்பல மகான்கள் பலவிதமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏகநாத பாகவதத்தில் ஒரு சுவாரசியமான தகவலை ஏகநாதர் சொல்லியிருக்கிறார். அது, ஸ்ரீராமசந்திர மூர்த்தி, அரக்கர்களை அழித்தார். யாகங்கள் செய்தார். தன் குடிமக்களுக்கு வேண்டியதெல்லாம் கிடைக்கச் செய்து, நல்ல அரசாட்சி நடத்தினார். ஆனால் அவர் அரசராக இருந்ததால், கோபூஜை செய்யவும் பசுக்களுக்குத் தொண்டு செய்யவும் அவரை அனுமதிக்க

என்றும் உங்களுடன்

வில்லை. அந்தக் குறை ஸ்ரீராமர் மனதில் இருந்தது. அவரே கண்ணனாக அவதரித்து, கோபூஜை செய்து பசுக்களுக்குத் தொண்டு செய்தார்.

இப்படிச் சொல்லாதே அம்மா!

குறிப்பிட்ட நாளில் கண்ணன் பசுக்களை ஓட்டிச் செல்லத் தயாரானான். யசோதை ஓடி வந்து பாதரட்சைகளை (செருப்புகள்) நீட்டி, ''கல்லிலும் முள்ளிலும் போக வேண்டியிருக்கும். இதைப் போட்டுக் கொண்டு போ!'' என்றாள். கண்ணன் அதை மறுத்தான். ''அம்மா! நான் இந்தப் பசுக்களின் பணியாளன். அவை காலணி அணிவதில்லை. அவற்றின் பணியாளனான நான் அணியலாமா?'' என்றாள். ''கண்ணா! பசுக்களான அவை



கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2008 59

வில்லை. அந்தக் குறை ஸ்ரீராமர் மனதில் இருந்தது. அவரே கண்ணனாக அவதரித்து, கோபூஜை செய்து பசுக்களுக்குத் தொண்டு செய்தார்.

இப்படிச் சொல்லாதே அம்மா!

குறிப்பிட்ட நாளில் கண்ணன் பசுக்களை ஓட்டிச் செல்லத் தயாரானான். யசோதை ஓடி வந்து பாதரட்சைகளை (செருப்புகள்) நீட்டி, ''கல்லிலும் முள்ளிலும் போக வேண்டியிருக்கும். இதைப் போட்டுக் கொண்டு போ!'' என்றாள். கண்ணன் அதை மறுத்தான். ''அம்மா! நான் இந்தப் பசுக்களின் பணியாளன். அவை காலணி அணிவதில்லை. அவற்றின் பணியாளனான நான் அணியலாமா?'' என்றாள். ''கண்ணா! பசுக்களான அவை



கிருஷ்ணா 64!



மிருகங்கள்தானே!'' என்றாள் யசோதை. ''இனிமேல் அப்படிச் சொல்லாதே அம்மா! பசுக்கள், சாதாரண பிராணிகளல்ல. எல்லோருக்கும் தாய், கோமாதா அல்லவா! பசுக்களின் உடலில் எல்லா தேவதைகளும் வசிக்கின்றன'' என்றான் கண்ணன்.

அருணகிரிநாதர் போற்றிய அவதாரம்

முருகப்பெருமானை நேருக்கு நேராகத் தரிசித்த அருணகிரிநாதர் தம்முடைய திருப்புகழின் முதல் பாடலிலேயே 'முத்தைத் தரு பத்தித் திருநகை' என்று கிருஷ்ணரின் பெருமைகளை விரிவாகச் சொல்கிறார்.

60 Supplement to Mangayar Malar August 2008



மிருகங்கள்தானே!'' என்றாள் யசோதை. ''இனிமேல் அப்படிச் சொல்லாதே அம்மா! பசுக்கள், சாதாரண பிராணிகளல்ல. எல்லோருக்கும் தாய், கோமாதா அல்லவா! பசுக்களின் உடலில் எல்லா தேவதைகளும் வசிக்கின்றன'' என்றான் கண்ணன்.

அருணகிரிநாதர் போற்றிய அவதாரம்

முருகப்பெருமானை நேருக்கு நேராகத் தரிசித்த அருணகிரிநாதர் தம்முடைய திருப்புகழின் முதல் பாடலிலேயே 'முத்தைத் தரு பத்தித் திருநகை' என்று கிருஷ்ணரின் பெருமைகளை விரிவாகச் சொல்கிறார்.

என்றும் உங்களுடன்

"ஜயத்ரதனை, அபிமன்யுவதத்திற்குக் காரணமாக இருந்தவனை, நாளை மாலை சூரியன் மறைவதற்குள் நான் கொல்லாவிட்டால், தீயில் வீழ்ந்து இறப்பேன்" என அர்ஜுனன் சபதம் செய்தான். உத்தமபக்தனான அவனைக் காப்பதற்காக கண்ணன் தன் சக்கராயுதத்தை வைத்து, சூரியனை மறைத்து, ஜயத்ரதன் வதம் நடக்கும்படியாகச் செய்தார். அர்ஜுனனுக்குத் தேர் சாரதியாக இருந்த அந்த பார்த்தசாரதியை

.... பட்டப் பகல் வட்டத் தகியில் இரவாக
பக்தர்க் கிரதத்தைக் கடவிய
பச்சைப் புயல்

என்று போற்றுகிறார்.

பச்சைப் புயல் - வேறு யார் நம்ப கண்ணன்தான்!



கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2008 6

"ஜயத்ரதனை, அபிமன்யுவதத்திற்குக் காரணமாக இருந்தவனை, நாளை மாலை சூரியன் மறைவதற்குள் நான் கொல்லாவிட்டால், தீயில் வீழ்ந்து இறப்பேன்" என அர்ஜுனன் சபதம் செய்தான். உத்தமபக்தனான அவனைக் காப்பதற்காக கண்ணன் தன் சக்கராயுதத்தை வைத்து, சூரியனை மறைத்து, ஜயத்ரதன் வதம் நடக்கும்படியாகச் செய்தார். அர்ஜுனனுக்குத் தேர் சாரதியாக இருந்த அந்த பார்த்தசாரதியை

.... பட்டப் பகல் வட்டத் தகியில் இரவாக
பக்தர்க் கிரதத்தைக் கடவிய
பச்சைப் புயல்

என்று போற்றுகிறார்.

பச்சைப் புயல் - வேறு யார் நம்ப கண்ணன்தான்!



கிருஷ்ணா 64!



மாயனே! என்ன மாயம்?

"துளசி மாலை அணிந்தவனே! கண்ணா! தேவதாதி தேவர்கள் எல்லாம் உன்னைத் தொழுது துதித்துக் கொண்டிருக்கிறார்கள். உலகத்தையே உண்டவன் நீ! அப்படியிருக்க கோபியர் மனைகளுக்குள் புகுந்து உறியில் வைத்திருந்த வெண்ணெயைக் களவாடி உண்டாயே! இது என்ன மாயம்?" எனக் கேட்கிறார் இளங்கோவடிகள்.

அறுபொருள் இவனென்றே
அமரர் கணம் தொழுதேத்த
உறுபசி யொன் றின்றியே
உலகடைய உண்டனையே!
உண்டவாய் களவினால்

62 Supplement to Mangaiyar Malar August 2008



மாயனே! என்ன மாயம்?

"துளசி மாலை அணிந்தவனே! கண்ணா! தேவதாதி தேவர்கள் எல்லாம் உன்னைத் தொழுது துதித்துக் கொண்டிருக்கிறார்கள். உலகத்தையே உண்டவன் நீ! அப்படியிருக்க கோபியர் மனைகளுக்குள் புகுந்து உறியில் வைத்திருந்த வெண்ணெயைக் களவாடி உண்டாயே! இது என்ன மாயம்?" எனக் கேட்கிறார் இளங்கோவடிகள்.

அறுபொருள் இவனென்றே
அமரர் கணம் தொழுதேத்த
உறுபசி யொன் றின்றியே
உலகடைய உண்டனையே!
உண்டவாய் களவினால்

என்றும் உங்களுடன்

உறிவெண்ணெய் உண்டவாய்
வண்டுழாய் மாலையாய்!
மாயமோ மருட்கைத்தே!

- சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவை.

சந்திரனுக்கு அருள் செய்த சர்வேஸ்வரன்



ஸ்ரீராமர் திருஅவதாரம் செய்தார். தேவர்கள் உட்பட அனைவரும் ஆனந்தப்பட்டார்கள். சந்திரன் மட்டும் துயரமாக இருந்தான். அவனுக்கும் ஸ்ரீராமரை அப்போதே தரிசிக்க வேண்டுமென்ற ஆசை இருந்தது. ஆனால் சூரியன் நகர்ந்தால் (மறைந்தால்) தானே, சந்திரன் வந்து தரிசனம் செய்ய முடியும்?

"ராமா! சூரியனை மேற்கே போகச் சொல்லுங்கள்! உங்களைத் தரிசிக்க விடாமல் என்னைத் தடுக்கிறான்" எனச்

கிருஷ்ணா 64!

Supplement to Mangayar Malar August 2008 63

உறிவெண்ணெய் உண்டவாய்
வண்டுழாய் மாலையாய்!
மாயமோ மருட்கைத்தே!

- சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவை.

சந்திரனுக்கு அருள் செய்த சர்வேஸ்வரன்

ஸ்ரீராமர் திருஅவதாரம் செய்தார். தேவர்கள் உட்பட அனைவரும் ஆனந்தப்பட்டார்கள். சந்திரன் மட்டும் துயரமாக இருந்தான். அவனுக்கும் ஸ்ரீராமரை அப்போதே தரிசிக்க வேண்டுமென்ற ஆசை இருந்தது. ஆனால் சூரியன் நகர்ந்தால் (மறைந்தால்) தானே, சந்திரன் வந்து தரிசனம் செய்ய முடியும்?

"ராமா! சூரியனை மேற்கே போகச் சொல்லுங்கள்! உங்களைத் தரிசிக்க விடாமல் என்னைத் தடுக்கிறான்" எனச்



Registered with the Registrar of Newspaper of India under No. 30309/75 * Registered No. TN / CC (S) DN / 170 / 06 - 08 * Licensed to post without ...
under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 103 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka. Supplement to the Mangayar Malar August 20...



சொல்லி அழுதான் சந்திரன். ஸ்ரீராமர், ''கவலைப் படாதே! இன்று முதல் நான் உன் பெயரையும் என்னுடன் சேர்த்தே சூட்டிக் கொள்கிறேன்'' என்றார். (அதனால் ஸ்ரீராமச்சந்திரன் என அழைக்கிறோம்). அப்போதும் சந்திரனுக்கு அமைதி உண்டாகவில்லை.

''சரி! அடுத்த அவதாரத்தில் உனக்கே தரிசனம் அளிக்கிறேன். அப்போது நான் இரவு பன்னிரண்டு மணிக்கு வருவேன். உன் மனக்குறை தீரும்'' என்றார் ஸ்ரீராமர்.

அப்படியே நடந்தது. கண்ணன் அவதரித்தபோது, அவரைத் தரிசித்தவர்கள் வசுதேவர் - தேவகி, சந்திரன் மூவர் மட்டுமே.

ஸ்ரீ கிருஷ்ணா... ஸ்ரீ கிருஷ்ணா!

Registered with the Registrar of Newspaper of India under No. 30309/75 * Registered No. TN / CC (S) DN / 170 / 06 - 08 * Licensed to post without prepayment
under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 103 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka. Supplement to the Mangayar Malar August 2016 issue



சொல்லி அழுதான் சந்திரன். ஸ்ரீராமர், ''கவலைப் படாதே! இன்று முதல் நான் உன் பெயரையும் என்னுடன் சேர்த்தே சூட்டிக் கொள்கிறேன்'' என்றார். (அதனால் ஸ்ரீராமச்சந்திரன் என அழைக்கிறோம்). அப்போதும் சந்திரனுக்கு அமைதி உண்டாகவில்லை.

''சரி! அடுத்த அவதாரத்தில் உனக்கே தரிசனம் அளிக்கிறேன். அப்போது நான் இரவு பன்னிரண்டு மணிக்கு வருவேன். உன் மனக்குறை தீரும்'' என்றார் ஸ்ரீராமர்.

அப்படியே நடந்தது. கண்ணன் அவதரித்தபோது, அவரைத் தரிசித்தவர்கள் வசுதேவர் - தேவகி, சந்திரன் மூவர் மட்டுமே.

ஸ்ரீ கிருஷ்ணா... ஸ்ரீ கிருஷ்ணா!

என்றும் உங்களுடன்